1403/3 ... 162/55/59

# வரலாறு

[தத்துவமும் கற்பித்தலும்]

பகுதி 2 கற்பிக்கும் முறை

பொதுச் (செய்தி, மக்கள் தொடர்பு) துறை
8 - செப் 1975

வே. வேங்கடசாமி

★

T:3(V)
N75
4590

உரோகிணி பதிப்பகம்

143/3-71
RR NO 162/55/79

# வரலாறு

[ தத்துவமும் கற்பித்தலும் ]

கற்பிக்கும் முறை

★

ஆசிரியர்

வே. வேங்கடசாமி, எம். ஏ., பி. டி.,

வரலாற்றுப் பேராசிரியர்

ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை.

★

உரோகிணி பதிப்பகம்

13, ஏழுமலை தெரு, தாம்பரம், (w)

சென்னை-600045.

முதற்பதிப்பு: ஜனவரி 1975

TAMIL NADU ARCHIVES LIBRARY
ACC. No. 2950
19 MAR 1979
EGMORE, MADRAS-600 008

T:3(U)

Rs. 7/-

தர்மராஜ் பிரிண்டர்ஸ், புரசைவாக்கம், சென்னை-7

# முன்னுரை

குமாரபாளையம் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1973-74 ஆம் கல்வியாண்டில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணி புரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆசிரிய சமுகத்திற்கும் மாணவ உலகத்திற்கும் தொண்டாற்றுவதையே தமது வாழ்க்கையின் இலட்சிய மாகக் கொண்டு பணி செய்துவருபவரும், கல்லூரி முதல்வரும், கல்வியியல் பேராசிரியருமான திரு. எஸ். சந்தானம் எம். ஏ., பி. டி., அவர்கள், வரலாற்றுப்பாடத்தைப் விருப்ப பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர்களுக்கென்று இதுவரை தாய்மொழியில் வரலாறு கற்பிக்கும் முறைகள் பற்றிய நூல் ஒன்று உருவாக்கப்படவில்லை என்னும் குறையைத் தெரிவித்து, பல ஆண்டுகள் பயிற்சிக் கல்லூரிகளில் வரலாற்றுப் பாடத்தைக் கற்பித்த எனது அநுபவத்தை கொண்டு ஒரு புத்தகம் உருவாக்கப்படவேண்டும் என்னும் விருப்பத்தை வெளியிட் டார். அவரது விருப்பத்தினை ஆணையாக மதித்து பல ஆண்டுகளாக பல்வேறு பாடப் புத்தகங்களைப் படித்து அவற்றிலிருந்து அவ்வப்போது எழுதி வைத்திருந்த விரிவுரைக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு விரிவான முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

"வரலாறு தத்துவமும் கற்பித்தலும்" என்னும் இந்நூல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் வரலாற்றுப் பாடத்தை விருப்ப பாடமாக எடுத்துப் பயிலும் ஆசிரிய மாணவர்களின் தேவையை மனதில் கொண்டு எழுதப்பட்டுள்ளது. எனினும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங் களில் (Teacher Training Institutes) வரலாறு கற்பிக்கும் முறைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் அந்நிறுவனங்களில் பயிற்சிபெறும். மாணவ ஆசிரியர்களுக்கும், வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் இந்நூல் உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்நூலை உருவாக்குவதற்கு மூல காரணமாக இருந்த முதல்வர் பேராசிரியர் திரு. எஸ். சந்தானம் அவர்கள் தேவைப்பட்ட பொழு தெல்லாம் கைப்பிரதிகளைப் படித்து எனக்கு வழி காட்டினர். அவர் இந்நூலுக்கு அணிந்துரை ஒன்றும் வழங்கியுள்ளார். அவருக்கு நான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். மற்றும் இந்நூலினை உருவாக்குவதில் என்னை ஊக்குவித்து கருத்துக்களில் மேலும் தெளிவு பெற எனக்கு உதவிய குமாரபாளையம், அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

இப்பாட நூல் அரசாங்க வெளியீடு அன்று.

சைதாப்பேட்டை
9—12—74

வே. வெங்கடசாமி

# அணிந்துரை

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் எல்லாப் பாடங்களும் நம் தாய் மொழியாம் தமிழ்மொழி வாயிலாக இன்று கற்பிக்கப்படுகின்றன. ஆங்கிலமொழி வழியே பயிலும் பல மாணக்கரும் பல்கலைக் கழகத் தேர்வில் தமிழில் விடையளிக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள விழைகின்றனர். இத்தகையோர்க்கான தமிழ்மொழிப் பாடநூல்களின் தேவை இன்று பெருகி வருகிறது. வரலாற்றுப் பாடத்திற்கான இத் தேவையினைப் பெருமளவு நிறைவு செய்யும் வகையில் "வரலாறு தத்துவமும் கற்பித்தலும்". என்னும் தலைப்பு கொண்ட இந்நூல் வெளிவந்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

இந்நூலில் வரலாற்றுப் பாடம் கற்பித்தலின் அடிப்படைக் கோட் பாடுகள், பொருளமைப்பின் தன்மை, இப்பாடத்தினை நன்கு கற்பித்தற் குதவும் சிறப்பு முறைகள், கற்பிக்குங்கால் ஆசிரியர் பயன்படுத்தத் தக்க துணைக்கருவிகள் கற்பித்தல் விளைவாக மாணக்கர்களிடம் எழுந்த அறிவு, மனப்பான்மைகள், திறமைகள் போன்றவற்றை மதிப்பிட உதவும் சோதனைகள் போன்றவை பற்றிய விரிவான விளக்கங்கள் தரப் பட்டுள்ளன. பாடநூலின் அத்தியாயங்கள் பி. எட். பாடத்திட்டத்தின் தலைப்புகளுக்கேற்ப வரிசைப் படுத்தப்பட்டிருத்ததலோடு ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் பயனுள்ள பல பயிற்சி வினாக்கள் தரப் பட்டுள்ளன. வரலாற்றுப் பாடப் பொருளுடன் இணைந்த முக்கிய கருத்துகள் பின்னிணைப்பில் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

இந்நூலினை எழுதிய பேராசிரியர் திரு. வே. வெங்கடசாமி எம். ஏ. பி. டி., நான் முதல்வராக இருக்கும் இக்கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். கல்வி நிருவாகத் துறையில் பெற்ற அனுபவங்களுடன் ஆசிரியர் கல்லூரியில் பல ஆண்டுகள் வரலாறு பயிற்றும் முறையினை பி.டி.,பி. எட் மாணக்கர்களுக்குத் தொடர்ந்து கற்பித்து பரந்த பட்டறிவும், கருத்துக்களை நன்கு விளக்கிக்கூறும் திறனும் பெற்றவர். இவர்திற்கு ஒரு சான்றாக இந்நூல் விளங்குகிறது. வரலாறு பயிலும் மாணவர்களுக்குத் தேவையான கருத்துக்களை அவர் கள் நன்கு புரிந்துகொள்ள உதவுவதுடன் இத்துறையில் வெளியிடப் பட்டுள்ள சிறந்த ஆங்கில நூல்களுக்கு ஓர் அறிமுகமாகவும் இந்நூல் பயன்படும் என நம்புகிறேன்.

குமாரபாளையம்,
9—12—1974

எஸ். சந்தானம், முதல்வர்,
அரசினர் பயிற்சிக் கல்லூரி.

# பகுதி 2

## பொருளடக்கம்

14. கற்பிக்கும் முறை 1

ஆரம்ப வகுப்புகள் — நோக்கங்கள் — வரலாற்றுப் பாடத்தில் பற்று — ஆர்வம் — வரலாற்றை அறிமுகப்படுத்துதல் — அடித்தளம் அமைத்தல் — மனஎழுச்சிகளைத் தூண்டுதல்-புதிய அனுபவம் — வரலாறு தொடர்புடையது சுற்றுப்புற ஆராய்ச்சி — கால அறிவு — சமூதாய வளங்கள்.

கற்பிக்கும் முறைகள் — கதைமுறை — வாய்மொழிப்பாடம் — நிறுவனங்கள் — தனியார் வாழ்க்கை மைய முறை — காலவரிசை உணர்வு — நாடக முறை — விளையாட்டு முறை — கைவேலை.

பாடப்புத்தக முறை — பழையமுறை — பாடப்புத்தகங்கள் — ஆசிரியர்— அமெரிக்கன் முறை — பேராசிரியர் ஜான்சன் கருத்து — மனப்பாடம் செய்தல்.

வாய்மொழிப்பாடம் — கீழ் வகுப்புகளுக்கேற்றது — வினவுதல் — இரண்டு சிறப்பு அம்சங்கள் — கதை சொல்லுதல் — பயிற்சிகள் — துணைக்-கருவிகளின் இடம்.

விரிஉரை ஆற்றுதல் — எப்பொழுது பயன்படுத்துவது — இதன் முக்கியத்துவம் — இம்முறைக்கான வாய்ப்புகள் — குறைகள் — நல்லியல்பு-கள்—முன்னால் கவனம் பெற வேண்டுபவன—விதி தரும்முறை—மதிப்பிடுதல்.

சமூகஉறவு உணர்வில் கற்றதை வெளியிடுதல்பயன் -வரம்பு - ஆசிரியரின் பங்கு—கண்ணோட்டமும் பயிற்சியும்—பயன்—ஒப்பிடுதல்—இயைபு படுத்துதல் வரிசைப்படுத்துதல்—பிரச்சனை தீர்த்தல்—பெரியார்களின் வாழ்க்கை —கருத்து வேறுபாடுகளைத் தொகுத்தல் — பயிற்சி — சிறப்பு அம்சங்கள்.

பிரச்சனை செயல்திட்ட முறைகள் — டால்டன் முறை —தலைப்பு முறை.

சான்று முறை — முன்னுரை — தோற்றமும் வளர்ச்சியும் — பயன் படுத்துதல் — பாடப்புத்தகங்கள் வசிக்குமிடம் — பயிற்சிகள் — மூலப்-புத்தகங்களைப் பெறுதல் — அவற்றைப் பயன்படுத்துதல்.

நடிப்புக்கு இடம் — நோக்கம் — முக்கிய தேவைகள் — நடிப்புக்கு சில யோசனைகள்.

மேல்பார்வைப் படிப்பு — பிள்ளைகளிடம் காணப்படும் வேறுபாடுகள் — சுயமாகப்படித்தல்- வீட்டுப்படிப்பில் உள்ள சிக்கல்கள்— திட்டம் வகுத்தல் — பயன்கள்.

இறந்த காலத்தை மெய்ப்பித்தல் — உள்ளூர் வரலாறு — சமூதாய வளங்கள் - கல்வி சுற்றுலாக்கள் — காட்சிக்கேள்வி உபகரணங்கள் — சான்று முறை - நடித்தல்—கற்பனை எழுத்து வேலைகள்—நாள் குறிப்பேடு வைத்தல்—வரலாற்றுப் பெரியார்களின் பொன்மொழிகள் — வரலாற்றுப் புதினங்கள்.

## 15. அன்றாட வேலைக்கான பாடமுன் தயாரிப்பு 43

சில பொதுவான தத்துவங்கள் — இரண்டு வகையான பாடக்குறிப்பு — பாடக் குறிப்புகளின் பண்புகள் — பூர்வாங்க தேவைகள் — நல்ல பாடக் குறிப்பின் சிறப்பியல்புகள் — பாடக்குறிப்பை அபிவிருத்தி செய்தல்.

## 16. தளவாடங்களும் இதர வசதிகளும் 49

பாடப்புத்தகம்— முன்னுரை — அவசியம் — பயன்கள்—எண்ணிக்கை — சிறப்பு அம்சங்கள் — குறைகளும் நிறைகளும் — பயன்படுத்துதல் — வகுப்புகளுக்கான தரம் — பாடப்புத்தகமும் நோட்டுப் புத்தகமும் — வகைகள் துணையாதரவுப் பாடப்புத்தகங்கள் — பயன்கள் — நூல்நிலையம் — திட்டமிடுதல்

வரலாற்று நூல் நிலையம் — அவசியம் — நூல்நிலையம் அமைத்தல் — புத்தகங்கள் தேர்ந்தெடுத்தல் —வைக்க வேண்டிய புத்தகங்கள் — பார்வைப் புத்தகங்கள் — துணைப்பாடப் புத்தகங்கள் — மூலப்புத்தகங்கள் — சீரியல்களும் செட்டும் — சிறப்புப் படிப்பிற்கான புத்தகங்கள் — வரலாற்றுப் புதினங்கள் — வாழ்க்கை வரலாறுகள் — உள்ளூர் வரலாற்றுப் புத்தகங்கள் — துண்டுப் பிரசுரங்களும் செய்திப் பத்திரிக்கைகளும் — ஆசிரியரின் பொறுப்பு.

காட்சிக்கேள்வி உபகரணங்கள் — இவற்றின் தேவையும் பயன்களும் — திரைப்படம் — திரைப்படங்களின் பயன் — பயன்படுத்தும் வழிகள் — நல்ல திரைப்படத்தின் தன்மைகள் — மாதிரிகளும் உண்மைப் பொருள்களும்— கரும் பலகை — வரலாற்றுப் படங்கள் — வம்சாவளிப் பட்டியல் — வரைப்படம் — செய்திப்பலகை—விளக்கப்படங்கள்-தேசப்படங்கள்—தேசப்படங்களிள் பயன்

வரலாற்று அறை — அவசியம் அமைப்பும் வசதிகளும்.
குறுகிய நீண்ட கல்விப் பயணங்கள் — நோக்கமும் பயனும் —முன்னேற்பாடு — சுற்றுலாவை நடத்துதல்—பின் தொடர் வேலை —பார்க்க வேண்டிய இடங்கள்

சமூதாய வளங்கள்—விளக்கம்—அவசியம்—மூன்று பிரிவுகள் —உள்ளூர் வரலாறு — சின்னங்கள் — வரலாற்றுச் சிறப்பு பெற்ற இடங்கள் — கல்விப் பயணங்கள்.

பயிற்சிப் பதிவேடுகள் — பட நோட்டுப்புத்தகம் — படப்புத்தகத்தைத் தயார் செய்தல்— படங்கள் எப்படி இருக்க வேண்டும். படங்களைப் படித்தல்—குறிப்பெடுத்தலும் தொகுத்தலும் — மேல்பார்வை — தொகுக்கும் முறை — பயிற்சி நோட்டுப்புத்தகம்- தேசப்பட நோட்டுப்புத்தகம்—வரலாற்றுக் குறிப்-

பேடு — அன்றாடச் செய்திக் குறிப்புகள் — கேலிச் சித்திரப் புத்தகம் — காலக் கோட்டுப் புத்தகம் — பார்வைப் புத்தகம் — காலப்படம் தயார் செய்தல் — மாணவர்களின் செயல்கள்.

வரலாற்று ஆசிரியர் — மனத்திறமைகள் ஆசிரியரின் ஆளுமை.

நடப்புச் செய்திகள் — விளக்கம் — நடப்புச் செய்திகளும் வரலாறும் நடப்புச் செய்திகளும் மதிப்பிடும் மனப் பான்மையும்-பயன்படுத்துதல் — அவற்றின் தேவை — நடப்புச் செய்திகளின்பயன் — நோக்கம் — நடப்புச் செய்திகளும் இக்காலப்·பிரச்சனைகளும் இக்காலப் பிரச்சனைக் கற்பித்தல் — பயன்படுத்துதல்

தேர்வும் மதிப்பீடும் 117

தேர்வுகள் — வரலாறு — பயன்கள் — குறைகளும் பின்னடைந்தவர்களும் தேர்வுகளில் மாறுதல்கள் — தேர்வின் இனங்கள் — கட்டுரை முறைத் தேர்வு — புதுமுறைத் தேர்வு — கட்டுரை, சிறுவிடை தேர்வுகளின் — மதிப்பீடு- தேர்வுகள் கற்பித்தலின் தரத்தை உயர்த்துதல் — வரலாற்றுத் தேர்வுக் கேள்விகள் எப்படி இருக்கவேண்டும் — ஒரு முழுமையான தேர்வுகளின் மூன்று கூறுகள் — கட்டுரை முறைத் தேர்வு முறைகள் — புதுமாதிரி வினாக்களின் விளக்கம் — நல்ல தேர்வின் சிறப்பியல்புகள் — புறவயம் — நம்பகம் — ஏற்புடைமை — தேர்வு வைப்பதிலும் மதிப்பிடுவதிலும் சுலபம் மதிப்பீடு — அளவிடுதலும் மதிப்பீடு செய்தலும் — அளவிடுதல் — விளக்கம் — மதிப்பீடு செய்தல் விளக்கம் — மதிப்பீடு செய்வதின் நோக்கம் — மதிப்பீடு செய்வதின் அவசியம்.

# BIOLIOGRAPHY


1. M. W. Keatings : Studies in the Teaching of Historv.
2. Drummond, H. A. : History in School.
3. F. C. Happold : The study of History in Schools.
4. G. G. Findlay : History and its Place in Education.
5. C. H. Jarvis : Teaching of History.
6. V. D. Ghate : Teaching of History.
7. K. D. Ghose : Creative Teaching of History.
8. E. L. Hasluck : The Teaching of History.
9. UNESCO : Better History Text Books.
10. Bining & Bining : Teaching of Social Studies in Secondary Schools.
11. E. B. Wesley : Teaching Social Studies in High Schools.
12. Johnson, Earls : Theory and Practice of the Social Studies.
13. Henry Johnson : Teaching of History.
14. Cambridge University Press—The Teaching of History.
15. K. P. Chandhuny : A. V. Aids in Teaching of History.
16. Alice Evl : History Teaching by Biographies.
17. P. Carpenter : History Teaching—The Era Approach.
18. UNESCO : Education for International Under-standing.
19. C. P. Hiel : Suggestions on the Teaching of History.
20. Games Hemming : The Teaching of Social Studies in Secondary Schools.
21. J. H. Forrester : Introducing Social Studies.
22. Mc Murray : Special Methods in History.
23. Ralph C. Preston : Teaching World Understanding.
24. Everett & Arndt : Teaching World Affairs in American Schools.
25. John C. Payne : The Teaching of Contemporary Affairs.
26. Edith West : Improving the Teaching of World History.
27. A Hand Book for History Teachers By Dr. Vajreswari.
28. K. N. Panikkar : Geographical Factors in the History of India.

பகுதி -2

# கற்பித்தல் முறை

## 1. ஆரம்ப வகுப்புகள்-நோக்கமும் முறையும்

நமது தமிழக மாநிலத்தில் ஐந்து வகுப்புகள் வரையுள்ள தொடக்கப் பள்ளிகள் மிக அதிகம். இவற்றுள் சில உயர் தொடக்கப்பள்ளிகள். இங்கு எட்டு வகுப்புகள் வரை வைத்து நடத்தப்படுகின்றன. நமது மாநிலத்திலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் ஆரம்ப வகுப்புகள் வைக்கப்படுவது இல்லை. வரலாறு கற்பிக்க முற்படும் பொழுது வகுப்பையும், மாணவர்களின் வயதையும், அவர்களுடைய அநுபவத்தையும் மனதில் கொண்டு, கற்பிப்பதின் நோக்கங்களையும் கற்பிக்கும் முறைகளையும் நிர்ணயிக்க வேண்டும். கற்பிக்கும் முறைகளையும், நுணுக்கங்களையும் எல்லா வகுப்புகளிலும் அனுசரிக்க முடியாது. வகுப்புக்கு ஏற்றபடி கற்பிக்கும் முறையையும், கற்பிக்கும் 'நுணுக்கங்களையும்', கொள்ளும் நோக்கத்தையும் நாம் தீர்மானிக்க வேண்டும்.

ஆரம்பப்பள்ளிகளிலும் உயர்நிலைப்பள்ளிகளிலும் வரலாறு கற்பிப்பதின் நோக்கங்களில் வேறுபாடு இருப்பதுபோலவே கையாளும் முறைகளிலும், கற்பித்தலின் நுணுக்கங்களிலும், பிள்ளைகள் செய்யவேண்டிய பயிற்சிகளிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த வேறுபாடுகள் என்னென்ன என்பதை. நாம் ஆராய்ந்து அறிந்தால்தான் வகுப்புக்கேற்ற நோக்கத்தை நிறைவேற்றப் பொருத்தமான முறைகளைக் கையாண்டு வரலாற்றைக் கற்பிப்பது நமக்குச் சுலபமாகவும், எளிமையாகவும் இருக்கும் என்பதில் உண்மையுண்டு.

### நோக்கங்களில் வேறுபாடு

வரலாறு கற்பிப்பதின் நோக்கங்கள் என்னென்ன என்பதை வேறு ஒரு இடத்தில் விரிவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்நோக்கங்கள் பொதுவாக இருந்தாலும் அவற்றுள் பல மேல்வகுப்புகளுக்குப் பொருத்தமானவை என்று சொல்ல வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளில் வரலாறு கற்பிப்பதின் நோக்கங்களில் ஒன்று வரலாற்றுப்பாடத்தில் என்றும் நிலைத்திருக்கும்படியான கவனத்தையும். அக்கறையையும் ஏற்படுத்தி அதுவளரச் செய்வதாகும். ஆரம்ப நிலையில் உள்ள மாணவர்களிடம் வரலாற்றில் நல்ல ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டால் மேல் வகுப்புகளில் வரலாற்றுப்பாடத்தை வரலாற்றுக்கென்றே மிக அக்கறையுடன் படிக்க மாணவர் முயல்வர். ஆரம்பகட்டத்தில் வரலாற்றை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். இத்தரத்து மாணவர்கள் வரலாற்றை முறைப்படியாக பின்பு கற்பதற்குப் பூர்வாங்கமாக அடித்தளம் அமைப்பது நமது நோக்கங்களில் ஒன்ருக இருக்கவேண்டும்.

நமது புராணங்களும் இதிகாசங்களும் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. எனவே இக்காலத்தை இதிகாசங்களில் பற்றுடைய காலம் என்று குறிப்பிடவேண்டும். இத்தரத்து மாணவர்கள் நல்லவர்களை நல்லவர்களாகவும் கெட்டவர்களைக் கெட்டவர்களாகவும் கொள்ளும் மன இயல்புடையவர்கள். இது ஆசிரியரின் மனப் போக்கையும், அவரது முன்மாதிரியைப் பொறுத்தும் ஏற்படும். வரலாற்று ஆசிரியர் வரலாற்றில் வரும் மனிதர்களைப்பற்றிக் கொள்ளும் விருப்பு வெறுப்புகளின்படி மாணவர்களும் விருப்பும் வெறுப்பும், பற்றும் கொள்ள விரும்புவர் என்பதை மறக்கக் கூடாது. வரலாற்றுக் கதைகளில் வருபவர்களைப் பின்பற்றும் மனப்பான்மையுடையவர்களாகவும் அவர்களிடத்தில் மதிப்புடையவர்களாகவும் இத்தரத்து மாணவர்கள் காணப்படுவர். எனவே புராண, இதிகாசங்கள் மூலம் வரலாற்றை முறைப்படி கற்பிப்பதற்கு வேண்டிய அடித்தளம் அமைப்பது இக்காலத்தில் நாம் கொள்ளும் நோக்கங்களில் ஒன்றாக அமையவேண்டும். அடுத்தபடியாகப் பிள்ளைகளின் மன எழுச்சியைத் தூண்டுவது வரலாற்று நிகழ்ச்சிகளின் நோக்கங்களில் ஒன்ருக இருக்கவேண்டும். பிள்ளைகளின் கற்பனையைத் தூண்டுதல், வீரச்செயல்களில் ஈடுபட்டவர்பால் இரக்கம், பரிதாபம், அன்பு காட்டுதல், இதர நற்பண்புகள் ஆகியவற்றை வரவேற்பவர்களாக மாணவர்களை வளர்க்கவேண்டும்.

பள்ளி அனுபவத்தில் இல்லாதவையாகவும், பிள்ளைகளுக்குத் தெரிந்தவையாகவும், கடந்துபோன காலத்தைப் பற்றிய புதிய அநுபவத்தை அவர்கள் பெறச்செய்வதும் நமது நோக்கங்களில் ஒன்ருக அமையவேண்டும். சுருக்கமாகச் சொன்னுல் பிள்ளைகள் கற்பனையில் தங்கள் பழங்கால மக்கள் வாழ்ந்ததைப்பற்றி படைத்து, அனுபவிக்க நாம் அவர்களுக்கு உதவவேண்டும். பிள்ளைகளின் வாழ்க்கைக்கும் பழங்கால மக்களின் வாழ்க்கைக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன. ஆகையினுல் அவற்றைக் கற்பனையில் காண வகை செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

அடுத்து இந்த இளம் வயதில் மாணவர்களுக்கும் வரலாற்றிற்கும் ஏதாவது ஒரு வழியில் தொடர்பு உள்ளது என்பதை உணரச் செய்தலும் நமது நோக்கங்களில் ஒன்ருக இருக்கவேண்டும். உலக வரலாறு கற்பதற்கும், நாட்டு வரலாறு கற்பதற்கும், இது பூர்வாங்கமாக அமையும் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஏதாவது ஒரு வழியில் தங்களுக்கும் கடந்த காலத்திற்கும் உள்ள தொடர்பை மாணவர்கள் அறிய வழிகாட்ட வேண்டும். இத்தொடர்பு பிள்ளைகளால் உருவாக்கப்பட்டால் என்றும் நிலைத்து இருக்கும். வரலாற்றுப்பற்றை மாணவர்களிடம் ஏற்படுத்தலாம் என்பதில் ஐயமில்லை.

இதற்கு அடுத்தபடியாகப் பிள்ளைகள் பயன்படுத்தும் பொருள், அல்லது அவர்களுக்குத் தெரிந்த பொருள்கள் ஆகியவற்றின் வரலாறு பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அவாவை எழுப்ப வேண்டும். பிள்ளைகள் எதையும் ஆராய்ந்து அறியத் தொடங்குவது அவர்களது மன இயல்பு. இந்த ஆராயும் மனப்பான்மையை பிள்ளைகள்

காணும் பொருள்களின் மாறும் பழக்க வழக்கங்கள்பாலும் திரும்ப வேண்டும். இது எப்படி வந்தது என்ற வினவை பிள்ளைகளிடம் எழுப்பி பதில் வரவழைக்கவேண்டும்.

ஆரம்பத்தில் காலத்தையும் கற்பிக்கலாம் என்ற நோக்கத்தை ஆசிரியர் வைத்துக் கொள்ளக்கூடாது. முறைப்படி வரலாறு கற்பிக்கும் பொழுது இதற்கு வாய்ப்பு அளிக்கலாம். இருந்தாலும் கால அறிவைப் பெறுவதற்குப் பிள்ளைகளின் வாழ்க்கையைப் பற்றிய விவரங்களை மட்டும் பயன்படுத்திக் கால அறிவு உணர்ச்சியை ஏற்படுத்தலாம். இக்காலத்தில் சமுதாயவளங்களைப் பற்றிப் பிள்ளைகள் அறியச் செய்வது நமது நோக்கமாக இருக்கவேண்டும் என்ற கருத்தும் உண்டு. வரலாற்றைத் தேர்ச்சிக்காகக் கற்பிக்கும் நோக்கம் கைவிடப்படவேண்டும். வரலாற்றில் வரும் தனிப்பட்டவர்கள் வாழ்க்கை எக்கருத்தை வலியுறுத்துகிறது என்பதைப் பொருத்தும் அக்கருத்தை எந்த மனவெழுச்சியில் பிள்ளைகள் ஏற்றுக் கொள்ளுகின்றனர் என்பதைத் பொருத்தும வரலாற்றினால் ஏற்படும் பயன் அமையும்.

## கற்பிக்கும் முறைகள்

அடுத்து என்னென்ன கற்பிக்கும் முறைகளை இக்காலத்தில் பயன் படுத்தவேண்டும் என்பதைச் சிந்திக்கவேண்டும். மேல் வகுப்பில் அனுசரிக்கப் போகும் முறைகளையும், நுட்பங்களையும் கீழ் வகுப்புகளில் அனுசரிக்க முற்படுவது விரும்பத்தக்கதல்ல. மாணாக்கர்கள் வரலாற்றுப் புத்தகத்தைப் படித்தறியும் மொழித் திறன் உடையவர்களாகவும் இருக்கமாட்டார்கள்.

கதைமுறை ஆரம்ப வகுப்புகளில் அனுசரிக்கவேண்டிய முறைகளில் ஒன்று. வரலாற்றைப் பிள்ளைகளுக்குக் கதைகளாகவே சொல்லவேண்டும். மாணாக்கர்கள் தங்களையறியாமலேயே கதைகளைப் படிப்பதின் வாயிலாய் வரலாற்று அறிவைப் பெறுகின்றனர். கதைகளை எங்ஙணம் சொல்லுவது என்பது அடுத்த கேள்வியாகும். எல்லா ஆசிரியர்களும் கதைகளைச் சொல்லுவதில் வல்லுனர்களாக இருக்க முடியாது, என்றாலும் உணர்ச்சியுடன் உயிர்த் ததும்பும்படி பிள்ளைகள் புரிந்துகொள்ளும் முறையில் கதைகளைச் சொல்ல வேண்டும்.

உயர்வகுப்புகளில் அனுசரிக்கப்படும் விரிஉரை முறை, டால்டன் முறை செயல்திட்ட முறைகள், புத்தகமுறை ஆகியவற்றிற்கு இடமே கிடையாது வரலாற்று நிகழ்ச்சிகளை ஆசிரியர் வாய்மூலம் வாய்ப்பாடமாகச் சொல்ல வேண்டும். மாணவர்கள் தாங்களாகவே படித்தறிவதற்கும் அவர்களுக்குமொழி அறிவும், அக்கறையும் இருக்காது. புத்தக முறையைவிட ஆசிரியர் சொல்லும் முறை oral method சிறந்ததாகும். எனவே ஆசிரியர் வாய்மொழிப் பாடமாகவே இத்தரத்து மாணவர்களுக்கு வரலாற்றைக் கற்பிக்க வேண்டு மென்பது தெளிவுபடும். வாய்மொழிக் கற்பித்தல் 'oral method' தலைப்பின் கீழ் இதைப்பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இத்தரத்து மாணவர்களுக்கு நிறுவனங்கள் வாயிலாய் வரலாற்றை அறியலாம் என்ற கருத்தை இங்கு ஆராய்தல் வேண்டும். மாணவர்களுக்குத் தெரிந்ததும் அவர்களது அனுபவத்திற்குப் பட்டதுமான நிறுவனங்கள் அடிப்படையில் வரலாறு போதிக்கலாம். இந்த நிறுவனங்களில் மாணாக்கர்களின் கவனத்தைச் செலுத்த வேண்டும். இதில் எந்தவிதமான இடர்பாடுகளும் காணப்படமாட்டாது. நிகழ்ச்சிகள் பெரும்பாலும், என்றும் நிறுவனங்களின் அடிப்படியில் நிகழ்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் நிறுவனங்களை விளக்குவதாக அமைதல் வேண்டும்.

கீழ் வகுப்புகளில் தனிப்பட்ட பெரியவர்களை மையமாகக் கொண்டு வரலாற்று அறிவு கொஞ்சம் கணிசமாகக் கொடுக்க வேண்டுமென்ற முறை வரவேற்கத்தக்கதாகும். தனிப்பட்டவர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு குழு வரலாற்றைக் கற்பிக்க முடியாது என்பது உண்மையாக இருந்தாலும் இம்முறையில் வரலாற்று விவரங்கள் உருவம் பெறுவதுடன் தெளிவும் பெறுகின்றன. மற்றும் கற்பனைப் பெயர்களை மையமாகக் கொண்டு வரலாற்று விவரங்களைக் கற்றுக் கொடுத்தால் மாணாக்கர்கள் வரலாற்றில் அக்கறை கொள்ளும் வாய்ப்பு உண்டு. இத்தரத்தில் கால அறிவை ஏற்படுத்த முயற்சிக்காவிட்டாலும் நிகழ்ச்சிகளின் வரிசை பற்றிய உணர்வு SENSE OF SEQUENCE ஏற்படுத்தவேண்டும். பலகதைகளை ஏதாவது ஒரு காலத்தை-யொட்டி தொகுத்தால் அக்காலத்தைப் பற்றிய அறிவைப் பிள்ளைகள் பெறுவார்கள். பிள்ளைகள் வாழ்க்கையோடு கதைகளில் வரும் தனிப்பட்டவர்களின் வாழ்க்கையை ஒப்பிடவேண்டும். பாடத்தில் பிள்ளைகளின் ஆவலைத் தூண்டுவதற்கு இது சிறு உதவியாக இருக்கும். பிள்ளைகளுக்கு அறிமுகமான-வற்றுடன் தெரியாதவற்றை இணைப்பது இதன் நோக்கமாகும். கற்கவிருக்கும் பாடத்தைப்பற்றி ஏதாவது முன்னறிவு இருந்தால்தான் பாடத்தில் பிள்ளைகளின் கவனத்தை எழுப்பமுடியும்.

நாடகமுறையை இக்காலத்தில் பயன்படுத்த வேண்டும். பிள்ளைகள் நடிப்பதற்கு அதிக வாய்ப்புக்களைக் கொடுக்கவேண்டும். மாணவர்களில் ஒருவர் நடிப்பதைப் பார்த்து மற்றவர்களும் மனவெழுச்சிகளைப் பெறுவர். நடிப்புமுறையாலும் இத்தரத்து மாணவர்களுக்கு வரலாறு கற்றுக் கொடுக்கலாம். இம்முறை உயர் வகுப்புகளில் மிக அதிகமாகப் பயன்படுத்த முடியாது. நடிப்பதற்கு முன்பு வேண்டிய செய்திகளை பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். வாய் மொழிப்பாடத்திற்குப் பிறகே நடித்தலுக்கு இடமளிக்க வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளில் விளையாட்டு முறையைப் பின்பற்றலாம் இம்முறை அனுசரிப்பதின் நோக்கம் பாடத்தில் பிள்ளைகளின் கவனத்தைத் திருப்புவது ஆகும். கற்ற வரலாற்று விவரங்களை வெளியிடுவதற்கு வாய்ப்புக்களையும் அளிக்கின்றன. விளையாட்டு முறையில் புதிய பாடத்தைக் கற்பிக்க முடியா-விட்டாலும் கற்பித்த பாடத்தில் பயிற்சியைக் கொடுக்கலாம். கற்ற பாடப்பகுதிகளில் நல்லதெளிவு பெறுவதற்கு விளையாட்டு முறையை அனுசரிக்கலாம்.

காலத்தைக் குறிப்பிடுதல், படங்களையும் பொருள்களையும் அடையாளம் கண்டு சொல்லுதல், விவரங்களின் அடிப்படையில் யூகித்தல், உரையாடல் கற்டனைக் கடிதம் எழுதுதல், கையெழுத்தை அடையாளம் காணல் போன்ற விளையாட்டுக்கள் வாயிலாய் மாணவர்கள் வரலாற்றில் தெளிவான அறிவைப் பெற வாய்ப்புக்களைப் பெறுவர்.

மேல்வகுப்புகளில் கற்றதை வெளியிட பல வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன. மாணவர்கள் எப்பொழுதும் ஏதாவது சிந்தனையில் ஈடு-பட்டிருக்கும் படியாகப் பாடம் நடத்தப்பட வேண்டும்.

எனவே ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு வரலாற்றுச் சம்பவங்களின் அடிப்படையில் கைவேலைக்கும், கலைத்திறன் வேலைக்கும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். வரலாற்றுப் பொருட்கள், ஆடை ஆபரணங்கள், ஆயுதங்கள், வீட்டுச்சாமான்கள், போன்றவைகளின் பிரதியை களிமண்ணால் செய்தல், கட்டிடக்கலை பற்றிய விளக்கப்படங்களைத் தயாரித்தல் போன்ற பல வகையான பயிற்சியைக் கொடுக்கலாம்.

## 2. பாடப் புத்தக முறை

பாடப்புத்தக முறையும், வாய்மொழி முறையும் பழைய முறைகள் நீண்டகாலமாக வரலாறு கற்பிப்பதில் பயன் படுத்தப்பட்டு வந்தன. இந்த இரண்டு முறைகளையும் பழைய முறைகள் என்று சொல்லுவதில் வியப்பில்லை. இக்காலத்திலும் கூட பாடப்புத்தகமுறையும் வாய்மொழிக் கற்பித்தல் முறையையும் புறக்கணிக்க முடிவதில்லை.

பாடப்புத்தக முறையில் மாணவர்கள் பாடப்புத்தகங்களிலிருந்து ஒரு சில வரிகளைப் படிப்பர். சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர் பாடப்புத்தகத்தைப் படிப்பார். மாணவர்கள் பாடப்புத்தகங்களைப் படிக்கும் பொழுது கவனமாகக் கேட்டுக்கொண்டிருப்பர். தங்களிடமுள்ள வரலாற்றுப் புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு அவர்களும் அதை படிக்கும் பொழுது கவனிப்பார்கள். வகுப்பில் வாசிக்கப்பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அவை-களுக்கு விளக்கம் கொடுப்பார். உதாரணங்களையும் எடுத்துக் கூறுவார். சில சமயம் பாடப்பகுதியின் நடுக்கருத்தை விட்டு விலகிச் செல்வதும் உண்டு இது முடிந்தவுடன் மேற்கொண்டு சில வரிகள் அல்லது பத்திகள் படிக்கப்-படும். அதற்கும் ஆசிரியர் விளக்கம் கொடுப்பார். விரிவான செய்திகளையும் கொடுப்பார். இவ்வாருகவே எல்லாப்பாடப் பகுதிகளும் நடத்தப்படுகிறது

பிள்ளைகள் பாடம் முடிந்தவுடன் வீட்டில் தாங்களாகவே பாடப் புத்தகத்தை வாசிக்கின்றனர். வகுப்பில் கேள்விகள் கேட்பது ஒரு முக்கிய பகுதியாக இருக்கும். வகுப்பில் நாள்தோறும் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்காக பிள்ளைகள் பாடப்புத்தகத்தை ஆர்வத்துடன் படிப்பர்.

புத்தகத்தில் காணப்படாத செய்திகளை ஆசிரியர் கொடுப்பார். இம்முறைதான் பழையமுறை. இக்காலத்திலும் கூட இம்முறையை சிலர் அனுசரிக்க முற்படுகின்றனர்.

இம்முறையில் பாடப்புத்தகங்கள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதனவாக இருக்கின்றன. ஆசிரியரும் மாணவர்களும் பாடப் புத்தகத்தின் தேவையை உணர்கின்றனர். இருந்தாலும் இம்முறையில் பாடப் புத்தகத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இம்முறையின் வெற்றி தோல்வி ஆசிரியரின் திறமையையும், சாமார்த்தியத்தையும் பொறுத்ததாகும், ஆசிரியர் பாடத்தில் பெற்ற அறிவையும் கதை சொல்வதில் அவருக்கு இருக்கும் திறமையையும் பொறுத்து இம்முறை பலன் கொடுக்கும்.

பாடப்புத்தகங்களில் அடங்கிய செய்திகளின் அடிப்படையில் கற்பித்தல் நடத்தவும், பிள்ளைகளிடமிருந்து கற்றதை வரவழைக்கவும் இம்முறை உதவுகிறது. மாணவர்கள் குறிப்பிட்ட தலைப்புக்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட கோர்வையான செய்திகளைப் பாடப்புத்தகத்தில் காண்கின்றனர். பாடப்புத்தகத்தையொட்டி ஒழுங்காக முறைப்படி பயிற்சிகள் கொடுக்கலாம்.

சில சமயங்களில் ஆசிரியர் பாடப்புத்தகத்திலிருந்து ஒரு சில வாக்கியங்களோ அல்லது ஒரு பகுதியையோ, தான் படிப்பதும் அல்லது ஒரு மாணவனை வாசிக்கச்செய்து அதற்கு விளக்கம் தருவதும், ஒப்புவமைகள் கொடுப்பதும் உதாரணங்கள் சொல்லுவதும் வழக்கம். இம் முறையில் வகுப்பு மாணவர்கள் அனைவரும் வாசிக்கும் நேரத்தில் கவனம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது.

இம்முறை 'அமெரிக்கன் முறை' என்று குறிப்பிடப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில் தரம் பெற்ற பாடப்புத்தகங்கள் கிடைக்காததால் அவர்கள் வாய்மொழி முறையையும், விரிவுரை முறையையும் அதிகம் பயன் படுத்தினர். இக்காலத்தில் நல்ல பாடப் புத்தகங்களுக்கு குறைவில்லை. மிக மலிவான விலைகளில் புத்தகங்கள் கிடைக்கின்றன. பாடப் புத்தகத்தின் அடிப்படையில் கற்பதும், கற்றதை வெளியிடுவதும் அமெரிக்கன் முறையாகும். இம்முறை பாடப் புத்தகமுறையே என்பதில் ஐயமில்லை. கற்பித்தலின் ஒவ்வொரு படியிலும் பாடப்புத்தகங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

பழைய முறையில் பாடப்புத்தகத்தை அப்படியே படித்து ஒப்புவிப்பது, புத்தகத்தில் உள்ளவாறு விடைகொடுப்பது முக்கிய நோக்கமாகக் கொள்ளப்பட்டது என்பது உண்மை. பிள்ளைகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதில் காணும் செய்திகளை அறிவதில் திறன் காண்பித்தல் முக்கிய உடனடி நோக்கமாகக் கருதப்பட்டது. பாடப் புத்தகத்தை நன்ருகப் படித்துப் பயன்படுத்தும் வழிகளை பிள்ளைகள் அறியச் செய்வதை நமது முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

பாடப்புத்தக முறையைப் பற்றிப் பேராசிரியர் 'ஜான்சன்' குறிப்பிடும் கருத்தாவது மாணவர்கள் பாடப் புத்தகத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் தங்கள் வீடுகளில் படித்து வரும்படி கூறி, வகுப்பில் படித்த பகுதிகளிலிருந்து கேள்விகள் கேட்டல். பிள்ளைகளுக்குப் பாடப் பகுதியில் என்னென்ன கேள்விகள் கேட்கப்படும் என்று தெரியாததால் அவர்கள் மிகவும் நுணுக்கமாக அப்பாடப் பகுதிகளைப் படித்து வருவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பிட்ட பகுதிகளில் செய்திகளை சேகரித்துத் தொகுத்துக் கொடுத்துக் கட்டுரை ஆக்குதல் போன்ற பயிற்சிகள் கொடுக்கலாம். பாடப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் அவர்களுக்குச் செய்து காட்டலாம்.

பாடப் புத்தகங்களுள் சில குறிப்பிட்ட பகுதிகளை நெட்டுருப் போட்டு ஒப்புவிக்கும் பழக்கம் பழமையானது. இது முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும். புத்தகத்தில் வரும் சில முக்கிய சொற்றொடர்களையும், சொற்களையும் அப்படியே குறிப்பிடுவதனுல் தவறு இல்லை. புத்தகத்தில் உள்ள கருத்துக்களை வரிசைப் படுத்தித் தொகுத்து பிள்ளைகளின் சுய நடையில் வெளியிட வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மாணவர்கள் சில குறிப்பிட்ட பகுதிகளை பாடப் புத்தகத்திலிருந்து படித்து வரும்படி கட்டளையிடலாம். வகுப்பு நேரத்தில் பிள்ளைகளுக்குக் கொடுக்கப் பட்ட பகுதிகளில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு வாய்மொழியில் விடையளிக்கவும், அவற்றை எழுதவும் பயன்படுத்தலாம். பாடப் புத்தகங்களில் உள்ளபடி விடைகள் கொடுக்க வேண்டும் என்ற தேவையில்லை. கருத்துக்களை மட்டும் கொடுத்தால் போதுமானது. இம்முறை அனுசரிக்கப் பட்டால், பாடப் பகுதியை மட்டும் நன்ருகத் திறம் பெறக் கற்க முடியும் மாணவர்கள் குறிப்பிட்ட பகுதிகளை ஆழ்ந்து படித்தல், அப்படிப் படித்த பகுதிகளிலிருந்து சுருக்கம் தயார் செய்தல், கட்டுரை எழுதுதல், முக்கியப் பெயர்கள், நிகழ்ச்சிகள், இடங்கள், சில போக்குகள் இவற்றைப் பொருக்கித் தொகுத்தல் போன்ற எழுத்து வேலைகள் பிள்ளைகளுக்கு அளிக்கலாம். இதை வகுப்பு நேரத்திலும், வகுப்புக்கு வெளியிலும் அவர்கள் செய்யலாம்– மாணவர்கள் வகுப்பில் வாய்மொழியில் செய்திகளை எடுத்துக் கூறலாம் கரும்பலகையில் முக்கிய அம்சங்களை எழுதலாம். அவைகளின் அடிப்படையில் வகுப்பில் கருத்தரங்கு நடத்தலாம். இதில் மாணவர்களும், ஆசிரியர்களும் பங்கு பெறலாம்.

## 2. வாய் மொழிப்பாடம் (Oral lesson)

இம்முறை கீழ் வகுப்பு மாணவர்களுக்கு வரலாறு கற்பிக்கச் சிறந்தது வரலாற்றுப்பாடம் முதல் மூன்று ஆண்டுகளில் 'சொல்லுதல்' மூலமும் வினவுதல் வாயிலாயும் கற்றுக் கொடுக்கப் படவேண்டும். விரிஉரை முறையும், வாய் மொழி முறையும் ஒன்ருகக் காணப்பட்டாலும் சில அம்சங்களில் வேறுபாடு காணப்படும். விரிஉரை முறையில் ஆசிரியர்மட்டும் பேசிக் கொண்டேயிருப்பர். துணைக்கருவிகளையும் பயன்படுத்துவார். பிள்ளைகள்

கேட்டுக் கொண்டும், குறிப்புகள் எடுத்துக் கொண்டும் இருப்பார்கள். ஆனால் வாய் மொழிப் போதனையில் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கு பெறு, கின்றனர். வினவுதல். உரையாடுதல், வெளியிடுதல் போன்ற அம்சங்களுக்கு வாய் மொழியில் கற்பித்தலில் சிறப்பிடம் கொடுக்கப்படும்.

கீழ் வகுப்புகளில் வரலாற்று முக்கிய விவரங்கள் மட்டுமே கற்பிக்கப் படுகின்றன. மாணவர்களும் கற்கின்றனர். இக்காலத்தில் பிள்ளைகள் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து கொள்ள அவர்களுக்கு வாய்மொழிப் பாடம் ஒருவாறு உதவி செய்யும். வாய்மொழிப்பாடம் கேட்கும் பொழுதும் ஆசிரியர் உணர்ச்சி ததும்பச் சொல்லும் பொழுதும், பிள்ளைகள் விவரங்களைத் தங்கள் கற்பனையில் வைக்கின்றனர். கீழ் வகுப்புகளில் பாடப்புத்தகத்தை வாசித்துப் பொருள் கூறுவதால் பிள்ளைகள் வரலாற்றுப் பாடத்தில் கவனம் செலுத்துவர் என்று சொல்லுவதற்கில்லை. முதல் ஓரிரண்டு ஆண்டுகளில் வரலாற்றைத் தெளிவான வாய்மொழியில் கற்பிக்க வேண்டும். கதைகளை உருக்கமாகவும், உற்சாகமாகவும், உண்மையுடனும் கூறினால் கதைகளில் வரும் விவரங்களைப் பிள்ளைகள் மனத்தில் கற்பனை செய்து கொள்வார்கள். பின்பு படிக்கப் போகும் விரிவான வரலாற்றுக்கு இது அடிப்படையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

வாய்மொழியில் கற்பித்தல் மிகவும் சிறக்க வேண்டும் என்று ஆசிரியர் விரும்பினால் சில முறைகளைக் கையாளத் தயங்கக் கூடாது. கற்பிக்கும் வரலாற்று நிகழ்ச்சிகளின் சுருக்கத்தை முன்கூட்டியே கரும்பலகையில் எழுதுவது ஒரு முறை ஆகும். கரும்பலகையில் முக்கிய தலைப்புக்கள், துணைத் தலைப்புகள், முக்கியமான சொற்கள் முதலியவை இடம் பெற வேண்டும். இவ்விவரங்களை விரிவாகச் சொல்லும்போது பிள்ளைகள் மனத்தில் கற்பனை செய்து கொள்ளுவார்கள். முன்கூட்டியே எழுதி வைப்பதைவிட வாய்மொழிப் பாடம் நடக்கும்போதே எழுதி வருதலும் நன்மை பயக்கு என்பதில் ஐயமில்லை.

பாடம் முடிந்தவுடன் பாடத்தின் முக்கிய அம்சங்களைக் கொண்டு சுருக்கத்தைத் தயாரிக்கும்படி செய்தல், அதன் அடிப்படையில் கேள்விகள் கொடுத்தல், எழுதுதல், கட்டுரையாக்குதல், நிகழ்ச்சிகளைத் தகுந்த இடத்தில் சேர்த்தல் போன்ற பயிற்சிகளைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்.

ஆசிரியர் வாய்மொழிக் கற்பித்தலில் அதிக விவரங்கள் கொடுக்க வேண்டும். ஆனால் முக்கிய அம்சங்களை மட்டும் அடிக்கடி வலியுறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அதிக விவரங்கள் கொடுப்பதன் நோக்கம் தெளிவு பெறுவதற்கே தவிர, கொடுக்கப்பட்ட விவரங்களையெல்லாம் பிள்ளைகள் ஞாபகப்படுத்துவதற்கல்ல என்பதை ஆசிரியர் மனத்தில் கொள்ள வேண்டும் சில துணுக்குகள் பிள்ளைகளின் கவனத்தைக் கவரும். இச்-சம்பவங்கள் அதிக முக்கியமானவையாக இல்லாவிட்டாலும், பிள்ளைகள் மனத்தைக் கவருவதற்காகவாவது கூற வேண்டும்.

வகுப்பில் புத்தகம் வைக்கப்பட்டிருந்தாலும் அது வாய்மொழிப் பாடத்திற்குத் துணையாக இருக்க வேண்டும். ஆரம்பத்திலிருந்து சிறிது காலம் வரை பிள்ளைகள் ஆசிரியரின் வாய் மொழிக் கற்பித்தலிருந்து குறிப்புக்கள் எடுப்பதை வற்புறுத்தக் கூடாது. காரணம் அவர்களுக்குத் தேவையான. மொழியறிவும், தேர்ந்தெடுக்கும் திறனும் எல்லா மாணவர்களிடமும் இருக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. வாய்மொழிப் பாடத்திற்குப் பிறகு பிள்ளைகள் தங்கள் பாடப்புத்தகத்தை பயிற்சிகளுக்கும் மதிப்புரைக்கும், திருப்புவதற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

வாய்மொழிப் பாடத்தில் ஆசிரியர் மாணவர்களையும், மாணவர்கள் ஆசிரியரையும் வினவலாம். பேச முன் வரும் பிள்ளைகளுக்கு அடிக்கடி வாய்ப்புக்கள் கொடுக்கலாம். வகுப்பில் எல்லா மாணவர்களும் பேசுவதற்கு நாம் வாய்ப்புக் கொடுக்க முடியாது. அதற்குப் பதில் கற்பிக்கப்பட்ட அல்லது கற்பிக்கப்படும் செய்திகளில் அடிக்கடி வினுக்கள் கேட்டலை மேற்கொள்ளலாம் ஆசிரியர், மாணவர்கள் பாடத்தைக் கவனிக்கிருர்களா என்று அறியவும் அதற்குத் தகுந்தவாறு கற்பித்தலைச் சீர் செய்ய உதவுவதுடன் பிள்ளைகளும் தன்னம்பிக்கைபெற இம் முறை பயன்படும் என்பதில் ஐயமில்லை. பொதுவாக எல்லா மாணவர்களையும் நோக்கி வினவினுல் பிள்ளைகள் அனைவரையும் சிந்திக்கச் செய்யும் என்பது உண்மை. ஓரிரண்டு பேர் சில கேள்விகளுக்கு விடை பகர்ந்தால் போதுமானது. கேள்வி கேட்டல் மொழி அறிவிற்காக அல்ல என்பதை ஆசிரியர் கவனிக்க வேண்டும். பிள்ளைகள் ஒப்பிட்டுப் பார்க்கவும், விபரங்களை நினைவிற்குக் கொண்டுவரவும், விவரங்களைத் தேர்ந்தெடுத்துக் தொகுத்துக் கூறவும், களைப்பைப் போக்கி உற்சாகப் படுத்தவும் அடிக்கடி வினுவுதல் அவசியமாகும்.

வாய் மொழிப் பாடத்தின் சிறப்பான அம்சங்கள் இரண்டை ஆசிரியர் உணர்தல் வேண்டும். ஒன்று வாய்மொழிப் பாடத்திற்கு நிகழ்ச்சிகளைப் பொறுக்குதல் பொறுக்கிய விவரங்களைச் சிறப்பான முறையில் சொல்வது அடுத்ததாகும். நிகழ்ச்சிகள் குறிப்பானவைகளாகவும், துலக்கமானதாகவும் இருக்கவேண்டும். பொதுக்கருத்துக்களை, குறிபிட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டு விளக்க வேண்டும். அதிக விபரங்கள் பிள்ளைகளுக்குச் சுமையாகப் படும். சரியாகத் தேர்ந்தெடுத்தால் விவரங்கள் பிள்ளைகளின் மனத்தைக் கவரும் பாடம் சிறிது சிறிதாக பொதுக்கருத்துக்களை ஒட்டிய விபரங்களால் சரியாகத் தொகுக்கப்பட வேண்டும்.

வாய்மொழிப் பாடத்தைச் சிறக்கச் செய்ய மற்ருெரு வழியையும் பின்பற்றலாம். விவரங்களைச்சில தனிப்பட்டவர்களின் வாழ்க்கையைச் சுற்றிப்பின்னி பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். இம்முறையில் விவரங்கள் தனியார் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கப்படுகின்றன. சிலநிகழ்ச்சிகளை இம்முறையைக்கொண்டு கற்பிக்க இயலாது.

ஆசிரியர் நல்ல கதை சொல்பவராக விளங்க வேண்டும். நல்ல கதை சொல்லுதல் எப்படி என்பதை ஆசிரியர் அறிந்திருக்கவேண்டும். வாய்மொழிப்

பாடத்தில் குறிப்பிடப் போகும் நிகழ்ச்சிகள் எளிதில் நினைவுக்குவர அவைகளை நன்கு வகைப்படுத்திக் கொள்ளவேண்டும். கதை சொல்லுதல் பிள்ளைகளின் மகிழ்ச்சிக்காக என்று கொள்ளாமல் வரலாற்றுச் செய்திகளைக் கற்றுக் கொடுக்க என்பதை மறக்கக்கூடாது. ஆசிரியரிடம் மாணவர் கேள்வி கேட்பதும் ஒருவரை ஒருவர் வினவுதலும் சேர்ந்து ஒத்துழைத்தலும் மிக்க நலம் பயக்கும். குறிப்புக்கள் எடுப்பதற்குப் பதில் கரும்பலகையைப் பார்த்து எழுதிக்கொள்ளலாம். ஆசிரியர் சொல்வதையும் எழுதிக் கொள்ளலாம்.

வாய்மொழிப்பாடம் மிகவெற்றிகரமாக விளங்க வேண்டுமேயானல் வினக்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்படவேண்டும். அதையடுத்து வாய் மொழி கற்பித்தலை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மாணவர்கள் கைவேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு தாம் பெற்ற அறிவை அதன் மூலமாய் வெளியிட அவர்களுக்கு நாம் வாய்ப்புக்கள் கொடுக்க வேண்டும்.

வாய்மொழிப் பாடத்தில் துணைக்கருவிகள் வகிக்கும் இடம் என்ன என்பதையும் ஆராய்தல் வேண்டும். கற்பித்தல் சாதனங்களைச் சந்தர்ப்பத்-திற்குத் தகுந்தவாறு பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இதற்குப் படங்கள், மாதிரிப் பொருள்கள், உண்மைப் பொருள்கள் ஆகியவற்றை சில சந்தர்ப்பங்களில் துணைக் கருவிகளாகப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

## 3. விரிவுரையாற்றுதல்

வாய்மொழியில் கற்பிப்பது விரிவுரை முறையாகும். இதை வாய் மொழிக் கற்பித்தல் என்றும் சொல்லலாம். பிள்ளைகள் ஆசிரியரின் உரையைக் கேட்டுக் கொண்டும், குறிப்புகளைத் தொகுத்துக் கொண்டும் இருப்பார்கள். கீழ் வகுப்பு களுக்கு இது சிறந்த முறை என்று சொல்ல முடியாது. சொல்லும் முறைதான் சிறந்தது. இளம் பிள்ளைகள் ஆசிரியரின் உரையை நீண்டநேரம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். இம்முறை கல்லூரி மாணவர்களுக்குத் தான் சிறந்தது. உயர் நிலைப் பள்ளியில் உயர் வகுப்பு மாணவர்கள் போதிய கவனத்துடன் தயாரித்து நன்ருக ஆற்றப்படும் விரிவுரையால் அதிகப் பலன் பெறுவர் என்பதில் சந்தேகமில்லை.

வரலாறு கற்பிக்கும் பொழுது சில சமயங்களில் பலவற்றையும் சொல்ல வேண்டிய தேவை ஏற்படும். இம் முறைதவிர வேறு முறைகளில் எளிமை யாகப் பிள்ளைகளுக்கு தேவையான செய்திகளைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்காது. நிகழ்ச்சிகளை ஆசிரியர் விளக்குவதைக் காட்டிலும், கேள்வி கேட்பதன் மூலமும், வழிகாட்டுவதன். மூலமும் பிள்ளைகள் செய்திகளைத் தேடிக் கண்டு பிடித்து அறிந்து தொகுத்து வெளியிடுவது மிகவும் உயர்ந்தது என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். வரலாறு போன்ற பாடத்தில் இதர பாடங்களைப் போல் அல்லாமல் விரிவுரை செய்தல் முறையை அடிக்கடி கை யாளாமல் இருக்கமுடியாது. வரலாற்றில் பெரும்பாலான பகுதிகளைப்

பிள்ளைகள் செய்து கற்க முடியாது.. நன்கு வழிகாட்டித் தேவையான வசதிகளைச்செய்து கொடுத்தால் பிள்ளைகள் தாங்களாகவே சுய முயற்சியில் விவரங்களை சேகரித்துக் கற்பர் எனலாம்.

விரிவுரை முறை மிகவும் முக்கியமானது என்பதற்குக் காரணங்கள் பல உள்ளன. வரலாற்று விவரங்களை ஒருவர் சொல்ல அதைக் கேட்டு அறியலாம். மற்றும் புத்தகங்களைப் படித்து அறிந்து கொள்ளலாம். இவை தவிர வேறு வழியில்லை. புத்தகங்களைப் படித்துச் செய்திகளைச் சேகரிக்கும் திறனை எல்லா மாணவர்களிடையேயும் காணமுடியாது. எல்லாப் பிள்ளைகளுக்குமே புத்தகங்களைத் தேடித் தருவது அடுத்த பிரச்சனையாகும். ஆகவே விரிவுரை செய்தல் ஆசிரியரின் பொறுப்பாகவே இருக்கும். ஏதாவது ஒருகருத்தை உணர்ந்து அதைப்பிள்ளைகள் கற்பனைசெய்து கொள்ள, ஆசிரியர் தேவை-யான சான்றுகளுடன் விவரங்களைக் கொடுக்க வேண்டும். இச் செய்திகளை ஆசிரியர் விரிவுரையில் குறிப்பிடுவதைத் தவிர வேறு எதுவும் சரியானதாகக் கருதப்பட மாட்டது. சில சமயம் பிள்ளைகளின் ஆவலையும் உற்சாகத்தையும் தட்டி எழுப்புவதற்கு ஒன்றை விரும்பவோ அல்லது வெறுக்கவோ செய்வதற்கு ஆசிரியர் உணர்ச்சியுடன் கூறினல்தான் சாத்தியப்படும். புத்தகம் படித்தால் இந்த விவரங்கள் அவ்வளவு உணர்ச்சிகளையும் விருப்பு வெறுப்புகளையும்-உண்டாக்காது என்பது உண்மை. ஆகையால் ஆசிரியர் உற்சாக மாகவும் முழு மனதுடனும், உண்மையாகவும் விரிவுரையாற்ற வேண்டும் என்பது தெளிவு. சுருக்கமாகச் சொன்னல் பாடத்தில் சரியான மனவெழுச்சி களையும், மனப்போக்குகளையும் எழுப்ப வேண்டுமானல் ஆசிரியர் உற்சாகத்துடனும், மனவெழுச்சியுடனும், உணர்ச்சியுடனும் உரையாற்றுதல் அவசியமாகும்.

மிக விரிவானதும், ஆழமானதுமான வரலாற்றுப் பகுதிகளைச் சரியாக வகைப்படுத்திக் கோர்வையாகக் கூற முடியும். ஒரு பெரிய கட்டுக்கோப்பில் (Frame Work) தனிப்பட்ட இனங்கள் வகிக்கும் இடத்தையும், தன்மையை-யும், முக்கியத்துவத்தையும் விளக்க உரையாற்றும் முறைபோல் உதவும் முறை வேறு எந்த முறையும் கிடையாது. நடத்தப் போகும் பகுதி மிகப் பெரியதாக இருக்கலாம். அதைப் பல வகுப்புகளில் நடத்தப் போகும் பகுதி மிகப் பெரியதாக இருக்கலாம். அதைப் பல வகுப்புகளில் நடத்த வேண்டிய, தாகவும் இருக்கலாம். அப்பகுதியின் பல அம்சங்களைச் சுருக்கிக் குறிப்பிட உரையாற்றல் முறையே சிறந்ததாகும். அந்தக் கருத்தைக் கரும்பலகையில் எழுதினல் பிள்ளைகள் படிக்கப் போகும் பாடங்களுக்குப் பல வகையில் உதவியாகவும் இருப்பதுடன், பிள்ளைகளின் ஆவலைத்தூண்டுவனவாகவும் படிக்கும் போது அப்பகுதிகளைப் பற்றிய முழு அறிவை ஏற்படுத்தும் வகையிலும். அமையும். இம்முறையில் பிள்ளைகள் என்னென்ன படிக்கப் போகிறேம் என்பதைப் பற்றி முன்கூட்டியே பொதுப்படையாக அறிந்து கொள்ளுவார்கள் என்பது உண்மை. கொடுக்கப்பட்ட கட்டமைப்பில் முறைப்படி விபரங்களைச் சேர்த்துக் கொள்ள இம்முறை வசதியாக இருக்கும்.

## இம்முறைக்குக் கொடுக்கவேண்டிய வாய்ப்புக்கள்

ஒருகுறிப்பிட்ட வரலாற்றுப் பகுதியை நடத்த ஆரம்பிப்பதற்கு முன்னல் அப்பகுதியைப் பற்றிய முக்கிய கருத்துக்களைச் சுருக்கி எடுத்துச் சொல்ல இம் முறையைப் பயன்படுத்தலாம். சில பகுதிகளை நடத்தி முடிக்க வாரங்கள் மாதங்கள் ஆகலாம். பிள்ளைகள் அப்குபதிகளில் அக்கரை கொள்ளும்படிச் செய்ய அப்பகுதியின் முக்கிய கருத்துக்களை சிலபெரியவர்கள் நினைவில் வைக்க வேண்டிய நிகழ்ச்சிகள், பிரச்சனைகள் முதலியவைகளைப் பற்றி இம்-முறையில் எடுத்துக் கூறலாம்.

தனிப்பட்ட பகுதி அத்தியாயம், பிரச்சனை தலைப்பு ஆகியவற்றுள் ஒன்றைப் படிக்கும் பொழுது மாணவர்கள் பலவற்றிற்கு உள்ள தொடர்பை உணர்வதில் துன்பப்படுவார்கள். இதைப் போக்குவதற்கும் பல வற்றிற்கும் உள்ள தொடர்பைப் பிள்ளைகள் எளிதில் உணர்வதற்கும் விளக்கம் கொடுக்கவும் இம்முறை மிகவும் பயன் படும். குறுகிய நேரத்தில் இதை கொடுக்க முடியும் உண்மை. கண்ணேட்டம் கொடுப்பதற்கும் பல கோணங்களில் விவரங்களைக் கண்ணேட்டமிட்டுத் தொகுப்பதற்கும் புதிய தொடர்புகளை நினைவுபடுத்து வதற்கும், அறியச் செய்வதற்கும் இம்முறையை பயன் படுத்தலாம். ஆசிரியர் இம்முறைக்கு சில நிமிடங்கள் முக்கியத்துவம் கொடுக்கத் தயங்கக் கூடாது.

கண்ணேட்டத்திற்கும். திருப்புதற்கும் Review and Recapitulation இம்முறை மிகவும் அனுகூலமானது. மாணவர்கள் கற்ற விவரங்களைத் தாங்களாகவே கண்ணேட்டமிட்டு காண்பது என்பது சற்று கடினமாக இருக்கும். அவர்களுக்காக ஆசிரியர் இதைச் செய்ய வேண்டும், ஆசிரியர் இம்முறையில் சுருக்கத்தை (Summary) கொடுக்கலாம். அத்தியாயம, பகுதிகள், தலைப்புகளின் முக்கிய அமசங்களை விரிவுரையில் சேர்த்து உணர்ச்-சியுடன் கொடுக்கலாம். அத்துடன் பொருத்தமான மேல் விவரங்களையும் கொடுக்கலாம்.

பாடப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கண்ட விவரங்களை ஆசிரியர் கொடுக்க இம்முறை பயன்படும. பாடபுத்தகத்தில் காணப்படும் விவரங்கள் சுருக்கமாக இருந்தால் அதை விரிவுப் படுத்த ஆசிரியர் தான் படித்த புத்தகத்திலிருந்தும், தனது சொந்தஅனுபவத் திலிருந்தும், மேற் கொண்டு பாடப்பகுதிகளை விளக்குவதற்காகக் கொடுக்க முடியும். பிள்ளைகள் ஆசிரியரின் ஆழ்ந்த பாடஅறிவையும், வெளியிடும் திறனையும் அறிந்து, ஆசிரியர்கள் பால் பற்றும் மதிப்பும் கொள்வர். பாடபுத்தகத்தை சம்பந்தப் பட்ட புத்தகங்களில் கிடைக்காத சில விவரங்களையும் தற்காலத்தை அடிப்-படையாகக் கொண்டு நடைபெறும், நிகழ்ச்சிகளை எல்லாம் இம்முறையை-க் கையாண்டு பிள்ளைகளிடம் தெரிவிக்கலாம்.

வரலாறு கற்பிப்பதின் நோக்கங்களில் ஒன்று பிள்ளைகள் எவ்வாறு வரலாற்று அறிவை புத்தகங்களிலிருந்து பெறுவது என்பதை பிள்ளைகளுக்கு கற்பிப்பதாகும். கரும்பலகையிதிருந்தும் பாடபுத்தகளிலிருந்தும் ஆசிரியர்

வாய் மொழிசெய்திகளில் இருந்தும் குறிப்புகள் எடுக்கும் பழக்கத்திற்கும் பயிற்சிக் கொடுக்க வேண்டும். விரிவுரை முறையில் பிள்ளைகள் இவற்றில் பயிற்சி பெற அதிக வாய்ப்புகள் இருக்கின்றன.

விரிஉரையை கவனமாகக் கேட்டு முக்கிய அம்சங்களை மட்டும் நிதானித்துத் தெளிந்து தேர்ந்தெடுத்துக் கோர்க்க அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியும்.

வகுப்பு நேரத்தை இரண்டாகப் பிரித்து முதற் பகுதியைப் பிள்ளைகள் முதல் நாள் பாடத்தில் கற்றதையும், படித்ததையும், வெளியிடச் சந்தர்ப்பங்கள் கொடுக்கலாம், பிந்திய பகுதிவய மறுதினம் நடக்கப்போகும் பாடத்தின் சிறப்பான அம்சங்களைப் பற்றி உரையாற்றுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். சிறப்பான அம்சங்களை ஆசிரியர் உரைவாயிலாக அறிந்து அது சம்பந்தமான நுணுக்க விவரங்களைப் பிள்ளைகள் பாட புத்தகத்தில் கற்றுத் தெளிவார்கள்.

ஆசிரியர் வகுப்பு நேரம் முழுமைக்கும் உரையாற்றுவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும் பொழுது தயாராக வைக்கப்பட்டிருக்கும், கற்பிக்க உதவியாக இருப்பவைகளைப் (teaching aids) பயன்படுத்துதல், கரும்பலகையில் எழுதுதல், அதையும் உரையில் காணப்படும் கருத்துக்களையும் தங்கள் குறிப்புப் புத்தகத்தில் எடுத்துக் கொள்ளச் செய்தல் போன்ற முறையைக் கையாள வேண்டும். கூடுமான மட்டும் விரிவுரையை முறையாகக் கொள்ளாமல் ஒரு வழியாக மட்டும் கொண்டு பாடம் கற்பிக்க வேண்டும்.

## இம்முறையின் குறைகள்

பிள்ளைகளின் சுய முயற்சிக்கு இம்முறையில் இடமளிக்கப்படவில்லை. ஆசிரியர் விரிஉரையாற்றும் பொழுது வகுப்பு மாணவர்கள் அனைவரும் கவனமாகக் கேட்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாதுதான். அதுவும் கீழ் வகுப்புகளில் முறைப்படி விரிவுரை முறையில் பாடங் கற்றுக் கொடுக்க முடியாது. பிள்ளைகள் முழுச் செயலில் ஈடுபட வேண்டுமென்றால் விரிவுரை ஆற்றும் போது ஒரு சில முக்கிய அம்சங்களை ஒரிரண்டு வார்த்தைகளிலாவது, சொற்றொடர்களிலாவது தம் குறிப்புப் புத்தகங்களில் எழுதும்படி வற்புறுத்தப் பட்டால் கவனம் சிதறாமலிருப்பதுடன் அவர்கள் வகுப்பு நேரத்தில் செயலில் ஈடுபட்டிருப்பர் என்றும் எதிர்பார்க்கலாம். ஆனால் அதிக அளவு பிள்ளைகளின் சுய முயற்சிக்கு இம்முயையில் இடமளிக்கப்படவில்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

பாடநூலாசிரியர் வகிக்கும் இடத்தை வகுப்பாசிரியர் வகிக்கிறார். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நூலாசிரியர் தனது புத்தகத்தில் எல்லா விவரங்களையும் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. படிக்கும் பொழுதும், படிக்கும் வரிகளின் மூலமும், நூலாசிரியரின் முழு உணர்ச்சிகளையும் உணர முடியாது.

இம்முறையில் வகுப்பு நேரத்தை முழுமையாக ஆசிரியர் எடுத்துக் கொள்கிருர், சிறிதளவு கூட மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது. ஆனல் இம் முறையை வகுப்பு நேரம் முழுமைக்கும் பயன்படுத்திஞல் இக்குறை ஏற்படும். எனவே இம் முறைக்கு ஒரு சில நிமிடங்கள் தான் கொடுக்க வேண்டும். மற்ற எஞ்சிய நேரத்தில் பிள்ளைகள் கற்கவும், கற்கும். வேலைகளிலும், செயல்களிலும் ஈடுபடவும், நாம் சந்தர்ப்பமும் வாய்ப்புக்களும் தர வேண்டும்.

வகுப்பு நேரத்தைப் பிள்ளைகளுக்குக் கொடுக்காததால், அவர்கள் கற்றவற்றை வெளியிடுவதற்கு வாய்ப்புக்கள் இதில் இல்லை. நாம் இம் முறையை வகுப்பு நேரத்தில் சிறிய அளவு பயன்படுத்தி எஞ்சிய நேரத்தைப் பிள்ளைகள் கற்றதை வெளியிட வாய்ப்புக்கள் கொடுக்கப் பயன்படுத்திஞல் இக்குறையை நீக்கிவிட முடியும். இம் முறை 'பனல்' முறை ('Funnel Method) என்றும், "ஊட்டும்" முறை என்றும், பிள்ளைகளை விட பாடத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது என்றும், குறை சொல்லப்படுகிறது. இம் முறையை நன்கு பயன்படுத்திஞல் இக்குறைகளை நீக்கலாம். விரிவுரை யாற்றும் நேரத்தைக் குறைத்துக் கொள்ளுதல், விரிவுரை முறைக்குப் பொருத்தமில்லாத பகுதிகளை இதர முறைகளால் கறறுக் கொடுத்தல், பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுத்தல், விரிவுரை முறைகளுக்குப் பொருத்தமில்லாத பகுதிகளை இதர முறைகளால் கற்றுக் கொடுத்தல், பிள்ளைகளுக்கு பயிறசி கொடுத்தல்-கற்றதை வெளியிட அதிக சந்தர்ப்பங்கள் கொடுத்தல், ஆகியவற்ருல் இக்குறைகளைப் போக்கலாம்.

## இம்முறையின் நல்லியல்புகள்

படிக்கும் வார்த்தைகளைக் காட்டிலும் கேட்கப்படும் வார்த்தைகள் பிள்ளைகளின் மனதில் அதிக சலனத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை கேட்கும் வார்த்தைகளில் உணர்ச்சி ததும்பும். அவ்வுணர்ச்சி பிள்ளைகளைத் தட்டி எழுப்பும். அத்துடன் அவர்கள் கேட்பது அவர் தம் உள்ளங்களில் நன்கு பதியும்.

இம் முறையில் சில முக்கிய கருத்துக்களை அடிக்கடி திரும்பத் திரும்பச் சொல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. பிள்ளைகளின் துலங்கலைக் (Respouse) கொண்டு விபரங்களைக் கூட்டியோ, குறைத்தோ கொடுக்க முடியும். சில கருத்துக்களை விரிவுபடுத்தலாம். சிலவற்றை இம்முறையில் மறுபடியும வற்புறுத்த முடியும்.

இம் முறையில் விரிவுரை கேட்பதில் பிள்ளைகள் பயிற்சி பெறுகின்றனர் கேள்வி ஞானம், காட்சி ஞானத்தைப் போலவே சிறந்தது என்பதைப் பிள்ளைகள் உணருவார்கள். உரையாடுதல், பேசுதல் இரண்டும் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. விரிவுரையைக் கேட்டு சில முக்கிய செய்திகளைத் தொகுப்பதில் மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிப்பதைவிட இது சிறந்தது.

ARCHIVES LIB

பிள்ளைகள் கற்றதை வகுப்பில் வெளியிட சந்தர்ப்பங்கள் இம்முறையில் கொடுக்கப்படுகின்றனர். பொதுவாக மாணவர் வெளியிடும் கருத்துக்கள் சரியாகத் தொகுக்கக் கூடிய வகையில் அமையாதவாறு இருப்பதைக் காணலாம். இதை நிவர்த்திக்க ஆசிரியர் விரிவுரை முறையை அடிக்கடி பயன்படுத்தலாம்.

சரியான தயாரிப்பு இல்லாமல் விரிவுரை நிகழ்த்துவது சுலபமான காரியம் அல்ல. ஆசிரியர் பல புத்தகங்களைப் படிக்க வேண்டும். செய்திகளைச் சேகரித்துத் தொகுக்க வேண்டும். இந்தத் தயாரிப்பில் ஆசிரியர் பாடத்தில் பெறும் அறிவை அவர் கற்பித்தலின் வாயிலாய் பிள்ளைகள் அறிந்து கொள்வார்கள்.

சராசரி அறிவுடைய பிள்ளைகளும் மந்த புத்திபுடைய பிள்ளைகளும் விரிவுரை முறையை விரும்புதல் கிடையாது. ஆனால் புத்தி கூர்மைபுடைய பிள்ளைகள் இம்முறையைப் பெரிதும் விரும்புகின்றனர். அவர்களை உற்சாகப் படுத்தி ஊக்குவிப்பது இம் முறையாகும். ஆகவே துரிதமாகக் கற்கும் மாணவர்களுக்கு இம்முறை பெரிதும் பயன்படுகிறது என்பது உண்மை.

## விரிவுரையாற்றும் முன்பு கவனிக்கப்பட வேண்டுபவன

விரிவுரை முறையைப் பிள்ளைகள் விரும்பாததற்கு முக்கிய காரணம் போதிய தயாரிப்பு இன்மையாகும். போதிய தயாரிப்பு இன்மையாகும். போதிய தயாரிப்பு இல்லாமல் எவ்வளவு அனுபவம் வாய்ந்த ஆசிரியராக இருந்தாலும் வகுப்பில் நல்ல முறையில் விரிவுரையாற்றுதல் இயலாத செயலாகும். சிந்தித்துப் பார்த்து, விவரங்களைத் தேடிப் பொறுக்கி, எடுத்துத் தொகுத்து போதிய முன்னேற்பாட்டுடன் விரிவுரை நிகழ்த்த வேண்டும்.

இம் முறையை அன்றாடம் கற்பித்தல் முறையாகக் கருதி, என்றும் எல்லாப் பாடப் பகுதிக்கும் கையாள நினைப்பது தவறாகும். எப்பகுதிகளுக்கு, எப்பொழுது விரிவுரையை நிகழ்த்த வேண்டும் என்பதை ஆசிரியரே தீர்மாணிக்க வேண்டும். இது ஆசிரியரின் திறமையையும், சாமார்த்தியத்தையும் பாடத்தில் தனக்குள்ள அறிவையும் பொறுத்ததாகும்.

எவ்வாறு விரிவுரை நிகழ்த்த வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். சுலபமாகவும், அழகாகவும் ஆசிரியர் உரை நிகழ்த்த வேண்டும். அவருடைய பேச்சு இயற்கையாக இருப்பதுடன் அது பிள்ளைகளுக்குப் புரியும் படியும் இருக்க வேண்டும். குரலை மாற்றுதல், எல்லாரையும் மாறி மாறி நோக்கிப் பேசுதலில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

விரிவுரை யாற்றும் பொழுது விரிவுரை உயிர்பெற்று விளங்க ஒப்புவமைகள், விளக்கங்கள், அன்றாட வாழ்வில் நடக்கும் நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் குறிப்பிட வேண்டும். நகைச் சுவைக்கு முக்கிய இடமளிக்க வேண்டும். அழகான சொற்களைப் பிள்ளைகள் புரிந்து கொள்ளும் படியான மறைமுகக் குறிப்புக்கள் (allusions) அதிகம் சேர்க்கப்பட வேண்டும்.

## 5. அனுமான முறைப்பாடம் -விதி தரும் முறை

அனுமான முறையில் ஐந்து முக்கிய படிகள் உள்ளன. அனவகளாவன:– ஆயத்தம் செய்தல், விவரங்களைச் சேகரித்தல், ஒத்திட்டுப்பார்த்தல், பொது விதி காணுதல், விதியைப் பின்பற்றுதல் ஆகியனவாகும்.

### அனுமானப் பாடத்தை மதிப்பிடுதல்

ஒப்பிட்டுப் பொது விதி காணுதல் பொருத்தமான வரலாற்றுப் பகுதிகளுக்கு மட்டும்தான் ஏற்றதாத இருக்கும். சில பகுதிகள் ஒரு குறிந்பிட்ட எல்லையையும் வரம்பையும் மீறிப் போவதாக இருந்தால் இம்முறை எவ்வகையிலும் பயன்படாமல் போய்விடும். போர்கள், ஏதாவது ஒரு வரலாற்றுப் போக்கு போன்ற பாடங்களுக்கு இம்முறை சிறந்ததாக காணப்பட மாட்டாது- இம்முறைக்கு ஏற்றபடி பாடப்பகுதியின் அளவு சிறியதாகவும், பொருத்தமாகவும் இருக்க வேண்டும்.

இம் முறையில் ஆசிரியரின் வேலைப் பளுவும், முயற்சியும் மிக அதிகமாக இருக்க வேண்டும். இம் முறைக்கு முன்கூட்டியே செய்ய வேண்டிய தயாரிப்பு மிக அதிகமாக இருக்கவேண்டும். சேகரிக்க வேண்டிய வரலாற்று உண்மைகளையும், எடுக்க வேண்டிய முடிவுகளையும் முன்கூட்டியே ஆசிரியர் தீர்மாணிக்க வேண்டும் பிள்ளைகள் ஆசிரியரைப் பின் பற்றி அவரைப் போலவே சிந்தனை செய்து அவரது முடிவுக்கு வருகின்றனர். எனவே இதில் பிள்ளைகளின் சுயமுயற்சிக்கு இடமளிக்கப்படவில்லை என்பதை ஒரு குறையாகச் சொல்வதில் வியப்பில்லை. அப்படிப் பிள்ளைகளின் சுய முயற்சிக்கு விட்டு விட்டால், இம்முறை முடிவு பெறுவதில் நீண்ட காலதாமதம் ஆகலாம்

பிள்ளைகள் தாங்கள் கற்ற வரலாற்றுப் பாட விவரங்களை வெளியிட சில வழிகளும் வாய்ப்புக்களும் உள. அவற்றுள் முக்கியமான ஐந்தினைக் குறிப்பிட வேண்டும். அவைகளாவன அதுமான வாயிலாய்கற்றலை வெளியிடுதல். அடுத்து மாணுக்கர்கள் விரிஉரை செய்வதின் மூலமும், உணர்வின் மூலமும் கற்றதை வெளியிட்டுப் பெற்ற அறிவைத் தங்களுக்குள்ளே பரிமாறிக் கொள்ளலாம். இதையடுத்து கண்ணோட்டமிடுதல் அல்லது மீள்பார்வை (Review) வாயிலாயும் கற்றதை வெளிப்படுத்த வாய்ப்புக்கள் அளிக்கலாம். பின் வரும் பகுதிகளில் அவை ஒவ்வொன்ுறநப் பற்றியும் விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

## 6. சமூக உறவு உணர்வில் கற்றதை வெளியிடுதல் (Socialised Recitation)

இது ஒரு வகுப்பறை வழி முறையாகும். இதில் வகுப்பில் உள்ள மாணவர்கள் முக்கிய பங்கு பெறுகின்றனர். உரையாற்றுதல் முறையிலும் புத்தக முறையிலும் ஆசிரியர் பெரும் பங்கு பெறுவதற்கு மாருக இதில், பிள்ளைகள் முக்கிய பங்கு பெறுகிருர்கள். வகுப்பு மாணவர்களில் ஒவ்வொரு

வரும் இதில் முயற்சி எடுத்துக் கொள்வார்கள். வகுப்பு, கூட்டாகச் சேர்ந்து செய்ய வேண்டிய வேலை எது என்று ஆராய்கிறது. கட்டுப்பாடு இன்றிச் சுயேச்சையாகப் பிள்ளைகள் கற்றலை வெளியிடவும், அவற்றைப் பற்றித் தாராளமாகக் கூச்சமின்றிப் பேசவும், பிள்ளைகளுக்கு வாய்ப்புகள் கிடைக்கும். ஆசிரியர்களின் கட்டளைக்கு அல்லாமல், சூழ்நிலையின் அவசியத்தை உணர்ந்து பிள்ளைகள் கற்கும் வேலையிலுய், கற்றதை வெளியிடுவதிலும். மற்றவர்களுடன் செய்திகளைப் பரிமாறிக் கொள்வதிலும் பிள்ளைகள் ஈடு-படுவார்கள். ஆசிரியர் வேலை வாங்குபவராக பிள்ளைகளால் கருதப்படாமல், ஆசிரியர் நண்பராகவும், வழிகாட்டியாகவும், உடன் வேலை செய்யும் தோழராகவும் கருதப்படுவர். இம் முறையில் கூட்டு முயற்சிக்கு இடமுண்டு. அக்கறையுடனும், கவனத்துடனும், மகிழ்ச்சியுடன் எதிர் நோக்கும் வேலை களில் மாணவர் ஈடுபடுவார்கள். மாணவர்கள் சிந்திக்கவும், சிந்தனைகளை மற்றவர்களுடன் பரிமாறிக் கொள்ளவும் அவர்களுக்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

இம்முறையில் மாணவர்களுக்குள்ளும், ஆசிரியர்களுக்குள்ளும் நெருங்கிய உறவு நிலவுமென்பது உண்மை. சாதாரணமாக வகுப்பறைக் கட்டுப்பாடு இம் முறையில் காணப்படமாட்டாது. ஆசிரியர் தம் முக்கியத்-துவத்தை இழந்து, மாணவருள் ஒருவராக மாறி பிள்ளைகளுக்கு உதவுவார் வகுப்பறைக் கட்டுப்பாடு தளர்த்தப்படும். பிள்ளைகள் தமக்குக் கிடைக்கும் சுதந்திரத்தை உணர்வார்கள். ஆசிரியர்கள் இதில் பங்கு பெற்ருலும் முக்கிய பங்கு பெறமாட்டார்கள். பிள்ளைகளே முக்கியத்துவம் பெறுகின்றனர். ஆசிரியர் வகுப்பைப் பிள்ளைகளுக்கே இம்முறையில் கொடுத்து விடுகிருர்.

இம்முறைக்கு வரம்பு உண்டு. வரலாற்றுப் பாடங்கள் அனைத்திற்கும் இம்முறையை அனுசரிக்க முடியும் என்று நினைப்பது தவறு. வரலாற்றில் வரும் பெயர்கள், தேதிகள், இடங்கள் உடன்படிக்கையின் விதிகள், நிகழ்ச்சி களின் கால வரிசை, இவைகளைத் தனியாகவே கற்று அதில் பயிற்சி பெற வேண்டும். இம்முறையில் பிள்ளைகள் எதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிருேமோ அது இல்லாமல் அவர்கள் பிரச்சனையைத் தீர்க்க தமது கருத்தைத் தெரிவிப்பதாக அமைதல் கூடாது. பாடத்தை விட்டு அதிகம் விலகிச் செல்லாமல் பாடத்தை மையமாகக் கொண்டு பலவற்றையும் விவாதம் செய்ய வாய்ப்புக்கள் கொடுக்க வேண்டும். பாடத்தை விட்டு விலகிச் செல்வதை ஆசிரியர் கவனித்துத் தவிர்க்க வேண்டும்.

பிள்ளைகளே இவ்வேலையில் ஈடுபட்டால் மிகவும் நன்மை பயக்கும். அவர்கள் செய்வதற்கும், மேற்கொண்ட காரியத்திற்கும் உள்ள தொடர் பையும், பொருத்தத்தையும் அவர்கள் அடிக்கடி மதிப்பீடு செய்ய வேண்டும். விவாதம் செய்யப்படவிருக்கும் பகுதிகளின் சுருக்கத்தைத் தயார் செய்தால், பாடத்திலிருந்து விலகிச் செல்வது பிள்ளைகளுக்குப் புலப்படும். சூழ்-நிலைகளுக்குத் தகுந்தபடி தங்களுக்கு வேண்டியதாக உள்ளவற்றைச் சேகரிக்கிருேமாஎன்பது பற்றித் தங்களைத் தாங்களே வினவிக் கொள்வார்

களேயானுல் அதிக தூரம் விலகிச் செல்ல மாட்டார்கள். வரலாற்றுப் பாடத்தில் போதிய பிரச்சனைகளேயும் செயல் திட்டங்களேயும் தேர்ந்தெடுப்பது சுலபமான காரியம் அல்ல.

இம்முறையில் மாணவர்கள் செயலில் ஈடுபட்டிருக்கும் பொழுது ஆசிரியர் மேற்பார்வை முக்கியமாக இருக்க வேண்டும். ஆசிரியர் தலைமையில் பிள்ளைகள் விவாதம் நடத்தி வரலாற்று விவரங்களேப் பரிமாறிக் கொள்ளும் போது சகோதர உணர்ச்சி ஏற்படும். சில சமயம் பொறுப்பை வகுப்பின் மீது தள்ளி ஆசிரியர் பின்னிலைக்கு வந்து பார்வையாளராக மட்டும் இருக்க வேண்டிய சூழ்நிலையும் இருக்கும். இவ்வாருக ஒவ்வொரு பாடமும் சமூக உறவு உணர்வுடன் பிள்ளைகள் வெளியிட இம் முறையில் வாய்ப்பு அளிக்கப்படும்.

இம்முறைக்கு வகுப்பை பலவிதமாக அமைக்க வேண்டும். வகுப்பறைக் கட்டுப்பாடு முறையின்றி அமைப்பதிலிருந்து சட்டமன்ற அமைப்பு போல மாற்றி அமைக்கலாம். மாணவர்களில் ஒருவர் தலைமையில் சாதாரண வகுப்பு போலவே வேலையில் ஈடுபடலாம். முறைப்படி குழுக்களாகவும் அலுவலகத்தில் பணிபுரிபவர்களாகவும், பகுதிகளாகவும் பிரித்து வேலையில் ஈடுபடலாம்.

இம்முறையின் நோக்கம் பிள்ளைகளின் கூட்டு முயற்சியைத் தூண்டிக் கற்றலிலும், கற்றதை வெளியிடுவதிலும் பிள்ளைகளை ஈடுபடச் செய்வதாகவும் பிள்ளைகளின் தன்னம்பிக்கையை வளர்ப்பதாகவும் அமையும். உற்சாகத்துடனும், விருப்பத்துடனும் செயலில் ஈடுபடச் செய்வது, கூட்டுறவு உணர்வினை ஏற்படுத்துவது, முதலியனவும் நோக்கங்களாகவும், பிள்ளைகள் பாடங்களை ஆசிரியரிடம் வெளியிடுவதற்குப் பதில் எல்லோரும் கூட்டு முயற்சியில் இறங்குகின்றனர். புதியமுறைப் படிப்பில் விவரங்களை மட்டும் கற்பிப்பது போதுமானதும் முக்கியமானதுமான அம்சமாகக் கருதப்படுவதில்லை.

## கண்ணோட்டமும் பயிற்சியும் (Review and drill)

இது வரலாறு கற்பிக்கும் ஒரு முறை என்று கொள்ளுவது முற்றிலும் சரியாகக் காணப்படாவிட்டாலும் முறை என்று கொள்ள காரணங்களும் உண்டு. கற்றலிலும் கற்பித்தலிலும் மீள்பார்வைக்கும் கண்ணோட்டத்திற்கும் முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும். கற்றவற்றையும் கற்பித்தவற்றையும் இம்முறை வாயிலாய் நினைவுக்குக் கொண்டு வரவோ நினைவு படுத்திச் சொல்லவோ பயன்படுத்தப் படலாம். கற்ற பாடப்பகுதிகளையும், கற்ற, வற்றையும் புதிய உறவிலும் தலைப்புகளிலும் குறுக்காகவும் நெடுக்காகவும் காணல் மற்றும் ஒரு வழியாகும். கடைசியாக துணுக்கு துணுக்குகளாகக் கற்றுக்கொடுக்கப்பட்ட பல பகுதிகளை உள்ளடக்கி இவற்றிற்கிடையேயுள்ள உறவுகளை வெளிப்படுத்துவதற்கும் அதை ஒரு பகுதியாகக் காணுவதற்கும் கண்ணோட்டம் பயன்படும்,

கண்ணோட்டம் அல்லது திரும்பக் கவனித்தல் ஒரு சிறப்பு முறை என்று கொள்ளவேண்டும். பழையமுறை தான் எனினும் அதைச் சிறப்பான

விதத்தில் வகைப்படுத்துவது ஆகும். நடத்தப்பட்ட பழைய பாடத்தைப் புதியக் கருத்து நோக்குடனும் உணர்வுடனும் பார்ப்பது என்று கொள்ள வேண்டும். இது சிந்தனையைத் தூண்டும். எனவே இம்முறையைக் கடைப் பிடித்தால் பிள்ளைகள் பெற்ற அறிவின் பொருட்செறிவு பிள்ளைகளுக்குப் புலப்படும். சில தலைப்புக்களையும் பாடங்களையும் நடத்தி முடிந்தவுடன் மீண்டும் பார்வை செய்ய வேண்டும். பயிற்சி என்பது திரும்பத்திரும்ப சொல்லிப் பழக்கப்படுத்துவது. ஆனால் அது கண்ணோட்டத்திலிருந்து பெரிதும் வேறுபடும்.

ஒப்பிடுதல் மூலம் கற்ற செய்திகளில் மறுபடியும் கண்ணோட்டம் செய்யலாம். வரலாற்றுப் பாடங்கள் ஒப்பனைகளுக்கும் வேறுபாடுகளுக்கும் அதிக இடமளிக்கிறது. இதில் ஒப்பிட வேண்டிய செய்திகளை நினைவுபடுத்துவதுடன் அவற்றுக்கும் மற்ற செய்திகளுக்கும் புதிய உறவு இருப்பதை எடுத்துக்காட்ட முடியும். கற்ற அறிவின் புதிய அம்சங்களைப் பிள்ளைகள் அறியவும் அதை மனதில் இருத்தவும் இம்முறை பயன்படுகிறது. இதனால் பிள்ளைகள் தங்களின் எண்ணங்களைப் பல வழிகளில் வகைப்படுத்துவதில் பயிற்சி பெறுகின்றனர் என்பது வெளிப்படை.

மற்றொருமுறை இணைத்தல் அல்லது இயைபு படுத்தல் - இணைப்பும் ஒப்பனையும் - ஏறத்தாழ ஒன்றுதான். அதிக வேறுபாடு காண முடியாது. பல பாடங்களில் தொடர்பு பெற்ற செய்திகள் இணைப்பில் குறிப்பிடப்படும். வேறு பாடங்களுடன் தொடர்பு படுத்த இது துணையாக இருக்கிறது.

வரிசைப்படுத்தும் முறை மூலம் செய்திகளை கண்ணோட்டமிடுதல் மற்றும் ஒரு வகையாகும். மாணவர்கள் வரலாற்றில் சில அம்சங்களைத் தலைப்புகள் அடிப்படையில் கற்கின்றனர். அவர்கள் இம்முறையில் படிக்கும் போது சில நிகழ்ச்சிகளைப் பல பகுதிகளாகப் படித்தாலும் ஒரே சமயத்தில் நடந்தவைகள் என்பதைக் கண்டு கொள்வதில் துன்பப்படுவார்கள்; கண்டு கொள்ள மாட்டார்கள் என நிச்சயமாகச் சொல்லலாம். கால வரிசையில் வரலாறு கற்றுக் கொடுத்தால் அப்பாடத்திலிருந்து வரலாற்றின் முக்கிய அம்சமான தொடர்பு வளர்ச்சி, காரண காரியம் இவைகளை மாணவர்கள் உணர மாட்டார்கள் என்பது வெளிப்படை. சில சூழ்நிலைகளில் ஏதாவது ஒரு காலாண்டில் நடந்த நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்ருகப் படிக்கும் பொழுது பிள்ளைகள் அவ்வாறே ஒன்றன்பின் ஒன்று நடந்ததாக நினைத்துக் கொள்வார்கள். எது முந்தியது, எது அடுத்து வந்தது என்பது பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. இதைத் தவிர்க்க ஆண்டுகளில் அல்லது காலத்தில் பயிற்சி கொடுக்கலாம். இப்பயிற்சியினுல் அதிக பலனை நாம் எதிர்பார்க்க முடியாது. இதைத் தவிர்க்க வேண்டுமானுல் படித்த செய்திகளைப் புதிய முறையில் தொகுக்க வேண்டும். அப்படிச் செய்தால் பிள்ளைகள் மனத்தில் சமகால உணர்வு கொஞ்சம் கொஞ்சமாக உருவாகி வளர ஆரம்பிக்கும். கல்லூரி வகுப்புகளில் இது அவர்களுக்குப் பயன்படும். இதில் புதிய செய்திகளைக் கற்றல் காணப்படுவதில்லை. கற்ற செய்திகளைக் காலமுறையாகப் பட்டியல் போடுகிருர்கள்; புதிய

அமைப்பில் கொடுக்கிறார்கள். பழைய செய்திகளுக்கு ஆசிரியர்களோ அல்லது மாணவர்களோ புதிய விளக்கமோ அல்லது பழைய விளக்கங்களையோ கொடுப்பதில்லை.

ஒரு பிரச்னையைத் தீர்க்கும் அடிப்படையில் கற்ற விவரங்களில் மறுபடியும் கண்ணோட்டமிடலாம். ஏதாவது ஒரு பிரச்னையை எடுத்துக் கொள்ள வேண்டும். அதைத் தீர்ப்பதற்கு வேண்டிய விவரங்கள் ஏற்கனவே கற்பித்த பாடங்களில் இருக்கின்றன. அவர்கள் அவைகளைத் திருப்பிப் பார்க்க வேண்டும். எல்லாவற்றையும் பார்த்தால் கொடுக்கப்பட்ட பிரச்னைக்குத் தொடர்புள்ள விவரங்களை ஒவ்வொன்றாகக் காண்பர்; அவைகளை எடுத்துத் தொகுப்பர். பிள்ளைகளுக்குத் தெரியாத விவரங்கள் பிரச்னைகளைத் தீர்க்கத் தேவைப்படும்படியாக இருக்கும். இதற்காக கற்றவற்றைத் திருப்பிப் பார்த்தால், அறிவில் புதிய ஒளி பெறுவதுடன் பெற்ற அறிவைப் பலவாறாகப் பயன்படுத்துவதில் பயிற்சி பெறுகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட சில பெரியார்களின் வாழ்க்கை விவரங்களை கற்ற பாடங்களிலிருந்து சேகரிக்கச் சொல்வதின் மூலம் திருப்பிப் பார்ப்பதற்கு வாய்ப்புக்கள் கொடுக்க முடியும். சில பாடப் பகுதிகள் தனியார் வாழ்க்கையின் அடிப்படையில் நடத்தப்படமாட்டாது. அப்பகுதியில் பலர் வரலாறு முக்கியம் பெற்றவர்களாக இருப்பர். அவர்களில் ஒரு சிலரை மட்டும் எடுத்துக் கொள்வதால், அவர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு விவரங்களைத் தொகுத்தல் வேண்டும். இம்முறையின் புதிய கருத்துக்களையும், நிகழ்ச்சிகளையும் பிள்ளைகள் கற்பதில்லை. பிள்ளைகள் பொருத்தமான விவரங்களைச் சேகரித்து கற்ற பாடத்தை நுணுக்கமாகவு கவனமாகவும் திருப்பிப் படிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. பாடப் பகுதிகளில் சிதறிக்கிடக்கும் விவரங்களைத் தேடிக் கண்டு பிடித்துத் தொகுத்து புதிய விவரம் கொடுக்கின்றனர். சுய முயற்சி இதில் தூண்டப்படுகிறது.

வரலாற்றில் போர்களுக்குக் குறைவில்லை. ஒன்றைப்பற்றி கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டிருக்கும். இருபக்கத்தாரும் தங்கள் கட்சியைப்பற்றி விரிவாக எடுத்துக் கூறுவார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வரலாற்றின் பகுதிகளாக உள்ளன. இரு கட்சிக்காரர்களின் வாதங்களை மாணவர்கள் நன்றாக எடுத்து ம்திப்பிடலாம். பெரிய போர்களில் அடிப்படை பிரச்சனைகளை நுணுக்கமாகவும், மாறுபட்ட மன நிலைமையின்றியும், உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாணவர்கள் ஆராய்வதின் மூலம் கற்றதை மறுபடியும் திருப்பிப் பார்க்க வேண்டிய தேவையை உணர்வார்கள். உண்மையைக் கண்டு கொள்ளுதல் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். ஆகவே ஒப்பிடுதல், பாட இணைப்பு, புதிய வரிசை, பிரச்சனையைத் தீர்த்தல், வாழ்க்கை விவரங்களை சேகரித்தல், போர்களின் அடிப்படையின் விவரங்களைச் சேகரித்தல் மூலம் கற்றதை மறுபடியும் திருப்பிப் பார்க்க வாய்ப்புகள் கொடுக்க முடியும்.

## கண்ணோட்டமிடுவதற்கான வழிமுறைகள்

வாய்மொழிப் பாடம் வாயிலாய்ப் பிள்ளைகள் கற்றதைக் கண்ணோட்டமிடலாம். செயல்திட்டமுறை, பிரச்சினை முறை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு இவற்றின் மூலமாகப் புதியவற்றைக் கற்றலும், கற்றதை மீண்டும் கண்ணோட்டமிடுவற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கலாம். மீள் பார்வைக்காக சில பயிற்சி முறைகளை வகுத்துக் கொடுக்க வேண்டும். அவற்றில் ஒரு சில இங்கு குறிப்பிடப்படல் அவசியம். மாணவர்கள் தனித்தனியாகப் படித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு சொந்த மொழி நடையில் கட்டுரை எழுதுதல், ஒரு சிலர் சேர்ந்து ஒரு பெரிய கட்டுரையை உருவாக்குதல், பட்டி மன்றம் போன்ற உரையாடல் நடத்துவதற்குப் போதிய விவரங்களை முன் கூட்டியே தயாரித்தல், படம் வரைதல், சார்ட்டு போடுதல், மூலப் பகுதிகளிலிருந்து உட்கருத்தைக் காணுதல், மூலத்திலிருந்து ஒரு சில பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்தல் போன்ற பயிற்சிகள் கொடுக்கலாம்.

கண்ணோட்டமும் பயிற்சியும் அன்றாட கற்பித்தலில் முக்கிய இடம் வகிக்கின்றன. கற்ற கருத்துக்களை மறுபகுயும் பார்த்து புதிய அமைப்பை பெறும்படி புதிய முறையில் அவற்றை வகைப்படுத்துவது கண்ணோட்டம் என்று குறிப்பிடலாம். அல்லது கற்றச் செய்திகளைப் புதிய கட்டமைப்பில் தொகுத்தல் என்றும் கொள்ளலாம். இதை மதிப்புரை என்றும், மறுபடியும் வேறு கோணத்தில் பார்த்தல் என்றும் குறிப்பிடலாம்.

பயிற்சி (Driil) சில அடிப்படைக் கருத்துக்களை மறுபடியும் மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவரவும், சொல்லிச் சொல்லிப் பழக்கப் படுத்துவதற்காகவும், வேண்டும் போது நினைவுப்படுத்திச் சொல்வதற்காகவும் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. பயிற்சி ஞாபக சக்தியைப் பலப்படுத்துகிறது என்று குறிப்பிடலாம். பயிற்றுவிக்கப்படும் செய்திகள் அனைத்திற்கும் ஒரே மாதிரியான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பயிற்சியின் கால அளவு குறைவாகவே இருக்க வேண்டும். வகுப்பு நேரம் முழுவதையும் பயிற்சிக்காகச் செலவிட்டால் பிள்ளைகள் அலுப்படைவார்கள். ஒரு சில நிமிடங்களே பயிற்சிகளில் மாணவர் முழுமனதுடன் ஈடுபடுவர் என்பதை மறக்கக் கூடாது. மதிப்புரையிலும், கண்ணோட்டத்திலும், திருப்புதலிலும் முக்கிய நிகழ்ச்சிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பழைய கருத்துக்கள் புதிய தோற்றத்திலும் புதிய பிரிவிலும், கண்ணோட்டத்தில் காட்சி அளிக்கும் என்பதை மனதில கொள்ள வேண்டும்.

## நல்ல பயிற்சியின் சிறப்பு அம்சங்கள்

நல்ல பயிற்சியின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றைக் குறிப்பிட வேண்டுவது மிகவும் அவசியம். வரலாற்றுப் பாடத்தில் சில செய்திகள், காலங்கள், இடங்கள், பெயர்கள் முதலியவற்றை நினைத்த நேரத்தில் வெளியிட வேண்டும். இவைகள் அடங்கிய குறிப்புப்புத்தகம் ஒன்றை மாணவர்கள் தயாரிக்க வேண்டும். இக்குறிப்புப் புத்தகத்திற்கு நாள், பெயர், நிகழ்ச்சி இவைகளின்

'அகராதி' (Dictionary of Events) என்று பெயரிடலாம். முந்திய வாரத்தில் நடந்த பாடத்திலிருந்து இவைகள் அடங்கிய பட்டியலைத் தயார் செய்தல். அந்தப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகள் பயிற்சியில் ஈடுபடுதல், ஆகிய பயிற்சிகளை வகுப்பில் நடத்தலாம். நாள், பெயர், ஊர் முதலியவை அடங்கிய அகராதியின் முக்கியத் தேவையை பிள்ளைகளும் இப்பயிற்சியின் காரணமாக உணருவார்கள்.

பயிற்சியினை நன்கு கற்றுத் தெளிந்த பாடப்பகுதிகளில் எடுத்துக் கொடுக்க வேண்டும். பயிற்சிக்குள் வரும் நிகழ்ச்சிகளுக்கு எவ்விதமான விளக்கங்களும் தேவைப்படும்படியாக இருக்கக்கூடாது. அவைகளைப் பிள்ளைகள் எளிதில் புரிந்துக் கொள்ளும்படியாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் பயிற்சி நல்ல பலனைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. பயிற்சிகளில் பிள்ளைகள் வழக்கமாகவும், ஒழுங்காகவும், அடிக்கடி போதிய கவனத்துடனும், பிள்ளைகள் ஈடுபடுகிருர்களா என்பது ஆசிரியரின் திறமையைப் பொறுத்ததாகும். பயிற்சியில் அவ்வாறு ஈடுபடும் பொழுது கவனம் முக்கிய அம்சம் என்பதை அடிக்கடி வற்புறுத்த வேண்டும். கவனம் இல்லாவிடில் பயிற்சிகள் அதிக பலனைக் கொடுக்காது. இதைப் பிள்ளைகள் உணர வைக்க வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும்.

பயிற்சிகளில் பிள்ளைகள் பெற்ற முன்னேற்றத்தைத் தாங்களே சோதித்துக் கொள்ள அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும். பிள்ளைகளின் சுய சோதனை இன்றியமையாதது ஆகும். அத்துடன் பிள்ளைகள் கவனத்துடன் பயிற்சிகளைச் செய்கிருர்களா என்பதை ஆசிரியர் சோதிக்க வேண்டும். வேண்டும் போது ஆசிரியரே பயிற்சிகளைக் கொடுக்கலாம்.

வரலாற்றுப் பாடத்தில் மாணவர்களின் பயிற்சிக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. தேதிகளிலும், பாட வெளிப்புற எல்லைகளிலும் பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும். நல்ல முறையில் கற்றவற்றின் மீது மீள்பார்வையிட்டால் சம்பவங்களின் வரிசைத் தொடர்பை எளிதில் உணர்ந்து கொள்ளுவார்கள். முக்கியமான ஆண்டுகளில் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியது மிக இன்றியமையாததாகும். பயிற்சிகளுக்கு நீண்ட நேரம் செலவு செய்யக்கூடாது. ஆசிரியர் ஒன்றை ஒட்டிய துணையான பல நிகழ்ச்சிகளின் மீது பிள்ளைகளின் கவனத்தைத் திருப்ப வேண்டும். இப்படிச் செய்தால் சில ஆண்டுகளைப் பிள்ளைகளின் நினைவில் எளிதில் நிரந்தரமாகப் பதிவு செய்து விடலாம்.

பெரியோர்கள், கண்டுபிடிப்புகள், போக்குகள், போன்றவற்றில் பயிற்சி கொடுத்தால் மாணக்கர்களின் வெளியிடும் திறன் வளரும். சில தகவல்களை வேண்டும்பொழுது நினைவுக்குக் கொண்டு வரும் திறனைப் பெறும் பயிற்சிகளுக்கு வரலாறு கற்பிப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். பெரியோர்களின் முறை நலன்களையும் குணச்சிறப்புகளையும், தொண்டுகளையும் மீள்பார்வை வாயிலாய் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கலாம். எழுத்து

வேலைகளிலும் மாணவர்களுக்குப் போதிய பயிற்சிகள் அளிக்க வேண்டும். மாணவர்கள் கற்றதை எம்முறையில் வெளியிடுவது என்பதை அறிய வேண்டும்.

## பிரச்சனை, செயல் திட்ட முறைகள்

### Problems And Project Methods

முதலில் பிரச்னை என்பதற்கு சரியான விளக்கம் தேட வேண்டும பிரச்சனை என்பது விடை காணாத புதிர். திருப்தியடையாத தேவை. படிக்கவும், ஆராயவும் தூண்டும், தேவையானதொரு நிலையாகும். இப்பிரச்சனைகள் தனிப்பட்டவர்களின் பிரச்னைகளாகவும், சமூகப் பிரச்னைகளாகவும் இருக்கலாம். சில பிரச்னைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணலாம். சில பிரச்னைகளுக்கு சுலபத்தில் தீர்வு காண முடியாது. இவைகள் தனிப்பட்டவர்களுக்கும், சமூகத்திற்கும் சவால் விடுவனவைகளாகவே காட்சியளிக்கும். இச்சவாலை ஏற்க ஒருவருக்கு நுட்ப அறிவும், ஆழ்ந்த படிப்பும், விடாமுயற்சியும், போதிய ஆயத்தமும் வேண்டும். சமூகப் பிரச்னைகளை முறையாகப் பாடமாகக் கொள்ள முடியாது. இம்முறையின் முக்கிய நோக்கம் பிள்ளைகளுக்கும், பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதில் போதிய பயிற்சி அளிப்பதாகும். பள்ளியில் பெறும் இப்பயிற்சி வாழ்க்கையில் தங்களை நோக்கிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் அவர்களுக்கு உதவியாக இருக்கும், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செயல்திட்டம், நோக்கம் கொண்ட இயக்கமாகும். இது கல்வி நோக்குடன் செய்யும், மனம், மெய் வேலைகளையும், அதனால் ஏற்படும் கல்விப் பயன்களையும் குறிக்கும். இம்முறையில் பிள்ளைகள் மன உழைப்பிலும், உடல் உழைப்பிலும் ஈடுபடுவர் என்பது நிச்சயம். இதில் வாசிப்பும் ஆழ்ந்த படிப்பும் கூட அடங்கும். செயல் திட்டத்தில் பிள்ளைகள் சிறிய பிரச்சனைகளில் இருந்து பெரிய பிரச்சனைகள் வரை தீர்வு காண்பார்கள். பிரச்சனையும் செயல் திட்டமும் ஒன்றோடொன்று பின்னப்பட்டிருக்கின்றன. செயல் திட்டமுறை கீழ்வகுப்பிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் உயர்வகுப்பிலும் பின்பற்றப்பட வேண்டும். செய்து கற்றல் இள வயதினருக்கு ஏற்றது. பிரச்சனைக்குத் தீர்வு காணுதல், முதிர்ச்சியடைந்த பெரிய மாணவர்களுக்குப் பொருத்தமானது

பிரச்சனை முறையும் சான்று முறையைப் போல மிகவும் பழமையானது. அறிவியல் துறையில் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்தல் வழக்கம். இக்காலத்தில் கல்வித்துறையிலும் இது சாதாரணமாகக் கையாளப்பட்டு வருகிறது. இம் முறை வகுப்பறையில் வரலாறு சம்பந்தமான கேள்விகள், காரணங்கள் அதன் பயன்களைப்பற்றி அறிய அனுசரிக்கப்படும். பழமையில் வாழ்ந்த மக்கள் எதிர் நோக்கிய பிரச்சனைகளை அறியவும், அம்மக்கள், அதற்குத் தீர்வு காண்பது போலவே தாங்களும் தீர்வு காண முயல்வதாகும். பிரச்சனைகள் வடிவத்தில் பயிற்சிகள் கொடுத்து அதற்கு பிள்ளைகள் தீர்வு காணச் செய்தல்.

பிள்ளைகள் இம்முறையில் கிடைத்த விவரங்களைப் படித்துத் தங்களது சொந்த முடிவுக்கும் வருவார்கள். அவர்கள் சில வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் காரணங்கள் காண விழைவார்கள். அவர்கள் மனித இயல்பையும் உற்று நோக்கும் திறமையையும், வரலாற்றில் வரும் நிகழ்ச்சிகளுக்குக் காரணங்கள் கண்டு பிடிப்பதின் வாயிலாக உணர்வார்கள். அவர்கள் செயலில் ஈடு-படுகின்றனர். விவரங்களை அலசித் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதில் போதிய அனுபவம், பயிற்சி பெறுகின்றனர். இம்முறை ஞாபகத்தைவிட நுண்ணறிவுக்குச் சவால் விடுகின்றது. வரலாற்றுப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதிலிருந்து வாழ்க்கையில் எதிர்நோக்கும் எல்லா விதமான அன்றாடப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் போதிய அனுபவமும், பயிற்சியும் பெறுகின்றனர். இம்முறை அன்றாடம் அனுசரிக்கும் முறையாகக் கொள்ளாமல் எப்போதாவது அனுசரிக்க வேண்டும். ஆண்டு முழுமைக்கும் இம்முறை பயன்படாது. இம்முறைக்கு சரியான திட்டம் வகுப்பதும் சுலபமான காரியமல்ல என்பதை ஆசிரியர் உணர வேண்டும்.

தீர்க்க வேண்டிய பிரச்சனைகள் சாதாரணமானவைகளாக இருக்கும். பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் ஒரு முறையைக் கையாள வேண்டும். இதில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையைவிடத் தீர்வு காணும் முறையே முக்கியமானதாகும். இம்முறையில் ஒரு சில படிகள் உள்ளன. பிரச்சனையைக் கண்டு உணர்ந்து அதை வரையறுத்தல் முதல் படியாகும். உணர்தல், பிள்ளைகளின் அறியாமையாவது விடை காண்பதில் தங்களுக்கு இல்லாத திறமையாவது தங்கள் ஐயத்தையாவது தங்கள் விடையின் நிச்சயமின்மை யாவது உணர்தல் என்று பொருள் கொள்ளப்படும். இப்பிரச்சனைகளில் இருந்து மீள வேண்டும் என்று அவா கொள்ளுதல், அதற்கு அடுத்து வரும் இரண்டாவதாக வேண்டிய விவரங்களைச் சேகரித்துச் கொண்டு பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும் என்று தீர்மானித்தல் இரண்டாவது படியாகும். மூன்றாவதாக விவரங்களைச் சேகரித்தல். நான்காவது தற்காலிகமாக ஒரு கொள்கையை, ஒரு விடையை அல்லது ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டு கடைசியாக பரிசீலனை செய்து, சரியா, தவறா என்று தீர்மானித்துத் தீர்வு காணும் வரை கடைசி மூன்று படிகளை மாற்றி மாற்றி அனுசரித்தல்.

பிரச்சனைகளில் இரண்டு விதம் உண்டு. தீர்வு கண்ட பிரச்சனைகள், தீர்வு காணாத பிரச்சனைகள். தீர்வு கண்ட பிரச்சனைகளை உற்று நோக்கியும் புத்தகங்களில் படித்தும் தெரிந்து கொள்ளலாம். ஆனால் பிள்ளைகள் தீர்வு காண்பதில் அனுசரிக்க வேண்டிய படிகளை அறிந்துக் கொள்ள மாட்டார்கள். தீர்வு கண்ட பிரச்னைகளில் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். சமூகத்தில் தீர்வு காணாத பிரச்சனைகள் பல இருக்கின்றன. இப்பிரச்சனைகளில் ஓரிரண்டு மட்டும் எடுத்துக் கொண்டு அவைகளுக்குத் தீர்வு காண்பதில் பிள்ளைகள் ஈடுபடலாம். அவர்கள் கொண்ட முடிவை தற்காலிகமாக வைத்துக் கொள்ள வேண்டும். வயது வந்த பொழுது இப்பிரச்சனைகளின் போக்குகளைப் பிள்ளைகள் எளிதில் உணர்ந்து கொள்வார்கள். இம்முறையின் அனுகூலங்கள் சில. பிள்ளைகள் சிந்திப்பதிலும் கற்கும் திறமைகளை வளர்ப்பதிலும் வாய்ப்பு-களைப் பெறுகின்றனர். பரந்த மனப்பான்மையையும் செயலில் ஈடுபட-

வேண்டும் என்ற விருப்பம் உடையவர்களாகவும் விளங்குகின்றனர். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது கற்றுக் கொள்ளப்படும் அறிவு என்றும் நிலைத்து இருக்கும். இக்காலத்தில் மனித சமுதாயத்தைப் பல பிரச்சினைகள் எதிர்நோக்கி இருக்கின்றன.

ஜனநாயக அரசியலில் மக்கள் கருத்துக்கு அரசாங்கம் மதிப்பு கொடுக்கிறது. வருங்கால சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நாளை குடிமக்களாகப் போகும் மாணவர்களுக்குப் போதிய அனுபவம் கொடுக்க வேண்டியது தேவையாகப்படுகிறது. இம்முறையில் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்துகிறது. இம்முறையில் அறிவைத் தேடுவதைவிட, தேடிய அறிவைப் பயன்படுத்துவதில் பிள்ளைகளுக்குப் பயிற்சி கிடைக்கிறது.

செயல்திட்டம் இயைபுடன் கூடிய செயலைக் குறிக்கும். செயல்திட்ட மூலம் திறமையும் அறிவையும் பெறலாம். செயல் திட்ட முறைகளில் பல வகை உண்டு. ஒவ்வொரு செயல் திட்டத்திலும் நோக்கம் கொள்ளுதல், திட்டமிடுதல், செயலில் ஈடுபடுதல், மதிப்பிடல் போன்ற நான்கு படிகள் உண்டு. நான்கு முக்கிய படிகளை மேலும் பல உட்படிகளாகப் பிரிக்க முடியும்

## பரிசோதனைச்சாலை முறை — டால்டன் முறை
## Laboratory Method — Dalton Plan

இம்முறை சோதனை முறையாகும். அறிவியலை இம்முறையில் தான் பிள்ளைகள் கற்கின்றனர். வரலாறு ஒரு அறிவியல் பாடமாகக் கருதப்படுகிறது. அறிவியல் பாடத்திற்கு அறிவியல் கூடம் முக்கியம். இதற்கும் இம்முறையைக் கையாள்வதற்கும் நன்கு அமைக்கப்பட்ட வரலாற்று அறை மிகவும் முக்கியமான தேவையாகிறது. கால அட்டவணையில் கொடுக்கப்பட்ட காலம் நேரம் இரண்டு பகுதிகளாகப் பகுக்கப்படும். ஒரு பகுதி வாய்மொழி பாடத்திற்கும் மற்றும் ஒரு பகுதி தனிப்பட்ட மாணவர்கள் வகுப்பு அறையில் செய்யும் வேலைக்கும் ஒதுக்கப்படும்.

இம்முறைக்கு மூலகாரணம் டால்டன் முறையாகும. இம்முறையின் அடிப்படையில்தான் சோதனைச்சாலை முறை தோன்றியது. இம்முறையை ிதன் முதல் வகுத்து கற்பித்தலில் பயன்படுத்தியவர் டால்டனில் இருந்த ஹெலன் பார்ஹர்ஸ்டு ஆவார்கள். இம்முறை அவர் பெயரால் வழங்கப்படாமல் அவர் தோன்றிய டால்டன் இடத்தின் பெயரால் வழங்கப்படுகிறது. இதை ' ஒப்பந்த முறை '' என்றும் குறிப்பிடுவர்.

வரலாற்றுப் பாடத் திட்டம் வகுக்கும் போது பல பயிற்சிகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும். அவைகள் மாதவாரியாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பயிற்சியிலும் ஒரு மாதத்தில் பிள்ளைகள் செய்ய வேண்டிய வேலை குறிப்பிடப்பட்டிருக்கும். பிள்ளைகள் வேண்டும் போது வேலையில் ஈடுபடலாம் விரும்பாவிட்டால் அவர்கள் கட்டாயபடுத்தப்பட மாட்டார்கள் அல்லது ஒரு பகுதி முடித்துக் கொடுத்தவுடன் மாணவர்கள் அந்தப் பகுதியில் மட்டும்.

கற்றுத் தேர்ந்து விட்டார்களாகக் கருதப் படுவர். பிள்ளைகள் சுயமாகவோ, சீக்கிரமாகவோ, சுலபமாகவோ வரலாற்றில் கற்க வேண்டுவன அனைத்தையும் கற்றுக் கொள்வார்கள். பிள்ளைகளின் தேர்ச்சியையும் அல்லது முன்னேற்றத்தையும் மதிப்பிடுவதற்குப் பல கணக்குகளும், ஏடுகளும் எல்லா மாணவர்களுக்கும் வைக்கப்பட்டு அதில் விவரங்கள் நாளுக்கு நாள் பதிவு செய்யப்படும்.

டால்டன் பிளானில் முக்கிய அம்சங்கள் மூன்று. இதில் பாடங்களுக்கென்று தனி அறைகள்; திட்டவட்டமில்லாமல் நெகிழ்ச்சி கொடுக்கக்கூடிய கால அட்டவணை; தனித்தனியாக கொடுக்கப்படும் பயிற்சிகள் ஆகியவை இன்றியமையாத முக்கியமான அம்சங்களாகும்.

பிள்ளைகள் வகுப்புக்கூடத்தை அடையும் பொழுது கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உறுதியுடனும், ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் நுழைகின்றனர். அவர்களின் முயற்சிக்கேற்ற பலனை அடைகின்றனர் வாய்மொழித் திறமையிலும், எழுத்திலும் தங்கள் முயற்சியின் பயன்களைக் காண்கின்றனர். இம்முறையில் மாணவர்கள் உண்மையைக் கண்டு பிடிப்பவர்களின் நிலையில் வைத்துக் கருதப்படுகின்றனர். இந்த மன உணர்ச்சி மிக இன்றியமையாதது, மேன் மேலும் ஊக்குவிப்பதற்குச் சுலபமாகவோ வேகமாகவோ கற்கலாம். சுருக்கமாகச் சொன்னால் விருப்பப் பட்ட நேரத்தில் இவர்கள் கற்கலாம். வகுப்பறையில் ஆசிரியர் எதிர் நோக்கும் கட்டுப்பாட்டுச் சிக்கல்களுக்கு இம்முறையில் இடமில்லை. பிள்ளைகள் தங்களின் வேலையைத் திட்டமிட்டுச் செய்ய முனைவதில் போதிய பங்கு பெறுகின்றனர்.

இம்முறையை விரிவு படுத்திச் செம்மை செய்வதற்குச் சில வழிகளைப் பின்பற்ற வேண்டும். வீட்டுப்பாடங்களுக்கு இடமளிக்க வேண்டும். எல்லாக் குழுக்களிலும் வகுப்புப் பாடத்திற்கு நேரம் ஒதுக்க வேண்டும். பாடத்திட்டம் வாசதிக்கேற்றபடி பல பகுதிகளாகப் பிரிக்க வேண்டும். அவைகளில் வாசித்தல், மாதத்தில் செய்ய வேண்டிய வேலை, செய்யப்பட்ட வேலை இவைகளையும் குறிக்க வேண்டும். இதில் முக்கியமான குறை முறைப்படி வகுப்புக்கள் இல்லாததே; வகுப்பறை பாடத்திற்குக் கொஞ்சம் கூட இடமளிக்கவில்லை. டால்டன் முறையின் மற்றுமோர் இக்குறையை நீக்குவதற்கு இத்திட்டத்தில் பலமாறுதல்கள் செய்யப்பட்டு வருகிறது. பிள்ளைகட்கு வழிகாட்டுவதற்காக அடிக்கடி வகுப்புக்களை நடத்துதல், பாடங்களைச் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்தல்.

இம்முறைக்கும் பல சிறப்புக்கள் இருக்கின்றன. ஒன்று பிள்ளைகளின் மனப்போக்கை ஒட்டியதாகும். இதுவரை பிள்ளைகள் கற்பது ஆசிரியச் பொறுப்பென்றும், அதை எளிதில் புரிந்து கொள்ளும்படி பிள்ளைகளுக்குச் சொல்லுதல் அவர் கடமை என்றும் பிள்ளைகள் கருதினர். இம்முறையில் கற்பது தங்களின் சொந்த வேலை என்பதையும் இதில் வெற்றி தனது னிப்பட்ட பயிற்சியையும், ஊச்சத்தையும் பொருத்து என்பதையும்

உணர்கின்றனர். ஆசிரியர்களைப் பற்றிப் பிள்ளைகள் கொள்ளும் மனப்போக்கு முற்றிலும் மாறுதல் பெறுகிறது. ஆசிரியரை பிள்ளைகள் அடிக்கடி உதவிக்காக நாடுகின்றனர். ஆசிரியரின் இன்றியமையாதத் தன்மையைப் பிள்ளைகள் உணர்கின்றனர். அவர் அடிக்கடி வேண்டும் போது கொடுக்கும் உதவியைப் பிள்ளைகள் உணர்ந்து பாராட்டுகின்றனர்.

## தலைப்பு முறை (Topical Method)

பெரிய பகுதியில் உள்ளப் பல சிறு பகுதிகளில் ஒன்று ஒரு தலைப்பு அப்பெரிய பகுதியில் குறிப்பிடப்பட்டப் பகுதி சம்பந்தமாக விவரங்கள் அனைத்தும் ஒன்று சேர்த்து காரண காரியத் தொடர்பில் சேகரித்து அதைக் கற்றுக் கொடுப்பது தலைப்பு முறையாகும். (Topical Method) பாடத்திட்டம் அமைப்பதில் இம்முறை அனுசரிக்கப்படுகிறது, என்பதை இந்நூலில் வேறிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்காலத்தில் இம்முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது பாடம் கற்பித்தலில் பாடப்புத்தகம் படிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப் படுவதில்லை. அது போலவே ஆசிரியரும் பாடப்புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பிப்பதில்லை. பாடப்புத்தகம் புறக்கணிக்கப்படுகிறது. இம் முறையில் வகுப்பின் முந்திய நாளில் ஆசிரியர் கொடுக்கும் தலைப்பு மறுநாட் பாடமாகும். பிள்ளைகள் அதற்கு மறுதினம் வகுப்பில் பாடம் படிப்பதில் பங்கு பெற விவரங்களைத் தேடி சேகரித்துத் தொகுத்து கொண்டுவர வேண்டும். அவர்கள் வாய்மொழியில் படித்ததைக் கூறலாம், அல்லது எழுத்தில் எழுதிக் காட்டலாம்.

இம்முறையில் சில மறுக்க முடியாத சிறப்புகள் இருக்கின்றன. ஆனால் அதைக் கையாளுவதில் ஆசிரியர்களும், மாணவர்களும் இப்பொழுது உள்ள நிலையில் கஷ்டப்படுவார்கள். இம்முறையில் பாடத்தில் பிள்ளை-களுக்குக் கவனமும், அக்கறையும், பற்றும் ஏற்படுகின்றன. இதில் பிள்ளை-கள் நூல் நிலையத்தையும், பாடப் புத்தகங்களையும் பயன்படுத்துவதில் அவர்-களுக்குப் பழக்கம் ஏற்படுகிறது. இத்திறமைகள் ஏற்கும் திறமைகளாகும். மேற்படிப்பிற்கும், அறிவுத் தொடர்பிற்கும் இத்திறமைகள் வாழ்க்கையில் பயன்படும். பிள்ளைகள் எதிலும் ஒரு முடிவுக்குச் சிந்திக்காமல் வரமாட்டார்-கள். சுயமாகப் பண்பாடு வளர்வதற்கு இம்முறை மிகவும் உதவியாக இருக்கும். பிள்ளைகள் சோதனையில் ஈடுபடுவதற்குப் பயிற்சி பெறுகின்றனர். கற்கும் பொறுப்பு மாணவர் மேல் சுமத்தப்படுகிறது. விரிவுரை, பாடப்புத்தக-முறையில் கற்கும் பொறுப்பு தங்களது என்பதைப் பிள்ளைகள் உணர்வதில்லை, தலைப்புக்குப் பொருத்தமான சம்பந்தப்பட்ட முக்கியமானவைகளை மட்டும் பொறுக்குவதில் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. செய்திகளை ஒத்திட்டுப் படித்தலின் தேவையை உணர்தல், கண்டு பிடிக்கும் உணர்ச்சி கொள்ளுதல், இம்முறையின் சிறப்பு ஆகும்.

இம்முறையில் குறைகளும் உண்டு. குறிப்பிட்ட நோக்கங்களையும் பயன்களையும் கருதி இம்முறை அனுசரிக்கப்படுகிறது. இதில் காலதாமதம் ஆகும். நீண்ட காலம் தேவைப்படும். சில சமயங்களில் மாணவர்கள் என்ன செய்வதென்றுத் தெரியாமல் அல்லலுறுவர். சேகரிக்கப்பட்ட விவரங்களைச் சரியாகத் தொடுத்து, வகைப்படுத்தி, மனத்தில் இருத்திக் கொள்ளும் திறமை எல்லா மாணவர்களிடையேயும் காண்பதரிது. இதைத் தனியாக எந்த வகுப்புகளுக்கும் உபயோகப்படுத்திக் கற்பிப்பது விரும்பத்தக்கதாக அமைய-வில்லை. மாற்று உணர்ச்சிக்காக ஒரு சில சந்தர்ப்பங்களில் பொருத்தமான தலைப்புகளுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். ஆரம்பப் பள்ளியில் கொஞ்-சம், நடுத்தரப் பள்ளியில் அதைவிடச் சற்று அதிகமாகப் பயன்படுத்தலாம்.

தலைப்புக்களைத் தேர்ந்தெடுப்பதில் சில சங்கடங்களை ஆசிரியர் எதிர் பார்க்கலாம். தலைப்புகளை இரண்டு முறைகளில் தேர்ந்தெடுக்க வேண்டும். வரிசையாகப் பல பகுதிகளைப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் பிள்ளைகள் விபரங்களைச் சேகரித்து வரும்படிச் செய்தல். சேகரித்த விபரங்களுக்கு வெளியிட வாய்ப்புக்கள் கொடுத்தல், பாடப்புத்தகம் கால வரிசையின் அடிப் படையிலல்லாமல் எல்லா விபரங்களையும் தலைப்புகளின் அடிப்படையில் பிள்ளைகள் பல வழிகளில் வெளியிட பிள்ளைகளுக்கு வாய்ப்புகள் கொடுக்கப் படும்.

மற்றொரு முறையில் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலைப்புகளைக் கொடுத்து எல்லா விவரங்களையும் சேகரித்து, சேகரித்த விவரங்களின் அடிப் படையில் வகுப்பில் வந்து வெளியிட வாய்ப்புக்கள் கொடுத்தல். இது பொருளாதாரத்தில் வேலையைப் பகுத்தல் முறையைப் பின்பற்றியதாகும்.

இம்முறையில் சில பயன்கள் இருக்கின்றன. இம்முறையில் ஒரு முறைப்படி அல்லது கால வரைப்படி விவரங்கள் தொகுக்கப்படுவதால் எளிதில் படிக்கவும், மனதில் நிறுத்தவும் எளிமையாகக் காணப்படுகின்றன. நிகழ்ச்சி அல்லது வரலாற்றுப் போக்குத் தொடர்புள்ள நிகழ்ச்சிகளையும் சரியாக அறிந்து கொள்கிறார்கள்.

வரலாற்றில் ஒரு தலைப்பை எடுத்துப் படிக்கும் போது இதர தொடர் புள்ள தலைப்புகளையும் படிக்காமல் இருக்க முடியாது. ஒரு தலைப்பைப் படிக்கும் போது இதர தலைப்புகளைப் படிப்பதற்கு வேண்டிய தொடர்புகள் ஏற்படுகின்றன. ஆகவே படித்தத் தலைப்புகளில் செய்திகள் மேன்மேலும் பயன்படுத்தப்படுகின்றன என்பது தெளிவுபடும்.

பிள்ளைகள் குறிப்பிட்டத் தலைப்புகளின் அடிப்படையில் விவரங்கள் சேர்க்க வேண்டியிருப்பதால் கிடைத்த விவரங்களைச் சோதித்துப் பார்க்கவும், புத்தகங்களைப் படித்து விவரங்களைத் தேர்ந்தெடுக்கவும் முனைகின்றனர். ஆகையினால் கற்கும் பொறுப்பை மாணவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

இம்முறையில் ஞாபக சக்தியை விட காரணகாரியம் அறியும் சக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. செய்திகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றது. தேதிகளையோ, முக்கிய நிகழ்ச்சியையோ அல்லது வரலாற்றுப் போக்கையோ அல்லது பெரிய நிகழ்ச்சியையோ மையமாகக் கொண்டு படிக்கின்றனர்; அறிதல் முக்கிய நோக்கமாக விளங்குகிறது.

இம்முறையைக் கையாளுவதற்குச் சில வழிகள் உண்டு. ஒரு ஆண்டில் கற்பிக்கப்பட வேண்டிய செய்திகளைப் பல தலைப்புகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒவ்வொரு மாணவனுக்கும் கொடுக்க வேண்டும். அவர்கள் தேவையான விவரங்களைச் சேகரித்துக் கொண்டு வர வேண்டும். இம்முறை கல்லூரி மாணவர்களுக்கு மிக ஏற்றது.

படிக்க வேண்டியதை ஓரிரண்டு தலைப்புகளின் அடியில் பிரித்தல். இத்தலைப்புகள் வகுப்புக்குப் பொதுவாக இருக்க வேண்டும். வகுப்பு ஒன்றுக அமைந்து இவைகளைப் படிப்பதில் ஈடுபட வேண்டும். படிப்பில் ஒத்துழைப்பு (co-operative learning) என்பதில் பிள்ளைகள் போதிய பயிற்சிப் பெறுவார்கள். ஒரு சில தலைப்புகளை மட்டும் எடுத்துக் கொண்டு வகுப்பறையில் படிக்க முற்படுதல் வேண்டும்.

## சான்று முறை (Source Method)

முன்னுரை: நேரடியாகப் பெற்ற அனுபவ அறிவு சிறந்தது, எல்லாவற்றிலும் நேரடிப் பட்டறிவு பெறுவது இயலாத காரியம். இதற்குப் பரிசோதனை முறையை அனுசரிக்க வேண்டும் என்பது தெளிவு. பரிசோதனை முறையை வரலாற்றில் முழுமையாகப் பயன்படுத்த முடியாது. அதற்குப் பதிலாக நேரடி அனுபவத்திற்கு மாற்று கண்டு பிடிக்க வேண்டும். இதற்குச் சான்று முறை பெரிதும் உதவும்.

விவரங்களைப் படிப்பது நேரடி அனுபவத்திற்கு அருகில் அமையும் நிகழ்ச்சிகளை, நேரில் பார்த்தவர்கள், நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டவர்கள், அவர்கள் வாயிலாய்க் கேட்டவர்கள் ஆகியோர் வழியாகக் கிடைத்த செய்திகளை நேரடி அனுபவத்திற்குப் பதிலாக வாசிக்கலாம். சான்று முறை சம்பவ காலத்தில் இருந்து அதில் பங்கு பெற்றவர்கள், பார்த்தவர்களால் எழுதப்பட்ட பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு கூறப்படுவது ஆகும்.

### தோற்றமும் வளர்ச்சியும்

இம்முறை தோன்றியது ஐரோப்பிய நாடுகளில். இம்முறை சிறந்ததாகக் காணப்படுவதால் பல மூல நூற்கள் பதிப்பிக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி தொடர்பாக பல மூல நூல்களைப் பிள்ளைகளே கையாண்டு ஒப்பிட்டுப் பார்த்துத் தங்களுக்குக் கிடைத்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சில நிகழ்வுகளைத் தொடர்பாக வரலாற்று ஆசிரியர்கள் போல

எழுதிக் கொண்டு வருவது முதன் முறை. இதில் ஆசிரியர் பிள்ளைகளுடைய வேலையை மதிப்பிட்டனர். இந்த முறையை எல்லா மாணவர்களும் பின்பற்றப் போதிய சான்றுகள் புத்தக வடிவத்தில் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்.

சான்றுகளை பிள்ளைகள் பயன்படுத்தி எழுதிக் கொண்டு வருவதற்குப் பதிலாக ஆசிரியர்களே போதனையில் வரலாற்றுச் சான்றுகளை அடிக்கடி கையாண்டு பாடம் போதிக்கத் தலைப்பட்டார். இது இரண்டாவது முறை ஆகும்.

நாளடைவில் இம்முறை கைவிடப்பட்டது. பல மூல நூல்கள் வெளி வந்தது ஒரு காரணம் ஆகும். இந்த முறை தோற்றுவித்தவர்களின் எண்ணப்படி பின்பற்றப்படவில்லை. சான்று முறையில் மேற்கொண்டு செய்திகளைச் சேர்ப்பதற்குப்பதில் செய்திகளின் தெளிவுக்காகப் பயன்படுத்தப்படுவது புதிய முறையாக இருக்கிறது.

## எதற்குப் பயன்படுத்த வேண்டும்?

சான்றுகள் எழுத்துப் பயிற்சிக்கும், சான்று முறைக்கும் உதவுகின்றன சமகாலத்து வரலாற்றுச் சூழலை ஏற்படுத்தவும் சான்றுகள் பயன்படுத்தப் படுகின்றன. நுட்பமாகக் கற்று நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து மேலும் வரலாற்று விபரங்களைத் தொகுப்பதற்கும் பயன்படுத்தலாம்.

பிள்ளைகள் படிப்பதற்கும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கும் போதுமான மூல நூல்கள் கொடுக்க வேண்டும்- பிள்ளைகள் கேட்கும் போதும் விரும்பும் போதும் மூல தஸ்தாவேஜீகளையோ அதனுடைய உண்மையான நகல்களையாவது கொடுக்க வேண்டும. கொடுக்கப்பட்ட மூலப் புத்தகங்கள், வரலாறு எழுது--தற்கும் பயன்படுத்தப்பட்டவைகளாக இருக்க வேண்டும்.

இம்முறையால் வரலாறு பல பிரச்சனைகளாக மாற்றப்படும். பிள்ளைகளுக்கு வேண்டிய மூல புத்தகங்கள் கிடைக்கும். இவைகளைக் கொண்டு விஞ்ஞானியைப் போல புதியவற்றைக் கண்டு பிடிக்கும் சூழ்நிலையில் பிள்ளைகள் விடப்படுவார்கள்,

## சான்று முறையில் பாடப்புத்தகங்கள் வகிக்கும் இடம்

சான்று முறையில் பாடப்புத்தகங்கள் பயனற்றவை' என்று அவற்றைப் புறக்கணிக்கக் கூடாது. அவை சம்பவங்களின் சுருக்கம், கால விவரங்கள், சம்பவங்களின் வரிசை, வம்சாவளி உறவுகள் ஆகியவற்றை வேண்டும் போது பார்த்துக் கொள்ள உதவியாக இருக்கும. வரலாற்றுப் பாடத்தை முதன் முறையாகக் கற்பவர்கள் பாடப்புத்தகத்தின் வாயிலாகத்தான் இவைகளைத் தெரிந்து கொள்ளுவார்கள். வரலாற்றில் ஓரளவு அறிவு பெற்ற பிறகுதான் சான்று முறை பின்பற்றப்பட வேண்டும். அதுவரை பிள்ளைகளுக்கு

இன்றியமையாதனவாக விளங்கும் மூல ஏடுகளைக் கொண்டு வந்து காட்டலாம். அவர்களுக்கு அவைகளின் பிரதிகள் வழங்கப்படலாம். அச்சிட்டோ அல்லது தட்டெழுத்துப் பிரதி எடுத்தோ கொடுக்கலாம்.

## சான்றுகளின் அடிப்படையில் கொடுக்கப்படும் பயிற்சிகள்

எழுதியவரைப் பற்றிய விவரங்களை அவர்களது நூலிலிருந்து படித்துத் தொகுத்தல் விளக்க உரையை அடிப்படையாகக் கொண்டு ஸ்கெட்சு சார்ட்டுகள் இதர விளக்கப் படங்களைத் தயார் செய்தல். சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு விருத்தியுரை கொடுத்தல். மூல ஏடுகளிலிருந்து தனிப்பட்டவர்களின் குணதிசயங்களைத் தொகுத்தல். ஏடுகளில் காணப்படும் சான்றுகளைக் கொண்டு காலத்தை நிர்ணயம் செய்தல். குறிப்பிட்ட போர் தொடர்பானதும் சம்பந்தமானதுமான இரண்டுக்கும் மேற்பட்ட செய்திகளைத் தொகுத்து ஒத்திட்டுப் பார்த்தல்.

## மூலப் புத்தகங்களைப் பெறுவதில் உள்ள தடைகள்

இப்புத்தகங்கள் பிரதேச மொழியில் கிடைப்பதில்லை. இவைகளின் விலை அதிகமாக இருப்பதால் பிள்ளைகள் வாங்கும் நிலையில் இல்லை. இது கல்லூரி வகுப்புகளுக்கு மட்டும் சிறந்ததாகக் கருதப்படுகிறது. பிள்ளைகளுக்குச் சில பகுதிகளை மட்டும் நகல் எடுத்துக் கொடுக்க வேண்டும். பள்ளி வரலாற்று நூல் நிலையத்தில் மூல புத்தகங்கள் சிலவற்றை வாங்கி வைக்க வேண்டும்.

## மூலப் புத்தகங்களைப் பயன்படுத்துவது எப்படி?

சான்று நூல்களில் பொறுத்தமான ஒரு சில வரிகளை அவசியமாகப் பட்டபொழுது வாசித்துக் காட்டி அதை எழுதியவர் இவ்விவரங்களை எப்படிப் பெற்றூர் என்றும் அவருடைய வாழ்க்கையின் ருசிகரமான சம்பவங்களையும் குறிப்பிட்டால் சான்றுகள் என்பது என்ன? சான்றுகளில் காணும் விவரங்கள் வரலாற்றுக்கு எவ்வழியில் பயன்படுகின்றன என்பதைப் பிள்ளைகள் எளிதில் உணர்ந்து கொள்ளுவார்கள். ஆசிரியர் அப்புத்தகத்தைப் பற்றி விளக்கிச் சொல்லிப் பின்னுட்களில் எதை, எவ்வாறு, எதற்காகப் பயன்படுத்தலாம்? என்பதைக் குறிப்பிட வேண்டும். சான்றுகளைத் தொடர்பு இல்லாமல் படித்துக் காட்டுவதும் படிக்கச் செய்வதையும் தவிர்த்து, வேண்டும்போது சரியான சந்தர்ப்பங்களில் இவைகளைப் போதனைக்குப் பயன்படுத்த வேண்டும்.

இரண்டாவது முறையில் மூலப்புத்தகங்களில் குறிப்பிட்ட பகுதிகளைக் கொடுத்து அதைப் படித்து வரும்படி சொல்வதற்குப் பயன்படுத்தலாம். கொடுக்கப்படும். பகுதிகள் வகுப்பறைப் பாடங்களுக்குத் தொடர்புடையவைகளாகவம் பிள்ளைகளால் விரும்பத்தக்கதாகவும் இருக்க வேண்டும்

பிள்ளைகளை அதைப் படித்து வந்து வகுப்பில் வெளியிட வேண்டும் அல்லது எழுதிப்படிக்கும் படியும் சந்தர்ப்பங்கள் கொடுக்கலாம். மாணவர்களில் ஒவ்வொருவரும் சிறு பகுதிகளாக ஒரு புத்தகத்தில் படித்து வெளியிட்டால் பிள்ளைகள் நோக்கத்தையும், அதனால் பெறும்பயனையும் எளிதில் உணர்வார்கள்.

மூலப்புத்தகங்களில் உள்ள செய்திகளைப் பிள்ளைகள் பயன்படுத்திக் கொடுக்கம்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு வகுப்பில் வந்து சொல்லும்படி சந்தர்ப்பங்கள் கொடுக்கலாம். மூல நூல்களைப் பயன்படுத்த வேண்டும் என்று விருப்பமுள்ள ஆசிரியர் பாடப்புத்தகத்தில் உள்ள தவறை அடிக்கடி சுட்டிக் காட்ட வேண்டும், அல்லது சில பிழைகளை மாணவர்களே கண்டு பிடிப்பதற்கும் பொருத்தமின்மையைச் சரிசெய்யவும் முரண்பாடுகளைச் சரிசெய்யவும் பயன்படுத்த வேண்டும். உண்மையைக் கண்டு கொள்வது வரலாற்றுப் பாடத்தின் அடிப்படைப் பிரச்சனையாகும். இதற்கு மூலப் புத்தகங்கள் உறு துணையாக விளங்குகின்றன.

வரலாற்று விவரங்களைப் பிள்ளைகள் விவரமாகத் துருவிப் பார்க்கச் சான்றுகளிலிருந்து ஓரிரண்டு பகுதிகளை மட்டும் வாசித்துக் காட்டினால் போதுமானது என்று ஆசிரியர் நினைக்கக் கூடாது. வாசிக்கும் பொழுது கூட சில சிறிய ஆனால் குறிப்பிடத்தக்க வித்தியாசத்தைக் குறிப்பிட்டாலொழிய அதைப்புரிந்து கொள்ள மாட்டார்கள். இதைத்தவிர்க்க மூலங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட விடைகளைக் கொடுக்கும்படி செய்து அதை மதிப்பிட வேண்டும். மூலங்களிலிருந்து மேற்கோள்கள் கொடுக்க வேண்டும். இதனால் எதற்காக ஒன்றை நீக்கி மற்றொன்றைச் சரி என்று கொள்கிறோம் என்று பிள்ளைகட்கு எளிதில் புலப்படும்.

இம்முறையில் மாணவர்கள் போதிய நிதானத்தின் (Moderation அவசியத்தையும் உணர்வார்கள். எதிலும் அவசரமாக முடிவுக்கு வராமல் நிதானித்துப் பார்த்து ஆராய்ந்து வருவதில் அவர்களுக்கு இம்முறையில் பயிற்சி கொடுக்கப்படுகிறது. ஆரம்பத்தில் ஏதாவது ஒரு மூலப் புத்தகத்தில் நம்பிக்கையும் மதிப்பும் கொள்வார்கள். நாளடைவில் இந்த நம்பிக்கையும் மதிப்பும் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்க்கப்படும். காரணம் பிள்ளைகள் நாளடைவில் ஒன்றைப்பற்றி பல சான்றுகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறு பட்டிருப்பதை உணர்வார்கள். நாளடைவில் மூலப்புத்தகங்களிலும் மற்ற பாடப்புத்தகங்களைப் போல் ஒருதலைப் பட்சமாகவும் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவார்கள்- அவைகளிலும் சில குறைகள் இருப்பதைப் பிள்ளைகள் உணர்வார்கள். மூலப்புத்தக ஆசிரியர் நடந்த சம்பவங்களைப் பற்றிக் கண்டும் கேட்டும் விவரங்களைக் கொடுத்திருந்தால் இம்மூலங்கள் பிள்ளைகளின் நன்மதிப்பைப் பெறும் என்று எதிர் பார்ககலாம்

பள்ளியிலிருக்கும் பொழுது பிள்ளைகள் பாடப் புத்தகத்தில் காணும் விவரங்கள், ஆசிரியரால் கொடுக்கப்படும் விவரங்கள் இவற்றின் தார தம்மியம் உண்மைப் பற்றிச் சிந்திக்காமல் அப்படியே ஏற்றுக் கொள்வதில் பழக்கப்பட்டவர்களாக விளங்குகின்றனர். வாழ்க்கையிலும் இப்பழக்கத்தைக்

கைவிடுவதில்லை. எதையும் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்வதில்லை. இம்முறையைப் பின்பற்றினல் எதையும் அப்படியே சிந்திக்காமல் ஏற்றுக்கொள்ளும் வழக்கத்தை கைவிட்டுச் சிந்தித்து ஏற்றுக் கொள்வதில் முனைவார்கள்.

சமூகத்தில் தனிப்பட்டவர்கள் கூடி வாழ வேண்டியது இன்றியமையாததாக இருக்கிறது. எல்லோரும் உண்மையை அறிந்து அதை அனுசரிக்க விரும்புவர். வாழ்க்கையில் உண்மை எது என்று ஆராய்தல் மனித இயற்கை. வரலாற்றைக் கற்பவர்கள் கூட இது உண்மையா? என்ற கேள்வியை அடிக்கடி எழுப்புவார்கள். அது உண்மை என்று உங்கட்கு எப்படித் தெரியும்? என்பதைப் போன்ற கேள்விகள் சர்வ சாதாரணம்.

பிள்ளைகள் கொடுக்கப்பட்ட மூல விவரங்களிலிருந்து வரலாற்றை நிர்மாணிக்க முடியாது என்பது உண்மை தான். வரலாற்று மூலங்களை அவர்கள் அதிக அளவாகப் பயன்படுத்துவது என்பது அவர்களால் இயலாத காரியம். வரலாறு எவ்வாறு தொகுக்கப்பட்டதென்பதைப் பற்றியும், வரலாறு தொகுப்பதற்கும் உதவியாக இருக்கும் மூலங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கும், வரலாற்றுச் சாட்சியங்கள் அவசியம் என்பதை உணர்வதற்கும், அடிக்கடி சில தொடர்புகளைப் படித்துக் காட்டலாம். தவிரவும் வரலாறு மூலங்களின் வகைகள் யாவை என்பதை அறிவதற்கும் மிகவும் உதவியாக இருக்கும். இம்முறை மூலம் பிள்ளைகளுக்கு மூலங்களை அறிமுகப்படுத்த வேண்டும். சான்று உணர்வு ஏற்படுத்துவதை இக்காலத்தில் முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

இதற்கு அடுத்து வரலாற்றுப் பிரச்னைகளையும் சிக்கல்களையும் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். இது உண்மையா? அப்படியானல் உங்கட்கு எப்படித் தெரியும் என்ற வினக்களுக்குப் பதில் காண்பதில் சான்றுமுக்கியத்துவத்தைப் பிள்ளைகள் உணர ஆரம்பிப்பார்கள். இக்காலத்தில் சான்றுகளின் இயல்புகளையும் அவைகளின் முக்கியத்துவத்தையும் உணர்த்துவது நமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

இதை அடுத்து வரலாற்றில் திறனய்வு செய்வதற்குப் பிள்ளைகளுக்கு வழிகாட்ட வேண்டும். வரலாற்றுத் திறனய்வு சிறிது சிரமமானது. இதை ஒரு சிறிய அளவுக்குத் தான் உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புப் பிள்ளைகள் செய்ய முடியும். இந்த நிலையில் மாணவர்கள் ஒன்றைப் பற்றிய வெவ்வேறு விதமான விவரங்களையும், அதற்குத் தகுந்த காரணங்களையும், கைப்பிரதிகளையும் பல பிரதிகளில் உள்ள வாசகங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுதலையும் ஒரு நிகழ்ச்சி பற்றிய சான்றுகள் பலவற்றையும் ஒன்றுடன் ஒன்றுஒத்திட்டு சான்றுகளின் பயனை அறிவதில் பயிற்சியையும் பெறுவர். பிரதியில் வரும் முறையில் சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றைத் தொகுத்தலை கடைசியாக வைத்துக்கொள்ள வேண்டும். இம்முறை மூலமாகச் சான்று உணர்ச்சியையும், சான்றுச் சிறப்பினையும், அவசியத்தையும் வலியுறுத்த முடியும்.

## வரலாற்றைக் கற்பித்தலில் நடிப்புக்கு இடம்

நாடக முறையில் பாடம் கற்றுக் கொடுக்க முடியுமா என்பது கேள்வி. இம்முறை ஆரம்ப வகுப்புகளுக்கு மிகவும் ஏற்றது. கற்பிக்கும் முறை என்று கொள்வதைவிட வெளியிடும் முறைகளில் ஒன்று என்று இதைக் கருத வேண்டும். பிள்ளைகள் வரலாற்றைக் கற்றபின் வெளியிடும் பயிற்சிகளில் முக்கியமானதொன்ருகக் கொள்ள வேண்டும், இதற்கு வரலாற்று நிகழ்ச்சி-களையும், துணுக்குகளையும் மேடைக்கு ஏற்றவாறு மாற்றி எழுத வேண்டும்.

பிள்ளைகளின் படைப்புத்திறனை (creative ability) வெளியிடுவதற்கும், அத்திறன் தூய்மைப் பெறுவதற்கும் இம்முறை ஏற்றதாக அமைந்துள்ளது. நிகழ்ச்சிகளை மனக்கண்ணில் கொண்டு வந்து நிறுத்தவும், கண்கூடாகக் காணவும் இதில் வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. இம்முறையில் நோக்கத்-திறனுடன் பொதுத்திறனும் பெற்று வரலாற்றை மாணவர்கள் கற்பர். பிள்ளைகளுக்கு வரலாற்று உண்மை உணர்ச்சி ஏற்படுத்தப்படுகிறது. சென்ற காலத்தை உயிர்ப்பித்து அதன் அனுபவத்தைப் பெறவும் வரலாற்றுப் பாடத்-தில் அக்கறை கொள்ளவும் செய்கிறது. நாளடைவில் கற்பனையைக் கைவிட்டு வரலாற்றின் உண்மைக்கு மாணவர்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

தொடக்கப்பள்ளிகளில் எப்போதாவது இம்முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். நடிப்புப் பயிற்சியாகவும் எழுத்துப் பயிற்சியாகவும் ஒரு பாடத்திற்கு முன்னுரையாகவும் கொள்ளலாம். பிள்ளைகள் நிகழ்ச்சிகளை நடிப்பதற்காக அவர்களே அவற்றை மாற்றி எழுதுவதற்கு வாய்ப்புக்கள் கொடுத்தல் வேண்டும்.

## நடிப்புத்திறனின் நோக்கங்களும் அடிப்படைகளும்

இம்முறையில் மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தில் ஆர்வம் கொள்வார். கள். பிள்ளைகளுக்குப் படிக்கும் பழக்கம் ஏற்படுகிறது. இறந்த காலத்தைக் கற்பனைச் செய்யவும், அதை அனுபவிக்கவும் பிள்ளைகளுக்குப் பயிற்சி தரப்படு-கிறது. இம்முறையில் வரலாறு உண்மை என்பதைப் பிள்ளைகள் உணர்வர் பிள்ளைகளுக்கு உண்மையுணர்வு ஏற்படுகிறது. பிள்ளைகள் உள்ளுணர்வுகள் உடையவர்களாகி நிகழ்ச்சிகளுடன் தங்களை ஒன்ருக நினைத்துக் கொள்கின்-றனர். அவர்களின் கற்பனை சக்தி, காரண காரியங்களை உணரும் சக்தி ஆகியன வளர்க்கப்படுகிறது. வரலாற்று நிகழ்ச்சிகளில் சில தெளிவற்றதாக இருக்கின்றன. அவைகளை நடிக்கச் செய்தால் அவற்றில் பிள்ளைகள் தெளிவு கொள்ளுவார்கள். பிள்ளைகள் உணர்ச்சியால் உந்தப்பட்டு தூய்மையடைவார்-கள். சுய முயற்சி தூண்டப்படுகிறது. மனித நாகரீகத்தில் பிள்ளைகளின் அக்கறையையும் கவனத்தையும் இம்முறைத் தூண்டுகிறது.

## நடிப்பு முறைக்குச் சில யோசனைகள்

நாடக முறையை அனுசரிக்க முற்படுவதற்கு முன் அம்முறையில் ஏற்படும் கல்விப்பயன்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். நடிப்பதற்குக் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிகள் சில கடினமான வரலாற்றுப் பகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு உதவுமா என்று கவனிக்க வேண்டும். சென்ற காலத்தை உயிர்ப்பிப்பதற்கும், அதன் அனுபவத்தை நேரிடையாகப் பெறவும் எவ்வளவு தூரம் உதவியாக இருக்கும் என்பதை மதிப்பிடல் வேண்டும். பிள்ளைகளின் மன உணர்ச்சிகள் தூண்டப்பட்டு, தூய்மை பெறுமா என்பதை-யும் சிந்திக்க வேண்டும். இம்முறையில் நடிப்பில் சிறப்புப் பெற்றவர்களே நடிக்க வேண்டும் என்ற கொள்கையைப் பின்பற்றக் கூடாது. மேடை அலங்காரங்கள் இல்லாமலும், ஆடை ஆபரணங்கள் இல்லாமலும் எல்லோரும் நடிக்கும்படிச் செய்ய வேண்டும். உணர்ச்சிகளை எழுப்பவும் அவை தூய்மை பெறவும் மேடை அலங்காரங்களும் ஆடை ஆபரணங்களும் தேவையாகும். ஆனல் வகுப்பில் நடிக்க அவை தேவையில்லை பிள்ளைகள் வரலாற்று நிகழ்ச்சிகளை நன்கு படித்துப் புரிந்துக் கொண்டு தன்னிச்சையாகத் தமக்குத் தெரிந்த மொழியில் வகுப்பில் வந்து நடிக்கச் செய்ய வேண்டும்.

நாடக முறையில் பல பயன்கள் உண்டு. பிள்ளைகள் பேச்சுத் திறமையையும், எண்ணங்களைச் சரியாக வெளிப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகளையும் இம்முறையில் பெறுவார்கள். பிள்ளைகள் இயற்கையாக வந்து பேசுவார்கள். "ரூசோ -(Rousseau) பயிற்சியே" சிறந்த ஆசான் என்று குறிப்பிடுவது போலவே பிள்ளைகளின் நடிப்பும், விளையாட்டும், பேச்சும். இயற்கையாகவே இருக்கும். மிக்க பயனையும் நல்கும். பிள்ளைகளுக்கு நல்லொழுக்கம் ஏற்படுவதுடன் இம்முறையால் அது அபிவிருத்தியும் அடைகின்றது. இம்முறையில் பிள்ளைகள் வரலாற்றுப் புகழ் பெற்ற பெரியோர்களுடன் தொடர்பு கொள்ளச் செய்யப்படுகிருர்கள். பிள்ளைகள் தங்களை வரலாற்றில் வரும் பெரியவர்களாகவே நினைத்துக் கொண்டு நடிக்கின்றனர். மதிக்கப்பட வேண்டிய பெரியோர்கட்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இளம் வயதில் வரலாற்றுப் பெரியவர்கள்பால் பக்தி கொண்டு பின்பற்றுபவர்களாக இருப்பார்கள். பிற்காலத்தில் மாணவர்கள் எதையும் சரி என்று ஏற்றுக் கொள்வதில்லை. இவ்விரண்டு பண்புகளையும் சேர்த்து பிள்ளைகளின நல்லொழுக்கத்திற்கு வகை செய்தல் வேண்டும்.

இம்முறையைக் கையாள்வதில் ஆசிரியர் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நாடக முறைக்கு அதிக நேரம் தேவை. பல பாடங்களைக் கற்பிக்க வேண்டி இருப்பதால் அதிக நேரத்தை இம்முறைக்குச் செலவு செய்வது இயலாத காரியமாகும்.

வரலாற்றுக் காலத்தை உயிர்ப்பிக்கவும், வரலாற்றுச் சூழலில் பிள்ளைகள் தங்களைக் காண்பதற்கும் போதிய காட்சிப் பொருட்கள் (scenes and costumes) ஆகிய ஆதாரங்கள் மிகவும் அவசியம். இதற்கெல்லாம் ஆசிரியர் எங்கு போவது? செயல்திட்ட முறையில் சிலவற்றை ஆசிரியரும், மாணவரும

சேர்ந்து செய்து கொள்ளலாம். கெடுதல் விளைவிக்கக் கூடியதும், பிள்ளை-களின் மன உணர்ச்சிகளைக் கெடுக்கக்கூடியதுமான பகுதிகளுக்கு முக்கியத்-துவம் கொடுக்கக்கூடாது. போதிய முன் ஏற்பாட்டின்மையும், அரைகுறை நடிப்பும், கெடுதலையே விளைவிக்கும். அதற்குப் பதில் உணர்ச்சியுடன் பேசுவதின் மூலமும், எழுதியவற்றைப் படிப்பதின் மூலமாகவும் சென்ற காலத்தை மனக்கண்ணில் பார்ப்பார்கள் என்பது வெளிப்படை.

நடிப்பதற்கு முன் சில முக்கிய அம்சங்களில் ஆசிரியரும், மாணவரும் கவனம் செலுத்த வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்ச்சிக் காலத்தில் மக்களின் வாழ்க்கை நிலையைப் பற்றிய போதிய விவரங்களை ஆசிரியர் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் புத்தகங்களில் இருந்தும் படித்து அறிய-லாம். எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செய்து கொண்டு வந்து ஒப்பு-வித்தல் உண்மையான நடிப்பு என்று சொல்வதற்கில்லை. ஆக பிள்ளைகள் அவ்வக்காலத்து சூழலைப் பற்றிய உணர்ச்சி, நடிப்பிற்கான முன்னேற்பாடு-களில் முக்கியத்துவம் பெறவேண்டும். நாடகம் நடிக்கும் முன்பு போதிய வகுப்பு வேலைகள், எழுத்து, வாய்மொழி வேலைகளில் மாணவர்கள் ஈடுபட வேண்டும். வகுப்பில் நடிப்புப்பகுதியை யொட்டிய சில பாடங்கள் நடத்த வேண்டும். அதற்குப்பிறகு கற்றதை நடிப்பைத் தவிர்த்து வேறு வழிகளில் வெளியிடுவதற்கும் போதிய வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டும். நடிக்கப் படவேண்டிய நிகழ்ச்சியை ஒட்டி தயாரித்துச் செய்யும் வேலைகளும், மாணவர் கள் ஒன்று சேர்ந்து கூட்டுடன் செய்யும் வேலைகளையும் கொடுக்க வேண்டும் நிகழ்ச்சியை யொட்டிய அமைப்பையும், மேல் விவரங்களையும், மூலப்புத்தகங் களிலிருந்தும். பெரிய புத்தகங்களிலிருந்தும் தேர்ந்தெடுத்து, படித்து விவரங்களை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். நடிப்பதற்கு முன்பு, கைவேலை, ஓவியம் வரைதல், ஒப்பனை முதலியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

நாடகத்தை எழுதும் எழுத்துப் பயிற்சி பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம். கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நடிப்பதற்கென்று நாடகமாக மாற்றி எழுதுதல், உரையாடலாக மாற்றுதல், கற்பனைக் கடிதங்கள் எழுதுதல், கற்பனைக் கட்டுரை எழுதுதல், தகுந்த படங்களைச் சேகரித்தல், விளக்கங்கள் எழுதுதல் போன்ற வேலைகளில் பிள்ளைகளை ஈடுபடச் செய்யலாம்.

சென்ற காலத்தை நிகழ் காலத்திற்குக் கொண்டு வரவும், தொலைவில் நடந்ததை அண்மைக்குக் கொண்டு வரவும், வரலாற்றுப் பெரியவர்களின் மத்தியில் நம்மை நாம் காணவும், நம் மூதாதையர்களை நம் முன்பு வரவழைக்க-வும், அவர்களின் மொழி, நடை உடை பாவனைகளை நாம் நேரில் கண்ணுல் காணவும், அவர்கள் அருகில் உட்காரவும், அவர்களின் வீடுகளைக் காணவும், அவர்கள் பொருள்களை நோக்கவும், நடிப்பில் போதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். நம்மைப் படிக்கச் செய்தவர்கள் ஒரு காலத்தில் வரலாற்று ஆசிரியர்கள் தான். ஆனல் இக்காலத்தில் இப்பணியை வரலாற்று நூலாசிரியர் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்று வரலாற்றுப் பேராசிரியர் மெகாலேயின் (Lord Maccaulae) பொன் மொழிகளை இக்காலத்தில் மதிக்க வேண்டும்.

## மேற்பார்வைப் படிப்பு முறை

## SUPERVISED STUDY

முழு வகுப்போ, ஒரு சில மாணவர்களோ தங்கள் இருக்கையிலோ, வகுப்பறையிலோ வரலாற்றுப் பாடங்களைத் தாங்களாகவே கற்க முனைந்திருக்கும் பொழுது ஆசிரியர் அருகிலிருந்து மேற்பார்வை செய்வதைக் குறிக்கும். ஆசிரியர் பிள்ளைகளின் வேலையை மேற்பார்வை செய்வது மட்டுமில்லாமல், அவர்கள் விரும்பும் போதெல்லாம் உதவி செய்வதும் இம்முறையில் அடங்கும். எனவே பிள்ளைகள் தங்களுக்கு உதவி வேண்டும் என்ற கட்டத்தில் ஆசிரியர், மாணவர்களுக்கு உதவுவதும் அவர்கள் கற்பதற்கு வழிகாட்டவும் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டும். ஆசிரியர் எப்பொழுதும் தயாராக இருப்பார். அவசியம் ஏற்படும் பொழுது பிள்ளைகளின் வேலையில் குறுக்கிடுவார். ஆசிரியரின் உதவியைப் பிள்ளைகள் அடிக்கடி நாடுவார்கள். சில சந்தர்ப்பங்களில் தானுகவே வலிய மாணவர்களுக்கு உதவ ஆசிரியர் முன் வருவது முண்டு. எப்பொழுதும் உதவத் தயாராக இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் சமூக உறவு உணர்வுப் படிப்பும் இதில் அடங்கும்.

## பிள்ளைகளிடம் காணும் பாகுபாடு

பிள்ளைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். மிகவும் வேகமாக எதையும் கற்றுக் கிரகித்துக் கொள்ளும் இயல்புடைய மாணவர்கள், மிகவும் சுலபமாக எதையும் புரிந்து கொள்ளும் தன்மையுடைய மாணவர்கள், சராசரி அறிவு படைத்த மாணவர்கள். மேற்பார்வைப் படிப்பு முறை இந்த மூன்று வகையான மாணவர்களுக்கும் தகுந்த ஒரு முறையாகக் கருதப்படுகிறது. துரிதமாகப் படிப்பவர்களுக்கும் சுலபமாகப் படிப்பவர்களுக்கும் வாய்ப்பு இருக்கிறது. சுலபமாகப் படிப்பவர்களுக்காக துரிதமாகக் கற்றுக் கொள்ளும் இயல்புடைய மாணவர்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. கற்றல் பிள்ளைகளின் சொந்தப் பொறுப்புக்கு விடப்பட்டுள்ளது. இதனுல் பிள்ளைகளின் பொறுப்புணர்வு வளர்க்கப்படுகிறது. எனவே தாங்களாகவே கற்க வேண்டும் என்ற நிலையை இது ஏற்படுத்துகிறது. கற்றதை வெளியிடுவது என்பது நேரத்தை வீணுக்கும் முறையாக இருக்கிறது காலம் பயன்தரும் வழியில் இம்முறையில் செலவிடப்படுகிறது. ஒவ்வொருவரும் இதை உணர்கின்றனர். குழந்தைகளுக்கு மிகவும் தேவையானது அவர்களிடையே இருக்கும் அல்லது அவர்கள் கற்றலில் செய்யும் ஒரு சில தவறுகளைத் திருத்துவது ஆகும். இப்பணியை மேற்பார்வைப் படிப்பு வெற்றிகரமாகச் செய்கிறது.

## சுயமாகப் படித்தல்

பாடத்தைக் கேட்பதும், பாடத்தைச் சோதிப்பதும் பழைய முறை. இம்முறையில் பிள்ளைகளின் சிந்தனைக்கு இடமளிக்கப்படவில்லை. கற்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதும் இதில் முக்கியத்துவம் பெறுகிறது

பிள்ளைகள் மீது சுமத்தப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் பிள்ளைகள் கற்க ஆரம்பிக்கின்றனர். ஆசிரியர், பிள்ளைகள் திடமாகவும், சுலபமாகவும் கற்கும் திறமை பெறும்வரை உதவிகளைப் பிள்ளைகளுக்கு அளிப்பர். அவர்களுக்கு வழியும் காட்டுவார். பாடத்தைக் கேட்பதும், கேட்ட பாடத்தை வெளியிடுவ-திலும் மிக அதிகமான நேரம் வீணாகிறது. ஆனால் இம்முறையில் நேரம் வீணாக்கப்படுவது கிடையாது. வீட்டுப் பாடத்திற்கு அவசியம் இல்லாமல் போய் விடுகிறது.

## வீட்டுப் படிப்பில் உள்ள சிக்கல்கள்

பிள்ளைகளின் வீடுகளில் குழந்தைகள் தங்களின் பாடங்களை இரவிலோ மற்ற நேரங்களிலோ படித்து வருவதற்கான சூழ்நிலை கிடையாது. ஒரு சில மாணவர்களுக்கு மட்டும்தான் வீட்டில் எல்லா வசதிகளும் பெரியவர்களின் உதவியும் கிடைக்கலாம். படிக்காத பெற்றோர்கள், இட வசதியும், விளக்கு வசதியும் இல்லாத வீடுகளில் உள்ள குழந்தைகளுக்கு வீட்டுப் படிப்பினால் பயிற்சி பெறுவது கிடையாது. பள்ளியில் படிப்பதை தவிர வீட்டில் படிக்க வாய்ப்புக்களும், வசதிகளும் எல்லார்க்கும் கிடைப்பதில்லை. இப்படிப்பட்ட மாணவர்கட்கு மேற்பார்வைப் படிப்பு ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம்.

## மேற்பார்வைப் படிப்புக்குத் திட்டம் வகுத்தல்

தணிக்கையிலோ அல்லது ஆண்டுத் தேர்வுகளிலோ நிச்சயம் தோல்வி அடையலாம் என்ற நிலையில் காணப்படும் மாணவர்கட்கும், பாடங்களைப் புரிந்து கொள்ளுவதில் மிகவும் கஷ்டப்படும் பிள்ளைகளுக்கு மட்டும் மேற்-பார்வைப் படிப்பு முறையை பின்பற்றலாம். இது தவிர வகுப்பு முழுவதுக்கும் மேற்பார்வைப் படிப்பை ஏற்படுத்தலாம். பாடங்களில் மிகவும் பின் தங்கி தேர்வுகளில் தவறும்படியான பிள்ளைகளுக்கு உதவுவதற்காகப் பள்ளி முடிந்த வுடன் ஒரு மணி நேரம் பள்ளியில் இருந்து ஆசிரியர் உதவியுடன் படிக்கவும், ஏற்பாடு செய்யலாம். தவிர பெரிய பள்ளிகளுக்கும், மாணவர் இல்லங்கட்கும் தனியாக இதற்கென்று மேற்பார்வைக்காகவும், இல்லத்தை நிர்வாகம் செய்ய-வும் ஆசிரியரை நியமனம் செய்யலாம்.

## மேற்பார்வைப் படிப்புத் திட்டத்தின் பயன்கள்

மேற்பார்வைப் படிப்பினால் மாணவர்கள் பயன் பெறுகின்றனர். பிள்ளைகளிடம் ஆசிரியர் தனிக்கவனம் செலுத்துகிறார். அவர்களின் தேவை-யை அறிய முடிகிறது. மாணவர்களிடம் காணும் தவறுகளை அறிய முடிகிறது. வரலாற்று அறை இருப்பதினால்இம்முறையை மிகச் சீராகப் பயன்படுத்தலாம். ஆசிரியர்களுக்கும் மாணவர்கட்குமிடையே பரஸ்பர நேச உணர்வு ஏற்படு-கிறது. பிள்ளைகள் சேர்ந்து கற்றுக் கொள்ளும் முறையின் சிறப்பை உணர்-கின்றனர். அவர்கள் அறிவை மற்றவர்களுடன் பங்கு கொள்ளும் நல்ல மனப் பான்மையை வளர்க்கின்றனர். பிள்ளைகளுடைய அறிவு மேன் மேலும் விரிவடைகிறது.

## சிறந்த காலத்தை மெய்ப்பித்தல்

(Making the past real)

வகுப்பறையில் வரலாற்றுப் பாடம் சிறக்க வேண்டும் என்று விரும்பினுல் சென்ற காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பிள்ளைகளின் கற்பனையில் கொண்டு வந்து நிறுத்த வேண்டும். வரலாற்று நிகழ்ச்சிகள் உண்மையானவை என்ற உணர்ச்சி பிள்ளைகளின் மனதில் படவேண்டும். எனவே நாம் வரலாற்றுப் பாடத்தை உயிருள்ள பாடமாக கற்பிக்க வேண்டும். பிள்ளைகளின் காட்சியில் இவைகளை அவர்கள் காணவேண்டும். இதை எப்படி செய்வது என்பது எல்லா ஆசிரியர்களையும் எதிர் நோக்கும் கேள்வியாகும்.

## உள்ளூர் வரலாறும் சமுதாய வளங்களும்

வரலாற்று உண்மையை உள்ளூர் அல்லது பள்ளி இடத்தின் வாயிலாயும் பிள்ளைகளை அறியச் செய்யலாம். பிள்ளைகளும் வரலாற்றுச் சூழலில் இருக்கின்றனர் என்பதை மறக்கக் கூடாது. உள்ளூரில் வரலாறு சம்பந்தப் பட்ட இடங்களுக்கும், பொருள்களுக்கும் நாம் மதிப்புக் கொடுக்க வேண்டும். உண்மைப் பொருள்களைக் கொண்டு உண்மை உணர்ச்சியைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்த முயல வேண்டும். உள்ளூர் பாடசாலையும் வரலாற்று உண்மை உணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு பெரிதும் பயன்படும். உள்ளூர் வரலாற்றுக்குரியன அனைத்தும் பள்ளியில் சேகரித்து வைத்தால் ஒரு காலத்தில் அவைகள் பழமை பெற்று உள்ளூர் வரலாற்றுக்குச் சான்றுகளாக பயன்படுத்தலாம். பிள்ளைகளின் சமூகச் சூழ்நிலையும், உள்ளூர் வரலாறும் சமுதாய வளங்களும் சான்றுகளை மெய்ப்பிக்க உதவும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

## கல்விச் சுற்றுலாக்கள்

வரலாற்றை மெய்ப்பிப்பதற்கு ஆசிரியர் பிள்ளைகளின் சமூகச் சூழ்நிலையையும், பழக்க வழக்கங்களையும், விருப்பு வெறுப்புக்களையும், பூகோள சூழ்நிலையுடன் உள்ளூர் வரலாற்றையும் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. இவைகள் எல்லாம் பிள்ளைகளின் அனுபவத்திற்கும், தேர்வுக்கும் கேள்விக்கும் சம்பந்தப்பட்டதல்ல. இவைகளுக்கு புறம்பானவைகளைக் கொண்டும் வரலாற்றை உயிர்ப்பிக்க முடியும். இதற்கு ஆசிரியர்கள் மாணவர்களை வரலாற்றுப் புகழ்ப் பெற்ற இடங்களுக்கும், காட்சிச் சாலைகளுக்கும் அடிக்கடி சுற்றுலாவாக அழைத்துச் செல்ல வேண்டும். குறுகிய, நீண்ட கல்விச் சுற்றுலாக்களுக்கு ஆசிரியர் அடிக்கடி ஏற்பாடு செய்ய வேண்டும். பாடத்திட்டத்தில் இதைப் போன்ற சுற்றுலாக்களுக்கு இடமளிப்பதுடன் பாட இணைப்புக்கு வகை செய்ய வேண்டும். நீண்ட தொலைச் சுற்றுலாக்களைப் பருவ முடிவு காலங்களில் நடத்தலாம். வரலாற்று இடங்களுக்கு போகும் சுற்றுலாக்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. பள்ளி நேரத்தில் குறுகிய சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்யலாம். ஐரோப்பிய நாடுகளில் கல்விச் சுற்றுலாக்களுக்கு பாடத் திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது.

## காட்சிக் கேள்வி உபகரணங்கள்

இறந்த காலத்தை உயிர்ப்பித்துக்காட்ட காட்சிக் கேள்வித் துணைக் கருவிகள் உதவியாக இருக்கின்றன. வகுப்புகளில் பயன்படுத்துவதற்கென்று சில துணைக் கருவிகள் தயாரிக்கப்பட்டு அவைகளைப் பிள்ளைகள் பார்ப்பதற்கு கொடுத்தால் சென்ற காலத்தை அவர்கள் தங்கள் காட்சியினால் காணலாம் மாதிரிகள், படங்கள், தேசப்படங்கள், விளக்கப்படங்கள், கோட்டுப்படங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளை உருவமாக காண மிகவும் துணைபுரிகின்றன. ஆகவே படங்களும், தேசப்படங்களும் வேறு விளக்கப் பொருள்களும் இதற்கும் மிக உதவியாக இருக்கின்றன என்பது தெளிவுபடும். தகுந்த காட்சி துணைக் கருவிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் அவைகளைப் பயன்படுத்துவதைப் பொறுத்-தும் இறந்த காலத்தை மெய்ப்பிக்க முடியும்.

இறந்த காலத்தைப் பிள்ளைகள் முன் நிறுத்த வேண்டுமானால் மாதிரி-களும், கரும்பலகைகளும் பெரிதும் பயன்படும், அவைகள் உண்மையான பொருள்களாக இல்லாவிட்டாலும் கிட்ட தட்ட உண்மைப் பொருளை அடுத்து இருக்கின்றன. பெரிய பொருள்களை சிறிய அளவில் கட்டை, கண்ணாடிக்கல்-களிமண், பீங்கான் இவைகளில் வார்த்தெடுக்கலாம். சரியான மாதிரி இருந், தால் எப்பொருளையும் அவைகளின் முக்கிய அம்சங்களை ஒரு பார்வையில் எளிதில் அளவிட்டு விடுவார்கள். மாதிரிகள் மிகவும் நுணுக்கமாக உண்மைப் பொருள்களிலிருந்து முக்கிய அம்சங்களில் மாறுபாடு இல்லாமல் செய்யப் பட்டதாக இருக்க வேண்டும். சிறியவைகளை பருமன், நிறம், உருவம் எல்லா அம்சங்களிலும் உண்மைப் பொருள்களை ஒத்திருப்பதைப் போல செய்ய வேண்டும்.

சாதாரண படங்கள், மாதிரிகளை விட உயர்ந்தனவாக இருக்காது. படங்களைப் பல கோணங்களில் பார்க்க முடியாது. படங்கள், அஞ்சலட்டைப் படங்கள். புகைப்படம், செய்தித்தாள், விளக்கப்படங்கள், சினிமாப்படம், அசையாப் படங்கள் போன்றவைகளும் உதவியாக இருக்கும். அனுபவம் வாய்ந்த ஆசிரியராக இருந்தால் கரும்பலகையை பல விதங்களில் பயன்-படுத்திக் கொள்ளலாம்.

ஆரம்பக் காலத்தில் பாடங்கள் தனிப்பட்டவர்களை மையமாகக் கொண்டு கற்பிக்கப்பட வேண்டும், தவிரவும் வரலாற்றுப் பாடம் துணைக் கருவிகளைக் கொண்டும் கற்பிக்கப்பட வேண்டும். பார்க்கவும், போட்டுக் காட்டவும் முடியுமானால் நிகழ்ச்சிகளுக்கு கீழ்வகுப்புகளில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஆசிரியர் சில பண்புச் சொற்களை அடிக்கடி பயன்-படுத்துவதை நிறுத்த வேண்டும். ஆரம்ப காலத்தில் கற்பனை செய்வதற்கும், பொருத்தமான நிகழ்ச்சிகள், மனிதர்கள், சந்தர்ப்பங்களை மையமாகக் கொண்டு விவரங்களைக் கொடுக்க வேண்டும். இவைகள் எல்லாம் நாளடைவில். மறைந்து விடும். ஆனால் உண்மை உணர்ச்சி அவர்களை விட்டுச் செல்லாது.

சான்று முறையும், வரலாற்று உண்மையைப் புலப்படுத்தவும், வரலாற்றை உருவகப்படுத்துவதற்கும் உதவும் புத்தகங்களிலிருந்து அடிக்கடி சில விவரங்களை படித்துக் காட்ட வேண்டும். ஒரு சில வாக்கியங்களை கரும்பலகையில் எழுதி அதை தங்கள் நோட்டுப் புத்தகங்களில் எழுதிக் கொள்ளும்படி செய்ய வேண்டும். பாடம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது பொருத்தமான சான்றுப் புத்தகங்களை குறிப்பிடல் வேண்டும். ஓரிரண்டு வாக்கியங்களையும் ஆங்காங்கு எடுத்துப் பயன்படுத்தலாம். சான்று நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மாணவர்களுக்கு பயிற்சியும் கொடுக்க வேண்டும்.

சென்ற காலத்தை மெய்ப்பிக்க, நடித்தல் ஒரு முக்கியமான கருவியாகப் பயன்படுகிறது. மாணவர்களுக்கு ஏதாவது ஒரு பகுதியை வரலாற்று பாடத்திலிருந்து எடுத்து அதை மேடையில் நடிப்பதற்கு தகுந்தவாறு மாற்றி அமைக்கலாம். அவைகளைப் பிள்ளைகள் ஒப்பனை நடத்தி பின்பு அதை மேடையிலும் நடிப்பர். அவர்களுக்கும் வாய்ப்புகள் கொடுக்கலாம். பள்ளி ஆண்டு நிறைவு விழா, தோற்றுவித்தவர் நாள், சுதந்திர தின விழா, விளையாட்டு விழா, பெற்ருேர் தினம் போன்ற முக்கிய நாட்களில் பிள்ளைகள் வரலாற்றிலிருந்து நடிப்பதற்கு வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். மேடைக்கு பொருத்தமாக மாற்றி நிகழ்ச்சியை மாணவர்களுக்கு விட்டு விட வேண்டும். தேவைப் பட்டால் ஆசிரியர் மேற்பார்வையிடலாம்.

கற்பனைக் கட்டுரையையும், மடல்கள் எழுதுவதும் மற்றும் ஒரு வழியாகக் கொள்ள வேண்டும். இம் முறையிலும் இறந்த காலத்தை அவர்கள் பார்வைக்குக் கொண்டு வர முடியும். பிள்ளைகள் வரலாற்றுக் காலத்தில் இருந்தவர்களாக நினைத்துக் கொண்டு கற்பனை மடல்கள் வரையும்படி செய்யலாம். இதை வீட்டு வேலையாக கொடுக்கலாம் அல்லது கூட்டு முயற்சியாகவும் இருக்கலாம். இம்மடல்களை எல்லோரும் எழுத முடியாது. இம்மடல்கள் வரைவதற்கு வரலாற்று விவரங்களைப் பற்றிய முழு அறிவு தேவை. பிள்ளைகள் கற்றதை வெளியிடுவதற்கு இது வாய்ப்பு கொடுக்கிறது. எல்லா வயது மாணவர்களும் இது மாதிரியான கற்பனை மடல்கள் எழுதுவதில் தீவிரமான அக்கரை காட்டுகின்றனர்.

பிள்ளைகள் நாள் குறிப்பேடு (Diary) வைப்பதை வரவேற்க வேண்டும். வரலாற்று முக்கியம் பெற்ற நிகழ்ச்சிகளை அவர்கள் இதில் குறித்து வைக்கலாம். இது நடப்பு வரலாற்றிற்கும் பொருத்தமாகும். சில மாணவர்களை வெளிப்படையாகக் காணப்படும் காலங்களில் தாங்கள் உயிருடன் இருந்ததாகவும் பாவனை செய்து அதைப் பற்றிய நாள் குறிப்பு எழுதும்படியும் தூண்டலாம். அவர்கள் தாங்கள் பிரெஞ்சுப்புரட்சி, சிப்பாய்க்கலகம், இரண்டாம் உலகப்போர், இந்திய சுதந்திர தினவி ழாக்காலங்களில் உயிருடன் இருந்ததாகக் கற்பனை செய்துக் கொண்டு எழுத வேண்டும்.

முந்திய நாட்களில் மாணவர்கள் சில பெரியோர்களின் சொற்களை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் வழக்கம் இருந்தது. பிள்ளைகள் வகுப்பறையில் ஆசிரியர்களின் முன்னிலையில் உணர்ச்சியுடன் ஒப்புவித்தனர். இம்முறையும் சில சமயங்களில் பின்பற்றினல் நாம் கொண்ட நோக்கம் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை. பிள்ளைகளின் மனதைக் கவருமிடத்து

உணர்ச்சியூட்டக்கூடிய ஒரு சில வரிகளை வரலாற்றில் இடம்பெற்ற பெரியவர்களின் பேச்சிலிருந்தும், எழுத்திலிருந்தும் எடுத்து அதை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும்படி செய்யலாம். பிள்ளைகள் தங்களை மறந்து வரலாற்றுப் பெரியோர்களாக நினைத்துக் கொண்டு அவைகளை ஒப்புவிக்க வேண்டும்.

கடைசியாக வரலாற்றுப் புதினங்கள்; வரலாற்று சூழ்நிலையும், வரலாற்று உணர்வையும் ஏற்படுத்துவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். நூலின் வேறிடத்தில் வரலாற்றுப் புதினங்களைப்பற்றியும் அவைகளின் பயன்களைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளதைக் காண்க. மேற்கண்ட வழிமுறைகளில் இறந்தகாலத்தினை மெய்ப்பிக்க முடியும்.

### பயிற்சி வினாக்கள் :

1 மேல்வகுப்புகளினின்றும் கீழ் வகுப்புகளில் மேற்கொள்ளும் நோக்கங்களும் கற்பிக்கும் முறைகளும் சற்று வேறுபடுகின்றன என்பதை விவரிக்கவும்.

2 வரலாறு கற்பிக்க ஆரம்ப வகுப்புகளுக்கான முறைகளை விவரிக்கவும்.

3 பழைய முறைகள் எனப்படுவன யாவை? அவற்றை சீரான முறைகளாக்க அவற்றில் என்னென்ன மாறுபாடுகளைச் செய்யவேண்டும்?

4 வரலாறு கற்பிப்பதில் 'உரையாற்றுதல்' முறைக்குள்ள இடத்தை மதிப்பீடு செய்யவும்.

5 விரிஉரையாற்று முறையின் நல்லியல்புகள் யாவை?

6 சமூக உறவு உணர்வு முறையின் சிறப்பைக் குறிப்பிடவும்.

7 வரலாறு கற்றலிலும் கற்பிப்பதிலும் 'கண்ணோட்டம்' 'பயிற்சி' ஆகிய இரண்டின் இடத்தை மதிப்பீடு செய்யவும்.

8 பரிசோதனை முறையை விளக்குக?

9 சான்று முறையின் சிறப்புக்கள் யாவை?

10 மேற்பார்வைப் படிப்பு முறையை தெளிவாக விவரிக்கவும்.

11 கடந்த காலத்தை மெய்ப்பித்துக் காட்டும் பல்வேறு வழிமுறைகளை ஆராய்க.

## அன்றாட வேலைக்கான பாட முன் தயாரிப்பு

### சில பொதுவான தத்துவங்கள்

வகுப்பறையில் ஆசிரியர் சென்று வரலாற்றைக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னால் எதைக் கற்க வேண்டும்? எப்படிக் கற்றுக் கொடுக்க வேண்டும்? என்னென்ன முறைகளை கையாள வேண்டும்? என்னென்ன உதவிகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும்? பிள்ளைகளை வகுப்பில் எவ்வாறு வேலையில் ஈடுபடச் செய்ய வேண்டும்? பாடம் முடிந்தவுடன் எவ்வகையான பின்-தொடர்பு வேலைகளை அளிக்க வேண்டும்? என்பதைப் பற்றிய சிந்தனைகளை வரிசையாக எழுதி வைத்துக்கொண்டால் வகுப்பிற்குச் சென்று எந்தவிதமான தடங்கலின்றி முன் திட்டமிட்டது போலவே சரியாகப் பாடம் கற்றுக் கொடுக்க முடியும். கற்பித்தல் சற்று எளிதான காரியமாய்த் தோன்றும். வகுப்பில் சென்று எதை, எப்பொழுது சொல்வது என்று தெரியாமல் சரியான முறையின்றித் திட்டமிட்டால் கற்றுக் கொடுக்கும் பாடங்கள் சிறக்காது. எனவே, வரலாற்றுப் பாடத்திற்கு முன் கூட்டியே தயார் செய்யப்பட்ட பாடக் குறிப்புகள் அல்லது பாடங்களுக்காக வகுக்கப்பட்ட முறைத்திட்டம் இன்றியமையாததாகும்.

சில ஆசிரியர்கள் தங்களுடைய அனுபவத்தைக் கொண்டு எந்த விதமான முன் தயாரிப்பும் இல்லாமல் வகுப்பில் நுழைந்து வரலாறு கற்றுக் கொடுக்கும் துணிவு தங்களுக்கு உண்டு என்று தெரிவிக்கின்றனர். இதை ஏற்றுக் கொள்ள முடியாது. அனுபவமிக்க ஆசிரியர்களுக்கும் விரிவுரையாற்றுபவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் போதனைக் குறிப்புகள் தங்கள் கைவசமிருந்தால் அதன் அடிப்படையில் தங்களது அன்றாட வகுப்பு வேலையை மிகவும் திறமையாகவும், இலகுவாகவும், செய்து முடிக்கலாம். எனவே வரலாற்று ஆசிரியருக்கு அனுபவம் ஆக ஆக வரலாற்றிற்கு எழுதப்பட்டு வரும் குறிப்புகளில மாறுதல்கள் செய்ய வேண்டியதின் அவசியத்தை உணர்வார்கள். அவர்களுடைய பாடக்குறிப்பு ஆண்டு தோறும் மென்மேலும் அபிவிருத்தியடைந்து கொண்டே போகும். எனினும் பாடக்குறிப்பு இல்லாமல் வகுப்பை நடத்த முடியும் என்ற உணர்வு பாடக்குறிப்புகளை எழுதி அதைப் பயன்படுத்தி வந்த ஆசிரியர்களிடம் ஏற்படாது என்பது உண்மையாகும்.

சில வரலாற்று ஆசிரியர்கள் தங்களுடைய அன்றாட வேலை, வகுப்புகளுக்குச் சென்று, ஏதோ சில செய்திகளை மட்டும் கூறி வருவதுதான் என்று தவறான கருத்துடையவர்களாக இருக்கின்றனர். விவரங்களைப் படிப்பது மட்டும் கல்வியின் நோக்கமாகக் கொள்ளக்கூடாது. ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு வரலாற்று விவரங்களைச் சொல்லுபவர்களாக மட்டும் திகழக் கூடாது. பிள்ளைகள் விவரங்களைத் தெரிந்து கொள்ளும் பொழுது அவர்களுடைய சிந்தனைகள் தூண்டப்படுகின்றன. ஆசிரியர் வரலாறு கற்றுக் கொடுக்கும் பொழுது அவர்கள் சிந்தனையில் ஈடுபட வாய்ப்புக்கள் அளிக்க வேண்டும். சொல்லும் வரலாற்று விவரங்களைச் சரியாகப் புரிந்து கொண்டார்களா

என்பதையும் கவனிக்க வேண்டும். ஆசிரியரின் உதவியுடனும், துணையுட-னும் செய்ய வேண்டிய செயல்களைக் கொடுத்துப் பிள்ளைகள் அதில் ஈடுபடு-மாறு வாய்ப்புக்களைப் பிள்ளைகளுக்கு ஆசிரியர் அளிக்க வேண்டும். இதை யெல்லாம் செய்ய பாடத்தை முன் கூட்டியே தயார் செய்ய வேண்டிய அவசியம் நன்கு புலனாகும். எனவே ஆசிரியர் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வகுப்பி-லும் வரலாற்றுப் பாடத்தில் நடத்தப்பட்ட பாடத்தைப் பற்றியும், நடத்தப் போகும் பாடத்தைப் பற்றியும், இரண்டிற்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், வகுப்பில் தானும் பிள்ளைகளும் ஈடுபட வேண்டிய பணிகளையெல்லாம் சிந்தித்-துப் பார்த்து, அவற்றை ஒரு வரையறையாக எழுத முற்படுவதும், அப்படி எழுதப்பட்டவைகளைப் பயன்படுத்தலும், அவை பற்றிக் குறிப்பதுமே பாடத் திட்டம் அல்லது பாடக்குறிப்பு ஆகும்.

## இரண்டு வகையான பாடக் குறிப்பு

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெறும் மாணவர்கள் பள்ளி-களுக்குச் சென்று ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பாடங்களைக் கற்றுக் கொடுப்பதில் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று சர்வகலாசாலை விதிகள் குறிப்பிடுகின்றன. கற்றுக் கொடுப்பதற்கு முன்பு அனுபவமான ஆசிரியர்கள் வகுப்பில் எவ்வாறு பாடங்களை நடத்துகின்றனர், என்பதை வகுப்பிலிருந்து கவனிக்கும் வாய்ப்புக்கள் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய மாணவர்கள் பாடம் நடத்த முற்படுவதற்கு முன்பு மூத்த ஆசிரியர்கள், பேராசிரியர்கள் இவர்களின் உதவியுடனும் யோசனைகளுடனும் விரிவான பாடக்குறிப்புகளை ஒவ்வொரு பாடத்திற்கும் எழுதிய பிறகு அதை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்குச் சென்று வகுப்பில் வரலாறு கற்றுக் கொடுக்க முற்படுகின்றனர். இம்மாணவர்கள் மிகவும் விவரமான பாடக் குறிப்புக்களை எழுதுகின்றனர். முக்கியமான விவரங்களை யெல்லாம் பாடக் குறிப்புக்களில் குறிப்பிடுகின்றனர். தாங்கள் 40 நிமிடத்தில் வகுப்பில் செய்ய வேண்டுவனவற்றையும், பிள்ளை-கள் செய்ய வேண்டிய செயல்கள் பற்றியும் மிகவும் விவரமான குறிப்புக்கள் எழுதுகின்றனர். இது மாதிரியான விவரங்கள் அடங்கிய பாடக்குறிப்பு பயிற்சி மாணவர்களுக்கும், பயிற்சி முடிந்து வேலை பார்க்கும் முதல் ஓரிரண்டு ஆண்டுகளுக்கும், தேவையாகக் காணப்படலாம். ஆனால் அனுபவம் ஆக ஆக பாடக் குறிப்புக்களின் அளவு குறைந்து கொண்டே போக வேண்டும்

அனுபவம் மிக்க ஆசிரியர்களுக்கு விவரமான பாடக் குறிப்புக்கள் தேவயில்லை. அவர்கள் சுருக்கமான போதனைக் குறிப்புக்கள் எழுதினால் போதுமானது என்ற கருத்தும் உண்டு.

இப்போதனைக் குறிப்புக்கள் தலைமை ஆசிரியரையும், தணிக்கை அதிகாரிகளையும் திருப்திப் படுத்துவதற்காக எழுதப்படக் கூடாது. ஆண்டு தோறும் திரும்பத் திரும்ப எழுதியதை மீண்டும் மீண்டும் எழுதுவதும் விரும்பத் தக்கதல்ல. இப்பாடக் குறிப்புக்களில் அடங்கும் எல்லா அம்சங்-களும் இடம் பெறவேண்டும். ஆண்டு தோறும் இவற்றைத் திருத்தியும், மாற்றியும், சேர்த்தும், விலக்கியும் குறிப்பைச் சீராக்க வேண்டும். எனவே

போதிய இட வசதிக்கும் மேற்கொண்டு குறிப்புக்கள் சேர்ப்பதற்கு ஏற்றதாகவும் அமைக்க வேண்டும். இப்பாடக் குறிப்புக்கள் அன்றாட வேலைகளைச் சரிவரச் செய்து முடிக்கத் துணையாக அமைந்திருக்கும்.

## பாடத்திட்டக் குறிப்புக்களின் பண்புகள்

பாடத்திட்டக் குறிப்புக்களினால் ஏற்படும் பயன்கள் யாவை என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சரியாகக் கற்றுக் கொடுப்பதற்கும் முறைப்படி பாடப் பகுதிகள் வகுப்பில் பிள்ளைகளிடம் சொல்லுவதற்கும் பாடக் குறிப்புக்கள் இன்றியமையாதவை. ஒவ்வொரு நாளும் நாம் மேற்கொள்ளும் பாட போதனையின் நோக்கம் என்ன, என்பதையும் அதை அடைந்து விட்டோமா என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கும், பாடக் குறிப்பு உதவியாக இருக்கிறது. பாடத்தில் நாம் எதிர்பார்க்கும் பயன்களையும், அதன் அளவையும், ஆசிரியர் கற்றுக் கொடுக்கவிருக்கும் விவரங்களையும் வரையறுக்க முடியும்.

ஆசிரியர் பாடப் பொருளுக்கேற்ப வரலாறு கற்பிக்கும் முறைகளுள் எது சிறந்தது? என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க முடியும். கையாள வேண்டிய கற்பித்தல் நுட்பங்களையும் சிந்தித்துக் குறிப்பில் எழுதிக் கொள்ளலாம். தரமிட்டுப் பாடக் குறிப்பு எழுதப்படுவதினால் கால விரயத்தைத் தவிர்க்கலாம். வேலை ஒழுங்காகவும், முறைப்படியும், சிக்கல் இன்றியும் நடத்தப்படுவதால் காலம் விரையமாவது கிடையாது.

வரலாறு கற்பித்தலில் முறைப்படியான தொடர்ச்சி ஏற்படுவதற்கு பாடக்குறிப்பு உதவுகிறது. பாடக் குறிப்பில், பாடங்களுக்கிடையேயுள்ள தொடர்பும் பாடப்பகுதிகளும், அதற்கிடையே அமைந்துள்ள இணைப்புக்களும் குறிக்கப்படுவதால் பாடம் நடத்துவது மிகவும் எளிதாக இருக்கும். திட்டமிடாமல் கற்றுக் கொடுக்கும் பாடப் பகுதிகளுக்குள்ளே உள்ள இணைப்பையும் தொடர்பையும் வெளிப்படுத்த முடியாது. பாடத்தின் சுருக்கத்தைக் கொடுக்க முடியும். பிள்ளைகளுக்குப் பாடத் தொடர்பான வேலைகளை தங்கு தடையின்றி உடனடியாகக் கொடுக்க இயலும். பாடம் நடத்தும் பொழுது தேவையாக இருக்கும் மேற்கொண்ட விவரங்களையும், பாடப் புத்தகத்தில் இல்லாத விவரங்களையும் பாடக் குறிப்பு கொடுக்கும். பாடப் புத்தகத்தில் தவறுகள் இருப்பின், அதைப் பற்றி குறிப்புகள் எழுதப்பட்டிருந்தால் உடனடியாக அப்போதைக்கப்போது அதைப் பிள்ளைகளிடம் தெரிவிக்கலாம்.

பாடக்குறிப்பு கையில் இருந்தால் ஆசிரியருக்கு தன்னம்பிக்கை ஏற்படும். பாடம் நடத்துவதில் ஓரளவு நீக்கு போக்கு ஏற்படும். பாடக்குறிப்பு மட்டும் கையில் இருந்தால் எந்தவிதமான கவலையோ, மனப்பதட்டமோ இல்லாமல் வகுப்பில் சென்று பாடம் கற்றுக் கொடுக்க முடியும். காரணம் ஆசிரியர் பாடம் நடத்துவதில் சில கட்டங்களையும், சங்கடங்களையும், சூழ்நிலைகளையும், எதிர்பார்த்து அவற்றை சமாளிப்பதற்கான முன்னேற்பாட்டுடன் செல்வதினால் மிக எளிதாக வகுப்பில் கற்பிக்கும் திறமையைப் பெறுவர்

## பாடக் குறிப்புக்கள் எழுதுவதற்கு பூர்வாங்கத் தேவைகள்

பாடக் குறிப்புக்கான விவரமான திட்டத்தை வகுக்கும் முன் சில முக்கியமான அம்சங்களை மனதில கொள்ள வேண்டும். பாடத்தில் வரும் தலைப்பில் வரலாற்று ஆசிரியருக்குப் போதுமான அறிவு இருக்க வேண்டும். அதில் சந்தேகம் இருந்தால் அத்தலைப்புக்கள் உள்ளடக்கிய ஓரிரண்டு முக்கிய புத்தகங்களைப் படித்து உணர்ந்து ஓரிரண்டு முக்கிய குறிப்புக்களையும், பெயர்களையும், காலத்தையும் குறித்துக் கொள்ள வேண்டும். தவிரவும் ஆசிரியர் தங்களுடைய பிள்ளைகளின் மன வளர்ச்சியையும், பாட அறிவையும், நன்கு தெரிந்தவராக இருத்தல் வேண்டும். ஆசிரியர், பிள்ளைகள் வகுப்பு மாறவும், தான் அந்த வகுப்புக்கு வரலாற்றைத் தொடர்ந்து நடத்தி வருவ-தாய் இருந்தால், தன்னுடைய மாணவர்களைப் பற்றியும் அவர்களுக்கு வரலாற்-றில் உள்ள பாட அறிவைப் பற்றியும் அவர்களுடையத் தேவைகளைப் பற்றி-யும் நன்கு அறிந்திருப்பார். அத்துடன் கற்கும் தத்துவங்களைப் பற்றி ஆசிரி-யர் நன்கு தெரிந்தவராக இருக்க வேண்டும். வரலாற்றைக் கற்பித்தலில் பல வகையான கற்பித்தல் தத்துவங்களையும், கற்பிக்கும் விதம், அதன் நுட்பங்-களைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். இது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் பாடங்களில் இடம் பெறுகிறது. அத்துடன் வரலாறு கற்பிப்பதினுல் எதிர் பார்க்கும் சமூகப் பயன்களையும், அறிவுப் பயன்களையும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

## நல்ல பாடக்குறிப்பின் சிறப்பியல்புகள்

நல்லதொரு பாடக் குறிப்பின் சிறப்பு இயல்புகள் என்ன என்பதை நாம் சற்று சிந்திக்க வேண்டும். பாடக் குறிப்பை மனத்தில் வைத்துக் கொண்டால் மட்டும் போதாது. அது நிலையாக பயன்படவும் வெகுநாட்கள் வரை வைத்துக் கொள்வதற்கேற்ற முறையில் நல்ல குறிப்புப் புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடப்பதிக்கும் அதைக் கற்றுக் கொடுப்பதின் பொது நோக்கத்தைக் குறிப்பிடுவதுடன் மிகச் சிறப்பான குறிப்பிடத்தக்க நோக்கம் யாது என்பதைத் தெளிவு படுத்தி எழுதப்பட வேண்டும். பாடக் குறிப்பில் வரும் விவரங்கள் குறிப்பிட்ட நோக்கத்தை ஈடேறச் செய்வதற்கானவையாக அமைய வேண்டும். குறிப்பிட்ட நோக்கத்-திற்கும், பாடக் குறிப்பில் எழுதி வைக்கப்பட்ட பாட விவரப் பொருள்களுக்கும் தொடர்பு இருக்க வேண்டும். வரலாற்றில் தொடர்பு மிக முக்கியமான அம்சம். எனவே இதற்கு முன் எழுதப்பட்ட பாடக் குறிப்புக்கும், நடத்தவிருக்கும் பாடக்குறிப்புக்கும் தொடர்ச்சி இருக்க வேண்டும். முன்னறிவு மிக முக்கிய-மானது. பிள்ளைகளின் முன்னறிவை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பாடத்திலும் விவரங்கள் தொகுக்கப் பட வேண்டும்.

கற்றுக் கொடுக்க வேண்டிய வரலாற்று விவரங்களை நன்கு பொறுக்கி-யெடுத்து அதை வகைப்படுத்தி எழுத வேண்டும். பாடப்புத்தகத்தைப் போல விவரமாக எழுத வேண்டியதில்லை. முக்கியமான அம்சங்களை சொல், சொற்

ரெடர்களில், சில சமயம் ஓரிரண்டு வாக்கியங்களில் குறிப்பிட்டால்- போதுமானது. ஆசிரியர் அவற்றை வைத்துக் கொண்டு மேற்கொண்ட விவரங்களைச்சொல்ல முடியும். பாடப் புத்தகத்தில் காணப்படாத விவரங் களை மட்டும் சுருக்கமாகக் குறிப்பிட்டால் போதுமானது.

பாடக் குறிப்புகளில் பாட விவரங்களுக்கேற்ற பொருத்தமான போதனை முறைகளையும், கற்பிக்கும் நுட்பங்களையும் குறிப்பிடப்பட வேண்டும். பாடத்தை எப்படித் தொடங்குவது? பாடத்தை எப்படி முடிப்பது? நடப்புச் செய்திகளுடன் எப்படித் தொடர்பு படுத்துவது? தற்கால வாழ்க்கையில் உள்ள எந்த அம்சங்களைக் குறிப்பிட்டு ஒப்பிட வேண்டியது, உபயோகப்படுத்த வேண்டிய காலக்கோடு, தேசப்படம், கேட்க வேண்டிய கேள்விகள் ஆகிய அனைத்தும் குறிப்பிடப் படல் வேண்டும். பாடக் குறிப்புகளில் தேசப்படம், கோட்டுப்படம், சார்ட்டுகள் போன்ற காட்சி உதவிகளை மிகச் சிறிய அளவில் குறிப்பிட்டால் அதை வகுப்பில் பயன்படுத்திக் கொள்ளலாம். அவற்றின் அடிப்படையில் கரும்பலகையில் வரைந்து கொள்ளலாம். பாட வேலையிலும், பாடம் முடிந்த பிறகு வீட்டிலும் செய்வதற்கான பயிற்சிகள் குறிப்பிட வேண்டும். பாடப் பகுதிகளை மேற்கொண்டு விளக்கம் பெறுவதற்கு துணை ஆதாரப் படிப்புக்கான பொருத்தமான புத்தகங்கள், உபபாடப் புத்தகங்கள், சஞ்சிகைகள், கதைகள், புதினங்கள் இவைகளைப் பற்றிய குறிப்புகளும் சேர்க்கப்பட்டால் வாய்ப்புக் கிடைக்கும் பொழுது அவற்றை ஆசிரியர் வகுப்பில் குறிப்பிட முடியும். கரும்பலகையில் எழுத வேண்டியவை, கரும்பலகையில் வரைய வேண்டியவையெல்லாம் பாடக்குறிப்பில் இடம் பெற வேண்டும். சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றைக் கரும்பலகைச் சுருக்கமாகக் கொள்ளலாம்.

ஒவ்வொரு பாடத்திற்கும் எழுதப்பட்ட பாடக்குறிப்பின் இறுதியில் கற்றுக் கொடுக்கப்பட்டதை எந்த அளவுக்குத் தன்மையாக்கிக் கொண்டுள்ளார்கள் என்பதை ஆசிரியர் சரியாக மதிப்பிடவும் தன்னுடைய கற்பிக்கும் திறனையும் மதிப்பிடவும் பயிற்சிக் கேள்விகள் சேர்க்கப்பட வேண்டும். இப் பயிற்சிகள் கேள்விகளாக இருக்கலாம். கேட்கப்படும் கேள்விகளின் விடை பாடப்பகுதியின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கப் படுவனவாக அமைய வேண்டும். பிரச்சனைகளைத் தீர்த்தல், கற்றதை மனதில் நிறுத்துவதற்கான பயிற்சிகள், பல்வேறு கோணங்களில் கற்றதின் மீது கண்ணோட்டமிடுவது ஆகியவற்றையும் குறிப்பிடல் வேண்டும்.

வரலாற்றில் காலமும் இடமும் இரண்டு முக்கிய அம்சங்கள். எனவே இக்கால உணர்வு ஏற்படுவதற்கும், இட அறிவு தெளிவாக ஏற்படுவதற்கும் கூடுமான வரை பாட இறுதியில் இவ்விரண்டு பற்றிய பயிற்சிகள், வேலை, அல்லது ஆக்க வேலைகள பற்றிக் குறிப்பிட வேண்டும். அவைகளுக்கான மாதிரிகள் பாடக்குறிப்பில் இடம் பெறவேண்டும்.

## பாடக் குறிப்பை அபிவிருத்தி செய்தல்

பாடக் குறிப்புகளை ஆண்டுதோறும் தான் பெற்ற அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செய்ய வேண்டும். தன்னுடைய பாடக் குறிப்புக்களில் உள்ள குறைகளைக் கண்டுபிடித்து அதற்கான வழியைக் குறிப்பிட வேண்டும். எனவே தன்னுடைய பாடக்குறிப்பு தன்னுடைய அனுபவம் வளர்வது போல் அதுவும் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். பாடக் குறிப்புக்களில் தன்னுடைய அனுபவத்தைக் கொண்டு சிலவற்றை நீக்குதல், மாற்றி எழுதுதல், விட்டு விடுதல், புதியதாகச் சேர்த்தல், அனைத்-தும் ஆண்டு தோறும் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் புதிய புதிய பாடக் குறிப்புக்கள் எழுதுவதை விட எழுதிய பாடக் குறிப்புகளில் உள்ள முறைகளைச் சீராக்கி அதை முன்னேற்றம் செய்யும் நோக்கத்துடன் இருக்க வேண்டும். பாடக்குறிப்புகள் பயன்படுத்த முடியாதபடி மிகவும் பழமையடை-ந்து விட்டால் அதை மறுபடியும் பாடங்கள் வர, வர புதிதாக எழுதிக் கொள்ளலாம்.

பாடக் குறிப்பை எழுதிவிட்டால் அதில் குறிப்பிட்ட படிதான் வரலாறு கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கருதுவது தவறு. சந்தர்ப்பம், புதிய சூழ்நிலை, பிள்ளைகளின் எதிர்ச்செயல்கள், இவற்றை மனதில் கொண்டு குறிப்பிட்ட முறையிலிருந்து வேறுபடுதலினால் கெடுதல் கிடையாது. எனவே அப்படியே தன் பாடக் குறிப்பைக் குருட்டுத்தனமாகப் பின்பற்ற வேண்டும். என்ற உணர்வு அகற்றப்பட வேண்டும். எனவே ஆசிரியர் அவசியம் ஏற்படும் பொழுது தன்னுடைய பாடக் குறிப்பிலிருந்து சற்று விலகிச் செல்-வதினால் தவறு கிடையாது.

### பயிற்சி வினாக்கள் :

1 தினசரி வேலைக்கான திட்டத்தின் அவசியம் யாது?

2 பாடத்தை திட்டமிடுவதில் உள்ள முக்கிய தத்துவங்கள் யாவை?

3 பாடத்திட்டக் குறிப்பில் இடம் பெறவேண்டிய சிறப்பு அம்சங்கள் யாவை?

4 பாடக்குறிப்பில் திருப்புதல், பயிற்சி வேலைகள், மதிப்பீடு ஆகியவற்-றின் இடத்தை மதிப்பிடவும்?

5 பாடக்குறிப்பு தயாரிக்கும் பல்வேறு முறைகளைக் குறிப்பிடு?

# பாடப்புத்தகம்

## முன்னுரை

முதன் முதல் வகுப்புகளுக்குப் பாடத்திட்டம் தயார் செய்தவர்கள் புத்தகங்களில் உள்ள தலைப்பையும் உட்தலைப்புக்களையும் பயன்படுத்தித் தயார் செய்தனர். பாடத் திட்டம் வகுக்கப்படாத காலத்தில் புத்தகங்களே பாடத்திட்டமாக விளங்கின. பாடப் புத்தகத்தைப் பார்த்து பாடத்தில் பிள்ளைகள் பெற வேண்டிய தேர்ச்சியின் தன்மையை எளிதில் மதிப்பிடலாம். பாடப்புத்தகம் ஆசிரியருக்கு பாடத்தில் இருக்க வேண்டிய பாட அறிவு எவ்வளவு என்பதைத் தெரிவிப்பதுடன் மாணவர்கள் கற்க வேண்டிய அளவு எவ்வளவு என்பதையும் பாடப்புத்தகங்கள் எதிரொலிக்கும். பாடப்புத்தகம் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் தேவையான கருவியாகும். எனவே பாடப்புத்தகத்தை நாம் எதிர்பார்க்கும் பயன்களைப் பெற நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்.

### பாடப்புத்தகத்தின் இன்றியமையாமை

இக்காலத்தில் எந்தத்துறையிலும் பாடப்புத்தகங்கள் இல்லாமல் படிக்கலாம் என்று நினைப்பது முடியாத காரியம், ஒவ்வொரு வகுப்பிலும் மாணுக்கர்கள் பாடங்களில் அடைய வேண்டிய அறிவும், திறமையும், தரமும் எவ்வளவு என்று முன் கூட்டியே நாம் தீர்மானிக்கிருேம். பாடப்புத்தகங்கள் இந்நோக்கத்தை நிறைவேற்றுபவனாக அமைய வேண்டும்.

பாடப்புத்தகம் ஒரு குறிப்பிட்ட அறிவுத்திறனைப் பிள்ளைகள் பெற-வேண்டும் என்ற நோக்கத்துடன் கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தை யொட்டி எழுதப்படுகிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்புப் பாடத்திட்டத்தைப் பெரிதும் நம்பி இருந்தாலும் ஆசிரியர் பாடப்புத்தகத்தை தனக்கு உதவியாகவே கருத வேண்டும். ஆசிரியர் வகுப்புப் பாடப்புத்தகத்தை முற்றிலும் நம்பி இருக்கக் கூடாது. பாடப்புத்தகங்களில் உள்ளவற்றிற்குச் சரியான விளக்கம் கொடுப்பதற்காகவும் மேற்கொண்டு விவரங்கள் கொடுப்பதற்காகவும் மிகவும் விரிவாக எழுதப்பட்ட பாடப்புத்தகங்களை ஆசிரியர் படிக்க வேண்டும்.

வரலாற்றை வாய்மொழிப் பாடமாக மிகச் சிறப்புடன் கற்றுக் கொடுக்கலாம். அப்படிக் கற்றுக் கொடுக்கும் பொழுது பாடப்பகுதிகள் பிள்ளைகளின் மனதில் நன்கு பதியும். ஆனல் அது காலத்தில் நிலைத்து இருக்காது. மனிதனுடைய ஞாபக சக்தி காலத்தில் பலமற்றுக் காணப்படும். எனவே பிள்ளைகள் கேட்ட விவரங்களையெல்லாம் வகுப்பறையை விட்டு வெளியே சென்றவுடன் மறந்து விடுவார்கள். அவற்றையெல்லாம் நினைவுபடுத்துவதற்கு பாடப்புத்தகம் மிகவும் அவசியம். ஏனென்ருல் தான் நினைக்கும் விவரங்களும் நினைவுக்குக் கொண்டு வரும் விவரங்களும் சரியானவையா என்பதைக் கண்டறிய பாடப்புத்தகம் நிரந்தரமானதும் வற்ருததுமான ஊற்ருக மாணவர்களுக்குப் பயன்படுகிறது. வகுப்பில் பாடம் கேட்கும்

மாணவர்களும், கவனக் குறைவு காரணமாகவோ அல்லது கவனம் வேறு ஒன்றின் மீது படுவதின் காரணமாகவோ ஆசிரியர் சொல்லியவற்றை கவனிக்கத் தவறியிருக்கலாம். எனவே ஆசிரியரின் வாய்மொழிப் பாடத்தை பிள்ளைகளின் மனதில் ஆழப் பதிய வைப்பது பாடப்புத்தகம் என்பதை உணர வேண்டும். பாடப்புத்தகத்தில் மாணவர்கள் கொண்டுள்ள சில தவருன கருத்துக்களையும் தப்பெண்ணங்களையும் சரிப்படுத்துவது வாய்மொழிப் பாடம் ஆகும். எனவே வாய்மொழிப் பாடமும் ஒன்று மற்றென்றுக்கு உதவியாக இருக்கின்றன. பாடப்புத்தகத்தில் மிகவும் குறைந்த அளவில் விவரங்கள் வகைப்படுத்தி தொகுக்கப்பட்டுள்ளன. இதை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் மேற்கொண்டு விவரங்களைத் துருவி ஆராய வாய்ப்புக்களைப் பாடப்புத்தகமும், ஆசிரியரின் வாய்மொழிப் பாடமும் ஏற்படுத்த வேண்டும்.

**பயன்கள் :-**

பாடப் புத்தகங்கள் ஒரு கல்வியாண்டு காலத்தில் எந்த அளவு கற்க வேண்டும் என்பதையும் எந்த அளவு கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதை-யும் பற்றிய வெளி எல்லைக் கோட்டை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அறிவிக்கின்றன. பாடப் புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் ஆசிரியர் பாடங்களை விவரமாகக் கற்றுக் கொடுப்பார். அது போலவே மாணவர்களும் பாடப் புத்தகங்களின் அடிப்படையில் மேற்கொண்டு விவரங்களைக் கற்கத் தொடங்குகின்றனர். ஒரு கல்விஆண்டுக் காலத்திற்குப் பொதுவாக ஆசிரியருக்கும் குறிப்பாக மாணவர்களுக்கும் நன்கு வகைப்படுத்தி தொகுக்கப்பட்ட பாடப்பொருளைப் பாடப்புத்தகங்கள் அளிக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பாடப் புத்தகத்தின் அடிப்படையில் வீட்டிலோ, வீட்டிற்கு வெளியிலோ, பள்ளி நேரத்திற்குப் பிறகோ மாணவர்-கள் தன்முயற்சி வேலையில் ஈடுபடுவதால் பாடப் புத்தகங்களின் இன்றியமை-யாத தன்மை எளிதில் புலப்படும். எனவே ஆசிரியருக்கும், மாணவனுக்கும் பாடப்புத்தகம் விவரங்களை வேண்டும்போது கொடுக்கும் கருவியாக அமைகிறது.

பாடப்புத்தகத்தை மாணவர்கள் ஆரம்பம் முதல் முடிவு வரை படித்து ஒப்புவிக்க வேண்டும் என்பது நமது நோக்கமல்ல. பாடப்புத்தகத்தைப் பார்க்காமல் ஒப்புவிப்பது கற்றவரின் இலக்கணம் என்று நினைக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. பாடப்புத்தகத்தை மனப்பாடம் செய்வதற்கும், பாடப்பகுதி-களில் அறிவு விளக்கம் பெறுவதற்கும் எந்தவிதமான தொடர்பு இல்லை.

பாடத்திட்டத்தையொட்டியமைந்த சில கற்பிக்கும் முறைகள் உள்ளன. அம்முறைகளைப் பயன்படுத்துவதற்குப் பாடப்புத்தகம் இன்றியமையாத ஒன்ருக இருக்கிறது. மாணவர்கள் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு பாடம் கற்கின்றனர். பிள்ளைகள் மனப்பாடம் செய்யும் வழக்கத்தை ஆதரிக்கக் கூடாது. டால்டன் முறை, ஆசிரியர்-மாணவர் பாடப்புத்தக முறை, சமூக உறவு உணர்வு முறையில் வெளியிடுதல், பரிசோதனை முறை, மேல் பார்வைப் படிப்பு ஆகிய முறைகளுக்கு பாடப்புத்தகம் இன்றியமையாதது.

எல்லா வரலாற்றுப் பாடப்புத்தகங்களிலும் கற்றலுக்கும் கற்பித்தலுக்கு-மான உதவிகள் (Teaching aids) பல உள்ளன. ஆசிரியர் வகுப்பில் பாடம் கற்றுக் கொடுக்கும் பொழுது இவ்வகையான உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாணவர்கள் வீட்டில் படிக்கும் போதும் பாடங்களை மறுபடியும் திருப்பிப்படிக்கும் போதும், பயிற்சிகள் செய்யும் பொழுதும் இவ் உதவிகளைப் பார்த்துப் பயன்படுத்திப் பாடப்பகுதிகளில் தெளிவான அறிவைப் பெறலாம் வாய்ப்பு ஏற்படும் பொழுதெல்லாம் ஆசிரியர் புத்தகத்தில் பாட விளக்கத்திற்-கான உதவிகளைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். அவசியம் ஏற்படும் பொழுது பாட நேரத்திலும் பாடப்புத்தகத்தை திறந்து வைத்து அதில் உள்ள தேசப் படங்கள், புள்ளிவிவரங்கள், பட்டியல்கள், காலக்கோடுகள் வம்சாவளிப்பட்டி-யல் போன்றவைகளை நோக்கும்படி வலியுறுத்த வேண்டும். ஆசிரியர் பாடப்-புத்தகத்தில் உள்ள விளக்கங்களைப் பயன்படுத்தத் தவறக்கூடாது,

பாடப்புத்தகங்கள் பிள்ளைகளுக்கு வீட்டு வேலை கொடுப்பதற்கும், பிள்ளைகள் சுயமுயற்சியில் பயிற்சி வேலையில் ஈடுபடுவதற்கும் உதவியாக இருக்கின்றன. புத்தகங்களில் பயிற்சிக் கேள்விகள், செய்முறை வேலைகள் அடங்கியிருக்கும்- புத்தகங்களில் கொடுக்கப்பட்ட தேசப் படங்கள், காலக்-கோட்டுப்படங்கள், விளக்கப்படங்கள் ஆகியவற்றை பெரிய அளவில் வரையும்படி பயிற்சி கொடுக்கலாம். கால விரயத்தையும், பயிற்சிகள் தயார் செய்வதற்கான கடின உழைப்பையும் இது தவிர்க்கும்.

சுயமுயற்சியில் படிப்பதற்கும், பாடப்புத்தகம் உதவியாக இருக்கும். பாடப்புத்தகம் கையில் இருந்தால் சுலபமாகவும், மிக விரைவாகவும் படிப்பவர்-களுக்கு உதவியாக இருக்கும். விரைவாகப் படிப்பவர்கள் பாடப்புத்தகத்தை முன்கூட்டியே படிக்கலாம். ஏதாவது ஒரு காரணமாகப் பிள்ளைகள் பள்ளிக்கு வராவிட்டாலும் பாடப்புத்தகம் இருந்தால் நடத்தப்பட்ட பாடத்தை சுய-முயற்சியில் கற்க மாணவர்கள் முற்படுவார்கள். ஆசிரியர் பாடப்புத்தகத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் எவ்வாறு படிக்க வேண்டும் என்பது பற்றியும் பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். முன்கூட்டியே வினக்கள் தயாரிப்பதற்கும் பயிற்சிகள் கொடுப்பதற்கும் பாடப்-புத்தகங்கள் உதவியாக இருக்கின்றன. வரலாற்று ஆசிரியர் ஒரு பாடப்-புத்தகத்தை எப்படிப் படிக்க வேண்டும்? எங்ஙனம் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி ஓரிரண்டு வகுப்புகளில் பிள்ளைகளுக்குக் குறிப்பிட்டுச் சொல்லியும் செய்தும் காட்ட வேண்டும்.

## எண்ணிக்கை

வகுப்பு மாணவர்களுக்கு எத்தனைப் பாடப்புத்தகங்கள் வேண்டும் என்று தீர்மானிப்பது கடினமல்ல. மாணவர்கள் அனைவரும் ஒன்றுக்கு மேற்பட்ட பாடப்புத்தகங்களை வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதும் விரும்பத்-தக்கது அல்ல. எந்த ஆசிரியரும் அப்படிச் செய்வது கிடையாது. பொதுவாகப் பள்ளியில் வைக்கப்பட்ட பாடப்புத்தகத்தின் ஒரு பிரதியை எல்லா மாணவர்-களும் வாங்கும்படி வலியுறுத்தப்படலாம். காரணம் கற்பித்தலுக்கும் கற்பிக்கும்.

பாடங்களுக்கும் உருவம் (shape) கொடுப்பது பாடப்புத்தகமேயாகும். எவ்வளவு பாடப்பகுதிகள் நடத்தப்பட்டிருக்கின்றன, நடத்தப்பட வேண்டிய பாடப் பகுதிகள் எவ்வளவு என்பதை பிள்ளைகளுக்கு நினைவூட்டும் கருவியாகப் பாடப் புத்தகங்கள் விளங்குகின்றன. சில சமயங்களில் ஆசிரியர்கள் பள்ளியில் வைக்கப்பட்ட பாடங்களைத் தவிர வேறுபாடப் புத்தகங்களை பிள்ளைகள் பயன் படுத்துவதை வரவேற்பதில்லை. சில ஆசிரியர்கள் இதை தடை செய்வதும் உண்டு. பிள்ளைகளிடம் ஒரு புத்தகமாவது இருக்க வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்பாடப்புத்தகம் வகுப்பு முழுவதுக்-கும் பொதுவான பாடப்புத்தகமாக இருக்க வேண்டும். காரணம் வகுப்பில் ஒரு குறிப்பிட்ட பாடப்புத்தகத்தை மையமாகக் கொண்டு பாடம் நடத்தப்-படுவதால் மாணவர்கள் வெவ்வேறு புத்தகங்களை வைத்திருந்தால் சற்று சிக்கலாக இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட பாடப்புத்தகத்தை மட்டும் பயன்படுத்துவதுடன் மற்ற புத்தகங்களையும் படிக்கும்படி மாணவர்கள் தூண்டப்பட வேண்டும். பாடப் புத்தகம் தவிர இதர குறிப்புப்புத்தகங்களையும் பார்வைப் புத்தகங்களையும் (Reference books) பிள்ளைகள் படித்து அவற்றிலிருந்து குறிப்புக்களைத் தொடுக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டும். கொடுக்கப்பட்ட வகுப்புப் பாடத் திட்டத்தையொட்டி எழுதப்பட்ட இதர பாடப்புத்தகங்களையும் படிக்கு-மாறு ஆசிரியர் மாணவர்களைத் தூண்டவேண்டும். ஒரு குறிப்பிட்ட பாடப் புத்தகத்தை மட்டும் பயன்படுத்தி, மற்ற பாடப்புத்தகளைப் படிப்பதைத் தடை செய்தால் பிள்ளைகள் வைக்கப்பட்ட பாடப்புத்தகங்களில் உள்ள செய்திகள் அனைத்தும் உண்மையென்று நம்பிவிடுவர். காரணம் அச்சிடப்பட்ட புத்தகங்-களுக்கு மாணவர்கள் மதிப்புக் கொடுக்கின்றனர். எப்போதும் ஒரு புத்தகத்-தை நம்பி இருத்தலும், வைக்கப்பட்ட பாடப்புத்தகத்தில் எல்லாம் இருக்-கின்றன என்று நினைப்பதுவும் தவறு ஆகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பாடப்புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கும் வழக்கமும் உண்டு. அப்படிச் செய்யும் பொழுது ஒரு புத்தகத்தை மட்டும் வற்புறுத்துவதும், பெருமைப்படுத்தி மதிப்பிடுவதும், பிறவற்றைக் குறை சொல்லுதலும் தவிர்க்கப்பட வேண்டும். ஏனைய பாடப்புத்தகங்களை மாணவர்கள் பயன்படுத்த முற்பட்டால் ஒரு பாடப்புத்தகத்தை முற்றிலும் நம்பியிருக்கும் நிலைமாறும். பல பாடப்பகுதிகளையும் விரிவாகப் படிக்கும் வாய்ப்பும் கிடைக்கும். நூலாசிரியர்கள் சில பகுதிகளுக்கு அதிக விவரங்களை கொடுப்பார்கள். எனவே ஒன்றில் காணாத விவரங்களை மற்றொன்றில் படித்து அறியலாம். ஆகவே எல்லாப் பாடப்பகுதிகளையும் விவரமாகவும் தெளிவாக-வும் படிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைக்கும். வகுப்புப் பாடத்திட்டத்-யொட்டி எழுதப்பட்ட பாடப்புத்தகங்களுக்கு மட்டும், அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட புத்தகங்களைக் கை-யாளும் தருணத்தில் புத்தகங்களிடையே காணப்படும் வேறுபாட்டை எளிதில் உணர்வார்கள். எனவே மாணவர்கள் வரலாற்றுச் சாட்சியங்களைக் கையா-ளும் பிரச்னைகளுக்கு அறிமுகமாகின்றனர். இதன் வாயிலாய் மாணவர்கள்

வாலற்றின் தன்மையை ஒருவாறு உணரத் தலைப்படுகின்றனர். வகுப்புப் பாடப்புத்தகம் நீங்கலாக மாணவர்கள் தொகுதி தொகுதியாகப் பிரிந்து தங்களுக்கு சில புத்தகங்களைப் பொதுவாக வாங்கிப் பயன்படுத்தலாம். பல பாடப்புத்தகங்களை எழுத முற்படும் ஆசிரியர்கள் பல்வேறு வகையில் பாடப் பொருளை எழுதுகின்றனர். ஆகவே நடை அமைப்பில் வேறுபாடு, பாட உள்ளடக்கத்தில் தனித்தன்மை, வெளியிடும் அறிவுத்திறன், பாடப்பொருள்கள் அமைக்கப்படும் பாணி ஆகிய அனைத்தும் அக்கறையை பாடத்தில் தட்டி எழுப்பும். பல்வேறு பாடப் புத்தகங்களும் விவரங்களைக் கொடுக்கும் சுரங்கமாக அமையும்.

## சிறப்பு

பாடப்புத்தகங்களில் உள்ள தலைப்புகளுக்கும் அவற்றில் அடங்கியுள்ள, விவரங்களுக்கும் பொருத்தம் இருக்க வேண்டும். புத்தகத்திற்கு முகவுரை இருக்க வேண்டும். அதில் பாடப்புத்தகத்தின் அவசியத்தையும், பாடப்புத்தகத்தின் சிறப்பான அம்சங்கள், தலைப்புக்கள், ஆகியவற்றைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். புத்தகம் வெளியிடுவதற்கான தகுதி பற்றி தெரிவிக்கப் பட்டிருக்க வேண்டும். நூலின் பொருளடக்கம், பாடப் பகுதிகளின் ஒழுங்கு முறையையும், அமைப்பையும், நோக்கத்தையும், தன்மையையும் எதிரொலிப்பனவாக அமைய வேண்டும். பாடப் பொருளடக்கம் பலவற்றின் சிறப்பு அம்சங்களை சுட்டிக் காட்ட வேண்டும்.

பாடப்புத்தகங்களில் தேவையான பிற்சேர்க்கைகள் காணப்பட வேண்டும். ஒவ்வொரு தலைப்புக்கும் மேற்கொண்டு படிப்பதற்கு நூல்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மேற்கொண்டு தொடர்பான நூல்களின் பட்டியல், காலக் கோடுகள், காலக்கணக்குகள், பாரம்பரியப் பட்டியல்கள், புள்ளி விவரங்கள் சொல் அகராதிகள் போன்றவை சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இவற்றை புத்தகத்தில் ஆங்காங்கு சேர்ப்பதை விட புத்தகத்தின் கடைசியில் சேர்க்கப்பட்டிருத்தல் நன்று. பாடப்பகுதிகளை விவரமாகப் படிப்பதற்கு இவைகள் மிகவும் உதவியாக இருக்கும். நினைத்த நேரத்தில் சில விவரங்கள் புத்தகங்களிருந்து பார்த்து அறிவதற்காக இன்டெக்ஸ் (INDEX) ஒன்று தயார் செய்து பாடப்புத்தகத்தில் கடைசியில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

பாடப்புத்தகத்தில் கற்கவும் கற்பிக்கவும் உதவியாக உள்ள உதவிகளை [Teaching And Learning Aids] அதிகம் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தேசப்படங்கள், புகைப்படங்கள், கோட்டுப்படங்கள், வரைப்படங்கள் சித்திரப் படங்கள் புள்ளி விவரங்கள் ஆகியவற்றை சேர்த்தால் அவைகள் கற்கவும் கற்பிக்கவும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும். ஒவ்வொரு பாட இறுதியிலும் மேற்கொண்டு பார்வைக்கான பாட நூல்கள் குறிப்பிடப்படுவதுடன் பயிற்சி வினுக்கள், சுய முயற்சி வேலைகள், செயல் திட்டத்திற்கு உள்ள வாய்ப்புக்கள், பாடப்பகுதிகளின் சுருக்கம் ஆகியவை குறிக்கப்பட்டிருந்தால் பாடப்புத்தகம் மிகச்சிறப்பாக அமையலாம்.

பாடப்புத்தகத்தின் தன்மையும் அதன் பயனும் அது எழுதும் ஆசிரியரைப் பொறுத்ததாகும். பரந்த மனப்பான்மையும் நடுநிலைமைக் கருத்து உடையவராகவும், கற்பிக்கும் துறையில் நல்ல அனுபவமும் ஆர்வமும் உள்ள மிக்க புகழ் பெற்ற ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்க வேண்டும். தொழில் அனுபவம் உள்ள ஆசிரியர்கள் எழுதிய பாடப்புத்தகங்கள் குறைகள் இன்றி காணப்படும்.

வரலாற்றுப் பாடப்புத்தகம் ஓரளவாவது வரலாற்று மூலங்களை Historical Sources க் குறிப்பிட வேண்டும். பாடப்பகுதிகளில் ஆங்காங்கு மூலங்களிலிருந்து சிலபகுதிகளும் எடுத்துக்காட்டுகளும் காணப்பட வேண்டும். வரலாற்று உண்மையை வலியுறுத்துவதாக இவைகள் அமைய வேண்டும் ஒருபத்தி அல்லது ஓரிரண்டு வாக்கியங்கள் மூலங்களில் இருந்து மொழி பெயர்த்துக் கொடுக்கப்பட வேண்டும். பாட இறுதியில் இவை பற்றிக் குறிப்புக் கள் காணப்படவேண்டும்.

வரலாற்றில் தொடர்பும், வளர்ச்சியும் முன்னேற்றமும் மிக முக்கியமான இரண்டு அம்சங்களாகும். பாடப்புத்தகத்தை எழுதும் நூலாசிரியர் இதை மனதில் கொள்ள வேண்டும். வகுக்கப்பட்ட பாடத்திட்டத்தில் இவை காணப்படாவிட்டாலும் இக்குறையை நூல் எழுதும்போது நிவர்த்தி செய்ய வேண்டும். பாடநூல் ஆசிரியர் இந்த இரண்டையும் மனதில் கொண்டு பாடங்களிடையே உள்ள தொடர்பை மிகச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்

பாடவிவரங்கள் தவறு இன்றியும் நடப்புக்காலம் வரை சரியாக எழுதப் பட்டும் இருக்க வேண்டும். மாணவர்களுடைய சொல் வளத்தை மனதில் கொண்டு வகுப்புக்கேற்ற மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கீழ் வகுப்புகளுக்கான வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் மிகவும் சுருக்கமாக எழுதப் படுவது வரவேற்கத்தக்கது அல்ல. பாடப்புத்தகங்களில் போதிய விவரங்கள் அடங்கி இருக்க வேண்டும். சில நிமிடங்களில் பாடப்புத்தகத்தை முழுவதும் படித்து முடிக்கும் நிலையில் மிகச் சுருக்கமாக எழுதப்படக்கூடாது.

புத்தகத்தின் கட்டமைப்பு சம்பந்தப்பட்ட மட்டில் நல்லதொரு தரம் எதிர் பார்க்கப்படவேண்டும். கல்வி இலாகாவின் விதி முறைகளின்படி எழுத்தின் பருமன் காகிதத்தின் வெளுப்பு இரண்டு வரிகளுக்கும் இடையே-யுள்ள தூரம் பாடப்புத்தகத்தின் நீள அகலம் இவையெல்லாம் சரியாக அமைக்கப்பட வேண்டும். புத்தகத்தின் மேற்கட்டுக்கோப்பு கனமாக இருக்க வேண்டும். நீண்ட நாள் உபயோகித்தாலும் பழுதடையாதவாறு அட்டை அமைக்கப்படவேண்டும்.

வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் கல்வி துறையினரால் வெளியிடப்பட்ட பாடத்திட்டத்தையொட்டி எழுதப்பட்டிருக்க வேண்டும். தற்பொழுது கிடைக் கும் எல்லாப் பாடப்புத்தகங்களும் பாடத்திட்டத்தை யொட்டி எழுதப்பட்டன-வாக அமைந்துள்ளன. தற்காலத்தில் மாநில அரசாங்கம் பாடப்புத்தகங்களை தேசியமயமாக்கியுள்ளது. எனினும் பாடநூல் நிறுவனங்கள் ஒன்றுக்கு

மேற்பட்ட பல பாடப்புத்தகங்களை ஒவ்வொரு வகுப்புக்கும் வெளியிட முன் வர வேண்டும். பாட நூலில் விவரிக்கப்பட்ட பாடப்பகுதிகளை யொட்டி துணையாதரவான நூல்கள் பல வெளியிடவேண்டும்.

பாடப்புத்தகங்களில் அடங்கியுள்ள விவரங்கள் மிகவும் தெளிவாக விவரிக்கப்பட வேண்டும். அத்துடன் கொடுக்கப்பட்ட விவரங்களில் தவறின்மையும் சரியாகக் கவனிக்கப்பட வேண்டும். இது புத்தகத்தை எழுதும் ஆசிரியரைப் பொறுத்ததாகும். பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட்ட உதவிகள் பாடப்பகுதிகளைத் தெளிவு படுத்தும் அளவில் அமைந்திருக்க வேண்டும். அத்துடன் பாடப் பொருத்தத்தையும் கவனிக்கப்பட வேண்டும்.

முடிவாகப் பாடப் புத்தகம் எழுதப்பட்ட மொழி நடை கவனிக்கப்பட வேண்டும். நமது பள்ளியில் மாணவர்கள் பயன்படுத்தி வரும் பாடபுத்தகங்கள் இலக்கியங்களாக முடியாது. இவை பிள்ளைகள் உபயோகத்திற்கு எழுதப்படுகின்றன. எனவே பிள்ளைகளுக்குப் புரியாத கடினமொழியில் எழுதப்பட்டால் பிள்ளைகள் அவற்றைப் படிப்பதினுல் ஏற்படும் முழுப்பயனைப் பெறமாட்டார்கள்.

## குறைகளும் நிறைகளும்

வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் சேர்க்கப்பட்ட எல்லாத் தலைப்புகளுக்கும் ஏற்ப சம அளவிலும் போதுமான அளவாகவும் விவரங்கள் காணப்படுவதில்லை. இக்குறைக்குக் காரணம் நூல் ஆசிரியராக இருக்கலாம் அல்லது போதிய இடம் புத்தகங்களில் இல்லாமல் மேலெழுந்த வாரியாக எழுதப்பட்டிருக்கலாம். பொதுவாகப் பள்ளி வரலாற்றுப் புத்தகத்தில் சில பொதுக்கருத்துக்களும் மிக முக்கியமான சிறப்பு விவரங்களும்தான் காண முடியும். ஆனுல் இவைகள் அனைத்தையும் தெளிவு படுத்த வேண்டியது வகுப்பு ஆசிரியரின் கடமையாகும். தனக்குள்ள வரலாற்று அறிவைக் கொண்டு வகுப்பு நேரத்தில் அவைகளைத் தெளிவாக்க ஆசிரியர் முற்படாவிட்டால் பாடப்புத்தகத்தினுல் பெறும் முழுப் பயனைப் பிள்ளைகள் பெறமாட்டார்கள் பாடப்புத்தகங்களில் சில சொற்களும் சொற்றொடர்களும் சேர்க்கப் படலாம். அவைகள் வரலாற்றுப் பாடத்திற்கு இன்றியமையாதனவாக இருக்க வேண்டும். மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளத் தக்கவைகளாக ஆசிரியர் அதைத் தெளிவு படுத்திக் கருத்தைப் பிள்ளைகளின் மனதில் நிலை நிறுத்த வேண்டும்.

பாடப்புத்தகங்கள் கற்றுக்கொடுக்கப்பட வேண்டிய பாடப்பகுதிகளைப் பற்றிய முழு விவரங்களைக் கோர்வையாகக் கொடுக்கின்றன. பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விவரங்கள் தவறு இன்றி இருக்கும். பாடங்களின் எல்லா அம்சங்களும் வகைப்படுத்தி ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். புத்தகம் அதில் அடங்கிய பல பகுதிகளுக்குமிடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்தும். சுயமுயற்சியில் கற்றுக் கொள்ள புத்தகம் வாய்ப்புகளைக் கொடுக்கிறது. பாடப்புத்தகங்களில் மொழிப்பிழையும் பொருட்பிழையும் எவ்வாருவது இடம்

பெற்று விடலாம். விளக்கம் ஒரு தலைப்பட்சமாகவும் இருக்கலாம். கருத்துக்களும் விவரங்களும் சார்புற்றனவாகவும் காணப்படலாம். பாடப்புத்தகம் எல்லா விவரங்களையும் கொடுக்கும் என்று எதிர் பாக்கமுடியாது. இதை ஆசிரியர்தான் நிவர்த்திக்க வேண்டும் அல்லது துணையாதரவான பாடப்புத்தகங்கள் இக் குறையைத் தவிர்க்க வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களும் சில சந்தர்ப்பங்களில் இவற்றை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதையும் தவிர்க்க முடியாது.

## பயன்படுத்துதல்

வகுப்பு வரலாற்றுப் புத்தகங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. சில ஆசிரியர்கள் பாடப் புத்தகத்தைப் பயன்படுத்துவதே கிடையாது. சிலர் பாடப் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கின்றனர். பாடப்புத்தகத்தை முற்றிலும் நம்பி அதிலுள்ள விவரங்களை மட்டும் சொல்லிக் கொடுப்பதில் திருப்தியடைகின்றனர். மாணவர்கள் பாடப்புத்தகத்தைத் தொடர்ந்து படிக்கவேண்டும். அதை அடிக்கடிப் பயன்படுத்த வேண்டும். புத்தகத்தைப் படிப்பதின் மூலமும் அதைப் அடிக்கடி பயன்படுத்துவதின் காரணமாகவும் மாணவர்கள் பாடப்புத்தகத்தை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இதனால் பிள்ளைகள் புத்தகத்தைப் பயன்படுத்தும் பழக்கத்தைக் கற்றுக் கொள்கின்றனர். இப்பழக்கம் பின் நாட்களில் மேல்படிப்புக்கு மிகவும் துணையாக இருக்கும். ஆசிரியர் பாடப்புத்தகத்தில் உள்ளவற்றை நன்கு தெரிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு வகுப்பில் பாடம் நடத்த வேண்டும்.

வகுப்புப் பாடப்புத்தகத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவது வரவேற்கத்தக்க தல்ல எனினும் அதற்காகப் புத்தகத்தை முற்றிலும் புறக்கணித்துப் பாடம் நடத்துவதும் தவறுதான். பிள்ளைகள் வரலாற்றுப்பாடத்தில் தான் செய்யும் வேலைகள் அனைத்துக்கும் வாலாற்றுப் பாடப்புத்தகம் ஒரு கருவியாக இருக்க வேண்டும். குறுக்குக் குறிப்புப் பட்டியலை (Index) பயன்படுத்துதல், பாடப்புத்தகங்களிலிருந்து நிகழ்ச்சிகளைப் பொறுக்கித் தொகுத்தல் போன்ற வேலைகளுக்கு நல்ல பாடப் புத்தகங்கள் அமைந்தால் மாணவர்களின் பிற்கால வரலாற்றுப் படிப்பிற்கான நல்லதொரு அஸ்திவாரத்தை அமைத்துக் கொள்வார்கள்.

## வகுப்புகளுக்கான தரம்

கீழ் வகுப்பு மாணவர்களுக்கும், மேல் வகுப்பு மாணவர்களுக்கும் எழுதப்பட்ட பாடப்புத்தகங்களில் வேறுபாடு காணப்பட வேண்டும். கீழ் வகுப்பு மாணவர்களுக்கு மிகத் தெளிவான விவரங்கள் கொடுத்தால் போதும். ஆனல் மேல்வகுப்பு மாணவர்களுக்கு எழுதப்பட்ட பாட விவரங்கள் அவர்களுடைய சிந்தனையையும் கற்பனையையும் தூண்டுபவனுக அமைய வேண்டும். மாணவர்களின் அறிவுத் திறனுக்கு சவால் விடுவதாகக் காணப்பட வேண்டும். அறிவுத்திறன் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

## பாடப்புத்தகமும் நோட்டுப்புத்தகமும்

பாடப்புத்தகத்திற்கு அனுசரணையாக நோட்டுப்புத்தகங்கள் வைப்பதை சிலர் எதிர்க்கின்றனர். நோட்டுப்புத்தகங்கள் காலத்தை வீணக்குகிறது. மாணவர்கள் தங்களிடம் உள்ள நோட்டுப்புத்தகங்களில் பாட சம்பந்தமான குறிப்புக்கள் இருப்பதாக நினைத்துப் பாடப்புத்தகத்தை முற்றிலும் புறக்கணிக்க முற்படுகின்றனர். இதனல் மாணவர்கள் தங்களிடம் உள்ள பாடப் புத்தகத்தை அடிக்கடி படிப்பது கிடையாது. பிள்ளைகளுடைய எழுத்துப் பயிற்சி அடங்கிய நோட்டுப்புத்தகங்களை மேற்பார்வை செய்வதில் காலதாமதம் ஆகிறது. அப்படிச் செய்தால் அதிக கால அளவு செலவழிக்க வேண்டும். மாணவர்களும் புத்தகத்தைப் பார்த்தும், மற்றவர்கள் எழுதியதைப் பார்த்து எழுதும் பழக்கத்தை மேற்கொள்ளுகின்றனர். எனவே ஆசிரியரால் தயாரிக்கப்பட்டு பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகள்தான் மாணவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

கற்ற பாடப்பகுதிகளை வகைப்படுத்துவதற்கும், தரப்படுத்தி மனதில் நிறுத்துவதற்கும், எழுத்துப் பயிற்சி நோட்டுப் புத்தகங்கள் துணையாக இருக்கின்றன. கற்றபாடத்தைத் திருப்புவதற்கும், அவற்றுள் மீள்பார்வையிடுவதற்கும் திரும்பப்படிப்பதற்கும் இவைகள் துணையாக இருக்கின்றன. எழுத்துப்பயிற்சிப் பதிவேடுகள் சில நல்ல பழக்கங்களை ஏற்படுத்துகின்றன. துப்புரவு, ஒழுங்கு, பிழையின்மை, துரிதமாகவும் குறிப்பிட்ட நேரத்திலும் கொடுத்த வேலையில் பயிற்சி ஆகியவை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தாங்கள் செய்யும் பயிற்சிப் பதிவேடுகள் வாயிலாய் முக்கியமான பகுதிகளைத் தெரிந்து அறிவதில் பயிற்சி பெறுகின்றனர். தாங்கள் செய்த பணியின் தன்மையையும் அளவையும் மதிப்பீடு செய்து பெருமைடைக்கின்றனர்.

### வகைகள்

புத்தகங்களைப் பற்றிய செய்திகளையும் அவைகளின் தொகுப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். பேராசிரியர் ஜான்சன் இப்பிரிவுகளின் வகையையும் ஒவ்வொன்றிலும் உள்ள குறை நிறைகளையும் விவரிக்கிருர்; முதலாவது சுருக்கமான புத்தகங்கள். இதை ஆங்கிலத்தில் precis type என்று சொல்லப்படுகிறது. இதில் செய்திகள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கும். இருந்தாலும் இதில் முக்கியமான கருத்துக்கள் அடங்கி இருக்கும். அதிகப்படியான விவரங்கள் காணப்பட மாட்டாது. இரண்டாவது வகை சுருக்கத்தை விடச் சற்று விரிவாக இருக்கும். இதை manuel type என்று குறிப்பிடுகிருர். இவற்றுள் எல்லா விவரங்களும் அடங்கி இருக்காது. எனவே மேற்கொண்டு விவரங்களுக்கு வேறு புத்தகங்களைப் படிக்க வேண்டிய நிலையில் காணப்படும். மாணவர்கள் பாடப்புத்தகத்திலுள்ள செய்திகளை மையமாகக் கொண்டு வேறு புத்தகங்களைப் படித்து விவரங்களைச் சேர்ப்பதால் அவர்களின் தன்முயற்சி தூண்டப்படுகிறது.

மூன்றுவது வகை course type. இதில் எல்லா விவரங்களும் அடங்கி இருக்கும். மற்ற புத்தகங்களைப் படிக்க வேண்டிய தேவை இராது. உருவத்தில் பெரிதாக இருக்கும்.

இந்த மூன்றுவகைப் பாடப்புத்தகங்களில் கடைசி வகையான கோர்ஸ். எல்லாச் செய்திகளையும் கொடுத்தாலும் படிக்கும் முறையானது கடினம். விலையும் அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட பாடப்புத்தகங்கள் கடைகளில் கிடைக்காது. மிகவும் சுருக்கமான பாடப்புத்தகங்களும் விரும்பத்தக்கது அல்ல, விவரங்கள் சுருக்கமாகவும் உயிரற்றும் காணப்படும். ஆசிரியர் அவைகளையொட்டி மேற்கொண்டு செய்திகளைக் கொடுக்க வேண்டியதாக இருக்கும். கோர்ஸ்டைப் பாடப்புத்தகங்கள் இருந்தால் ஆசிரியருடைய வேலையின் பளு மிகவும் குறையும். இருந்தாலும் பிள்ளைகள் மற்ற புத்தகங்களைப் படித்து செய்திகளைச் சேர்க்கத் தூண்டப்படமாட்டார்கள். காரணம் புத்தகத்தில். எல்லாம் காணப்படுவதேயாகும். பள்ளிமாணவர்களுக்கு 'மானுவல் டைப்' புத்தகங்கள் ஏற்றவை. இதற்குக் காரணம் போதிய செய்திகள் இருப்பதுடன் பிள்ளைகளின் சுய முயற்சியும் தூண்டப்படுகிறது. பிள்ளைகள் பாடப்புத்தகம் தவிர வேறு புத்தகங்களைப் படிக்க வேண்டியதின் தேவையை உணர்வார்கள்.

### பயிற்சி வினுக்கள்

1 வரலாற்றுப் பாடப்புத்தகத்தின் அவசியம் யாது?

2 பாடப்புத்தகத்தின் பயனைக் குறிப்பிடுக?

3 வகுப்புக்கு எத்தனை பாடப்புத்தகங்கள் வைக்கலாம் என்பதை மதிப்பிடவும்?

4 நல்ல பாடப்புத்த கத்தின் சிறப்புகள் யாவை?

5 பாடப்புத்தகத்தினுல் ஏற்படும் பிரதிகூலங்கள் யாவை?

6 பாடப்புத்தகங்களை எப்படிப் பயன்படுத்துவீர் என்று குறிப்பிடவும்?

7 பாடப்புத்தகங்களின் முக்கிய மூன்று வகைகள் யாவை? அவற்றுள் எது மிகச் சிறந்தது?

## துணையாதரவுப் பாடப் புத்தகங்கள்

வரலாறு பாடப்புத்தகங்கள் அடிப்படையில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. வரலாற்றுப் பாடப்புத்தகம் ஒன்றுதான் மாணவர்களுக்கு எப்பொழுதும் பயன்படக்கூடியதாக இருக்கிறது. எனவே பாடப்புத்தகங்கள், ஆசிரியரின் குறிப்புகள் ஆகியன இரண்டு வழியிலும் மாணவர் வரலாற்று அறிவைப் பெறுகின்றனர். ஆசிரியர் வகுப்பில் கூறியவை அனைத்தும் பிள்ளைகளின் மனதில் நிலைத்திருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. பிள்ளைகளுக்கு ஆதரவாக இருப்பது அவர்களிடமுள்ள பாடப்புத்தகம் போதுமானது அல்ல என்றும், இதற்குத் தொடர்பானதும், ஆதரவானதுமான பாடப்புத்தகங்களைப் படிக்க மாணவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று கருதப்படுகிறது. துணையாதரவான பாடப்புத்தகங்களுடன் சம அளவில் தயாரிக்கப்பட்டதுமான இதர வரலாற்றுப் பாடப்புத்தகங்களையும் பிள்ளைகள் படிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிரியரும், உப "பாடப்புத்தகங்கள், துணையாதர" வான பாடப்புத்தகங்கள், வகுப்புக்கு எழுதப்பட்ட இதர பாடப்புத்தகங்கள் ஆகியவற்றிறின் உதவியின்றி தன்னுடைய போதனை சிறக்காது என்பதை உணர வேண்டும்.

பிள்ளைகள் தங்களுடைய பாடப்புத்தகங்களைத் தவிர வேறு துணைப் பாடப்புத்தகங்களையும், துணையாதரவாள பாடப்புத்தகங்களையும் படிக்கும் பழக்கமும், படிப்பதில் முயற்சியும், ஊக்கமும் பெற்றால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வரலாற்றுப் பாடத்தில் அதிகமான பற்றுடையவர்களாகக் காணப்-படுவார்கள். எனவே பிள்ளைகளுக்கு வரலாற்று நூல்களைப்படிப்பது ஒரு நிரந்தரமான பொழுது போக்காகவும் அமையும். பிள்ளைகளுக்குப் படிக்கும் பழக்கமும் ஏற்படும். பிள்ளைகளுக்கு வரலாற்றுத் துணையாதரவான பாடப் புத்தகங்களையும், இதர வரலாற்று நூல்களையும் தேர்ந்தெடுக்கும் திறன் வளரும். பயன்படுத்தும் முறையிலும் தெளிவு ஏற்படும். கற்றவன் என்பவனுக்கு அடையாளமாக விளங்குவதற்கு எதையும் ஆராய்ந்து மதிப்பிடும் மனப்பான்மை இதனால் வளரும். எதையும் சார்பு நோக்கங்கள் இல்லாமல் மதிப்பிடும் திறன் வளரும். மாணவர்கள் எதையும் உடனே நம்பும் மனப்பான்மையைக் கைவிடுவார்கள். இதனால் மாணவர்கள் வரலாற்-றின் பல்வேறு வகையான சிறப்பு அம்சங்களைப்பற்றி அறிய மாணவர்கள் வாய்ப்புப் பெறுகின்றனர். துணையாதரவான வரலாற்றுப் புத்தகங்களின் வாயிலாய் வரலாற்றின் சில சிறப்பான அம்சங்கள், பிரயாணங்கள், வாழ்க்கை வரலாறு, கட்டுரைகள், கதைப் பாட்டுக்கள், புதிய இடங்களையும், புதியவற்றை-யும் கண்டுபிடித்தல், உவமை பற்றிய விவரங்களை மாணவர்கள் தெரிந்து கொள்ளுகின்றனர். இவற்றுடன் புராணக் கதைகள், இதிகாசக் கதைகள் செய்தித்தாள் கதைகள் தனியார் எழுதிய நாட்குறிப்புக்கள் ஆகியவற்றையும் துணையாதரவான படிப்பாகக் கொள்ள தகுதியுடையன.

துணையாதரவான படிப்பு பாடப்புத்தகங்களில் வரும் விவரங்களைத் தெளிவாக்கப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனால் வரலாற்றுப் பாடங்கள் மேலும் தெளிவுபடுத்தப்படும். வரலாற்று நூல் நிலையத்திலிருந்து

புத்தகங்களை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாடப்புத்தகங்களில் காணப்பட்ட விவரங்களை யொட்டி அவற்றில் இல்லாத விவரங்களை துணையாதரவான பாடப்புத்தகங்களில் படிக்க வாய்ப்புக் கிடைக்கிறது. வரலாற்று விவரங்களில் தெளிவு ஏற்படுவதற்கு மதிக்கப்பட்ட புத்தகங்களிலிருந்து விவரங்களை எடுத்துத் தொகுத்துக் கொள்ளலாம். மாணவர்களும் அடிக்கடிப் அதைப் பயன்படுத்தத் தூண்டலாம்.

துணையாதரவான படிப்பு முறையை சிறக்கச் செய்ய வேண்டுமேயானல் அதற்கு வரலாற்று நூல்நிலையம் இன்றியமையாதது என்பது விளங்கும். எனவே வரலாற்றைப்பற்றிய எல்லா அம்சங்களைப்பற்றியும் தனித்தனியாக எழுதப்பட்ட நூல்களையும் வரலாற்று நூல்நிலையத்தில் வாங்கி வைக்க வேண்டும். இப்புத்தகங்கள் கூடுமானவரை பிள்ளைகள் படிக்கும் மொழியிலேயே இருக்க வேண்டும். நூல்களின் அடக்கம் பற்றிய புத்தகம், வரலாற்றுப் பூகோளம், உள்ளூர் பிரதேசத்தைப்பற்றியப் புத்தகங்கள், வரலாற்றுக்காதரவான புத்தகங்கள், நூல்கள், களக்களஞ்சியங்கள், உலக வரலாற்றுக்களஞ்சியம், நாட்டுவரலாற்றுக் களஞ்சியம் போன்ற புத்தகங்கள் நூல்நிலையத்தில் இருக்க வேண்டும்.

துணையாதரவான படிப்புக்கு எதிர்ப்பும் இருக்கிறது. ஒரு சில பிள்ளைகள் தான் பாடப் புத்தகத்தைப் படிப்பதுடன் மேற்கொண்டு ஒரு சில புத்தகங்களைப் படிக்கின்றனர். பெரும்பாலான மாணவர்கள் பாடப் புத்தகத்தைக்கூட சரியாக படிப்பது கிடையாது என்று குறை சொல்லுகின்றனர். அப்படியொரு நிலை ஏற்படுவதற்கு ஆசிரியரே காரணமாக இருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு கொடுக்கும் பயிற்சி வேலை பாடப்புத்தகங்களைப் பல தடவை திரும்பத் திரும்பப் படிக்கும் நிலையை உண்டு பண்ணும் விதத்தில் இருக்க வேண்டும். பாடப்புத்தகங்கள் தவிர மற்ற ஒரு சில புத்தகங்களிலிருந்து ஒரு சில விவரங்களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய நிலையை அவர்களுக்கு கொடுக்கும் ஒரு சில வீட்டு வேலைகளைக் கொடுக்க வேண்டும். எனவே நாம் கொடுக்கும் பயிற்சிகள் பிள்ளைகள் வரலாற்றுக்குத் துணையாதரவான பாடப்புத்தகங்களைப் படிக்கத் தூண்ட வேண்டும். பயிற்சிகள் கொடுத்தாலும் ஒரு சில மாணவர்கள் தான் சரியான பலனை அடைகின்றனர் என்று மேலும் குறை கூறுகின்றனர். இதற்கு ஒரு பரிகாரம் தேடலாம். பயிற்சிகள் முடிந்தவுடன் வகுப்பில் அதுபற்றிப் பொதுக் கருத்தரங்குகளுக்கு வகை செய்தால் எல்லா மாணவர்களும் இதனல் பயன் பெறுவர். இதற்குப் போதிய நேரம் வேண்டுமே என்று ஐயப்படுவோரும் உண்டு. மாணவர்கள் விளையாட்டுத் தன்மையுடையவர்கள். இதனல் பாடத்தை எல்லாம் கிரகித்துக் கொள்வது இல்லை. கிரகித்ததை மனதில் இருத்துவதும் இல்லை என்ற குறையை சிலர் குறிப்பிடுகின்றனர். அவர்களுக்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை என்றும், வரலாறு தவிர ஏனைய பாடங்களிலும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது என்றும் இதனல் துணையாதரவுப் படிப்பிற்கு போதிய நேரம் கிடைக்காது என்றும் சொல்கின்றனர். வரலாற்றுப் பாடங்களுக்குத் தொடர்பான துணையாதரவுப் படிப்பிற்கு வாய்ப்பு மிகவும் குறைவாக

இருக்கிறது. இதில் பிள்ளைகளின் திறமையை மதிப்பிடுவது கடினம் என்றும் குறிப்பிடுகின்றனர். இருந்தாலும் துணையாதரவுப் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாத ஒன்றாகும்.

வரலாற்று ஆசிரியர் துணையாதரவுப் படிப்பிற்கு முன் கூட்டியே திட்டமிட வேண்டும். ஆண்டுதோறும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கும் வரலாற்றுப் பாடப்பகுதிகளைக் கொண்டு எந்தெந்த, எவ்வெவ்வகையான துணையாதரவுப் படிப்பிற்கு வாய்ப்பு எங்கெங்கே இருக்கிறது என்பதைப்பற்றி தெரிந்து கொண்டு அதற்கேற்றபடி ஒரு திட்டத்தை முன் கூட்டியே வகுத்துக் கொள்ள வேண்டும். துணையாதரவுப் பாடப்புத்தகங்களின் பயனைக்கருதி புத்தகங்களின் பட்டியலும், அதில் எந்தெந்த பகுதிகள் பள்ளியில் படிக்கும் விவரங்களுக்குத் தொடர்பானவை என்றும், எவை மேற்கொண்டு விவரங்களை கொடுப்பவையாக இருக்கின்றன என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இவைகளை வகுப்பு நேரத்தில் அவசியம் ஏற்படும் போது குறிப்பிட வேண்டும். இவ்வகையான புத்தகங்களை எளிதில் எடுத்துப் படிக்க மாணவர்களுக்கு நூல் நிலையத்தில் வழி செய்து கொடுக்கப்பட வேண்டும். வரலாற்றின் எல்லா அம்சங்களையும் தனித்தனியாக எடுத்து விவரமாக எழுதப்பட்ட பல நூல்கள் பள்ளி நூலகத்தில் இருக்க வேண்டும்.

### பயிற்சிக் கேள்விகள்

1 துணையாதரவுப் படிப்புப்புத்தகங்களின் பயன்கள் யாவை?

2 துணை ஆதரவுப் புத்தகங்களுக்குள்ள எதிர்ப்புகளைக் குறிப்பிடுக?

3 துணை ஆதரவுப் புத்தகங்களை மாணவர்கள் விரும்பிப்படிக்க வரலாற்று ஆசிரியர் என்ன செய்ய வேண்டும்?

## வரலாற்று நூல்நிலையம்

இதன் அவசியம் :- ஒருவன் வாழ்வில் பெற வேண்டிய அறிவு அனைத்தும் தன்னுடைய நேர் அனுபவத்தின் மூலம் பெறலாம் என்று நினைப்பது மூடத் தனம். சில அறிவு நமது அனுபவத்திற்கு அப்பாற்பட்டது. நாம் பெற வேண்டிய அறிவு மிகவும் விரிவானது. அவை அனைத்தையும் நமது குறுகிய கால வாழ்க்கை அனுபவத்தில் பெற முடியாது. காரணம் நமது அனுபவம் வரம்பிற்குட்பட்டது. சென்ற கால அனுபவத்தைச் சொல்லக் கேட்கலாம். நாம் அனுபவிக்க முடியாது. இதர இடங்களைப் போய்ப் பார்த்து அனுபவ அறிவு பெற வேண்டும் என்று கருதினல் நாம் பல பிறப்புக்கள் எடுக்க வேண்டும். கற்றல் மூலம் சென்ற காலத்து அனுபவத்தையும் இக்காலத்தை பற்றிய அனுபவத்தையும் பெறலாம். சிலவகையான புத்தகங்கள் பிள்ளை-களுக்கு இறந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் அறிமுகப்படுத்தும்.

பொழுது போக்கிற்காக நூல்களைப் படிப்பவர்கள் பலர் உள்ளனர். ஓய்வு நேரத்தை நல்ல வழியில் செலவிட இந்த முறை சிறந்ததாகும். பிள்ளைகளுக்கு வரலாற்று நூல்களைப் படிப்பதில் பழக்கம் ஏற்படுத்துவது வரலாறு கற்பித்தலின் நோக்கங்களில் ஒன்ருகும். இன்று பயிலும் பிள்ளைகள் பிற்காலத்தில் நல்ல வரலாற்றுப் புத்தகங்களைப் படிப்பதை ஓய்வு நேர வேலையாகக் கொள்வர்.

பொதுவாக அதிகமான நூல்கள் மாணவர்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். நமது மாநிலத்-தில் உயர்நிலைப் பள்ளிகள் சில நீங்கலாக எல்லாவற்றிலும் அறிவியல் கற்பிப்பதற்கு அறிவியற்கூடம் அமைக்கப்பட்டு இருக்கிறது. வரலாறு நம் பள்ளிகளில் ஒரு சில படங்களைக் கொண்டும், மாதிரி உபகரணங்களைக் கொண்டும் கற்றுக் கொடுக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். இக்காலத்தில் வரலாற்றுக்கென்று தனி அறையின் அவசியம் வற்புறுத்தப்படுகிறது. பெரும்பாலான பள்ளிக்கூடங்களில் பெயரளவில் நூல்நிலையங்கள் வைக்கப் பட்டுள்ளன. அவைகள் பொது நூல் நிலையங்கள். எத்தனை பள்ளிகளில் வரலாற்றுக்கென்று தனித்த நூல் நிலையங்கள் உள்ளன என்பதை விரல் விட்டு எண்ணி விடலாம். நூல்நிலையம் இருந்தாலும்கூட அங்கு பாடப்-புத்தகங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. வரலாற்றுப் பாடத்தின் நுணுக்கங்கள் அனைத்தையும் அறிய நூல்நிலையத்தின் தேவையை வற்புறுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

நூல்நிலையத்தில் பாடப்புத்தகங்கள் இருந்து, அவைகள் மாணவர்-களால் உபயோகப்படுத்தப்பட்டால், ஆசிரியரின் கற்பித்தலின் பணி அதிக வெற்றியை கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. அவருடைய கற்பித்தல் ஒளி பெற்று விளங்கும் என்று துணிவாகக் கூறலாம். ஆசிரியர் கற்பித்தலின் பயன்கள் பிள்ளைகள் நூலகத்தில் உள்ள புத்தகங்களைக் கையாள்வதைப் பொறுத்து இருக்கும். ஓரிரண்டு பாடங்களை ஒரு சில புத்தகங்களைக் கொண்டு போதிக்கலாம். ஆனல் வரலாற்றுப் பாடம் போதிக்க அதிகப் புத்தகங்கள்

அடங்கிய நூல்நிலையம் இன்றியமையாததாகும். ஆசிரியர் போதனையின் வாயிலாய் பெறும் அறிவை விட மிக அதிகமாக பிள்ளைகள் நூல்களை சுய முயற்சியால் படிப்பதன் மூலம் பெறலாம்.

## நூல்நிலையம் அமைத்தல்

வரலாற்றுப் பாடத்திற்கு வகுப்பு நூல்நிலையம் அமைப்பது என்பது சாத்தியமானதல்ல. ஆனால் பள்ளி முழுமைக்கென்றே ஒரு வரலாற்று நூல் நிலையம் வைப்பது முடியாத காரியம் அல்ல. பிள்ளைகள் நூல் நிலையத்திற்கு அடிக்கடி விரும்பிச் சென்றால் ஆசிரியர் அதிர்ஷ்டசாலி என்று தான் சொல்ல வேண்டும், அவருடைய வேலையின் பளுவும் குறையும். அவருடைய கற்பித்தலின் பலன் உற்சாக மூட்டுவதாக இருக்கும். பிள்ளைகள் உள்ள நூல்நிலையத்தை சரியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களா என்று கவனிப்பது ஆசிரியரின் முக்கியப் பொறுப்பாகும். ஆண்டு தோறும் நூல்நிலையத்திற்குப் புதிய புத்தகங்களை வாங்கி வைக்க வேண்டும்.

வரலாற்றுக்கென்று தனியாக ஒரு நூல்நிலையம் இல்லாவிட்டால் வரலாற்று நூல்நிலையம் ஒன்று ஏற்படுத்த ஆசிரியர் முயற்சிக்க வேண்டும். ஆரம்பத்தில் பொது நூல்நிலையத்திலுள்ள வாலாறு சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் பிரித்து அவைகளை ஆதாரமாகக் கொண்டு ஆண்டுதோறும் புதிய புத்தகங்களை வாங்கி நூல்நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும். ஆசிரியர் புத்தகம் வெளியிடுவோருடன் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்கள் அவ்வப்போது வெளியிடும் புத்தகப் மட்டியலை வாங்கிப் படிக்க வேண்டும். பத்திரிக்கைகளில் புத்தக மதிப்புரைகளைப் படித்து பொருத்தமான புத்தகங்களை வாங்க வேண்டும். ஆண்டு தோறும் கிடைக்கும் நூல்நிலைய உதவித் தொகையை புத்தகங்கள் வாங்கப் பயன்படுத்த வேண்டும். சில கலை நிகழ்ச்சிகள் மூலம் நூல்நிலையத்திற்கு பொருள் தேடலாம். லயன்ஸ்கழகம், ரோட்டரி சங்கம், பெற்றோர் சங்கம், போன்ற ஸ்தாபனங்கள் புத்தகமாக நன்கொடை கொடுக்க முன் வரும். இதையும் ஆசிரியர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இக்காலத்தில் பள்ளி சீரமைப்பு மாநாடுகள் அடிக்கடி மாநிலமெங்கும் நடத்தப்பட்டு வருகின்றன, இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்களை நாடி நன் கொடையை வரலாற்றுப் புத்தகங்களாகப் பெற்று பள்ளி வரலாற்று நூல்நிலையத்தை விரிவுபடுத்தலாம். அந்நிய நாட்டு தூதராலயங்கள், துண்டுப்பிரசுரங்கள், குறிப்புப்புத்தகம், நினைவுமலர், இவைகளை வெளியிடுகின்றன. வரலாற்று சம்பந்தப்பட்டதாக இருந்தால் அவற்றை இலவசமாகப் பெற்று வாங்கி வைக்கலாம். தவிரவும் ஐக்கிய நாட்டுச் சபையும் அதன் கிளை நிறுவனங்களும், வெளியிடும் பிரகரங்களும் தகுதி பெற்று இருந்தால் நூல்நிலையத்தில் வைக்கலாம்.

## நூல் நிலையத்திற்குப் புத்தகங்கள் தேர்ந்தெடுத்தல்

நிதிசேகரிக்கும் தொல்லை ஒரு புறம் இருக்க கிடைத்த நிதியில் இருந்து பல புத்தகங்களில் பொருத்தமான புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பது

ஆசிரியரை எதிர் நோக்கும் பெரிய சிக்கலாக இருக்கிறது. பாடத்திற்கு தேவையான புத்தகங்களை பிள்ளைகள் படித்து அறிவதற்குப் பொருத்தமான-வைகளாகவும் தேர்ந்தெடுக்க வேண்டும். கல்வித்துறை இயக்குனர் பரிந்துரை செய்த புத்தகங்களை வாங்கி வைக்க வேண்டும். இதில் ஆசிரியருக்குப் பயன்படும் புத்தகங்களும் இருக்க வேண்டும் ஆசிரியருக்குப் பயன்படும் புத்தகங்கள் இரண்டு வகையானவை. 1 வரலாறு கற்பித்தல் தொடர்பான புத்தகங்கள். 2 வரலாற்றுப் பாட சம்பந்தமான வரலாற்று மெய் விளக்கம், வரலாற்றின் கோட்பாடு போன்ற நூல்களும் ஆசிரியர் பயன்-படுத்துவதற்காக இவற்றை வாங்கி வைக்க வேண்டும்.

## வரலாற்று நூல்நிலையத்தில் இருக்க வேண்டிய புத்தகங்கள்

வரலாற்று நூல்நிலையத்தில் பலவிதமான நூல்கள் வரலாற்றைப் பற்றி இருக்க வேண்டும். ஒரு சில புத்தகங்களைப் படிப்பதை விட பல புத்தகங்கள் படிப்பது அதிக நன்மை பயக்கும். வரலாறு கற்பித்தலில் ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் அடிக்கடிப் பயன்படக்கூடிய புத்தகங்களுக்கு சிறப்பிடம் கொடுக்க வேண்டும். பணம் அதிகமாக இருந்தால் இதர புத்தகங்களையும் வாங்கி வைக்கலாம். கீழ்க்கண்ட நல்ல புத்தகங்கள் இருக்க வேண்டும்.

## Reference Books **பார்வைப் புத்தகங்கள்**

இத்துறையில் பலவிதமான தகவல்கள் சேகரிக்க உதவும் புத்தகங்கள் இருக்க வேண்டும். இத்துறையில் எல்லா மாணவர்களும் பார்த்து குறிப்புகள் எடுப்பதற்குப் பொருத்தமான நூல்கள் கிடைத்தலரிது. இருந்தாலும் கலைக் களஞ்சியம் தமிழ் மொழியில் எழுதப்பட்டது கிடைக்கிறது. அத்துடன் ஆங்கிலக் கலைக் களஞ்சியங்களும் வாங்கி வைக்க வேண்டும். ஆண்டுப் புத்தகம், மாநிலச் செய்தி அறிக்கைகள், பாடப்புத்தகங்கள், தேசப்படப்-புத்தகங்கள், அகராதிகள், வரலாற்று நூல்கள், சமூக இயல் நூல்களின் களஞ்சியங்கள் (encyclopedia of social sciences) வரலாறுகளின் அகராதிகள் (dictionary of histories) போன்றவைகள் இப்பிரிவில் சேர்க்க வேண்டும்.

## **துணைப்பாட புத்தகங்கள்** Parellel Text Books.

வரலாறு ஏதாவது ஒரு குறிப்பிட்டதும் கல்வித்துறையின் அங்கீகாரம் பெற்றதுமான பாடப்புத்தகத்தின் அடிப்படையில் கற்பிக்கப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட பாடப்புத்தகத்தை யொட்டி கற்றுக் கொடுக்கப்படுவதால், மாணாக்-கர்கள் அப்புத்தகத்தையே வாங்கும்படி வற்புறுத்தப்படுகின்றனர். இப்புத்த-கத்தைத் தவிர இது போன்ற மற்ற ஆசிரியர்களால் எழுதப்பட்ட புத்தகங்களை-யும் பிள்ளைகள் படிக்க வேண்டும். நூலாசிரியர்களும் சில கருத்துக்களை வெவ்வேறுவிதமாக எழுதுவதுடன் அதிக விவரங்களையும் கொடுப்பார்கள்.

பிள்ளைகள் பிற ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்களைப் படிப்பார்களேயானால் அவர்களுடைய மாறுபட்ட கருத்துக்களையும் தான் படிக்கும் பாடப்புத்தகத்தில் காணப்படாத செய்திகளையும் அறிந்து கொள்வர். பிள்ளைகள் மாறுபட்ட கருத்துக்கள் சில உள்ளன என்பதை உணர்வதுடன் எதையும் ஆய்ந்து பார்க்கவும் முற்படுவர்.

## மூலப்புத்தகங்கள்

வரலாற்று நூல் நிலையத்தில் சில மூலப் புத்தகங்கள் வைக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட வேண்டியதில்லை. இப்புத்தகங்கள் இல்லாமல் கற்பித்தல் முறைகளில் ஒன்றான சான்று முறையை (source method) நாம் பின்பற்ற முடியாது. அதிகமான மூலப் புத்தகங்கள் நமது தாய்மொழியில் இல்லாதது வருந்தத் தக்கதுதான். மூலப் புத்தகங்களை மொழி பெயர்க்க வேண்டும். தமிழ் வளர்ச்சிக் கழகம் இதில் ஈடுபட்டுள்ளது வரவேற்கத் தக்கதாகும். இந்த மூலப் புத்தகங்களை பிள்ளைகள் அறிந்து கையாளத் தொடங்கினால் வரலாற்றின் உண்மைத் தன்மையை உணர்வர். வரலாற்று சஞ்சிகைகள் பழையனவற்றையும் வரலாற்று மூலங்களாகப் பயன்படுத்தலாம்.

இம்மூலப் புத்தகங்களின் பெரிய பட்டியல் கொடுக்கப்பட வேண்டிய தேவை இல்லை. எல்பின்ஸ்டன் எழுதிய History of India, பாணர் எழுதிய ஹர்ஷ சரித்திரம், கல்கணன் எழுதிய காஸ்மீரத்தின் வரலாறு போன்றவை மூலப்புத்தகங்களாகும். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், வரலாற்றுச் சாயல் பெற்ற தமிழ் இலக்கியங்கள், ஆனந்தரங்கம் பிள்ளை எழுதிய நாட்குறிப்பு முதலியனவும் மூலப்புத்தகங்களாகும்.

## சீரியல்களும் செட்டும் (Series And Sets)

சீரியல் என்பது பல பகுதிகள் கொண்ட நூலைக் குறிக்கும். ஒவ்வொரு பகுதியும் ஒரு ஆசிரியரால் எழுதப்பட்டதாக இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் இந்நூல் எழுதுவதில் பலர் பங்கு கொண்டிருப்பர். பலரும் அவர் எழுதிய துறையில் சிறப்பான அறிவு பெற்றவர்களாக இருப்பார்கள். இந் நூலின் முக்கியசிறப்புக்குகாரணம் செய்திகள் அத்துறையின் வல்லுநர்களால் எழுதப்பட்டவைகள் அடங்கியிருத்தலேயாகும். இதற்கு உதாரணமாக வித்யா-பவன் நிலையத்தாரால் இந்திய மக்களின் வரலாறும் பண்பாடும் பத்து பகுதிகளாக வெளியிடப்பட்டு இருக்கின்றன. அதுபோல கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தார் இந்திய வரலாற்றிற்கும் பல பகுதிகள் வெளியிட்டிருக்கின்றனர். அவர்கள் வெளியிட்ட (Modern History) நவீனகால வரலாறு குறிப்பிடத் தக்கது அதுபோல உலக வரலாற்றுப் புத்தகங்கள் பலரால் எழுதப்பட்டவைகள் நமக்குக் கிடைக்கின்றன. இப்படிப்பட்ட புத்தகங்களில் சில நூல் நிலையத்தில் இருக்க வேண்டும்.

(Set) செட் என்பது ஒரே ஆசிரியரால் எழுதப்பட்ட பலபகுதிகள் அடங்கிய நூலாகும் (உம்) பேராசிரியர் சத்தியநாத ஐயர், நீலகண்ட சாஸ்திரி போன்றோர் இந்திய வரலாற்றை மூன்று புத்தகங்களாக எழுதியுள்ளார்கள். இது மாதிரியான உலக வரலாற்றிற்கும் ஐரோப்பிய வரலாற்றிற்கும் எழுதப்பட்ட நூல்கள் அதிகம் வெளிவந்திருக்கின்றன. இவைகளில் ஒரு சில நூல்களாவது ஆசிரியர் பயன் படுத்துவதற்காகவும், மேல் வகுப்பு மாணவர்கள் பயன்படுத்துவதற்காகவும் வாங்கி வைக்க வேண்டும். இம்மாதிரி நூல்கள் தமிழில் அதிகம் கிடையாது. இந்திய வரலாற்றுக்கும் ஐரோப்பிய வரலாற்றுக்கும் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. பெரல் என்ற நூல் வெளியிடும் ஸ்தாபனம் சில புத்தகங்களை மலிவுப் பதிப்பாகத் தமிழாக்கி வெளியிட்டுள்ளனர்.

## சிறப்புப் படிப்பிற்கான புத்தகங்கள்: (Books for specialised studies)

சில துறைகளில் மேற்கொண்டு சிறப்பான அறிவைப்பெற விரும்புபவர்களுக்கும் ஆசிரியர் உபயோகத்திற்கும் சில நூல்களை வாங்கி வைக்க வேண்டும். வரலாற்றை முக்கியமான பாடமாகப் போதிக்கிறோம். அதை ஒட்டிய சமய வரலாறு, கட்டிடக்கலை, நுண் கலைகள், ஓவியம், பொருளாதாரம், விவசாயம், அரசியல் போன்ற துறைகளைப்பற்றிய நூல்கள் இருக்க வேண்டியது அவசியம்.

## வரலாற்றுப் புதினங்கள்

மற்றொரு இடத்தில் வரலாற்றுப் புதினங்கள், அவைகளின் இன்றியமையாமை, பயன்கள்பற்றி குறிப்பிடப்பட்டது நினைவு கூறத்தக்கது. வரலாற்று நவீனங்கள் ஆங்கிலத்தில் எண்ணற்றவை வந்துள்ளன. தமிழில் சில வெளிவந்துள்ளன. இவைகளில் சிலவும் நமது நூலகத்தில் இருக்க வேண்டியது அவசியம். பிள்ளைகள் வரலாற்று மூலமாக வாசிப்பில் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள இது உறுதுணையாக இருக்கும்.

## வாழ்க்கை வரலாறுகள்

வரலாற்றிலும், வாழ்க்கையின் பலதுறைகளிலும் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கையைப் பற்றிய புத்தகங்கள் சில வரலாற்று நூலகத்தில் இடம் பெற வேண்டியது அவசியம். காந்தி, லூதர், இராமானுசர், சங்கரர் இவர்களின் வரலாறு போன்ற பல வரலாற்றுப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் அதிகம் கிடைத்தாலும் தமிழில் வெளியிடப்பட்டுள்ள வரலாற்றுப் புத்தகங்களை வாங்கிவைத்தால் பிள்ளைகள் படித்துப் பயன் பெறுவர். வரலாற்றுப் பெரியோர்களின் நூல்களைத் தேர்ந்தெடுக்கும் போது பொருளாதாரக் கோட்பாடு, கலை, கல்வி, சமூகசேவை, தொழில் நிபுணர்கள் இயந்திரங்களைக் கண்டுபிடித்தவர், புதிய மருந்துக்களைக் கண்டுபிடித்தவர்களுக்கும் முக்கியத்துவம் தரவேண்டும்.

## உள்ளூர் வரலாற்றுப் புத்தகங்கள்

இவைகள் எல்லா இடங்களுக்கும் கிடைப்பதில்லை. சில இடங்கள் சம்மந்தப்பட்டவரையில் கிடைத்தாலும் அவைகளுள் ஒரு சிலவே மதுரை, தஞ்சை, வேலூர், செஞ்சி, ஆற்காடு, சென்னை போன்ற இடங்களைப் பற்றிய வரலாற்றுப் புத்தகங்கள் கிடைக்கின்றன. இதர வட இந்திய நகரங்களைப் பற்றியும், புத்தகங்கள் கிடைக்கின்றன. இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொருத்தவரை கிடைக்கும் தமிழ் புத்தகங்கள் உபயோகமாக இருக்கும். உள்ளூர் வரலாற்றையும் தேச வரலாற்றையும் இயைபுபடுத்துவதற்கும், வரலாற்று உண்மையைப் பற்றியது என்பதை வலியுறுத்தவும் இப்புத்தகங்கள் உபயோகமாக இருக்கும்.

## துண்டுப் பிரசுரங்களும், செய்திப் பத்திரிகைகளும்

ஐக்கிய நாட்டு நிறுவனமும் அதன் பல கிளைகளும் அப்போதைக்கப்போது வெளியிடும் நூல்கள் வரலாற்றைப் பற்றியதாக இருந்தால் சேகரித்துக் கட்டமைப்புச் செய்து வைக்க வேண்டும். இவைகள் எல்லாம் இலவசமாகவே கொடுக்கப்படுகிறது. அந்நிய நாட்டு தூதராலயங்கள் அடிக்கடி அவர்கள் நாட்டுக்கும் நமது நாட்டுக்கும் வரலாற்றின் அடிப்படையில் இருந்த கலாச்சார தொடர்பு பற்றிய செய்திகள் புத்தகமாக வெளியிட்டால் அதையும் நூல் நிலையத்தில் வைக்கலாம். வாரப் பத்திரிகைகள், மாதப் பத்திரிகைகள் சேர்த்து வைக்கப் பட்டால் பிற்காலத்தில் அதை மூலப் புத்தகங்களாகப் பயன் படுத்தலாம்.

## ஆசிரியரின் பொறுப்பு

வரலாற்று நூல் நிலையத்தை நிறுவி வேண்டிய புத்தகங்களை வாங்கி வைத்து பிள்ளைகளைப் படிக்கச் செய்வதில் மட்டும் அவருடைய பொறுப்பு முடிந்து விடவில்லை. ஆசிரியருக்கு நூல் நிலையத்தில் இருக்கும் எல்லாப் புத்தகங்களைப் பற்றிய தெளிவான முழு அறிவு இருக்க வேண்டும். இதற்கு ஒரு முறையாவது பெரும்பாலான புத்தகங்களைப் படித்திருக்க வேண்டும். மீதிப் புத்தகங்களின் பதிப்புரையையும், முன்னுரையையும் மட்டுமாவது படித்திருக்க வேண்டும். ஆசிரியர் பாடம் நடத்தும் போது சில புத்தகங்களைப் பற்றியும், முடிந்தால் பக்கங்களுடன் மேற்கொண்டு விவரங்களைப் பெறலாம் என்று குறிப்பிட வேண்டும். இது கடினமானதாக இருக்கலாம் சில ஆசிரியர்கள் பாடப் புத்தகத்தை மட்டும் படிக்கின்றனர். அது போதா. சில புத்தகங்களைப் படித்தறிந்து செய்திகளை மாணவருக்கு விளக்க வேண்டும்.

வரலாற்று ஆசிரியர் பள்ளியில் உள்ள நூலகப் புத்தகங்களை மட்டும் நன்கு அறிந்திருந்தால் போதா. நமது மாநிலத்தில் எல்லா வட்டங்களிலும் நூலகக் குழுவினரால் பராமரிக்கப் பட்டு வரும் நூலகங்கள் எல்லா ஊர்களிலும் நகரங்களில் எல்லா இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த

நூல்நிலையங்களுடன் வரலாற்று ஆசிரியர் தொடர்பு கொள்ள வேண்டும். அங்கு வைக்கப்பட்டுள்ள வரலாற்று புத்தகங்களைப் பற்றியும், வரலாறு தொடர்புள்ள ஏனைய புத்தகங்களைப் பற்றியும் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். வகுப்பு மாணவர்கள் இந்நூல் நிலையங்களில் பாடசம்பந்தமான புத்தகங்களை எடுத்துப் படிக்கவும் அவற்றை ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப் பயிற்சி வேலைக்கும் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஆசிரியர் உண்டாக்க வேண்டும். பின் நாட்களில் பள்ளியை விட்டு நீங்கி வாழ்க்கையில் ஈடுபடும் மாணவர்களுக்கு இந்நூலகங்கள் பொழுது போக்குவதற்கும் வாசிக்-கும் பழக்கத்தைக் கைவிடாமல் இருப்பதற்கும் உதவியாக இருக்கும்.

வரலாற்று ஆசிரியர் நூலகத்திலுள்ள வரலாற்றுப் புத்தகங்களையும் எந்த முறையில் வகைப்படுத்தி வைப்பது என்ற பிரச்னையை எதிர்நோக்க வேண்டியதிருக்கிறது. வரலாற்று ஆசிரியர் பயிற்சி பெற்ற நூலக ஆசிரிய-ராக இருக்க முடியாது. எனினும் வகைப்படுத்துதல் பற்றி தற்காலத்திலுள்ள ஒரு சில முறைகளைப் பற்றித் தெரிந்தவராக இருக்க வேண்டும். நூலகப் புத்தகங்களை வகைப் படுத்துவதில் தற்காலத்திலுள்ள முக்கிய இரண்டு கருத்துக்களையும் முறையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

பள்ளியில் உள்ள எல்லா நூலகப் புத்தகங்களை எல்லாம் பள்ளியில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்-தல் ஒரு முறையாகும். கல்லூரிகளில் சில இடங்களில் இம்முறை அனுசரிக்-கப்பட்டு வருகிறது. எனவே இம்முறையில் வரலாற்றுப் புத்தகங்கள் அனைத்தும் ஒன்றுகப்பட்டு அவற்றை மேலும் காலவரிசை அடிப்படையில் பிரித்து வைப்பதாகும். மிகச்சிறிய நூல் நிலையத்திற்காக மட்டும் தான் இம்-முறை பயன் உள்ளதாக இருக்கும். புத்தகங்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகமாகிக் கொண்டிருந்தால் இம்முறை ஏற்றதாக இருக்காது.

மேற்குறிப்பிட்ட முறையைவிட நமது நாட்டிலும் நமது மாநிலங்களில் உள்ள மிகப்பெரிய நூல்நிலையங்களில் புத்தகங்களைப் பிரிக்கும் தசாம்சமுறை-யை அனுசரிக்க முற்படுவது சாலச் சிறந்ததாகும். இம்முறை பற்றி மாணவர்-கள் தெரிந்து கொண்டால் வாழ்க்கையில் இது பயனுள்ளதாக அமையும். ஆனால் மிகச்சிறிய நூலகத்திலும் புத்தகங்கள் மிகவும் குறைவானதாக இருக்கும். நூல்நிலையத்திலும் இம்முறையை அனுசரிக்க முடியாதுதான். அத்துடன் நூலக நுணுக்கங்களில் பயிற்சி பெற்றவர்கள் நூலக ஆசிரியர்-களாக நியமிக்கப்பட வேண்டும். இக்காலத்துப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற நூலகக் காப்பாளர்கள் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

வரலாற்று ஆசிரியர் நூலகப் புத்தகங்களை எப்படித் தேடுவது, கிடைத்த புத்தகங்களிலிருந்து தனக்கு வேண்டிய விவரங்களை எங்ஙனம் தேடுவது என்பதில் மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். கார்டு கோட்லாக் முறையை அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். நூலகப் பாட வேளையும் கால அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டும். இந்தப் பாட வேளைக்கான நோட்டுப் புத்தகம் வைக்கப்பட்டு அதை மேற்பார்வை செய்து வரவேண்டும்.

மேல் வகுப்பு மாணவர்கள் தங்களுக்கென்று வீட்டில் தனியான நூலகத்தை வைத்துக் கொள்ளும் ஒரு எண்ணத்தை ஆசிரியர் உருவாக்கப் பிரயத்தனம் செய்ய வேண்டும். நமது நாட்டில் தனிப்பட்டவர்கள் புத்தகம் வாங்குவது கிடையாது. கல்லூரியில் படிக்கும் மாணவர்களும் வகுப்பிற்கு புத்தகம் வாங்கமாலேயே படித்துப் பட்டம் பெற்று வெளியேருகின்றனர். இந்த நிலை முற்றிலும் மாறுபட வேண்டும். ஒரு சிலபுத்தகங்களையும் விலை மலிவுஉள்ள நல்ல புத்தகங்களையும் வைத்து தங்களது சொந்த நூல் நிலயத்தை ஆரம்பிக்க அவர்களுக்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். பள்ளியிறுதி வகுப்பை முடித்து வெளியேறும் மாணவர்களிடையே இந்நோக்கம் வேரூன்றி இருக்க வேண்டும்.

### பயிற்சி வினக்கள்

1 வரலாற்று நூல் நிலயத்தின் அவசியம் யாது ?

2 வரலாற்று நூல் நிலயத்தில் இருக்க வேண்டிய புத்தகங்களின் வகைகள் யாவை ?

3 வரலாற்று நூல் நிலயத்தை மாணவர்கள் பயன் படுத்துவதற்கு ஆசிரியர் கையாள வேண்டிய வழிகளைக் குறிப்பிடுக.

4 பிள்ளைகள் நூல் நிலயத்தைச் சரியாகப் பயன்படுத்தச் செய்வதில் ஆசியருக்குள்ள பொறுப்புகள் யாவை ?

# காட்சிக் கேள்வி உபகரணங்கள்

காட்சிக் கேள்வி உபகரணங்கள் என்பது அசையாப் படங்கள், திரைப் படங்கள், தொலைக்காட்சி அல்லது டெலிவிஷன், பிலிம் சுருள், கோட்டுப் படங்கள், காலக்கோடுகள், தேசப் படங்கள், உண்மைப் பொருள்கள், மாதிரிகள், கேலிச் சித்திரங்கள், ரேடியோ போன்றவைகளையும் அவைகளைப் பயன்படுத்த உதவும் இதர இயந்திரங்களையும் குறிக்கும். பள்ளியில் உள்ள காட்சி சாலைப் பொருள்களையும் காட்சிக் கேள்விகளாகவே கொள்ள வேண்டும்.

## காட்சிக் கேள்விக் கருவிகளின் தேவை

நாம் வெளியுலக அறிவை நமது புலன்கள் வழியாய்ப் பெறுகிறோம் நமது புலன்கள் அறிவுக் கோட்டையின் வாயில்கள். பொருள்களைப் பற்றி நாம் கொண்ட அறிவு காட்சி அனுபவத்தின் அடிப்படையில் பெற்றதாகும். காட்சிக் கேள்விக் கருவிகளை நமது கற்பித்தலில் பயன்படுத்தினால் சுலபமாகவும், குறுகிய நேரத்திலும் அதிகமான பலனைப் பெறலாம். காட்சிக் கேள்விக் கருவிகள் பிள்ளைகளின் மனதில் ஆழ்ந்த சுவட்டை ஏற்படுத்துகின்றது. அவர்கள் கற்றதை எளிதில் மறக்கமாட்டார்கள்.

காட்சி உபகரணங்கள் நமக்குப் புதிய அனுபவத்தை கொடுக்கின்றன. நமது அனுபவத்தின் எல்லையை விரிவுபடுத்துகின்றன. காட்சிக் கேள்விக் கருவிகள் புதிய அனுபவத்தைக் கொடுக்கின்றன. பொருளுக்கும், சொற்றொடருக்கும் எளிதில் தொடர்பை ஏற்படுத்துகின்றன. பாடத்தில் நாட்டத்தை ஏற்படுத்துகின்றன. பிள்ளைகளின் கற்பனையைத் தூண்டுகின்றன.

"ஒரு தடவைப் பார்ப்பது நூறு தடவைக் கேட்பதற்குச் சமம்" என்பது சீனப்பழமொழி. பொருள்களை உற்றுநோக்குதல் படிக்கும் முறையில் சிறந்ததாகும். இம்முறையில் எல்லாவற்றையும் அறிய முடியாது. அதற்குப் பதில் காட்சிக் கேள்விக் கருவிகளைக் கொண்டு கற்கலாம்; கற்பிக்கலாம்.

ஆகையினால் காட்சிக்கேள்விப் புலன்கள் இரண்டையும் அறிவுக்கோட்டையில் பெரிய இரண்டு முக்கிய வாயில்களாகக் கொள்ள வேண்டும். சில கருவிகள் கேள்வியும் காட்சியும் சேர்க்கப்பட்டு ஒருங்கே அமைந்திருக்கின்றன இதில் டெலிவிஷன், சினிமாப் படங்களும் முக்கியமானவை. நாம் வரலாற்றுப் போதனையில் முன் சொல்லப்பட்ட சாதனங்களை சந்தர்ப்பத்திற் கேற்றவாறு கற்பித்தலுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அவை கற்றலை வளர்ப்பதுடன் பிள்ளைகளின் ஆராய்ச்சி மனப்பான்மையைத் தூண்டி விடுகிறது. பாடத்தில் விருப்பம் காட்டுவர். அவர்களின் அனுபவம் விரிவடைகிறது.

நல்ல காட்சிக்கேள்விக் கருவிகளைச் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறுபயன் படுத்தினால் சாதாரணமாக வாய்மொழிக் கற்பித்தலில் நாட்டம் காட்டாதவர்களும், மந்தமாக இருப்பவர்களும் வகுப்பில் பாடத்தில் நாட்டமும், ஆவலும் கொள்ளத் தலைப்படுவர். பாடத்தில் தங்களின் விருப்பம் மிகுவதை அவர்களே உணருவர். பிள்ளைகளின் கவனமானது அவர்களின் வளரும் மனத்தின் நுனியாகும். பிள்ளைகள் பாடத்தில் நாட்டம் காட்டுவார்களேயானல்

அப்பாடத்தைப் பற்றிய மேல் விவரங்களை அவர்களுக்குக் கொடுக்கலாம் அவர்களின் மனதைத் தூண்ட ஒரேவழி, பல விதமான காட்சிக்கேள்வித் துணைக்கருவிகளை அடிக்கடிப் பயன்படுத்த வேண்டும்.

காட்சிக் கேள்வி உதவிகள் நம் பாரத நாட்டுப் பழங்கால மக்களுக்குத் தெரியாதவைகள் அல்ல. குருகுல வாழ்க்கையில் இயற்கையே அவர்களின் புத்தகங்களாகப் பெரும்பாலும் விளங்கின. காட்சி மூலம் விளம்பரப்படுத்துவதற்கு பழங்கால மக்கள் ஓவியத்தையும், சிற்பத்தையும் பயன்படுத்தினர் நம் பழங்கால கோவில்களில் காணும் சிற்பங்களும் அஜந்தா, எல்லோரா-சித்தன்ன வாசல், காஞ்சிக் கோவில்களில் காணும் ஓவியங்கள் சமயத்தைப் பற்றிய நுணுக்கங்களை எளிதில் மக்கள் உணரும் பொருட்டு அமைக்கப்பட்டி-ருக்க வேண்டும் என்பது வெளிப்படை. நம் நாட்டு இதிகாசங்களும் புராணங்களும், நம் நாட்டுக் கோவில்களில், சிற்பங்களிலும், ஓவியங்களிலும் மக்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

சாதாரண சராசரி அறிவுக்கும், குறைவான மாணவர்களுங்கூட மற்ற திறமுள்ள பிள்ளைகளுடன் காட்சிக் கேள்வி துணைக்கருவிகளைப் பயன்படுத்து-வதின் காரணமாக சமமாக முன்னேறுவர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. சொல்வதையும், எழுதப்பட்டதையும் விவரிப்பது காட்சிக் கேள்விக் கருவி-களின் பணியாகும்.

காட்சிக் கேள்விக் கருவிகளைக் கையாளும்பொழுது வகுப்பு மாணவர்-களின் முழு ஒத்துழைப்பை ஆசிரியர் பெற வேண்டும். அவர்கள் அதில் முக்கிய பங்கு கொள்பவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் பார்ப்பதும் கேட்பதும் மட்டும் அதிக பலன் அளிக்காது. அவர்கள் அவற்றைக் கையாளுவதில் முழு பங்கு பெற வேண்டும்.

## திரைப் படம்

மந்த புத்தியுள்ள மாணவர்களுக்கு கற்பிக்க, இதற்குச் சமமான காட்சி கருவி வேறு இருக்கவே முடியாது. திரைப்படம் பொருத்தமானதாக இருந்தால் காட்டலாம். மேற்கொண்டு செய்திகள் கொடுப்பதற்கும், சில-வற்றைத் தெளிவுபடுத்துவதற்கும் பாடம் முடிந்தவுடன் அதுசம்மந்தமான திரைப்படங்கள் இருந்தால் போட்டுக் காட்டலாம். இவை ஆசிரியர்களால் முடியாவிட்டாலும் அவற்றால் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் ஏற்படும் நன்மை. அளவிட முடியாது

ஒருபடம் பிள்ளைகளுக்குக் காட்ட வேண்டும் என்று கருதினல் அப்படம் பாடத்திற்கு எவ்வழியில் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அறிய வேண்டும். ஆசிரியர் முன்பே ஒருதடவைப் போட்டுப் பார்க்க வேண்டும். படம் பிள்ளைகளுக்குக் காட்டுவதற்கு முன்பு அப்படத்தைப்பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் கொடுக்க வேண்டும்.

மத்திய அரசாங்க கல்வித் துறையும், செய்தித்துறை, மாநிலக்கல்வி இயக்குனர் அலுவலகம், அந்நிய நாட்டவர் தூதராலயங்கள் ஆகியன கல்வி

சம்பந்தமான திரைப்படங்களை இரவல் கொடுக்கின்றன. அவர்களிடமிருந்து திரைப்படப்பட்டியல் பெற்று பொருத்தமான படங்களுக்கு மனு செய்து கொள்ள வேண்டும்.

வரலாற்றின் அடிப்படையில் சில படங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன. அதில் வரலாற்றின் உண்மை திரித்துக் கூறப்பட்டாலும் அவற்றின் வரலாற்றைப்பற்றிய செய்திகள் சில அடங்கி இருக்கும். இறந்த காலமக்கள் எங்ஙனம் வாழ்ந்தார்கள் என்பதையும் அவர்களின் பழக்க வழக்கங்களையும், விருப்பு, வெறுப்புக்களையும் படித்தல் மூலமும், ஆசிரியர் சொல்வது மூலமும் அறிவதைவிட செய்திகள் மிகத் தெளிவாக மனத்தில் பதியும்படி செய்ய இவை பயன்படுகின்றன.

திரைப்படங்களால், பிள்ளைகளும், ஆசிரியர்களும் பெறும் பயன்கள் பல. சில படங்கள் சில குறிப்பிட்ட பாடப்பகுதியில் பிள்ளைகளின் கவனத்தை இழுப்பதற்குப் பெரிதும் உதவுவனவாக விளங்குகின்றன. பிள்ளைகளின் அனுபவம் விரிவாக்கப்படுகிறது. தங்கள் வாழ்க்கையில் காண முடியாதவை எல்லாம் திரைப்படத்தில் பார்க்கின்றனர். சுலபமாக படிப்பவர்களுக்கும், படிப்பதில் திறமையில்லாதவர்களுக்கும் கற்பதில் திரைப்படங்கள் பேருதவியாக இருக்கின்றன. குறுகிய காலத்தில் அதிக அளவில் கற்கின்றனர். கற்றது பசுமரத்தாணி போல் பதியும். சில படங்களைப் பார்த்தவுடன் மாணவர்கள் அதில் அடங்கிய செய்திகளைப் பற்றிய மேல் விவரங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவா எழும்பி அது தொடர்பான புத்தகங்களைப் படிக்கத் தூண்டும்.

## திரைப்படங்களின் பயன்

மேல்வகுப்புகளை விட ஆரம்ப வகுப்புகளில் மிக எளிமையாக வரலாற்று விவரங்களை அறிந்து கொள்ள திரைப்படங்கள் உதவியாக இருக்கின்றன. திரைப்படங்களில் பிள்ளைகள் நிகழ்ச்சிகள் நடப்பதைக் கண்முன் காண்கின்றனர். படங்களைப் பார்த்த பிறகு மாணவர்கள் பயிற்சியில் கணிசமான முன்னேற்றத்தைக் காண்பர். காரணம் மிக நுணுக்கமான விவரங்களும் பிள்ளைகளின் மனதில் எளிதாகப் பதியும். வரலாற்றுச் சூழலில் வரலாற்று உண்மைகளை மாணவர்கள் தெரிந்து கொள்ளுகின்றனர்.

திரைப்படங்கள் மாணவர்களின் ஞாபகசக்தியை வலுப்படுத்துகின்றன. வாய்மொழிப் பாடத்தில் கற்ற மாணவர்களை விட திரைப்படங்கள் வாயிலாய் கற்ற மாணவர்கள் மிக அதிகமான அளவு விவரங்களை ஞாபகத்திற்குக் கொண்டு வருகின்றனர். மாணவர்கள் தாங்கள் பார்த்ததை மனக்கண் முன்பு கொண்டு வருவார்கள். ஆனால் கேட்ட வார்த்தைகளையும், சொற்களையும் அப்படியே மறந்து விடுவார்கள். வரலாற்றுப் பாடம் உண்மையானது என்பதை திரைப்படங்கள் உறுதிப்படுத்துகின்றன. இந்த உண்மை

உணர்வு ஆரம்ப வகுப்பு மாணவர்களிடையே காணப்பட வேண்டும். திரைப்படங்கள் இப்பணியைச் செய்கின்றன. படங்களை விட திரைப்படங்கள் மிகவும் சிறந்தவையாகக் காணப்படுகின்றன. திரைப்படங்கள் கடந்த காலத்திற்கும் மாணுக்கர்களுக்குமிடையே உள்ள தூரத்தைக் குறைக்கிறது. கடந்த காலத்தைப் பிள்ளைகளின் அனுபவத்திற்குட்பட்டதாகச் செய்கிறது.

திரைப்படங்கள் மாணவர்களின் படைப்புக் கற்பனையைத் தூண்டுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தையொட்டிய ஒரு திரைப்படத்தை மட்டும் மாணவர்கள் பார்த்தால் அந்தக் காலத்தைப் பற்றிய மிகத் தெளிவானதும் சரியானதுமான வரலாற்றுச் சூழலைக் கற்பனை செய்து கொள்ளுவார்கள். புத்தகத்தில் மாணவர்கள் படிப்பது உண்மைகளும் புள்ளி விவரங்களும் அடங்கிய வரலாறு ஆகும். ஆனால் மாணவர்கள் திரைப்படங்களில் படிக்கும் வரலாறு மனிதர்களைப்பற்றியும். அவர்களைச் சுற்றியுள்ள மக்களைப்பற்றியது ஆகும்.

வரலாறு ஒரு சுவையுள்ள பாடமாகக் காணப்படும். வரலாற்றை விரும்பாதவர்களும் படங்களில் பார்த்த விவரங்களை மறக்கமாட்டார்கள். வரலாற்றைத் திரைப்படங்கள் உயிருள்ள பாடமாகக் காண்பிக்கின்றன. எழுத்து வேலைகளுச்கு திரைப்படங்கள் உதவியாக இருக்கின்றன.

## பயன்படுத்தும் வழிகள்

திரைப்படங்களை வரலாற்று ஆசிரியர் முன் கூட்டியே ஒரு தடவை பார்த்து எவ்வகையில் அதைப் பாடத்துடன் தொடர்புபடுத்தலாம். என்பதை அறிந்து கொள்ள வேண்டும். படத்தின் பொருட்சுருக்கம் தயாரிக்க வேண்டும். மாணவர்கள் எவற்றை மிக அதிக அளவில் கவனிக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். படங்கள் காட்டும்பொழுது எப்பொழுதாவது ஓரிரண்டு குறிப்புக்களைக் குறிப்பிடலாம். அதுவும் மாணவர்களின் கவனத்தை குறிப்பிட்ட ஒன்றில் திருப்புவதற்காகவே செய்யவேண்டும். விளக்கம் கொடுப்பதற்காக இடையில் திரைப்படத்தை நிறுத்தி மறுபடியும் தொடங்கலாம். பார்த்து முடிந்தவுடன் திரைப்படச் செய்திகளைப்பற்றி வரம்பின்றி கேள்விகள் கேட்கத் தூண்டலாம்.

## திரைப்படத் தன்மைகள்

திரைப்படங்களின் நிழல் உருவம் நன்கு அமைந்திருக்க வேண்டும். இப்படங்கள் வரலாற்றுச் சூழலை மறுபடியும் உண்டாக்கும் நிலையில் காணப்பட வேண்டும். மிகச்சிறந்த வரலாற்றுப் பெரியார்களைப்பற்றிய திரைப்படங்களை மாணவர்கள் பார்க்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். படங்களில் சிறியவற்றை நுணுக்கமாக அறிய பெரிய அளவில் (Close up) காண்பிப்பதைத் தவிர்க்க வேண்டும். திரைப்படங்களுடன் உயிர் ஊட்டும் ஓரிரண்டு தேசப்படங்களையும் சேர்க்க வேண்டும். திரைப்படத்திற்கு நல்ல கருப்பொருள்

இருக்க வேண்டும். இவற்றுள் சமூக வாழ்க்கை புவியியல் அம்சம் விளக்கப் படங்கள் பிள்ளைகளுக்கு ஏற்றது. வரலாற்று நவீனங்களைப் பற்றிய படங்களை-யும் மாணவர்கள் பெரிதும் விரும்புவார்கள்.

## மாதிரிகளும் உண்மைப் பொருள்களும்

சாதாரணமாகப் படங்களைவிட மாதிரிப் பொருள்கள் உயர்ரகமான காட்சி கருவிகள் என்பதில் ஐயமில்லை. மாதிரிப் பொருள்கள் உருவத்தைத் தவிர (பருமன்) மற்ற எல்லா அம்சங்களிலும் உண்மைப் பொருள்களை ஒத்திருக்கும். இவைகள் அளவைத் தவிர மற்ற எல்லா அம்சங்களிலும் உண்மைப் பொருள்கள் என்றே சொல்லலாம். களிமண், சுண்ணக்கட்டிகள், தந்தம், கட்டை, மரம், பளிங்குக்கற்கள் போன்றவற்ருல் செய்யப்பட்ட வரலாறு தொடர்பான மாதிரிப் பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. விலை மலிவாகக் கிடைத்தால் அதை வாங்கிக் கற்பித்தல் கருவிகளாகப் பயன்படுத்திக் கொள்ள-லாம். ஆசிரியர் தன் முயற்சியில் குறைந்த செலவில் சில மாதிரிகள் செய்து கொள்ளலாம்.

மாதிரிப்பொருள்கள் சலனப்படங்களைப் போலவே மிகவும் உதவியான காட்சிக்கருவிகளாக உதவுகின்றன. உண்மைப் பொருள்களைப் பற்றிய சரியான செய்திகளை இம்மாதிரிப் பொருட்கள் கொடுக்கின்றன. மாதிரிகளைச் செய்வதைச் செயல் திட்டமாகப் பிள்ளைகள் எடுத்துக் கொள்ளலாம். பிள்ளை-களால் செய்யப்படும் மாதிரிகளை, கற்பித்தலுக்குக் காட்சிக் கருவிகளாகப் பயன்படுத்த முடியாது.

மாதிரிப் பொருட்களைவிட உண்மைப் பொருட்கள் சிறந்தவைகள். எல்லாவற்றுக்கும் உண்மைப் பொருட்கள் கிடைக்கும் என்று சொல்வதற்-கில்லை. அவ்வாறு கிடைத்தாலும் அவைகளின் விலை அதிகமாக இருக்கும். பழைய நாணயங்கள், காகித நோட்டுகள், தபால்தலைகள், செய்தித்தாள்கள், தட்டுமுட்டுச்சாமான்கள், மக்கள் உபயோகப்படுத்திய பொருட்கள் முதலியன உண்மைப் பொருட்களாகும்.

இப்பொருள்கள், கற்பித்தல் கருவிகளாக உதவுவதுடன் பிள்ளைகள் இம்மாதிரியான பொருட்களைச் சேகரிப்பதற்கும் உதவுகின்றன. ஆசிரியர்-களும் மாணவர்களும் முயற்சி செய்தால் ஒரு சில உண்மைப் பொருட்களைச் சேகரித்து பள்ளிவரலாற்றுக் காட்சிச் சாலையில் வைக்கலாம்.

மாதிரிகளில் மிகமுக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது தவறு இன்மையாகும். மாதிரிப்பொருள் எல்லா அம்சங்களிலும் உண்மைப் பொருள் மாதிரி அமைந்திருக்க வேண்டும். வரலாற்று விவரங்களை ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் விளக்குவதற்காகத் தயார் செய்ததாக இருக்க வேண்டும். நன்ருகச் செய்யப்படாத மாதிரிப் பொருள்களை பயன்படுத்துவதினுல் கற்றுக் கொடுக்கும் நேரம் வீணுக்கப்படுகிறது. மாதிரி செய்வதினுல் பொருளும் விரயமாகிறது. மாதிரிகள் மிக எளிமையாகச் செய்யப்பட வேண்டும்

அப்படிச்செய்தால் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். மாதிரிகளைச் செய்வதில் ஏற்படும் கஷ்டம் காரணமாக மாதிரிப் பொருளின் வரலாற்று முக்கியத்துவத்தை மறைக்க முடியாது. மாதிரிப் பொருளின் உண்மையை பார்ப்பவர் அனைவரும் உணர வேண்டும். மாதிரியின் கட்டுக்கோப்பு பலமாக அமைக்கப்பட வேண்டும். மாதிரி செய்வதற்கான காகிதம் அட்டைகள், வைக்கோல் அட்டை, பிளாஸ்டர், பிளாஸ்டிக் போன்ற பொருள்களைப் பயன்படுத்தி மாதிரிகளை அமைக்கலாம். சிலர் சுண்ணாம்புக்கல் அன்றாடம் பயன்படும் சோப்பு, மெழுகுவர்த்தி, களிமண், ஆகியவற்றையும் காகிதக் குழம்பை பயன்படுத்தி மாதிரிகளைச் செய்யலாம். மாதிரிகள் பல அம்சங்களில் பயனுள்ளதாக அமையவேண்டும். ஒரு மாதிரியை சரியாக அமைத்து விட்டால் மாதிரியினால் பெறப்போகும் பயனில் பெரும் பகுதியை அடைந்ததாகவே கருதலாம். முடிந்தவுடன் அம்மாதிரி பாடம் நடத்தும் கருவியாகவகுப்பில் மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் பல மாடல்கள் செய்வதினால் ஆசிரியருடைய திறன் வளர்க்கப்படுகிறது.

மாதிரிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்காகத் தனிமையான மாதிரியைத் தாங்களாகவே செய்வது முதல் வகை. வகுப்பு முழுவதுமோ அல்லது குழு குழுவாகப் பிரிந்து ஒன்று கூடி மாதிரிப் பொருள்களை நிர்மாணிப்பது இரண்டாவது வகையாகும். தனிப்பட்ட மாணவர்கள் தன்னிச்சையாகவும் சுயேச்சையாகவும் மாதிரிகளை அமைப்பதினால் குழந்தைகளிடம் காணப்படும் படைக்கும் மனப்பாங்கு பலமடைகிறது. மாணவர்கள் வரலாற்றுப்பாடத்தில் கொண்டுள்ள பற்று மேலும் அதிகரிக்கிறது. மாணவர்கள் கடந்த கால வாழ்க்கை பற்றியவற்றில் ஓரிரண்டை படைப்பதில் தானும் பங்கு கொள்வதை நினைத்து மனப்பூரிப்பு அடையலாம். காலத்தில் தோன்றி மக்களால் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள். மக்கள் நிர்மாணித்து வாழ்ந்த வீடுகள். கோட்டைகள், அரண்மனைகள் போர்க்கருவிகள் போன்ற பலவகையான மாதிரிகளை மாணவர்கள் அமைக்கலாம். பலர் சேர்ந்து மாதிரிகளின் பகுதிகளாக உருவாக்கி முடிவில் முழு மாதிரியாக உருவாக்கலாம். இதில் மாணவர்கள் இணைந்து செயல்படுகின்றனர்

## கரும்பலகை

கரும்பலகை எளிமையான காட்சி உபகரணமாகும். அத்துடன் ஆசிரியருக்கு வேண்டியது சுண்ணாம்புக்கட்டியும் எழுதியதை அழிக்கும் துணியுமாகும். சில ஆசிரியர்கள் கரும்பலகையை மிக அதிகமான அளவில் பயன்படுத்துகின்றனர். கரும்பலகையைப் பெயர்களைக் கொண்டும் ஆண்டுகளை கொண்டும் இடம் விடாது நிரப்புகின்றனர். இம்முறையும் வரவேற்கத்தக்கதாக இல்லை. அதுபோலவே கரும்பலகையைத் துளியேனும் பயன்படுத்தாமல் வாளாய் இருப்பதும் மிகவும் மோசமான செயலாகும். எனவே கரும்பலகையை மிக முக்கியமான அம்சங்களுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு வரலாற்றுப் பாடத்திற்கும் ஓரிரண்டு முக்கிய பெயர்கள், ஆண்டுகள்

பிள்ளைகளின் கவனத்தை இழுக்கும். வார்த்தைகளும் சொற்றொடர்களும் இதில் எழுதப்பட வேண்டியது மிகவும் அவசியமே. இவைகள் அனைத்தும், ஒரு கால வரிசையில் அமைத்து எழுதினால் மிகவும் நன்மை பயக்கும்.

வரலாற்றில் காலம் இன்றியமையாதது. எல்லாப் பாடங்களிலும் காலக்கணக்கு கவனம் பெறவேண்டும். அதேசமயத்தில் மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடத்தில் கசப்பை உண்டாக்குவதாகக் காணக் கூடாது. இதற்காக வகுப்புக் கரும்பலகையின் இடதுபக்கத்தையொட்டி வெள்ளை நிறத்தில் மேலிருந்து கீழாகக் கோடு ஒன்று தீட்ட வேண்டும். இதை 1, 10, 100 ஆண்டுகளாகப் பிரிக்க வேண்டும். வரலாறு கற்பிக்கும் பொழுது இது மிகவும் பயனுடையதாக இருக்கும். மற்ற ஆசிரியர்கள் பாடம் வகுப்பில் நடத்தும் பொழுது கரும்பலகையை எந்தவிதமான இடைஞ்சல் இல்லாமல் பயன்படுத்திக் கொள்ளலாம். துணியை ஆதாரமாகக் கொண்டு கருப்பு வர்ணம் தீட்டப்பட்ட தேசப்படத்தைப் போல் சுருட்டி வைக்கக்கூடிய காலக்கோட்டுக் கரும்பலகை இருந்தால மிகவும் உபயோகமாக இருக்கும். அதில் உள்ளவற்றை அழிக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆசிரியர் வகுப்புக்கு வகுப்பு எடுத்துக் கொண்டு செலலலாம்.

வரலாற்று வகுப்பறையிலுள்ள ஒரு சுவற்றில் வரலாற்றுக்கென்று ஒரு பெரிய அளவானதும், நிரந்தரமானதுமான காலக்கோடு கரும்பலகை வைக்கலாம். ஒரு பருவம் முழுவதும் நடததப்படும் வரலாற்றில் வரும் முக்கிய ஆண்டுகளையும் தேதிகளையும் அதில் எழுதி வைக்கலாம். அதை அடிக்கடி பார்க்கும் வாய்ப்பும் பாடம் நடத்தும் பொழுது பார்க்கும் வாய்ப்பும் கிட்டுவதால் அது ஒரு முக்கிய காட்சி உபகரணமாகப் பயன்படும். இது மாதிரியான காலக்கோட்டில வகுப்பு நடத்தும் பொழுது கொஞ்சம் கொஞ்சமாகப் பூர்த்தி செய்து கொணடு போகலாம். கற்றதை நினைவு படுத்துவதற்கும் இது உதவியாக இருக்கும். 8 அடி நீளமான கரும்பலகை இருந்தால் மிகவும் உபயோகமாக இருக்கும். அத்துடன் பல வண்ண சாக்குக் கட்டிகள் பயன்படுத்தினால் இதன உபயோகம பன்மடங்கு அதிகமாகும்.

கரும்பலகை வேலை மிக எளிமையாகவும் துலக்கமாகவும் இருக்க வேண்டும். அவசியமற்ற பகுதிகளை நீக்க வேண்டும். கரும்பலகையை பாடம் நடத்தும் பொழுது மாணவர்களின் கண் முன்பு பயன்படுத்த வேண்டும் கரும்பலகை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒரு பகுதியில் மிகவும் முக்கியமானவைகளை மட்டும் எழுதுதல். இரண்டாவது பகுதியில் விவரப்படங்களை வரைந்து காட்டுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கடைசிப் பகுதி பெயர்களுக்கு மட்டும். நீண்ட வாக்கியங்களாக எழுதக் கூடாது. ஆசிரியர் வரலாற்றில் வரும் சில முக்கியமான பெயர்களை நினைவில் நிறுத்த நாம் எதிர்பார்ப்பதால், கூடிய மட்டிலும் பிறவற்றைக் கரும்பலகையில் எழுதுவதைத் தவிர்க்க வேண்டும். ஸ்கெட்ச்சுடனும் தேசப் படங்களும் சாக்குக் காட்டிகளில் பாட நேரத்தில் வரைந்து பாடப் பொருளை

விளக்க வேண்டும். அப்படி வரையப்பட்டவை சாதாரணமாகவும், துலக்க-மாகவும் காணப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட ஒன்றை விளக்குவதற்காக வரைந்து அதை அழித்து விட வேண்டும். சரியாகவும் தவறு இன்றியும் வேகமாகவும் வரையும் திறனை ஆசிரியர் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர் கேலிச் சித்திரங்களை வரையும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டது போல கரும்பலகையை அளவுடன் பயன்படுத்த வேண்டும்.

## வரலாற்றுப் படங்கள்

வரலாற்றுப் படங்கள் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு மிகவும் ஏற்ற காட்சி உதவிகளாகக் காணப்படுகின்றன. நல்ல காட்சிகளடங்கிய படங்களும் வரலாற்றுப் பிரசித்த பெற்ற மேதைகளின் படங்களும் சிறந்தன. இவைகள் கற்றலில் பயன்படுத்தினால் குறிப்பாக கீழ்வகுப்புகளில் மாணவர்கள் வரலாற்றுப் பாடத்தில் சிரத்தை உள்ளவர்களாக விளங்குவார்கள். கதை-களும் காட்சிகளும் பிள்ளைகளின் இள உள்ளங்களை ஈர்க்கின்றன. இளம் மாணவர்கள் வரலாற்றில் வரும் பல காட்சிகளைக் கற்பனை செய்யும் திறன் உடையவர்களாகக் காணப்படமாட்டார்கள். ஆகவே வரலாற்றுக் கதைகளைக் குறிப்பிடும்பொழுது அதிக அளவில் வரலாற்றுக் காட்சிப் படங்களை மாணவர்-கள் காணப் பயன்படுத்த வேண்டும்.

அடுத்துக் கையாளும் படங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை மதிப்பிட வேண்டும். பயன்படுத்தவிருக்கும் வரலாற்றுப்படங்கள் உண்மை-யைப் பிரதிபலிப்பனவாகவும் சரியானதாகவும் காணப்பட வேண்டும். இக்-காலத்தில் அதிக அளவில் அச்சடித்து விற்கப்படும் படங்களில் பல குறைகளைக் காணலாம். இதற்கு உதாரணமாக சாஞ்சி ஸ்தூபியை அடுத்து இருக்கும் கல்லால் அமைக்கப்பட்ட வேலி ஸ்தூபியைச் சுற்றி வளைந்து தொங்குவதாக சித்தரிக்கப் பட்டிருக்கிறது. படங்கள் மனிதர்களைப் பற்றியாவது கட்டிடங்-களைப் பற்றியாவது, காட்சிகளைப் பற்றியதாவது இருந்தால் அதற்கு நல்ல தலைப்புக்களைத் தேர்ந்தெடுத்து தொகுக்கப்பட வேண்டும். இதில் மாணவர்-களின் ஒத்துழைப்பைப் பெறலாம். படங்களையொட்டி வினாக்களும் விளக்கங்-களும் ஆசிரியர் மாணவர்களின் ஒத்துழைப்புடன் எழுதி வைக்கலாம். தேர்ந்தெடுக்கப்பட்டு பயன்படுத்தவிருக்கும் படங்கள் ஏதாவது பிள்ளைகளின் மனதைக் கவரும் செயலில் ஈடுபட்டிருப்பது போலக் காட்சி அளிப்பனவாக இருக்க வேண்டும். பொதுவாகப் படங்களுக்கு எந்தவிதமான விளக்கம் தேவையானதாக இருக்கக்கூடாது. காலத்தையும் இடத்தையும் யொட்டி அவற்றை எளிதில் அடையாளம் கண்டுகொள்வதில் தடையும்சிரமமும் இருக்க-லாகாது. படங்கள் போதுமான அளவு நிரம்பியுள்ளதாகக் காட்சியளிக்க வேண்டும்.

படங்களைப் பார்த்து அறிவதில் மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க வேண்டும். அதைப்பற்றி தெரிந்து கொள்வதில் மாணவர்களுக்கு உதவியாக ஆசிரியர்கள் வினாக்கள் எழுப்புவதின் மூலம் உதவி செய்ய வேண்டும். சாதாரண விளக்கம் போதுமானதாகவே இருக்கும். படங்களின் நோக்கம் மாணவர்களிடைய வரலாற்று உண்மை யுணர்வை ஏற்படுத்துவதே. படங்கள் இந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கலாம். படங்களில் கேலிச் சித்திரங்களையும் சேர்த்துக் கொள்ளலாம். படங்களையும் கேலிச்சித்திரங்களையும் மாணவர்கள் வரையும்படி தூண்டலாம்.

## வம்சாவளிப் பட்டியல்

வம்சாவளிப் பட்டியல் வாயிலாய் மிகவும் சிக்கலான உறவு அம்சங்களை மிக எளிதாகத் தெரிவிக்கலாம். வம்சாவழியும் காலக்கணக்கைப் போல் மானசீகமானது, எனவே ஸ்தூலமாக விளக்குவதற்கு வம்சாவளிப் பட்டியல் உபயோகமாக இருக்கும். வம்சாவளிப்பட்டியலைத் தயார் செய்யும் பொழுது வரலாற்று முக்கியம் பெற்ற பெயர்களை சற்று கனமான வடிவ எழுத்துக்களில் காண்பிக்க வேண்டும். சிறிய அளவில் கிடைக்கும் படத்தை ஏற்ற இடத்தில் பெயர் எழுதுவதற்குப் பதிலாக ஒட்டி வைக்கலாம். இச்சார்ட்டுகள் மிகப்பெரிய அளவில் தயாரிக்க வேண்டும். கரும்பலகையில் பாட நேரத்தில் வேகமாகப் போட்டுக் காண்பித்தல் சிறந்தது. பெரிய அளவில் உள்ள அட்டைகளில் எழுதினால்தான் வகுப்பு முழுவதும் பார்த்துப், படித்துத் தெரிந்து கொள்ளு-வார்கள். சிறிய அளவில் தங்கள் நோட்டுப் புத்தகத்தில் சில வம்சாவளி சார்டுகளை வரையும் பயிற்சியை மாணவர்களுக்குக் கொடுக்கலாம். இத்துடன் ஒவ்வொரு பெயரின் அருகாமையில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சியை எழுதி வைத்தால் பிள்ளைகளின் ஞாபகத்தில் நிறுத்த மிகவும் உதவியாக இருக்கும்.

## வரைப்படம் (Graphs)

வரைப்படங்களும் காட்சி உபகரணங்களாகப் பயன்படுகின்றன. அளவு சம்மந்தமான புள்ளிவிவரங்களை வரைப்படங்கள் விவரிக்கின்றன. அளவு சம்மந்தமான புள்ளிக் கணக்குகளை சரியாகவும் மனதைக் கவரும் வண்ணமாக-வும் வரைப்படங்கள் வெளிப்படுத்துகின்றன. எனவே சொற்கள், சொற்-றொடர்கள், புள்ளி விவரங்களை யெல்லாம் வரைப்படங்களாக மாற்றி மாணவர்கள் அவற்றின் உட்கருத்துக்களை மிக எளிதில் தெரிந்து கொள்ளும்படியாக விவரிக்கலாம். இவற்றுள் வட்டங்கள், சதுரங்கள், முக்கோணங்கள், கோடுகள் படங்கள் முக்கியமானவை இவற்றையெல்லாம் வரைப்படத்தில் இணைக்கலாம்.

## செய்திப் பலகைகள்

பள்ளிவரலாற்றுப் பாடத்துடன் அன்றாட நிகழ்ச்சியையும் கற்பிக்க வேண்டியது அவசியம். அன்றாட நிகழ்ச்சிகளில் சில உருவாகிக் கொண்டிருக்-கும் வரலாறு ஆகும். இன்றைய நிகழ்ச்சியில் பிள்ளைகளை நாட்டம் காட்டச் செய்தல் வரலாற்றுப் பாடம் கற்பித்தலின் நோக்கங்களில் ஒன்றாகும்.

செய்திப்பலகைகள் மாணவர்கள் கையாளுவதற்கும் ஆசிரியர் கையாளுவதற்குமெனத் தனித்தனியாக இருக்க வேண்டும். செய்திப் பலகைகளில் அன்றைய செய்திகள் மட்டும் எழுதிவைக்கப் படுகின்றன. இதரவகைகளிலும் இப்பலகைகளைப் பயன்படுத்த முடியும் என்பதை மாணவர்கள் உணர வேண்டும்.

செய்திப்பலகையில் மாணவர்களுக்குத் தெரிவிக்க வேண்டியதை எழுதி வைக்கலாம். ஏதாவது அதிசயப் பொருட்களை எல்லாப் பிள்ளைகளும் பார்ப்பதற்கு வைக்கலாம். இதற்குப் பலகையின்மேல் கம்பிவலை அடிக்கப்பட்டிருக்கவேண்டும். பத்திரிகைகளில் வெட்டி எடுக்கப் பட்டவைகளையும் இதில் பிள்ளைகள் பார்ப்பதற்காக வைக்கலாம். இது தவிர எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

செய்திப்பலகையை மேற்பார்வையிடுவதற்கு பிள்ளைகளின் பிரதிநிதிகள் அடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்தலாம். இக்கமிட்டி செய்திப் பலகையைக் காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதுடன் நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு அதைப் பின்பற்ற வேண்டும். அப்போதைக் கப்போது அனுபவத்தை யொட்டிய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும்.

எவ்வகையான பொருள்களைச் செய்திப் பலகையில் வைப்பது என்பதைப் பற்றிய பட்டியல் ஒன்று தயார் செய்தல், பலகையில் இடம்பெற அருகதையற்றவைகளின் பட்டியல் ஒன்று தயார் செய்தல். வகுப்புக்கும் பள்ளிக்கும் பொதுவானவைகளுக்கு ஒரு பட்டியல் தயார் செய்து பிள்ளைகளிடமிருந்து பெற்றவைகளை மதிப்பிட்டு அவைகளைச் செய்திப் பலகையில் போடுவதற்கு நியதிகளை வகுத்துக் கொள்ளுதல். செய்திப் பலகையில் ஒவ்வொன்றும் எத்தனை நாட்கள் வைத்திருக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது போன்ற வழிமுறைகளை வகுத்துப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் பின்பற்ற வேண்டும்.

செய்திப் பலகைகளில் குறுகிய கட்டுரைகள், புத்தகங்களின் மேல் கவர்கள், தேசப்படங்கள், படங்கள், புகைப்படங்கள், கேலிச் சித்திரங்கள், புத்தகப் பட்டியல், கோட்டுப் படங்கள், விளக்கப்படங்கள் இவைகளைக் காட்டலாம்.

## விளக்கப் படங்கள்

விளக்கப்படங்களின் வகைகள் பல. அமைப்பு விளக்கப்படம் இவைகளில் ஒன்று. அரசியல் நிர்வாக அமைப்புக்களை இவைகள் விளக்கும். காலக்கிரமத்தில் நாடுகளையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் குறிப்பது ஒரு வகையான விளக்கப்படம் ஆகும். பலவகையான கோட்டுப் படங்கள், ஸ்கெட்சுகளையும் சார்ட்டுகள் என்றே சொல்ல வேண்டும். கற்பித்தலுக்கு உதவியாக இருப்பனவாக காகிதத்தில் வரையப் பட்டவைகள் எல்லாம் பொதுவாக சார்ட்டுகள் என்று குறிப்பிடலாம். வம்சாவளியைப் புலப்படுத்துவதற்கும், காலத்தையும்

நடந்த நிகழ்ச்சிகளையும் பொருத்துவதற்கும் சார்ட்டுகள் வரையலாம். பிள்ளைகள் சொந்த முயற்சியில் பாடப்புத்தகத்திலிருந்து செய்திகளைச் சேகரித்து விளக்கப்படங்கள் வரையவும் பயிற்சி அளிக்ககலாம்.

## தேசப்படங்கள்

தேசப்படங்களும் காலக்கோடுகளும் ஏனைய காட்சிக் கேள்விக் கருவிகளை விட வரலாறு கற்பித்தலுக்கு நாள் தோறும் பயன்படுத்தும் காட்சிக் கருவிகளாக விளங்குகின்றன என்பதை மறக்கக் கூடாது. காலக்கோடுகள் கால அறிவையும், தேதிகளையும் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதை, தேதிகளை எப்படி கற்பிப்பது என்ற தலைப்பில் போதிய செய்திகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. தேசப்படங்களின் பயனையும் அதைக் கையாளும் முறை பற்றியும் பலவிதமான தேசப்படங்களைப் பற்றியும் தேசப்படங்களில் கொடுக்க வேண்டிய பயிற்சியைப் பற்றியும் விரிவாகவே இவ்வேளையில் ஆராய வேண்டியது தேவையாகும்.

தேசப்படங்கள் ஏதாவது வரலாறு நடந்த இடத்தின் பருமனையும் செய்தியையும் துலக்கமாக நமக்குக் காட்டுகின்றன. பல செய்திகளின் சுருக்கமே தேசப்படமாகும். தேசப்படங்களைப் படிக்கும் திறமை பெற்றவர்கள் அதிலிருந்து அதிக விவரங்களைத் தெரிந்து கொள்வார்கள். படங்களைப் படிப்பதற்கு புத்திக் கூர்மையும், அனுபவமும் அவசியமாகும்.

தேசப்படம் படமாகாது. படத்தின் பிம்பமாகும். உண்மையற்றிது என்ருலும் உண்மையின் அறிகுறியாகும். படங்களில் பலவகையான குறியீடுகள் பயன்படுத்தப்பட்டு வரையப்பட்டிருப்பதால் வரலாறு கற்பித்தலுக்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றன. படங்களில் உபயோகப்படுத்தப்பட்ட சம்பிரதாய அடையாளங்களைப் பிள்ளைகள் தெரிந்திருக்க வேண்டும். அவைகளைத் தெரிந்திருந்தால் தான் தேசப்படத்தைப் படித்தறிவது சுலபமாக இருக்கும்.

தேசப்படப் புத்தகங்கள் பிள்ளைகள் கையாளத் தொடங்கு முன்பு அவர்களுக்கு அதைப் பற்றிய சில விவரங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். குறிப்பாக தேசப்படங்களின் அமைப்புகளைப் பற்றி மாணவர்கள் அறிந்திருக்க வேண்டும். படங்களின் அம்சங்களில் ஒன்று திசையாகும்.

திசை காண்பதற்கு அட்ச, தீர்க்க ரேகைகளின் அறிவு இன்றியமையாதது. திசையை இவைகளின் உதவியால் கண்டு கொள்ளலாம். தவிரவும் கொடுக்கப்பட்ட இடத்தைக் கண்டு கொள்ள இம்மானசீகக் கோடுகள் பெரிதும் உதவுகின்றன.

திசைக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெறுவது தூரம். தூரத்தை 1 அங்குலம் 100 மைல் என்று கோடு வரைப்படத்தில் பல பிரிவுகளாகப் பிரித்து இத்தனை மைல் என்று கணக்கிடுதல். 1/100 அல்லது 1/500 என்றும் கணக்கிடப்படுகின்றன. இதைச் சுருக்கமாகச் சொன்ஞல் 100 மடங்கு 1000 மடங்கு என்று சொல்ல வேண்டும். அடுத்தபடியாகப் பரப்பு முக்கிய

அம்சமாகக் காகிதத்தில் காணப்படும் தேசப்படத்தின் பருமனை ஆதாரமாகக் கொண்டு இதைக் கணக்கிட முடியாது. அளவு விகிதம் கொண்டுதான் இரண்டு இடங்களை ஒப்பிட முடியும். படங்களில் தீட்டப்பட்ட வண்ணங்கள் பல விவரங்களைத் தெரிவிக்கும். அது தவிர படங்களில் சில வழக்கமாக உபயோகப்படுத்தப்பட்டு வரும் குறியீடுகள் பல இருக்கும். ஒவ்வொரு குறியீட்டுக்கும் ஒரு பொருளுண்டு.

## தேசப்படங்களின் பயன்

முக்கியமானவைகளில் ஒன்று குறிப்பிடப்பட்ட இடத்தைப் படத்தில் தெரிவித்தல். வரலாற்றுப் பாடத்தில் சில முக்கிய இடங்களைக் காட்ட வேண்டும். மாநிலங்களின் எல்லைக் கோடுகள், படை எடுப்புகள், போர்க் களங்கள் இவைகளைப் படத்தில் காட்டவேண்டும். உண்மை என்பதை உறுதிப்படுத்தவும், இறந்த காலத்தை உயிர்ப்பிக்கவும் தேசப்படங்கள் இன்றியமையாததாக விளங்குகின்றன.

அரசியல் நிலைமையைப் பிள்ளைகள் உணர, அரசியல் தேசப்படம் மிகவும் உதவியாக இருக்கும். இதில் நாடுகள் இருக்கும். இதில் காணும் அமைப்புக்கள் பிள்ளைகளுக்குத் தெளிவாக விளங்கும். இப்படங்கள் சில வரலாற்று நிகழ்ச்சிகளுக்குக் காரணங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

பல நாடுகளின் பரப்பைப் பிள்ளைகள் சுலபமாகப் புரிந்து கொள்ள தேசப்படங்கள் உதவுகின்றன. தேசப்படங்கள் அரசியல் மாறுதல்களையும், நாடுகளின் இருப்பிட அமைப்பையும் அறிய உதவுகின்றன.

### பயிற்சி வினாக்கள்

1 காட்சிக்கேள்வி உபகரணங்கள் என்றால் என்ன? ஒரு பட்டியல் தயாரிக்கவும்.

2 காட்சிக்கேள்வி உபகரணங்களின் பயன்கள் யாவை?

3 திரைப்படங்களின் பயனை மதிப்பீடு செய்க.

4 கரும்பலகை ஒரு சிறந்த காட்சி உதவியாகும் என்பது சரியா? விளக்கவும்.

5 காலக்கோடுகள், தேசப்படங்கள், வம்சாவளிப்பட்டியல், படங்கள் ஆகியவற்றின் பயன்கள் யாவை?

## வரலாற்று அறையின் அவசியம்

வரலாறு போதிப்பதற்கு வரலாற்று அறை மிகவும் முக்கியம். அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பாடத்திற்குத் தகுந்தாற்போல் தனியறை தேவைப்படுவதைப் போலவே வரலாற்றுப் பாடத்திற்கும் தனி அறை தேவை என்பது எல்லோராலும் உணரப்படுகின்றது. வரலாற்றுப் பாடத்திற்கு ஏற்றப்படி திட்டமிட்டு அமைக்கப்பட்டதும் போதுமானதுமான கருவிகள் பொருத்தப்பட்டதுமான வரலாற்று அறையின்றி கற்பிக்கப்படும் வரலாற்றுப்பாடம் சிறக்காது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது.

வரலாறு அறிவியல் பாடங்களில் ஒன்று. அறிவியல் நிலைக்கு வரலாற்றுப் பாடம் உயர்த்தப்பட்டு விட்டது. எனவே இதற்குத் தனி அறை தேவை. ஒவ்வொரு பள்ளியிலும் அறிவியல் பாடத்திற்கென்று தனி அறை இருப்பதைப் போலவே வரலாற்றுப் பாடத்திற்கும் ஒரு பொதுவான வகுப்பினை ஒத்திருக்காமல் எல்லா வசதிகளும் கொண்ட சிறப்பான அறை தேவை என்று கருதப்படுகிறது. அறிவியல் பாடத்தில் அறிவியல் நுணுக்கங்களை மாணவர்கள் அறிவியல் பாடங்களில் செய்து கற்றுத் தெரிந்து கொள்வது போலவே வரலாற்றுப் பாடத்திலும் அவர்கள் வரலாற்றுக் கூடத்திற்குச் சென்றுச் சுய முயற்சியில் வரலாற்றைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது, வரலாற்றைக் கேட்டு மட்டும் தெரிந்தால் போதாது. தாங்களாகவே தங்களது சொந்த முயற்சியில் இதைக் கற்றுத் தெளிய வாய்ப்புக்கள் மாணவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

வரலாற்றைக் கற்கவும், கற்றுக் கொடுக்கவும் ஒரு சில நவீன முறைகள் இருக்கின்றன. இம் முறைகளைச் சரிவரப் பின்பற்ற வேண்டுமானல் அவற்றிற்குத் தனியான வரலாற்று அறை அவசியம். உற்பத்தி முறை, சோதனை முறை, ஒப்பந்த முறை, செயல்திட்ட முறை, போன்றவைகளுக்கு வரலாற்று அறை அவசியம் வேண்டும். ஏனெனில் இம்முறைகளில் ஆசிரியரின் பங்கினைவிடப் பிள்ளைகள் செய்ய வேண்டிய செயல்களின் பங்கு மிகவும் அதிகமானது.

வரலாற்றிற்கென்று தனிப் பாட அறை இருப்பின் ஆசிரியர்களும் மாணவர்களும் சில நன்மைகள் இருப்பதை உணர்வார்கள். வீண் காலதாமதத்தை இதனல் தவிர்க்கலாம். வேண்டும் போதெல்லாம் கற்பிக்க உதவும் பொருள்களை ஓர் இரண்டு நிமிடங்களில் எடுத்து வகுப்பில் பயன் படுத்திய பிறகு பாதுகாப்பாக எடுத்த இடத்திலேயே வைத்து விடலாம். வேறு இடங்களுக்கு இவைகள் எடுத்துச் செல்லும் போதும், திரும்பவும் கொண்டு வந்து வைக்கும் போதும் கால தாமதம் ஏற்படுகிறது. கருவிகள் உடைந்து பாழாக நேரிடலாம். வரலாற்றுப் பாடத்திற்காகச் சேகரிக்கப் பட்ட துணைக் கருவிகளும் தளவாடச் சாமான்களையும் கண்ட இடங்களில் வைப்பதைக் காட்டிலும் ஓர் இடத்திலேயே பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம்.

ஒரு வகுப்பறையைப் பல பாட ஆசிரியர்கள் பயன்படுத்தும் பொழுது ஒவ்வொரு பாடவேளை முடிந்தவுடன் கரும்பலகையில் எழுதப்பட்டவை அழிக்க வேண்டிய தேவை ஏற்படும். கரும்பலகையில் சில ஆசிரியர்கள் வகுப்பறைக்குச் செல்லும் பொழுது ஏதாவது எழுதியிருப்பதை அழிக்காமல் இருப்பின் அதைப் பற்றிப் பெரிதாக நினைப்பார்கள். வரலாற்றுப் பாடம் மட்டும் நடக்கும் அறையில் எழுதப்பட்டவை எல்லாம் உடனுக்குடன் அழித்து விடவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரே வகுப்பில் பலபிரிவுகள் இருந்தால் ஆசிரியர் ஒவ்வொரு தடவையும் எழுதுவதைத் தவிர்க்கலாம். மாணவர்களும் தங்களுக்கு ஓய்வு கிடைக்கும் பொழுது அறைக்கு சென்று கரும்பலகையில் உள்ளதை எல்லாம் சரியாக எழுதிக் கொள்ளலாம்.

வரலாற்றை வரலாற்றுச் சூழலில் கற்பிக்க வேண்டும். அப்பொழுது தான் வரலாற்று உணர்ச்சி பெருகும். வகுப்பறை எல்லாப் பாடங்களுக்கும் பொதுவான அறையாக இருப்பதால் வரலாற்றுச் சூழலை ஏற்படுத்த அதை அலங்கரிக்க முடியாது. தனி அறை இருப்பின் அது சாத்தியம். பிள்ளைகள் வகுப்பறையில் நுழையும் பொழுது நாம் வரலாற்று அறையில் நுழைகிறோம் என்ற உணர்வு ஏற்படவேண்டும். அதற்கு மாதிரிகளையும், கருவிகளையும் பொருத்தி இருக்கவேண்டும். மிக அதிகமான அளவில் கரும்பலகைகளும் காலகோடுகளும் நிரம்பி இருக்கவேண்டும். இவற்றை அடிக்கடி மாற்ற வேண்டும். வரலாற்று ஆசிரியர்களும் தங்களுக்கென்று தனி அறை இருந்தால் உற்சாகமாக வேலை செய்வார்கள்.

தற்காலத்தில் வரலாறு கற்பிப்பதில் காட்சிக் கேள்வி, துணைக் கருவிகள் தனிச் சிறப்பிடத்தைப் பெற்றிருக்கின்றன. வரலாற்றுப் பாடத்திற்கு காட்சிக் கேள்வி, துணைக்கருவிகள் இன்றியமையாதவை. கடந்த காலத்தைப் பற்றிய செய்திகளை வரலாற்றில் படிக்கிறோம். இவற்றிற்கு உயிர் கொடுப்பது காட்சிக் கேள்வி, துணைக் கருவிகளாகும். இக்காட்சிக் கேள்வி கருவிகளைப் பயன்படுத்த அதற்கென்று எல்லா வசதிகளும் கொண்ட தனி அறை தேவை என்பது சொல்லாமலே விளங்கும். தொலைக் காட்சி, தொலைப்பேசிப் படங்கள், மாதிரிகள், படச் சுருள்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும், இதற்கான கருவிகளை வைக்கவும் வரலாற்று அறை மிகவும் முக்கியமானதாகிறது.

## வரலாற்று அறையின் அமைப்பும், வசதிகளும்

இவ்வறை சாதாரண வகுப்பறை மாதிரி இருக்கக்கூடாது. இதில் பல வசதிகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதினால் சற்றுப் பெரியதாக இருக்கவேண்டும். ஆசிரியர் தம் தேவைக்குத் தக்கவாறு இந்த அறைக்கான திட்டத்தை அமைத்துக் கொள்ளலாம். இந்த அறை ஆசிரியர் வரலாறு கற்றுக் கொடுக்கும் அறையாக இருப்பதுடன் மாணவர்கள் சுயமுயற்சியால் வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளவும், மாணவர்-

களும், ஆசிரியர்களும் ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கு ஏற்றவாறும் அமைக்கப்பட வேண்டும். ஆகவே இவற்றை மனதில் கொண்டு வரலாற்று அறையின் பரப்பைத் தீர்மானிக்க வேண்டும். வரலாற்று அறை சாதாரண-மாக 25 × 45 அளவு இருந்தால் போதுமானதாக இருக்கும்.

இந்த அறையில் போதுமான மரச் சாமான்கள் இருக்கவேண்டும். நாற்காலிகள், மேஜைகள், தொழில் செய்வதற்கான மரமேசை, கரும்பலகை, காட்சிக்கருவிகள், திரையிடச் சரியான திரை ஆகியன இருத்தல் வேண்டும். நூல்நிலையப் புத்தகங்களுக்கு அலமாரிகள் இருக்க வேண்டும். படங்களை வைக்கத் தாங்கிகள் இருக்க வேண்டும். மற்றவைகளை ஆசிரியர் தன் தேவைக்குத் தக்கவாறு சேகரித்துக் கொள்ளலாம். இந்த அறையில் வரலாற்று நூல்நிலையம், செய்திப்பலகை, காட்சிசாலை, ஆசிரியர் தங்குவதற்-கான இடம் ஆகிய எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வரலாற்றுக் கழகம் ஏற்படுத்திக் கொள்ளவும், அவற்றை வகுப்பறையாகவும் பட்டிமன்றம் நடத்துவதற்கு எளிதில் மாற்றுவதற்கேற்றவாறு அமைக்க வேண்டும். நிழற்படங்களையும் இவ்வறையில் போட்டுக் காட்ட வசதிகள் செய்து வைக்க வேண்டும்.

### பயிற்சி வினாக்கள்

1 வரலாற்று அறை அவசியம் என்பதற்குக் காரணங்கள் யாவை?
2 வரலாற்று அறையின் முக்கிய அம்சங்கள் யாவை?
3 வரலாற்று அறையில் கவனம் பெற வேண்டிய முக்கிய வசதிகள் யாவை? அதில் இருக்க வேண்டிய தளவாடங்களைக் குறிப்பிடவும்.

## குறுகிய நீண்ட கல்விப் பயணங்கள்

குறுகிய பயணம் என்பது பள்ளிக்கூடம், அன்றாட அலுவல்களில் ஈடு-பட்டிருக்கும் பொழுது, ஏதாவது ஒரு நாள் வெளியில் கல்வி நோக்குடன் சென்று வருவது ஆகும். வாரக்கடைசியிலும், வார விடுமுறை நாட்களிலும் இப்படிப்பட்ட பிரயாணங்களுக்கு ஏற்பாடு செய்து நடத்தலாம். இப்படிப்பட்ட பிரயாணங்களுக்கு ஒரு சில மணி நேரம் மட்டும் செலவழிக்கப்படுவதால், நோக்கமும் பயன்களும், பார்த்தறிய வேண்டியவைகளும் சரியாக வரை-யறுக்கப்பட வேண்டும். தேவையும், வாய்ப்பும், காணப்படும் பொழுதுதான் இவைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தினமும் இதை நடத்த முடியாது, நடத்துவதற்கு நேரம் இராது. இப்படிப்பட்ட பிரயாணங்களில் பிள்ளைகள் ஈடுபடும் பொழுது அவர்கள் ஒரு சில மணிநேரம் பள்ளியில் இருக்க மாட்-டார்கள் என்பது வெளிப்படை.

தொலைப் பிரயாணங்கள் நீண்ட நாள் பிரயாணமாகும். பிள்ளைகள் பல நாட்கள் பள்ளியை விட்டும், தங்கள் பெற்றோர்களை விட்டும், வீட்டை விட்டும், இருக்க வேண்டியது அவசியம் ஏற்படும். பள்ளி நடைபெறும் பொழுது பல நாட்கள் பிரயாணத்தில் ஈடுபடுவது பள்ளி வேலைக்கு இடையூறு ஏற்படும் பெற்றோர்களும், நிர்வாகிகளும், தணிக்கை அதிகாரிகளும் இதை அதிகமாக விரும்பமாட்டார்கள். பருவ முடிவு விடுமுறை தினங்களில் நீண்ட தொலைவு கல்வி பயணங்களுக்கு ஏற்பாடு செய்யலாம்.

பிள்ளைகளைச் சுற்றி அதிகமான வரலாற்றுச் சின்னங்களும், வரலாற்று பிரசித்தி பெற்ற இடங்களும் இருக்கின்றன. கட்டிடங்கள், இடிந்த கோவில்-கள், கோட்டைகள் முதலிய வரலாற்றுச் சின்னங்களைப் பிள்ளைகள் உற்று கவனித்து அறிவதற்கு நாம் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

கல்விப் பிரயாணத்தில் பெறும் அறிவையும், அனுபவத்தையும் வகுப்-பறைப் பாடங்களுடன் இணைக்க வேண்டும் என்பதை மறக்கக் கூடாது. உள்ளூர் வரலாற்றை அந்த இடத்திலேயே படிப்பதால் பிள்ளைகள் இறந்த காலத்தை மனக் கண்ணால் பார்க்கவும், தங்கள் கற்பனையின் முன்பு கொண்டு வந்து நிறுத்தவும் உதவி செய்யும். வரலாற்றின் பொதுவான தன்மையையும், அதன் முக்கியத்துவத்தையும் பிள்ளைகள் எளிதில் உள்ளூர் வரலாற்று வாயிலாக உணர்வர். குறுகிய பிரயாணங்கள் தேவைப்பட்டப் பொழுதும் நீண்ட பிரயாணங்கள் ஒன்று அல்லது இரண்டுக்குப் பருவ விடுமுறை நாட்-களில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## நோக்கமும் பயனும்

கல்விச் சுற்றுலாக்களின் முக்கியமான நோக்கம் வரலாற்றுச் சின்னங்-களை உற்று நோக்கிப் பார்த்துப் படித்துப் புரிந்து கொள்ள வாய்ப்பு அளிப்ப-தே ஆகும். வகுப்பறையில் நடைபெறும் கற்பித்தலுடன் பிள்ளைகள்

தாங்களே நோக்கி அறிந்த செய்திகளோடு இணைப்பதே முக்கிய நோக்கமாகக் கொள்ள வேண்டும். வகுப்பறைப் பாடங்கள் ஒளி பெற்று விளங்கக் கல்விச் சுற்றுலாக்களில் பெறும் அறிவு மிகவும் உதவியாக இருக்கும். இது போன்றச் சுற்றுலாக்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்காக அடிக்கடி நடத்தப்பட்டால் பிள்ளைகள் வரலாற்று உணர்ச்சி உடையவர்களாக விளங்குவர். அடிக்கடி வெளியில் சென்று வரலாற்றுச் செய்திகளை நேரில் கண்டு கூர்ந்து கவனித்து அறிய முற்படுவதால் வரலாற்றுப் பாடத்தில் பற்றையும் ஆர்வத்தையும் கொள்வர். பிள்ளைகள் ஏதாவது ஒரு காரணத்தில் பிரயாணத்தில் ஈடுபடும் பொழுது நமது கலாச்சாரத்தைப் பற்றிய உணர்வுடன் பிரயாணத்தின் போது அக்கம்பக்கத்தில் காணும் வரலாற்றுச் சின்னங்களில் கவனம் செலுத்து-வதுடன் நமது கலாச்சார உணர்வு உடையவர்களாகவும் விளங்குவர். இப்-பிரயாணங்களில் பிள்ளைகள் புதிய அனுபவ அறிவு பெறுவர். இந்த அனு-பவத்தினால் பிள்ளைகள் பெறும் சமூகப் பழக்க வழக்கங்கள் உன்னதமான-வைகள். பள்ளிப் பாடங்களில் கண்ட, பார்த்த விசயங்களைப் பற்றியும், இடங்-களைப் பற்றியும், கடைகளில் கிடைக்கும் நூல்களை வாங்கிப் படிக்க வேண்டும் என்ற அவா பிள்ளைகள் மனதில் எழும். சாதாரணமாக வகுப்பறையில் அடைந்து கிடக்கும் மாணவர்கள் வெளியே பயணம் செய்ய விரும்புவது இயல்பே.

## முன்னேற்பாடு

பிள்ளைகளை வெளிச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு அவர்களது மனதைத் தயார் செய்ய வேண்டும். இதை ஆயத்தப்படுத்துதல் என்று குறிப்பிடலாம். கூடிய வரையில் வகுப்பறைப் பாடத்துடன் பிரயாண அனுபவத்தையும்அறிவையையும் ஐக்கியப் படுத்தவேண்டும் அல்லது இணைக்க வேண்டும். சுற்றுலா ஆரம்பமாவதற்கு முன்பு சுற்றுலாவின் இன்றியமையாமை-யையும் அதன் பலன்களையும் விவரிக்க வேண்டும். ஆசிரியர் பிள்ளைகள் பார்க்க வேண்டியதைப் பற்றிய அதன் முன் வரலாற்றைச் சொல்ல வேண்டும். பிள்ளைகள் முன் கூட்டியே சுற்றுலாவில் தாங்கள் எதைப் பார்க்க வேண்டும். அதற்கும் வகுப்பறைப் பாடத்திற்கும் உள்ள உறவு என்ன? என்பதை அறிந்-திருக்க வேண்டும்.

இதுதவிர இடங்களை நிர்வகிக்கும் பொறுப்புள்ளவர்களுடனும் அதிகாரிகளுடனும் கடிதப் போக்குவரத்து வைத்து முன் கூட்டியே காலத்தை-யும் இடத்தையும் நிர்ணயிக்க வேண்டும். முன்னேற்பாடு இல்லாமல் பிள்ளை-களை அழைத்துச் சென்றால் அவர்கள் ஏமாற்றத்திற்குள்ளாவார்கள். முன்னேற்பாடு செய்து கொண்டால் ஏமாற வேண்டியதில்லை, வசதியாகக் குறுகிய நேரத்தில் பார்க்க வேண்டியவற்றைப் பார்த்து விடலாம். மற்றவர்-களின் ஒத்துழைப்பும் நமக்குக் கிடைக்கும். தலைமையாசிரியரிடமும் பெற்றோர்-களிடமிருந்து எழுத்து மூலமாக அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்வதும் நல்லது.

ஆசிரியர் பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்கு முன்பு தான் ஒரு தடவை சென்று பார்த்து வர வேண்டும். சுற்றுலாவில் ஊக்கமும் உற்சாக-மும் ஏற்படுத்துவதற்காகப் பார்க்கப் போகும் இடம், பொருள்கள் முதலான-வைகளைப் பற்றிய படங்கள், புகைப்படங்கள், கட்டுரைகள், புத்தகங்கள், நூல்கள் முதலியவை இருந்தால் ஆசிரியர் பிள்ளைகளின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

படம் அல்லது இதர செய்திப்படங்கள், டேப்ரிகார்டு, பார்க்கப்படும் இடங்கள், பொருள்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தால் அவைகளைப் பிள்ளை கட்குப் போட்டுக் காட்டலாம்.

## சுற்றுலாவை நடத்துதல்

சுற்றுலாவில் பிள்ளைகளுக்கு எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் தாங்களாகவே உற்று நோக்க அனுமதி கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு ஆசிரியர் உதவியுடன் பொருள்களை உற்று நோக்கி அறிய வேண்டும். பிள்ளை-கள் உற்று நோக்கும் சமயத்தில் அவர்கள் எழுப்பும் ஐயங்களுக்குப் பொறுமை-யுடன் பதில் அளிக்க வேண்டும். பிள்ளைகள் பார்த்தவற்றைக் குறிப்பேட்டில் எழுதித் தங்களது கருத்துக்களையும், பார்த்தவைகள் தங்கள் மனத்தில் ஏற்படுத்திய சலனங்களைப் பற்றியும் அவர்கள் கையேட்டில் குறிப்பிடலாம் பிள்ளைகள் உற்று நோக்குவதற்கும், வினக்கள் எழுப்புவதற்கும் போதிய அவகாசம் கொடுக்கவேண்டும். எண்ணங்களையும், சிந்தனைகளையும் தூண்டும் படி மாணவர்களை உற்சாகப் படுத்தவேண்டும். புகைப் படங்கள் எடுத்தல், விற்கும் படங்களை வாங்குதல், பொது மக்களிடம் உரையாடிச் செய்திகளைச் சேகரித்துக் குறித்துக் கொள்ளுதல் போன்றவைகளிலும் பிள்ளைகளை ஊக்கப் படுத்த வேண்டும்.

## பின் தொடர் வேலை

சுற்றுலா முடிந்தவுடன் பின் தொடர் பயிற்சிகளுக்குத் திட்டம் வகுத்துக் கொடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் பின் தொடர் பயிற்சி கொடுக்காமல் இருக்கக் கூடாது. எப்படிப்பட்ட பின் தொடர் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்பது சுற்றுலாவைப் பொறுத்தும், பார்த்தவைகளைப் பொறுத்தும் அதற்கும் வகுப்பறைப் பாடங்களுக்கும் உள்ள உறவைப் பொறுத்தும் இருக்கும். பிள்ளைகளும் ஆசிரியர்களுமாகச் சேர்ந்து ஒரு பயண அறிக்கை தயார் செய்யலாம். கட்டுரை எழுதுதல், பாடப்புத்தகம் தயாரித்து வெளியிடல், படம் வரைதல் முதலான பின்தொடர் வேலைகளைக் கொடுக்கலாம்.

## பார்க்க வேண்டிய இடங்கள்

வாலாற்றுக் கழகம் அரசாங்க தஸ்தாவேஜீகள் வைத்துப் பாதுகாக்கப்படும் இடம், பொருட்காட்சி சாலை, கோட்டை, கொத்தளம், இடிந்த பாழ் அடைந்த கட்டிடங்கள், கலைக்கோயில் தொழுகை இடங்கள், வரலாற்றில் இடம் பெற்ற நகரங்கள், உள்ளூர் வரலாற்றுக்கு ஆதாரமாக விளங்கும் உள்ளூரிலும் அதனையடுத்தும் உள்ள வரலாற்றுச் சின்னங்கள் முதலியன.

### பயிற்சி வினாக்கள்

1 கல்விப் பயணங்களினால் ஏற்படும் அனுகூலங்கள் யாவை?

2 பின் தொடர் வேலையின் முக்கியத்துவம் யாது?

3 கல்விப் பயணத்தை எப்படித் திட்டமிடுவாய்?

# சமுதாய வளங்கள்

## விளக்கம்

சமுதாய வளங்கள் (Community Resources) என்பதற்குச் சரியான விளக்கம் கொடுப்பது சற்றுக் கடினம். இதில் பொதுவாக சமுதாயக் கட்டுக் கோப்பிலுள்ள எல்லா நிறுவனங்களும், நிலையங்களும், ஏனைய எல்லா அம்சங்களையும் உள்ளடக்கப்படுகின்றன. இவை எல்லாம் உள்ளூர் சமுதாயத்தில் காணப்படுவனவாகும், இதில் தனிப்பட்ட பெரியார்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். கற்பித்தலுக்கு இவைகளை எடுத்துக்காட்டாகவும் சொல்லலாம். அதையே பள்ளிப் பாடமாகவும் கற்பிக்கலாம். உள்ளூர் சமுதாயம் உலக சமுதாயத்தின் சுருக்கம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். உள்ளூர் சமுதாயம் சிறிய அளவுள்ள உலக சமுதாயமாகும்.

## சமுதாய வளங்களின் அவசியம்

உள்ளூர் சமுதாயத்தில் மனித வாழ்க்கை முறையின் அடிப்படையானவைகளுக்கு எடுத்துக் காட்டுகள் கிடைக்கின்றன. உள்ளூர் சமுதாயம் உலக சமுதாயத்தின் ஒரு பகுதி. உலக சமுதாயத்தை எளிதில் புரிந்து கொள்ள உள்ளூர் சமுதாய அறிவு மிகவும் உதவியாக இருக்கும் என்பது வெளிப்படை

உள்ளூர் சமுதாயம் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடியது. இச்சமுதாயம் சென்ற காலத்தோடு உறவு பெற்றிருப்பதுடன் உலக சமுதாயத்துடன் தொடர்பும் இணைப்பும் பெற்று விளங்குகிறது. உலக சமுதாயத்திற்கும் பிரதேச சமுதாயத்திற்கும் சில அம்சங்களில் ஒற்றுமை காணலாம். இன்று கல்வி பயிலும் மாணவர்கள் உள்ளூர் சமுதாயத்தின் அங்கத்தினர்களாக கொஞ்ச நாட்களில் வரவிருப்பதால் இச்சமுதாயம் அவர்களுக்குப் புரியும் படியாக இருக்கும்; சில மாணுக்கர்களின் அனுபவத்திற்குட்பட்டது. இதை உணராத ஆசிரியர், பயன்படுத்தத் தவறிய ஆசிரியர், கற்பித்தலுக்கு உதவியாக இருக்கும் முக்கியமான ஒன்றை இழந்தவராகக் கருதப்படுவர். இதை வரலாறு கற்பித்தலுக்குப் பயன்படுத்தத தவறியவராகவும் கருதப்படுவார்.

கற்பித்தல், சமுதாயத்தை ஒட்டியும், வாழ்க்கையை ஒட்டியும் அமைய வேண்டும் என்று பலர் எதிர்பார்க்கின்றனர். சமுதாயம் என்பது பொருளில் நெகிழ்ச்சி கொடுக்கக் கூடிய ஒரு சொல். உள்ளூர் சமுதாயம், பெரிய நாட்டு உலக சமுதாயம் ஆகியவற்றின் சிறிய நிழற்படமாக இருப்பதால் அதைப்பற்றிய விவரங்கள் நமது கற்பித்தலுக்குப் பெரிதும் பயன்படுகின்றன. உள்ளூர் சமுதாயத்தைப் படிக்கும் பொழுது வெளியிடங்களுக்குச் செல்லவும், கைவினைச் செயல்களில் ஈடுபடவும் அதிக வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. வரலாறு கற்பித்தலிலும், சமூகக் கல்வி கற்பித்தலிலும், சமூகத்திலுள்ள சமுதாய வளங்கள் வெகு நாட்களாகப் பயன்படுத்தி வரப்பட்டன. இக்காலத்தில் கணக்கு, அறிவியல், மொழி, புவியியல் போன்ற இதரபாடங்களைக் கற்றுக்

கொடுக்கும் ஆசிரியர்களும் சமுதாயத்தை மையமாகக் கொண்டு கற்பிக்கின்றனர். ஒரு சமுதாயத்தை ஏனையவற்றின் மாதிரியாகக் கொண்டாலும் அச் சமுதாயம் பல அம்சங்களில் தனித்து இருக்கும் என்பதை மறக்கக் கூடாது.

## முக்கியமான மூன்று பிரிவுகள்

சமுதாயத்தில் கிடைக்கும் விவரங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று இயற்கை அமைப்புக்கள். இதில் தரை அமைப்பு, நீர்வளம், நிலவளம், தாவரம், வெப்பதட்பநிலை போன்ற பல விவரங்கள் அடங்கும். இதை உள்ளூர்ப் பூகோளம் என்று சொன்னாலும் பொருத்தமாகவே இருக்கும். இரண்டாவது சமுதாய நிறுவனங்களும், அமைப்புக்களும். இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டுமானால் சமுதாயத்தில் எழும்பும் உறவினர் உறவு, நகர பஞ்சாயத்து சபை, பொழுது போக்கு நிறுவனங்கள், வியாபார வர்த்தகர்களின் சங்கம், சமயத்துறையில் ஈடுபட்ட நிறுவனங்கள், போன்றவை பற்றிக் கூறலாம். மக்களிடையே காணப்படும் சம்பிரதாயம், நம்பிக்கைக் கருத்துக்கள், மனப்போக்குகள், விருப்பு வெறுப்புக்கள் போன்றவைகள் மூன்றாவது வகையாகும்.

ஆசிரியர் உள்ளூர் புவியியல் அமைப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். காரணம் ஏதாவது ஒரு வழியில் உள்ளூர் புவியியல் அங்கு நடந்த வரலாற்றுக் காரணமாக இருப்பதுடன் அதை விவரிக்கவும் உதவியாக இருக்கும். உள்ளூரில் நடந்த சில வரலாற்று நிகழ்ச்சிகளுக்கும் புவியியல் காரணம் கூறவேண்டும். இப்படிப்பட்டவைகளைக் கற்பிப்பதால் எவ்வாறு புவியியல் காரணமாக வரலாறு நிகழ்கிறது என்பதைப் பற்றிய உண்மையைப் பிள்ளைகள் உணரும்படி செய்யலாம். சமுதாயத்தில் காணும் சமுதாய நிறுவனங்களையும், அமைப்புக்களையும் வரலாறு எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பிள்ளைகள் உணர்வார்கள். எல்லாவற்றிற்கும் நீண்ட கால வரலாறு இருக்கிறது என்பதை அறிவார்கள். சமுதாயத்தில் காணப்படும் வழக்கம், நம்பிக்கை, சம்பிரதாயம், மனப்போக்குகள் ஆகியன நாட்டின் கலாச்சாரத்தையும், உலக கலாச்சாரத்தையும், படிப்பதற்கு பூர்வாங்கமாக அமையும். சில அம்சங்களில் இவ்விரண்டிற்கும் ஒற்றுமை காணலாம்.

நாம் வரலாற்று ஆசிரியர்கள். நமது கவனத்தை இழுப்பன இரண்டு அம்சங்களே. ஒன்று உள்ளூர் புவியியல் அமைப்பு. உள்ளூர் வரலாற்றை அறிய அனுகூலமாக விளங்கும். இந்த அறிவு புவியியல் அமைப்புப் பின்னணியில் நிகழ்ந்த அடுத்த நாடுகளின் வரலாற்றை அறிவதில் அனுகூலமாக இருக்கும் என்பது உண்மை. மற்றொன்று உள்ளூர் நிறுவனங்களும், சம்பிரதாயங்களுமாகும்

உள்ளூர் வரலாற்றைப் படிப்பதற்கு வரலாற்றுச் சங்கம், வரலாற்றுக் கழகம், உள்ளூர்ப் பத்திரிகைகள், சம்பிரதாயம், கர்ணபரம்பரைக் கதைகள், கட்டுக்கதைகள், கெஜட்டுக்கள், கோயில், மாதாகோயில், மசூதிஏடுகள்,

கிராம நகரசபைகளின் நடவடிக்கைகள், தனியார் குறிப்பேடுகள், பள்ளி, கல்லூரி ஆவணங்கள், வியாபார சம்பந்தமான கணக்குகள், கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியன உதவும்.

உள்ளூர் வரலாறு நாட்டின் பொது வரலாற்றைக் கற்பிப்பதற்கு உதவும். உள்ளூர் வரலாற்றைக் கொண்டு நாட்டு வரலாற்றிற்கு விளக்கங்களும், எடுத்துக்காட்டுக்களும் கொடுக்கலாம். தொழில் பெருக்கத்தால் ஏற்பட்ட மாறுதல்களை உள்ளூர் வரலாற்றைக் கொண்டு மிக எளிதில் புரிய வைக்கலாம். (உ-ம்) (நெய்வேலி). சமயங்களைப் பற்றி கற்பிக்கும் பொழுது உள்ளூர்ச் சமயசம்பந்தமான கோவில்கள், அவர்கள் தொழுகையில் பின்பற்றும் முறைகள், அடையாளங்கள் இவற்றைச் சொல்வதின் மூலம் வரலாற்றை உயிருள்ள பாடமாக ஆக்கலாம். அரசியல் நிர்வாகத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தையும் மாறுதல்களையும் உள்ளூர் வரலாறு வாயிலாய்த் தெளிவுபடுத்த முடியும்.

வரலாற்றுச் சின்னங்கள் பலவகையான ஆவணங்கள், உள்ளூர்ப் பெயர்கள், சமூகக் கதைகள், நடத்தை பழக்க வழக்கங்கள் முதலியன சமுதாய வரலாற்றிற்கு ஆதாரங்களாக விளங்கும்.

## உள்ளூர் வரலாற்றின் முக்கியத்துவம்

நாட்டின் வரலாறு பிள்ளைகளின் அனுபவத்திற்குள் கொண்டுவரப் படுகிறது. நாட்டு வரலாற்றுக்கு உள்ளூர் வரலாற்றிலிருந்து கொடுக்கும் எடுத்துக் காட்டுக்கள் மிகவும் நன்றாக இருக்கும். பெற்ற அறிவும் வெளிப்படையாகவும் சரியாகவும் இருக்கும். மானசீக உலகத்திலிருந்து உண்மை உலகத்திற்கு உயர்த்தப்படும நாட்டு வரலாறு மனதைக் கவர்வதாக விளங்கும்.

பிரதேச வரலாற்று சம்பந்தப்பட்ட திடப்பொருள் எல்லா இடங்களிலும் கிடைக்கும். இவைகள் இறந்த காலத்தைப் பற்றியதாக இருந்தாலும் இறந்த காலத்தை நிகழ்காலத்தின் அண்மையில் கொண்டு வந்து வைக்கின்றன. இறந்த காலத்தில் இருந்த மக்களுக்கு இவைகள் உயிர் கொடுப்பதால் இவை உண்மை என்பதை எளிதில் உணரும்படிச் செய்ய உதவுகிறது. பழங்காலத்தை யொட்டிய பருப் பொருள்களை சின்னங்கள் அல்லது வரலாற்றுப் பிரசித்தி பெற்றவைகள் என்று கூறலாம்.

## சின்னங்கள்

இறந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கையை விவரிக்க விளக்கங்களாக விளங்கும் சின்னங்களும் பழம்பொருட்களும் வரலாறு கற்பிப்பதற்கு உதவிகளாக விளங்குகின்றன. வரலாற்றுக் காட்சிச் சாலையைப் பள்ளியில் நிறுவி இப்பொருள்களைச் சேர்த்து வைக்கலாம்.

## வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்கள்

வரலாற்றுத் தொடர்பு பெற்ற இடங்கள் உள்ளூரில் இருந்தால் அந்த இடங்களுக்குப் பிள்ளைகளைப் பிரயாணமாக அழைத்துச் சென்று இடத்தைப் பற்றியும் இறந்த காலத்தைப் பற்றி எஞ்சியிருக்கும் தூலப் பொருள்களை விளக்குவதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## கல்விப் பயணங்கள்

தெளிவானதும், சரியானதுமான வரலாற்றைப் பூற்றிப கற்பனை மாணவர்கள் உள்ளத்தில் தோன்றி வளரும். பிள்ளைகள் இறந்த காலத்தை அறிய நேர்முக வாய்ப்புக் கிடைக்கிறது. இறந்த காலத்தையொட்டிய எல்லாவற்றிலும் ஆழ்ந்த அக்கரையை எழுப்பும். வரலாற்றைப் பள்ளிக்கு வெளியில் உள்ள இன்றைய உலகத்தோடு ஒட்டிப் போதிக்காவிட்டால் அவை சிறக்காது.

தவிரவும் பிள்ளைகள் உற்று நோக்கும் துறையில் நல்ல பயிற்சி பெறப்போதிய வாய்ப்புக்கள் மாணவர்களுக்கு சமூகத்தைப் பற்றிய விவரங்களைப் படிக்கும் போது அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். பிள்ளைகளை அவர்களின் சமுதாயத்தைச் சுற்றியுள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்வதில் எந்தவித மான கஷ்டமும் இன்றி வெளியில் சென்று நேரில் உற்று நோக்கிக் கவனித்துப் படிக்க வாய்ப்புக்கள் அதிகம் அளிக்கப்படும் என்பது உண்மை.

நாம் ஏதாவது ஒரு காலத்தில் வாழ்ந்த மக்கள் சமுதாயம் பற்றிக் கூறும் பொழுது எல்லா அம்சங்களிலும் அச்சமுதாயத்தை இக்காலச் சமுதாயத்தோடு ஒப்பிட வேண்டும். அப்பொழுது பிள்ளைகளுக்கு உற்சாகம் உண்டாகும். பாடத்தை நன்கு கவனிப்பர். உள்ளூர் சமுதாய வளங்களில் சில வரலாற்றுப் பாடங்களுக்கு முன்னுரையாகவும் பின்னுரையாகவும் அமைய வேண்டும். வகுப்பில் பிள்ளைகளின் கவனத்தை புதிய பாடத்தில் ஏற்படுத்துவதற்குப் பிள்ளைகளது சமுதாயத்தின் பல அம்சங்கள் துணையாக விளங்கும். ஏதாவது ஒன்றில் பிள்ளைகள் பற்றுக்கொள்ள அதைப்பற்றி கொஞ்சமாவது தெரிந்திருக்கவேண்டும். சமுதாயத்தின் அடிப்படையில் வரலாறு போதித்தால் பிள்ளைகள் அக்கறை கொள்வர். கற்பிக்கப்படும் பாடங்கள் எந்த வழியிலாவது தனக்கு தொடர்புடையதாக இருக்கவேண்டும். சமுதாய வளங்கள் ஏதாவது ஒரு வழியில் பிள்ளைகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும். அவற்றை அனுபவத்தில் பார்த்து, கண்டு, சிந்தித்து அறிய சந்தர்ப்பம் கிடைக்கிறது.

வகுப்பறைப் போதனையுடன் நில்லாமல் பிள்ளைகளை சமுதாயத்தைப் பற்றியவைகளை தெரிந்து கொள்ள வெளியில் சென்று பார்த்துவர ஏற்பாடுகள் ஆசிரியர் செய்ய வேண்டும். பிள்ளைகள் சம்பந்தப்பட்ட வரையில் இம்

முறை மிகவும் நன்மை பயக்கும். பிள்ளைகள் சமுதாயத்தைப் பற்றிய அறிவைப் பெறுகின்றனர். இரண்டாவதாக சமுதாயத்தில் காணப்படும் விருப்பு வெறுப்புக்களை உணர்ந்து சமுதாயத்திற்கு ஒத்து நடப்பர். கடைசி-யாக சமுதாய நலனுக்குத் தாங்கள் பாடுபட முன்வருவர். உள்ளூர் சமுதாய வளங்களைப் படிப்பதால் கடந்த கால சமுதாயத்தின் சாதனைகளைப் பற்றி மாணக்கர்கள் பெருமையடைவதும் உண்டு. வருங்காலத்திலும் எதிர்காலத்-திலும் மேற்கொண்டு சில புதியவற்றை சாதிக்கலாம் என்ற நம்பிக்கையும் பிறக்கும். பிள்ளைகள் பலவற்றின் பேரில் விரும்பத்தக்க நல்ல மனப் போக்குகளை மேற்கொள்ளுவார்கள். அவர்கள் சமுதாயத்தின் மேல் பற்றுடையவர்களாகவும் விளங்குவார்கள். சமுதாய நலன்களுக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் தன்னால் முடிந்தவற்றைச் செய்ய ஆர்வம் உடையவர்-களாகவும் அவற்றைச் செய்யவும் முன் வருவார்கள்.

## பயிற்சி வினாக்கள்

1 சமுதாய வளங்கள் என்பதின் பொருளை விளக்குக.

2 சமுதாய வளங்களின் முக்கிய பிரிவுகள் யாவை?

3 சமுதாய வளங்களினால் ஏற்படும் பயன்களை விவரிக்கவும்.

4 சமுதாய வளங்களை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைத் தெளி-வாக்கவும்.

# பயிற்சி பதிவேடுகள்

## படநோட்டுப் புத்தகம் (Album)

இப்பட நோட்டுப்புத்தகம் பிள்ளைகள் தயார் செய்து தங்களுக்கென்று பயன்படுத்திக் கொண்டால் பிள்ளைகளுக்கு வரலாற்றுப் பாடத்தில் என்றும் குன்றாத ஒரு அக்கறை, பற்று ஏற்படும். சில பாடப் பகுதிகளுக்கும், தலைப்பு-களுக்கும் ஏற்ற படங்கள் சேகரிக்கப்பட்டிருந்தால் அவைகள் பிள்ளைகளின் மனத்தில் உயிர் பெற்று இருக்கவும், அவர்களுக்கு எளிதில் விளங்கவும் வாய்ப்பாக அமையும். வரலாற்றில் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்யவும், விசாரணை, செய்யவும் ஒத்திட்டுப் பார்க்கவும் இப்படப் புத்தகம் ஆரம்பம் என்று கருதவேண்டும். பள்ளியில் நடைபெறும் போதனை சிறப்புடன் விளங்கும். போதிக்கப்பட்டவைகள் பிள்ளைகளின் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிய இப்பட நோட்டுப் புத்தகம் உதவி செய்யும். படங்களைச் சேர்த்துப் படப் புத்தகமாகச் செய்வதில் பிள்ளைகள் மனச் சந்தோஷம் பெறுவர்.

## படப்புத்தகத்தைத் தயார் செய்தல்

பிள்ளைகளின் பட நோட்டுப் புத்தகத்தை தாளைப் பவுண்டு செய்யப் பட்ட அட்டைகளில் துவாரம் போட்டுச் சேர்க்கலாம். இடது கைப் பக்கத்தில் உள்ள பக்கங்களில் மட்டும் படங்களுக்குத் தக்கவாறு பிரித்து ஒட்டுவதற்குப் பயன்படுத்தவேண்டும். எதிரில் அல்லது வலப்புறம் அமைந்த பக்கங்களில் குறிப்புகள், விளக்க உரைகள், சிறிய கட்டுரைகள் எதிரில் ஒட்டப்பட்ட படங்களையொட்டி எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## படங்கள் எப்படியிருக்க வேண்டும்

படங்கள் உண்மைக்குப் புறம்பானதாக இல்லாமல், உண்மையான தாகவும், உண்மையை எதிரொலிக்கும் படியாகவும் இருக்கவேண்டும். படங்கள் இறந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை மறுபடியும் பிள்ளைகளின் மனக் காட்சியில் வைக்க உதவுவனவாக இருக்கவேண்டும். சமகாலத்தில் எழுதப் பட்ட அல்லது வர்ணங்களால், முக்கியமாகக் கருப்பு நிறத்தால், தீட்டப்பட்ட நகல்கள் இக்காலத்தில் கிடைக்கின்றன.

இப்படிப்பட்ட படங்களே சிறந்தவை. படங்கள் ஏதாவது பிள்ளை களின் கவனத்தை இழுக்கும் செயலில் ஈடுபட்டு இருப்பனபோல இருக்க வேண்டும். படங்களில் பலவிதமானவை இருக்கவேண்டும்.

இப்படங்களுக்குப் பொருத்தமான தலைப்புகள் ஓரிரண்டு வார்த்தைகளில் கொடுக்கவேண்டும். இதை மாணவர்களின் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும். உற்ற சமயத்தில் ஆசிரியர் மாணவர்களுக்கு உதவலாம். படங்கள் செயல் காட்சியில் இருப்பதுடன் எளிதில் புரிந்து கொள்ளும் விதமாகவும் அடையாளம் கண்டு கொள்ளும்படியாகவும் இருக்கவேண்டும். காலத்தையும் மக்களின் பண்பாட்டையும் மனதில் கொண்டு இவைகளை மதிப்பிட வேண்டும்.

## படங்களைப் படித்தல்

பிள்ளைகள் படங்களுக்கு ஏற்ற தலைப்புகளைத் தயார் செய்யவேண்டும். மாணவர்கள் கூடி சரியான தலைப்பு ஒன்றை ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கச் சொல்லலாம். படங்களை அடிப்படையாகக் கொண்டு கவிதை, கட்டுரை புனையும்படி வேலை கொடுக்கலாம். இப்படங்கள் வரலாற்று உண்மையை பிள்ளைகளின் மனத்தில் ஏற்பட உதவி செய்யும். கேலிச்சித்திரங்கள் இக்கால நடப்பு நிகழ்ச்சிகளுக்குப் பெரிதும் உதவும். கேலிச் சித்திரங்கள் வரையும் படியும் தூண்டலாம். பத்திரிகைகளில் வரும் கேலிச்சித்திரங்களை ஒட்டி அதற்கு விளக்கம், தலைப்பு, குறிப்பு தயாரிக்கும்படி தூண்டலாம்.

## குறிப்பெடுத்தலும் தொகுத்தலும்

குறிப்பெடுத்தலுக்கும் குறிப்புத் தொகுத்தலுக்கும் வேறுபாடு உண்டு ஆசிரியர் சொல்வதை அப்படியே எழுதிக் கொள்ளுதல், கரும்பலகையில் எழுதப்பட்டதின் நகலை எடுத்தல்—குறிப்பு எழுதுவது ஆகும். இதில் பிள்ளைகளின் பங்கு குறைவு. எழுதுவதில் மட்டும் முடிகிறது, தவிர வேறொன்றும் செய்வதில்லை.

குறிப்பு தொகுத்தலில் பிள்ளைகளின் பெரும்பங்கு குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் பேச்சிலிருந்தோ கற்பிப்பதிலிருந்தோ சில சிறப்பான அம்சங்களை ஒரு சில சொற்களில் மட்டும் குறிப்பு தொகுத்தல். இதில் பிள்ளைகளின் சுய முயற்சி வலியுறுத்தப்படுகிறது.

இக்குறிப்புத் தொகுப்பினல் பிள்ளைகள் பெரும் பயன் அதிகம், இது பிள்ளைகளின் சிந்தனையைத் தூண்டுகிறது. சம்பவங்களைப் பொருக்கி எடுத்தல், சுருக்கி எழுதுதல், முக்கியமானவைகளை மட்டும் தொகுத்தல் போன்ற வேலைகளில் பிள்ளைகள் ஈடுபடுவதால் கற்றவைகளை எளிதில் மனத்தில் நிறுத்திக் கொள்ளவும், வேண்டும் போது வெளியிடவும் உதவுகிறது. பல அம்சங்களைப் பற்றிய தெளிவான அறிவு பெறவும் உதவுகிறது.

பாடச் சுருக்கத்தை ஆசிரியர் சொல்ல எழுதுதல், வினுவிடை கொடுத்தல் முற்றிலும் தடுக்கப்பட வேண்டும். காரணம் இவற்றைப் பிள்ளைகள் தவறில்லாமல் எழுதிக் கொள்வது கிடையாது. இதைத் தவருக உருப்போடுவதற்கு மட்டும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

குறிப்புகள் பிள்ளைகளின் சொந்தக் குறிப்புகளாக விளங்கவேண்டும். சுயமுயற்சியில் எழுதப்பட்டதாக இருந்தால் இவற்றைப் பிள்ளைகள் பயன்படுத்துவதில் கஷ்டப்பட மாட்டார்கள். சிற்சில சமயங்களில் சொல்வதை எழுதிக் கொள்ளும் முறையையும் அனுசரிக்கலாம். இதைக் கீழ் வகுப்புகளில் அனுசரிக்கலாம், ஆனுல் மேல் வகுப்புகளுக்கு வந்தவுடன் பிள்ளைகள், சுயமுயற்சியில் எடுத்துத் தொகுத்துக் கொள்வதில் அவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டும். கீழ் வகுப்புகளில் குறிப்புகள், நுட்பமாகத் தொகுத்தலில் பிள்ளைகளுக்கு அனுபவப் பயிற்சி கொடுக்கவேண்டும். நாளடைவில் கரும்பலகைச் சுருக்கம் பார்த்து எழுதிக் கொள்வதைவிடத் தாங்களே நோட்டுப் புத்தகத்தில் குறிப்புகளை எழுதிக் கொள்ளும்படி தூண்ட வேண்டும்.

கீழ் வகுப்புகளில் நடத்தப்பட்ட பாடத்தின் எல்லா அம்சங்களைப் பற்றிய குறிப்புகள் தொகுப்பது கஷ்டம். ஆகையினுல் மிகவும் முக்கியமானவைகளை மட்டும் குறிப்பிட்டால் போதுமானதாகும். பிள்ளைகள் பாடத்தின் முக்கிய கருத்துக்களையும், தங்களிடமுள்ள பாடப் புத்தகத்தில் காணப்படாத கருத்துக்களையும் தங்களின் குறிப்பேட்டில் எழுதிக் கொள்ளச் செய்ய வேண்டும். ஆசிரியர் பொறுமையுடன் இருந்து பிள்ளைகளுக்கு உதவி வழிகாட்டவேண்டும். ஆசிரியர் மாதிரி கொடுத்துக் குறிப்புகள் தொகுக்கும்படி பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.

பிள்ளைகளுக்கு சில பாடங்களில் பிரதானத் தலைப்புக்களையும், அதற்குட்பட்ட உள்தலைப்புகளையும் வண்ணத்தால் எழுதி அவைகளை ஒட்டிசில விவரங்களைச் சேகரித்து எழுதும்படி செய்ய வேண்டும். அவர்கள் குறிப்புகள் எழுதி தொகுத்தலில் அதிகப் பயிற்சி பெறுவர் என்பது உண்மை.

## மேற்பார்வை

ஆசிரியர் அடிக்கடி, பிள்ளைகளின் வேலையைக் கண்காணிக்க வேண்டும். கண்காணிப்பு சாத்தியமாக இல்லை என்ருல் இது போன்ற சுயமுயற்சி வேலைகள் கொடுப்பது விரும்பத் தக்கதல்ல என்று பேராசிரியர் paul klapper குறிப்பிடுகிருர்.

## தொகுக்கும் முறை

குறிப்புகள் எடுப்பதிலும் எடுத்த குறிப்பைத் தொகுப்பதிலும் ஏதாவது ஒரு முறையைக் கையாள வேண்டும். ஆசிரியர் கொடுக்கும் வினுவிடை, பாடச்சுருக்கம், சொல்வது எழுதுதல், எல்லாம் நோட்டின் வலதுபக்கத்தில்

மட்டும் எழுதும்படியும் இடது பக்கங்களில் தங்களின் சுயமுயற்சியில் குறிப்பு எடுத்துத் தொகுப்பதற்கும் பயன்படுத்த வேண்டும். இப்பக்கங்களில் படங்கள், ஸ்கெட்ச், பிளான், கதைத் துணுக்குகள், மேற்கோள்கள், நாட்டுப் பாடல், பாட்டு ஆகியவைகளை எழுதி நிரப்பிக் கொள்ளலாம். இதில் பாட நேரத்தில் எழுதிக் கொள்வதை யொட்டி இருப்பதால் இதற்குச் சுயமுயற்சி வேண்டும். விவரங்களைச் சேகரித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது.

ஒரு சில பக்கங்களை ஒதுக்கி அவற்றில் காலக்கோடுகள் போடலாம். இக்காலக் கோடுகளில் பாடம் நடைபெறுவதையொட்டி தேதிகளையும் நடந்த சம்பவங்களையும் அவ்வப்போது குறித்து வைக்கலாம்.

## பயிற்சி நோட்டுப் புத்தகம்

இன்றைய உயர்நிலைப்பள்ளிகளில் அச்சிடப்பட்ட பயிற்சி நோட்டுப் புத்தகங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. சில காரணங்களை முன்னிட்டு அச்சிடப்பட்ட பயிற்சி நோட்டுப் புத்தகங்களை உபயோகப்படுத்தக் கூடாது என்பது பலரின் கருத்து. அச்சிடப்பட்ட பயிற்சிப் புத்தகங்களைப் பிள்ளைகள் சரியாக உபயோகப்படுத்துவது இல்லை. முறைப்படியும் அழகாகவும் செய்வ-தில்லை. சுயமுயற்சியும் தூண்டப்படுவது கிடையாது. வகுப்பில் 40 பிள்ளை-களில் ஒருவர் மட்டும் செய்திருந்தால் போதும். மற்றவர்கள் அதைப்-பார்த்து அதில் அடங்கிய வாக்கியங்களையும் சொற்களையும் வாசிக்காமல் காலி-யிடத்தை நிரப்புவதில் ஈடுபடுகின்றனர். மாணவர்களுக்கு இப்பயிற்சி நோட்டுப் புத்தகங்கள் அறிவு விளக்கம் பெறுவதில் உதவுவதில்லை என்றே சொல்லவேண்டும். இப்பயிற்சிப் புத்தகங்கள் கற்றதை நினைவுபடுத்தி கற்றதில் விளக்கம் பெறுவதற்கு மட்டும் தான் இது பயன்படுகிறது. பயிற்சி செய்தவுடன் பிள்ளைகள் அதைத் திருப்பிப் படிக்கமாட்டார்கள். குப்பைத் தொட்டிக்கோ காகிதக் கடைக்கோ போக வேண்டியது தான்.

அச்சிட்ட பயிற்சி நோட்டுப் புத்தகங்களுக்குப் பதில் அச்சிடப்படா பயிற்சி நோட்டுக்கள் தனியாக வைக்கும்படி தூண்டலாம். இப்பயிற்சி நோட்டுப் புத்தகத்தில் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடைகள் புத்தகத்தைப் பார்த்தோ, குறிப்பு நோட்டுக்களிலிருந்தோ, தொகுப்பு நோட்டுக்களிலிருந்தோ தேடி விடைகள் எழுதலாம். சாதாரணமாக அச்சிடப்-பட்ட பயிற்சி நோட்டுப் புத்தகத்தில் காணும் எல்லாவிதமான பயிற்சிகளும் கொடுக்கலாம். பிள்ளைகள் எல்லாவற்றையும் தாங்களாகவே எழுத வேண்டிய-திருப்பதால் அதிக நேரம் செலவிட வேண்டும். இம்முறையில் பிள்ளைகள் நற்பயனைப் பெறுவர்.

இப்பயிற்சி நோட்டுப் புத்தகத்தில் சில வினாக்களுக்குக் கட்டுரை வடி-வத்தில் விடை எழுதும்படி செய்யலாம். ஆய்வுக்கட்டுரையும் எழுதும்படித் தூண்டலாம். வரலாற்றில் வரும் பெரியோர்களின் குண நலன்களை

ஆராய்ந்து கட்டுரை எழுதும்படி செய்யலாம். சொந்தக் கருத்துக் கட்டுரைக்கும் இடமளிக்க வேண்டும். கற்பனைக் கடிதம், ஒத்த மேற்கோள்கள், வரலாற்றில் இடம் பெற்றவர்களின் வாழ்க்கை ஆகியவற்றைப் பற்றிய பயிற்சிகளும் கொடுக்கலாம். புதுமாதிரி கேள்விகளுக்கு விடை எழுதி வரும்படியும் செய்யலாம்.

## தேசப்பட நோட்டுப்புத்தகம்

வரலாறு கற்கும் எல்லா மாணவர்களிடையே அத்தியாவசியமாக வைக்கப்பட வேண்டியது தேசப்பட நோட்டுப் புத்தகமாகும். அச்சிடப்பட்ட பயிற்சி நோட்டுப் புத்தகங்களில் படம் வரையவும் படம் படிக்கவும் வாய்ப்புகள் அதிகம் இல்லை. படத்தை நிரப்புதல் ஒன்றுதான் இதில் இடம் பெறுகிறது. இதனுல் அதிக நன்மை பயக்கும் என்று சொல்ல முடியாது. பாடப்புத்தகத்தில் சில தேசப்படங்கள் சேர்க்கப் பட்டிருக்கும். எனினும் இது போதுமானதாகக் கொள்ள முடியாது. பிரதேச மொழியில் கிடைக்கும் வரலாற்று தேசப்படங்கள் அடங்கிய புத்தகம் மாணவர்கள் வாங்கி உபயோகிக்கும்படித் தூண்டலாம். இது தவிர பிள்ளைகள் அவசியமான தேசப்பட நோட்டுப் புத்தகத்தில் தேசப்படங்களுடன் கோட்டுப் படங்கள், போர்க்களங்களின் படம், வரைபடம், போன்றவைகளையும் வரையலாம்.

இத்தேசப்பட நோட்டுப் புத்தகம் சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனல், இதில் ஒரு பக்கம் படங்களும், ஸ்கெட்சுகளும் எதிர்ப்பக்கம் அதைப்பற்றிய குறிப்புக்கள் ஓரிரண்டு வரிகளில் எழுதுவதற்காகவும் பயன்படுத்தவேண்டும். வகுப்புப் பாடங்களை யொட்டிப் படங்கள் வரைந்து வரும்படி கட்டளையிட வேண்டும். இதை அடிக்கடி மேற்பார்வையிட்டுக் கையெழுத்திட வேண்டும். பிள்ளைகளின் வேலையை மதிப்பிட்டு வகுப்பு மாற்றலுக்கு இதைக் கணக்கிட வேண்டும். தேசப்படங்கள், வரைபடங்கள், ஸ்கெட்சுகளுடனும் காலக் கோடுகளையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆரம்பத்தில் மாணுக்கர்கள் பாடப்புத்தகம், தேசப்படப் புத்தகம் ஆகியவற்றுள் உள்ள படங்களைப் பார்த்து நகல் வரையும் பயிற்சியைக் கொடுக்கலாம். பெரிய சுவர்ப் படங்களைப் பார்த்து அதே அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ நகல் வரையும் பயிற்சியைக் கொடுக்கலாம். இப்பயிற்சியை அடிக்கடி கொடுக்க வேண்டும். அதற்கு அடுத்த படியாக சில குறிப்பிட்ட நாடு, பெரிய பகுதியின் வெளிப்படத்தை வரைந்து அதில் சொல்லப்பட்ட சில விவரங்களை மாத்திரம் கண்டு குறிக்கும்படியானப் பயிற்சியைக் கொடுக்க வேண்டும். இதில் அப்படியே ஒன்றைப் பார்த்து நகல் எடுக்கச் சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. அதற்குப்பதிலாக விவரங்களைத் தேடிக் கண்டு பிடித்துக் குறிக்க வேண்டியிருப்பதால் பிள்ளைகளின் சுய முயற்சிக்கு ஆக்கம் அளிக்கப்படுகிறது. படங்களை வேண்டிய அளவுக்குக் கருவிகளைக் கொண்டு வரையப்-

பயிற்சி கொடுக்கலாம். இதில் பிள்ளைகள் பாண்டோகிராப், எபிடயாஸ் கோப் கருவிகளின் உதவியை நாடி அதை உதவியாகக் கொண்டு படம் வரையும் அனுபவப் பயிற்சி பெறுவர். சில சந்தர்ப்பங்களில் ஞாபகத்தை அடிப்படை-யாகக் கொண்டு வெளிக்கோட்டுப்படம் வரைந்து ஒரு சில விவரங்களைக் குறிக்கும்படிச் செய்யலாம். அதிக அனுபவப் பயிற்சி கொடுத்த பிறகே இப் பயிற்சி அளிக்க வேண்டும். கடைசியாகப் பாடப்புத்தகத்தையோ, கொடுக்கப்-பட்ட விவரங்களைக் கொண்டோ, மூலதேசப் படங்களை உயர்தர வகுப்பில் ஒரு சில மட்டும் வரையும் பயிற்சியைக் கொடுக்கலாம்.

## வரலாற்றுக் குறிப்பேடு

மாணவர்கள் சொந்தமாக ஒரு வரலாற்றுக் குறிப்பேடு வைத்துக் கொள்ளலாம். வரலாற்றில் சில சம்பவங்களும், சில தனிப்பட்டவர்களும், பிள்ளைகளின் மனத்தைக் கவரலாம். அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அவை-களைப் பற்றிய மேல் விவரங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் உண்டாகலாம். தன் முயற்சியாலும் ஆசிரியர் உதவியாலும் சேகரிக்கப்பட்ட வரலாற்றுத் துணுக்குகளை வகைப்படுத்தி தனியான நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டு வரலாம். இந்நோட்டுப் புத்தகம் பிள்ளைகளின் சொந்த உடைமையாக இருந்து பின்வரும் நாட்களில் உபயோகமாக இருக்கும்.

## அன்றுடச் செய்திக் குறிப்புகள்

நிகழ் காலத்தில் நடை பெறும் சம்பவங்களை அறிவதில் ஆவல் எழுப்பு-தல் வரலாறு போதிப்பதன் நோக்கங்களில் ஒன்று. வரலாறு அடிப்படையில் தொடர்ந்து சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கலாம். வரலாற்றில் இடம் பெற வேண்டிய நிகழ்ச்சிகளும் அப்போதைக்கப்போது நிகழலாம். இவற்றை அறிந்து அதை நோட்டுப் புத்தகத்தில் குறிக்கலாம். பிறகு ஒரு ஆண்டு நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் ஒருகாலக் கோடு தயார் செய்யும் படியும் பிள்ளைகளை ஊக்குவிக்கலாம். அது போல முக்கியமான நாட்டு உலக வரலாற்று நிகழ்ச்சிகளையொட்டி தினசரி இதழ்களிலும், வார மாத இதழ்களிலும் வெளியிடப்படும். தேசப்படங்களை கத்தரித்து நடப்பு நிகழ்ச்சிகளுடன் பொறுத்தமான இடங்களில் இணைக்கலாம். அது சாத்தியப்படா விட்டால் சிறிய அளவில் வெளிக்கோட்டு எல்லைப் படம் வரைந்து நிகழ்ச்சியையொட்டி ஓரிரண்டு விவரங்களை அதில் குறிக்கலாம்.

## கேலிச் சித்திரப் புத்தகம் (Book of Cartoons)

தற்காலத்தில் தினசரி இதழ்களிலும் வார மாத இதழ்களிலும் கேலிச்-சித்திரங்கள் மாநிலம், நாடு, உலக நிகழ்ச்சிகளையொட்டி வெளியிடப்-படுகின்றன. நடப்பு நிகழ்ச்சிகளின் உட்கருத்தை மிக எளிதில் மனதில் பதியும் வண்ணம் இக்கேலிச் சித்திரங்கள் வெளியிடப்படுகின்றன. இவற்றை

ஒவ்வொரு மாணவனும் சேர்த்து வைக்கவேண்டும் என்று விருப்பப்பட்டாலும் நடைமுறையில் சாத்தியம் இல்லை. எனவே வகுப்புக்குப் பொதுவாகவும், மாணவர்கள் தொகுதியாகப் பிரிந்து பிரிவுகளுக்குப் பொதுவாகவும், இவற்றைச் சேர்த்து வைக்கலாம். சேர்த்து வைத்தால் மட்டும் போதாது. அவற்றின் உட்கருத்தை ஓரிரண்டு வாக்கியங்களில் எழுதும் படியும் தூண்டவேண்டும். இவ்வேலை மேல் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் ஏற்றதாக இருக்கும். ஆனால் கேலிச்சித்திரங்களைத் தேடிச் சேர்ப்பதில் எல்லா மாணவர்களும் மகிழ்ச்சியே அடைவார்கள். மேல் வகுப்பு மாணவர்களுள் சிலரிடையே அப்படியே நகல் எடுக்கும் திறன் காணப்பட்டாலோ அல்லது நிகழ்ச்சிகளையொட்டி வரையும் திறன் காணப்பட்டாலோ அதை வளர்க்க ஆசிரியர் வாய்ப்புக்களை அளிக்கவேண்டும்.

## காலக்கோட்டுப் புத்தகம் (Book of Chronology)

காலக்கோட்டுக்காகத் தனி நோட்டுப் புத்தகம் ஒன்று வைப்பதற்குப் பதிலாக பயிற்சி நோட்டுப் புத்தகத்தில் (Work book) காலக்கோடு சம்பந்தமான எல்லா பயிற்சிகளையும் அடக்கிவிடலாம். ஆசிரியர் தனி நோட்டுப் புத்தகம் குறைந்த பக்கங்களில் வைக்க விரும்பினால் அதில் கால சம்பந்தமான பல வகையான எழுத்துப் பயிற்சிகளை பாட வரிசையில் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து வரலாம். இதில் வம்சாவளியையும் இணைக்கலாம். காலக்கோடுகளில் தனிப்பட்டவர்கள் சமகாலத்தவராய் இருந்தால் ஒப்பிடுதல். வட இந்தியா—தென் இந்திய, இந்தியா-ஐரோப்பா, இந்தியா-உலகத்தின் இதர பகுதி ஆகிய வெவ்வேறு இடங்களில் சமகாலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்காக காலக்கோடுகள் வரையலாம். காலக்கோடுகளை குறிப்பிட்ட அளவு விகிதத்தில் அமைத்து வரைய வேண்டும்.

வாழ்க்கைக் குறிப்புகளுக்கும் தனியான நோட்டுப் புத்தகம் வைக்கலாம். இதில் பாடங்களில் ஆங்காங்கு வரக்கூடிய வரலாறு பிரசித்தி பெற்றவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும், தங்களுடைய வகுப்புப் பாடப் புத்தகத்திலிருந்தும், துணையாதரவான பாடப் புத்தகங்களிலிருந்தும் சேகரித்து வகைப்படுத்தித் தொடுக்கவேண்டும். வரலாற்று நூல்நிலையத்தில் வைக்கப்பட்ட பார்வைப் புத்தகங்களையும், இதர நூல்களையும் மாணவர்கள் அடிக்கடி பயன்படுத்தி எழுதிவர அவர்களை ஆசிரியர் உற்சாகப் படுத்தவேண்டும்.

மாணவர்கள் நாட்குறிப்பேடுகளை ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு ஆண்டிலும் எழுதி வரும் பழக்கத்தைத் தூண்டவேண்டும். மாணவர்கள் பள்ளியிலும் பள்ளி சம்பந்தமற்ற தனது புறச்சூழல்களிலும் நிகழும் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தை உத்தேசித்து அவ்வப்போது ஓரிரண்டு எழுதி வரும்படி தூண்டவேண்டும். இவ்வகையான குறிப்புகள் தான் வருங்காலத்தில் வரலாற்றுக்கான ஆதாரங்களாக மாறுகின்றன என்ற உணர்வை ஏற்படுத்தும். பள்ளியின் 'லாக்புக்' மிகவும் முக்கியமானதொன்றும். பள்ளி இறுதி வகுப்பு மாணவர்கள் இதை எழுத முற்படலாம்.

## பார்வைப் புத்தகம் (Book of Ready Reference)

இதை மேல் வகுப்பு மாணவர்கள் தனித்தனியாகவோ அல்லது சிலர் ஒன்று சேர்ந்தோ எழுதி வரலாம். இதில் பாடங்களில் வரும் இடத்தின் பெயர், ஆட்சிகளின் பெயர், முக்கியமான தேதிகள் அகர வரிசையிலும் கால வரிசையிலும் எழுதி வரலாம். நமது பள்ளிகளில் வைக்கப்படும் வரலாற்றுப் புத்தகத்தில் Index இணைப்பது கிடையாது. வரலாறு பாடப் புத்தகங்களில் Index அமைக்கும் அளவுக்கு விவரங்கள் கொடுக்கப்படுவது இல்லை.

## காலப்படம் தயாரித்தல்

வரலாறு கற்கவிருக்கும் மாணவர்கள் வரலாற்றைக் கண்ணோட்டத்தில் முதன்முதலாக அளவிடுவதற்கு முற்படும் பொழுது இரண்டு முக்கிய அம்சங்களை மனதில் கொள்ளவேண்டும். பிள்ளைகளின் வயதிற்கும் வகுப்பிற்கும் ஏற்றபடியும், பிள்ளைகள் பெறவேண்டிய தேர்ச்சியையும் மனதில் கொண்டு பாட விவரங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அப்படித் தேர்ந்தெடுத்த பாட விவரங்களை ஒருங்கனமக்கும் வழியையும் முறையையும் ஆசிரியர் தெரிந்திருக்கவேண்டும்.

ஆரம்பத்தில் வரலாறு கற்றுக் கொடுப்பதின் நோக்கம் பிள்ளைகளுடைய கவனத்தையும், ஆவலையும் பாடத்தில் திருப்புவதும் அவர்களுடைய கற்பனையுள்ளத்தைத் தூண்டுவதும், அதை ஊக்குவிப்பதுமாகும். அவர்கள் பின் நாட்களில் கற்கவிருக்கும் வரலாற்றிற்கு அடிப்படையான ஒரு சில விவரங்களை அவர்களுக்கு வரலாற்று ஆசிரியர்கள் அறிமுகப்படுத்த வேண்டும். இவற்றை அனைத்தும் "வரலாற்றுக் காலப்படத்தில்" ஒருங்கமைத்து இணைக்க முற்படவேண்டும். இப்பட மூலம் மனித வரலாற்றின் போக்கும் முக்கியமான, அம்சங்களும் பிள்ளைகளின் மனதில் மிக எளிதில் நிலைநிறுத்த முடியும்.

மாணவர்கள் இயற்கையிலேயே ஆக்கவேலையில் ஈடுபடும் மனப் போக்கு படைத்தவர்கள். அப்படி ஆக்கவேலைகளில் ஈடுபடும் பொழுது அவர்களுடைய மனதில் ஓரிரண்டு வரலாற்று நிகழ்ச்சிகள் பதிவு பெறுகின்றன. நிகழ்ச்சிகள் வரலாற்றின் எலும்புகள். அவைகள் வரலாற்றின் தசையாகவும் குருதியாகவும் கொள்ளமுடியாது. எனினும் இந்த நிகழ்ச்சிகள் வரலாற்றுக்கு இன்றியமையாதன. நிகழ்ச்சிகளில் உள்ள முன்னேற்றம், அவற்றுள் அமைந்துள்ள தொடர்பு ஆகியவற்றால் உயிர் பெற்று விளங்குகிறது. எனவே வரலாறு கற்க ஆரம்பிக்கும் தருணத்திலேயே வரலாற்றில் உள்ள முக்கியமான கட்டங்கள், நிகழ்ச்சிகள், ஆண்டுகள் ஆகியவற்றை ஓரளவு பிள்ளைகளின் மனதில் பதிய வைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். இதற்கு வரலாற்றுக் காலப்படம் உதவியாக இருக்கும். இக்காலப் படத்தை ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து அமைக்கவேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகுப்பிலும் படிக்கவிருக்கும் வரலாற்றிற்கான

காலப்படத்தை முதல் ஒரு சில வகுப்புகளில் அமைத்துக் கொள்ளவேண்டும். இக்காலப்படம் ஆண்டு முழுவதும் கற்கும் வரலாற்றுப் பாடத்திற்குப். பூர்வாங்கமாக அமையும். எனவே இதற்கு காலப்படமும் (Map of history) பதிவுப் படமும் Record sheet ஆகிய இரண்டு வழிகளைக் கையாளலாம்.

காலப்படமும் காலப்பதிவு சார்டுகளும் தயாரிக்க வேண்டும். இவற்றுள் மிகத்தெளிவாகக் காணப்படும் வரலாற்றுப் போக்குகள், மிகவும் உன்னதமான வரலாற்று நிகழ்ச்சிகள், வரலாற்றுப் போக்கையே திருப்பிவிடும் சம்பவங்கள், வரலாற்றில் தங்களிடத்தை நிரந்தரமாக்கிக் கொண்ட வரலாற்றுப் பெரியவர்கள், அவர்கள் காரணமாக வரலாற்றில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள் ஆகியவற்றை அனைத்தும் கால உறவில் சரியான இடத்தில் சுட்டிக் காட்டுவதற்காக வரலாற்றுக் காலப்படங்கள் உருவாக்கப்பட வேண்டும். காலப்படங்களுக்குத் துணையாக காலப்பதிவு சார்டுகள் வரைய வேண்டும். காலப்பதிவுச் சார்டுகளில் விவரமான நிகழ்ச்சிகள், வரலாற்று உண்மைகள் சேர்க்கப்படவேண்டும். இது மாதிரியான காலப்படங்களும், பதிவுச் சார்டுகளும் தயாரித்து அதன் மூலம் வரலாற்றின் வளர்ச்சிக் கருத்துகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். பிள்ளைகளிடம் மிகவும் குறைவான அளவில் கால உணர்வுக்குப் பயிற்சி அளித்து அதை மேலும் வளர்க்க முற்பட வேண்டும்.

ஒவ்வொரு வகுப்பிலும், வரலாற்று அறையிலும் ஒரு பெரியதும் நீண்டதுமான வரலாற்றுக் காலப்படத்தை வரைந்து வைக்கவேண்டும். ஆண்டு முழுவதும் அது பயன்படும்படியான வரலாற்று விவரங்களை, அதில் சேர்க்க வேண்டும். அவற்றை நிரந்தரமாக வைத்துக் கொள்ள வேண்டும். வகுப்பறைச் சுவர்களில் அனைத்தும் கரும்பலகையாக பயன்படுத்தப்பட வேண்டும். இக்காலப் படத்தை ஒரு ஆண்டு காலத்தில் படிக்கும் வரலாற்றுக்கான முக்கிய காலவிவரங்கள் அனைத்தும் இடம் பெறுவதால் அவற்றை வேண்டும் போதும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்திக் கொள்ளலாம். இது போன்ற காலப்படங்கள் நிரந்தரமாக வகுப்பறையில் காணப்பட்டால் பிள்ளைகளிடம் உள்ள கால உணர்வு நாளுக்கு நாள் வளரும். வளர்ச்சியைப் பற்றிக் கூறுவது வரலாறு என்ற உண்மையை வேறு வழியிலும் மாணவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள். வரலாற்றுக் காலப்படத்தில் குறிக்கப்படும் விவரங்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைந்த அளவிலேயே இருக்க வேண்டும். காலப்படத்தில் பலவற்றைக் குறித்து நெறுக்கப்பட்டால் அதன் பயன் மிகவும் குறையத் தலைப்படும். எனவே இக்காலப்படத்தில் பெரிய நாகரீகங்கள், வரலாற்றுப் போக்குகள், சிறப்பான இடங்கள், வரலாற்று சிறப்பு பெற்ற பெயர்கள் ஆகியவை இடம் பெற வேண்டும்.

காலப்படங்களினால் அதிகப்பயன் உண்டு. இதில் காலத் தொடர்பில் ஒரு நிகழ்ச்சி மற்ற நிகழ்ச்சிகளின் இடத்தைப் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தும் காலப்படத்தில் உள்ளவற்றை ஞாபகப்படுத்துவதில் மனமும் கண்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து துணைபுரிகின்றன.

பதிவுச் சார்டுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை சற்று நினைத்துக் பார்க்க வேண்டும் (உ.ம்) எகிப்திய நாகரீகத்தை எடுத்துக் கொண்டால் ஒரு காகிதத்தில் கைப்படமாக நைல்நதி சமவெளியை வரைந்து அதைச் சுற்றிலும் முக்கோணம், சதுரம், வட்டம் ஆகியவற்றை வரைந்து அத்துடன் இணைப்பது அப்படி வரைந்தவைகளையும் எடுத்தால் எகிப்திய நாகரீகத்தின் சிறப்பான அம்சங்களை உலோகத்தைக் கண்டு பிடித்தனர். சித்திர எழுத்துக்கள் பிரமிடுகள், பேபிரஸ் போன்றவைகளையும் எழுதினால் அவற்றை மாணவர்கள் எளிதில் உணர்ந்து புரிந்து கொள்ளுவார்கள். அத்துடன் இது மாதிரியான பதிவுச்சார்டுகளைப் பிள்ளைகள் வரையும்படி அனுபவ வேலை கொடுக்கவேண்டும். வரலாற்றுக் காலப்படத்தை வகுப்பு முழுவதும் சேர்ந்து தயாரிக்கவேண்டும் ஆசிரியர் இதில் பிள்ளைகளின் முழு ஒத்துழைப்பைப் பெறவேண்டும். வகுப்பில் பிள்ளைகள் அனைவரும் தங்களுக்கென்று ஒரு வரலாற்றுக் காலப்படம் தயார் செய்து பயன்படுத்தலாம். இதில் படங்களையும் இணைக்க வேண்டும்.

## மாணவர்களின் செயல்கள்

இதை இரண் வகையாகப் பிரிக்கலாம். ஒன்று பாட சம்பந்தமான எல்லா வகையில் எழுத்து மூலம் வெளியிடுதல்.] இரண்டாவது வகை வரலாற்றில் தாம் கற்ற அறிவைக் கொண்டு கைகளைப் பயன்படுத்தி படைப்பில் இறங்குதல், இரண்டாவது கைவினைத் திறன் பற்றியது.

மாணவர்கள் ஆசிரியரின் பாடத்தையும், வரலாறு சம்பந்தமான ஒலி பரப்புக்களையும், வரலாறு சம்பந்தமான உரையாடல், பேச்சு இவற்றைக் கவனமாகக் கேட்டும் பழக்கத்தையும் பயிற்சியையும் அளிக்கலாம். மாணாக்கர்கள் வரலாற்றில் உணர்ச்சிகளை வெளிப்படுத்தித் தூய்மை பெறுவதற்கு வாய்ப்புக்கள் அளிக்கலாம். வரலாற்றுப் பெரியார்களின் உணர்ச்சியில் பங்கு பெறுதல்; அவைகளைப் பின்பற்றும் விருப்பம் கொள்ளுதல்; உள்நோக்கங்களைக் கண்டுபிடித்துக் கூறுதல் அல்லது வெளியிடுதல்; குடிமை பிரஜைக்கான பயிற்சி பெறுதல்; மாணவர்கள் கற்பனையில் இறங்கி கற்பனையை எழுத்து மூலமாக வெளிப்படுத்தலாம்; ஒத்திட்டுப் பார்த்தல்; குறிப்பு முறை வழியில் விதியிலிருந்து முடிவுக்கு வருதல், உதாரணங்களிலிருந்து பொதுவிதியை ஏற்படுத்துதல் முதலியனவாகும். மாணவர்களின் தேர்ந்தெடுக்கும் திறமையை வளர்க்கவேண்டும். இதற்கு பலவற்றிலிருந்து ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்தல் பொறுத்தமற்றதை நீக்குதல், முடிவு எடுத்தல் ஆகியவற்றிற்கு வாய்ப்புக்கள் அளிக்கும் எழுத்துப் பயிற்சியைக் கொடுக்கவேண்டும்.

கைவினைச் செயல்களில் மாணவர்கள் மாதிரிப் பொருள்களைப் படைக்கும் வாய்ப்புக்கள் பெறவேண்டும். மாதிரிப் பொருள்கள் செய்வதில் திறமை பெறுவது நோக்கமன்று. கற்பதற்கும் கற்றதை மனதில் இறுத்துவதற்காகவுமே சொற்களுக்கான பொருளை சில சமயங்களில் மாணவர்கள் உணருவதில்லை. கற்பனையில் சித்திரம் வரைதல், படி எடுத்தல், வரலாற்றுக் காலத்து

உடைகள், வீடுகள், பண்ட பாத்திரங்கள், பார்த் தளவாடங்கள் ஆகிய-வற்றை உருவாக்குதல் முதலியன. தேசப்படங்களையும் காலக்கோடுகளையும் உருவாக்குதல். இவற்றுள் படி எடுத்தல், நிரப்புதல், வெளி எல்லைக் கோடு தயாரித்தல் ஆகியவற்றின் நோக்கம் வரலாற்று அறிவு பெறுவதற்கும் வரலாற்று உணர்வு ஏற்படுத்துவதற்கும் பிள்ளைகளின் ஞாபகத்திறனை பலப் படுத்துவதற்காகவே என்பதை நினைவில் கொள்ளவேண்டும். நடித்தலும் இதில் அடங்கும். நடித்தற்கான வேடப்பொருட்கள் தயாரிப்பும் இதில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

### பயிற்சி வினாக்கள்

1 பயிற்சிப் பதிவேடுகளினால் ஏற்படும் கல்விப் பயன்கள் யாவை?

2 படப் புத்தகத்தின் பயனை விவரிக்கவும்.

3 'குறிப்பெடுத்தல்' 'குறிப்பு தொகுத்தல்' இரண்டுக்கும் உள்ள வேறுபாடு யாது?

4 'பயிற்சி நோட்டுப் புத்தகம்' (Work Book) பயன்கள் யாவை?

5 அச்சிட்ட பயிற்சிப் புத்தகம் வைப்பதற்கு உள்ள எதிர்ப்புக்கள் யாவை?

6 'வரலாற்றுக் குறிப்பேடுபற்றி பத்து வரிகள் எழுதவும்.

7 ' கேலிச்சித்திரம் நோட்டுப் புத்தகம்' எப்படித் தயாரிக்கலாம்?

8 ' காலம் ' கற்பிக்க உதவும் பலவகையான உதவிகள் யாவை?

9 ' காலப்படம் ' என்றால் என்ன? எட்டாம் வகுப்புக்கு ஒரு காலப்-படம் தயாரிக்கவும்.

# வரலாற்று ஆசிரியர்

உயர் நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் பொதுவாக ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களைக் கற்பிக்க நியமிக்கப்படுகின்றனர். ஒரு ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும்? அவருடைய குணச்சிறப்புகள் என்ன? என்ற வினாக்களுக்கு வரும் விடை வரலாற்று ஆசிரியருக்கும் பொருந்தும். எனவே பொதுவாக வரலாறு கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு ஏனைய, ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படாத சில பிரத்தியேக குணச்சிறப்புகளும், திறமைகளும் இருக்க வேண்டும்.

உயர் நிலைப்பள்ளி வரலாற்று ஆசிரியர்களைப் பொதுவாக மூன்று கோணங்களிலிருந்து மதிப்பிட வேண்டுமென்று பேராசிரியர் டிராயான் குறிப்பிடுகிறார். அதன்படி முதல் கோணத்தில் ஆசிரியரின் ஆயத்தம் அல்லது தயாரிப்பை அளவிட வேண்டும், இந்த தயாரிப்பில் ஆசிரியரின் பொதுக் கல்வியும் தொழில் கல்வியும், அடங்கும். இரண்டாவது ஆசிரியர்களுக்கு இருக்க வேண்டிய சில திறமைகளைப்பற்றி மதிப்பீடு கடைசியாக ஆசிரியர் தன் தொழிலுக்கென்று வைத்திருக்கும் நூல் நிலையத்தையும் அதைப்பயன்படுத்தும் திறனையும் அளவிடுவது.

ஆசிரியருக்கு வேண்டிய தயாரிப்பில் பொதுக்கல்வி, தொழில்கல்வி ஒவ்வொன்றின் தராதரத்தை ஆராய முற்படின் இரண்டும் முக்கியமான தேவை என்பது புலப்படும். கற்பிக்கும் பாடத்தைப் பற்றிய அறிவு, கற்பிக்கும் முறைகள், கையாளவேண்டிய உதவிகள் அவைகளைத் தயாரித்தலும் பயன்படுத்துதலும், ஆகிய தொழிலுக்கான ஆயத்தம் ஆசிரியர் பயிற்சியுடன் ஆரம்பமாகிறது என்று கொள்ள வேண்டும். ஆசிரியர் பயிற்சியில் இருக்கும் போதே ஒரு ஆசிரியர் தன்னை முடிந்தவரையில் தன் தொழிலுக்கு தயார் செய்வதில் முழுமனதுடன் ஈடுபட வேண்டும். ஆசிரியரின் திறமையை மிக எளிதில் அளவிட முடியாது. நீண்ட காலத்திற்குப் பிறகுதான் திறமையை நன்கு அறிந்து கொள்ள முடியும்.

## ஆசிரியருக்கு இருக்க வேண்டிய ஆளுமை

ஆசிரியருக்கு சில குணங்கள் இயற்கையிலே அமைவன. சில குணங்களும், திறமைகளும், தன் முயற்சியால் ஏற்படுவன. இவைகளில் அறிவு, புத்திநுட்பம் அல்லது நுண்ணறிவு, அன்பு, பிரியம், கற்பனை, சொல்வன்மை, திறந்தமனம், நல்ல பழக்கவழக்கங்கள், நல்ல ரும்பத்தக்க மனவெழுச்சிகள் முதலியன சிலவாம். இனி வரலாற்று ஆசிரியரின் இலக்கணத்தை வகைப்படுத்தி ஆராய வேண்டும்.

## மனத்திறமைகள்

மனத்திறமைகளில் சில இயற்கையிலேயே அமைவன. சில நன்மைகளை ஆசிரியர் மனதில் கொண்டு சில மனத்திறன்களை தன் அநுபவத்தின் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டும். நல்ல ஞாபகசக்தி ஆசிரியருக்கு அவசியம். அநுபவம் தான் இத்திறமையை வளர்க்கும். ஆசிரியருக்கு வரலாற்றுப் பாடத்தில் குறையாத ஊக்கம் இருக்க வேண்டும். மனித இயல்புகளையும் நடத்தைகளையும் அறிவதற்கு ஆசிரியரிடம் உள் நோக்கு (introspection) அத்தியாவசியம். விடாமுயற்சி, நல்ல மனஉறுதி, கற்பனைசக்தி, பேசும் திறமை ஆகியவற்றை எளிதில் வளர்த்துக் கொள்ளலாம்.

## ஆசிரியரின் ஆளுமை (personality)

பாடத்தையும் அவர்கள் நடத்தும் பாடத்தின் மேல் பிள்ளைகள் கொள்ளும் மனப்போக்கையும் பெரிதும் பாதிக்கும். ஆதலால் ஆசிரியர் சிறந்த விரும்பத்தக்க ஆளுமைப் பண்பு உடையவராக இருக்கவேண்டும். இது எல்லா பாடங்களுக்கும் அவசியம் என்றாலும், வரலாற்றுப் பாடத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். வரலாற்றுப் போதனையில் முக்கிய இடம் பெறுவது பாடத்திட்டமோ கற்பித்தற் கருவிகளோ கையாளும் புத்தகமோ அல்லது கற்பிக்கும் முறையோ அல்ல; ஆசிரியரே முக்கிய அம்சமாகும்.

சில மாணவர்கள் பாடத்தை விரும்பிக் கற்காமல் இருக்கலாம். அவற்றைப் படிப்பதில் அக்கறை காட்டாமல் இருக்கலாம். இருப்பினும் ஆசிரியரைப் பொறுத்துப் பாடத்தில் அக்கறை காட்டுவர். சில ஆசிரியர்கள் பிள்ளைகளின் கவனத்தைக் கவர்பவர்களாக இருப்பர். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் நடத்தும் பாடத்தை ஆசிரியர் பொருட்டு விரும்பிப் படிப்பதும் உண்டு. கற்பிக்கும் பாடத்தில் பிள்ளைகள் அக்கறை காட்டவேண்டுமானால் அது ஆசிரியரைப் பொறுத்ததாகும்.

வரலாற்று ஆசிரியர் எப்பொழுதும் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நல்ல வாசிப்பாளராகத் திகழ வேண்டும். வரலாற்றுப் பாடம் போதிக்க பாடத்தில் ஆழ்ந்த அறிவு தேவை. மற்ற ஆசிரியர்கள் வகுப்பு ஆரம்பிக்கு முன் ஓரிரு நிமிடங்கள் பாடப் பகுதியைப் பார்த்தால் போதும். ஆனால் வரலாற்று ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தில் காணப்படாத விவரங்கள், அவற்றை ஒட்டிய மேற்கோள்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றைச் சொன்னால்தான் பாடம் சிறப்பாக அமையும். ஆசிரியர் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை வரலாற்றுத் துறைப் புத்தகங்களைப் படிப்பதற்கும் ஒதுக்கவேண்டும். படிப்பதன் மூலம் செய்திகளை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டால் உடனே புத்தகங்களைப் பார்த்துப் படித்துச் சொல்லும் திறமை வளரும். சில புதிய விவரங்களும் ஆசிரியர் மனதைக்கவரும். "வரலாற்றைப் படிப்பதை நிறுத்திக் கொண்டால் ஆசிரியர் வரலாறு கற்பிப்பதையும்

நிறுத்திக் கொள்ளவேண்டும்." என்று பேராசிரியர் ஒருவர் கூறுகிருர். இச்சந்தர்ப்பத்தில் அவர் கூறும் மற்றெரு கருத்தும் கவனமாக நோக்கத் தக்கது. கணக்கு, மொழிபோன்ற பாடங்களைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களைவிட அரைமணி நேரம் முந்தி இருப்பின் அதுபோதுமானதாகும். எந்த ஆசிரியராவது வரலாற்றைக் கற்பிக்க விரும்பினுல் அவர்களுக்கு முன் பாடப் பகுதியில் நூறு புத்தகங்கள் படித்திருக்க-வேண்டும்.

இங்கு ஆசிரியர்க்கென்று தனியாக வைத்திருக்கும் நூலகத்தைப்-பற்றியும், பள்ளி நூலகத்தைப் பற்றியும் குறிப்பிடுதல் அவசியம். பள்ளி நூலகத்தில் உள்ள எல்லா புத்தகங்களையும் படிக்கவேண்டும். நினைவு படுத்திக் கொள்ளப் பல முறை படிக்கவேண்டும். விஞ்ஞானிக்கு ஆராய்ச்சிக் கூடம் எவ்வளவு முக்கியமானதோ அதுபோல வரலாற்று ஆசிரியருக்கு நூல்நிலையம் மிகவும் முக்கியமானது. வரலாற்று ஆசிரியரின் ஆராய்ச்சிக் கூடம் நூலகம் ஆகும்.

வரலாற்று ஆசிரியர் பாடம் நடத்தப்புகு முன் பாடப்பகுதிக்குத் தகுந்த ஆயத்தங்களைச் செய்வதில் போதிய முயற்சி செய்யவேண்டும். முன் கூட்டியே பாடதிட்டத்தைப் பல கூறுகளாகப் பிரித்து நடத்தும் முறை கையாளும் உபகரணங்கள் அனுசரிக்கப் போகும் கற்பித்தல் நுணுக்கங்கள் போன்றவைகளைப் பற்றிச் சிந்தனை செய்து குறித்துக் கொள்ளவேண்டும். "நாம் எதை செய்ய போகிருேம்? எதற்காகச் செய்கிருேம்? அதில் நல்ல பயன்பெற எம்முறையில் செய்யவேண்டுமென்று சிந்திப்பதால் இலாபமே தவிர நஷ்டம் கிடையாது" என்று பேராசியர் ட்ரெவெல்யன் கூறுகிருர் அது போலவே படிப்பது சுலபமாகத் தோன்றினுலும் அதை எழுதும் போது கஷ்டமாகத் தெரியும். ஆசிரியர் தன் தயாரிப்பைச் சரியாகக் குறித்துக் கொள்ள வேண்டியதின் அவசியம் சொல்லாமலே விளங்கும். வரலாறு படிப்பதைவிட எழுதுவது கடினம். அது போலவே வரலாறு போதிப்பது படிப்-பதை காட்டிலும் கடினமானதாகும். எவ்வளவுக்கெவ்வளவு ஆயத்தம் அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பாடபோதனையின் பலனும் அதிகரிக்-கும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர் தயாரிப்பைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் குறிப்பிட வேண்டுவது அவசியமாகும். ஆசிரியர் வகுப்பில் பேசுவதற்கும், போதிப்பதற்கும் குறிப்புக்கள் இருந்தால் நம்பிக்கையுடன் வரிசைக் கிரமமாகவும், விஷயங்களைக் கோர்வைப் படுத்தியும் கூற முடியும். அத்துடன் தன்னுடைய குறிப்பில் கையாளக்கூடிய கற்பித்தல் சாதனங்களைக் குறிப்பிடுவதுடன், அவைகளை முன்கூட்டியே தயார் செய்து கொள்ள வேண்டும். சாதனங்கள் தவிர சில போதனை நுட்பங்களை பாடப் பகுதிக் கேற்றவாறு தேர்ந்தெடுத்து எம்முறையில் கையாளலாம் என்பதைச் சிந்தித்து குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் செய்ய வேண்டிய அனுபவ சாத்தியமான வேலைகள் எவையெவை? என்னென்ன முறையில் கொடுக்கலாம்? என்பதைச் சிந்தித்து குறித்துக் கொள்ள வேண்டுவது அவசியமாகும். இக்குறிப்புக்களை அடிக்கடி

சிலவற்றை நீக்கியும், சேர்த்தும் மாற்றி அமைத்துக் கொண்டும் வர வேண்டும். ஆசிரியர் அனுபவம் வளர வளரக் குறிப்புகளின் தன்மையும் உபயோகமும் வளர்ந்து வரும். வரலாற்று ஆசிரியர் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்து வரலாற்று இடங்களை நேரில் கண்டு அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் உள்ளவராக இருக்க வேண்டும். வரலாற்று ஆசிரியர் சில சந்தர்ப்பங்களில் மாணவர்களை அருகில் உள்ள இடங்களுக்கும், தொலைவில் உள்ள இடங்களுக்கும் பள்ளிக் கல்விப்பயணமாக அழைத்துச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும். ஆசிரியர் தன்னுடைய வருவாயில் எல்லா இடங்களையும் சென்று பார்த்து வருவது என்பது எளிதான செயலன்று. ஆகையினால் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்தவர் அந்நாட்டில் பிரயாணம் செய்வதாக வைத்துக் கொண்டால் சில இடங்களைப் பார்க்கும் பொழுது அவற்றை யொட்டிய வரலாற்றுச் செய்திகள் கண்முன் வந்து நிற்கும். வரலாற்று அறிவு இல்லாதவர்களுக்கு வரலாற்றிடங்களைப் பார்க்கும் பொழுது எந்தவிதமான சலனமும் ஏற்படாது என்பது எல்லாரும் அறிந்த உண்மை. வெளி நாட்டிலோ, உள்நாட்டிலோ வரலாற்று அறிவுடன் பிரயாணம் செய்தால் பிரயாணத்தின் பயனும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியும் இரண்டு மடங்காகும் என்று ட்ரெவல்லியன் குறிப்பிடுகிறார். ஆசிரியத் துறையில் உள்ளவர்கள் பிரயாணத்தைப் பற்றி தாம் கொண்டுள்ள கருத்தை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் பல இடங்களைப் போய்ப்பார்த்து வருவதற்கு அரசாங்கத்தாரால் சில பிரயாணச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டு தோறும் இதற்கு நிதி ஒதுக்கப்பட்டு ஆசிரியர்களும் மாணவர்களும் பிரயாணம் செய்ய உதவித்தொகை வழங்க ஏற்பாடு செய்தால் வரவேற்கத்தக்கதாகும். நாட்டு ஒருமைப் பாட்டுணர்ச்சி வளர இது துணையாக இருக்கும்.

வரலாற்றை வரலாற்றுக்காக கற்பிப்பவராக வரலாற்று ஆசிரியர் திகழ வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆசிரியர் தனக்குப் பிடித்த மானதும், தன் நம்பிக்கைக் குறியதுமான ஏதாவது கொள்கையையோ கருத்தையோ பிரபலப்படுத்துவதற்காக வரலாற்றுப் பாடத்தை போதிப்பவராக இருக்கக் கூடாது. புறத்தூண்டுதல்களால் எந்தவகையிலும் உந்தப்படாமல் வரலாற்றை வரலாறாகவே போதிக்கப்படவேண்டும். கற்பிக்கும் முறையிலும் விளக்கம் தரும் பொழுதும் ஆசிரியரின் விருப்பு வெறுப்புக்கு இடமளிக்கக் கூடாது. இச் சந்தர்ப்பத்தில் வரலாற்று நூலாசிரியரைப்பற்றிப் பேராசிரியர் பிரைஸ் குறிப்பிடுவதை நோக்கவேண்டும். வரலாற்றை ஏதாவது கொள்கை அல்லது கருத்தின் அடிப்படையில் எழுதுபவராக இருந்தால் அக்கொள்கைக்குப் பொருத்தமான உண்மைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு மாறானவைகளைப் புறக்கணிக்க தூண்டப்படுதல் இயற்கை என்று குறிப்பிடுகிறார். இது வரலாறு கற்பிக்கும் ஆசிரியருக்கும் தகும் என்று துணிந்து சொல்லலாம்.

வரலாற்று ஆசிரியர் வரலாற்றைக் கற்பிக்கும் பொழுது நடுநிலைமையாளராகத் திகழ்தல் வேண்டும். இக்கருத்துக்கும் முந்திய பத்தியில் கொடுக்கப்பட்ட கருத்துக்கும் அதிக ஒற்றுமை காணலாம். ஆசிரியர் கற்பிக்கும் பொழுது நேர்மையைக் கடைப்பிடிக்கவேண்டும். வரலாற்று ஆசிரியர் தமது சமயக் கோட்பாடு, தன் வாழ்க்கை முறை, தமது அரசியல் கொள்கைகள், தாம் கற்பிக்கும் முறையையும், விளக்கத்தையும் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இக்கொள்கை வரலாற்றுப் பாடப்புத்தகங்களை எழுதும் நூலாசிரியர்களுக்கும் பொருந்தும்.

நூற்றாண்டுப் போர் பற்றி ஆங்கில ஆசிரியர்களும், பிரெஞ்சு ஆசிரியர்களும் எழுதிய பாடப்புத்தகங்களை இதற்குச் சான்று கூறலாம். அமெரிக்கச் சுதந்திரப்போரைப்பற்றி அமெரிக்க நூலாசிரியர்களும், ஆங்கில நூலாசிரியர்களும் எழுதிய பாடப் புத்தகங்களையும், ஆங்கில நூலாசிரியர்கள் எழுதிய பாடப்புத்தகங்களையும், ஆங்கில ஆசிரியர்களும் இந்திய ஆசிரியர்களும் ஆங்கிலேயர் காலத்தைப்பற்றி எழுதப்பட்ட பாடப்புத்தகங்களையும் சான்று கூறலாம்.

போதிய தயாரிப்பு ஆழ்ந்த நூல் ஆராய்ச்சி அதிகமான கல்விப் பயணம், நேர்மையுணர்ச்சி இவை அனைத்தும் சேர்ந்தால் எந்த ஆசிரியரையும் மனச்சாட்சியுடைய ஆசிரியராக மாற்றும் என்று சொல்லலாம்.

ஆசிரியர் பாடத்தில் பற்றும் தொழில் நம்பிக்கையும், உடையவராக இருக்கவேண்டும். தொழிலில் வெற்றி காணவேண்டுமானால், திருப்தியை எதிர் பார்க்கவேண்டுமானால் அத்தொழில் அதிகப்பற்றை வளர்க்கவேண்டும். உரோமப் பேரரசு வீழ்ச்சியைப்பற்றி மிக உன்னதமான நூலை எழுதி நமக்குத் தந்த பேராசிரியர் கிப்பன் வரலாற்றில் தான் வைத்திருந்த பற்றினை இந்தியத் தீவுகளின் செல்வத்திற்கு மாற்றிக் கொள்ளத் தயாரில்லை என்று குறிப்பிடுகிறார். அவர் உண்மை வரலாற்று நூலாசிரியராகத் திகழ்ந்ததற்குக் காரணம் அவருக்கு வரலாற்றில் இருந்த அளவிலாத பற்றேயாகும். வரலாற்று ஆசிரியர் தாம் செய்யும் வேலை, செய்யக்கூடிய வேலை, ஆகியவற்றைப் பற்றி அடிக்கடி சிந்திக்க வேண்டும்.

வரலாற்று ஆசிரியர் முடிந்தால் தனக்கென்று ஒரு நூல் நிலையம் அமைத்துக் கொள்ளலாம். பள்ளி நிர்வாகிகள், அரசாங்கம், வரலாறு போதிக்கும் ஆசிரியர்களுக்கு உதவித்தொகை நல்ல வரலாற்றுப் புத்தகமாகக் கொடுக்கலாம். ஆண்டுதோறும் ஒரு சிறிய தொகையைப் புத்தகங்கள் வாங்க ஒதுக்கவேண்டும். ஆசிரியர் புத்தகங்களைப் படிப்பதில் நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். தினமும் கொஞ்ச நேரம் புத்தகங்களைப் படிக்கவேண்டும். ஆசிரியர் வரலாற்றையொட்டிய இதரத் துறைகளில் அறிவு பெறவேண்டும். தினமும் பத்திரிகை படிக்கும் பழக்கம், தொழில் சம்பந்தப்பட்ட இதழ்களைப் படிக்கும் வழக்கம் இருக்கவேண்டும். அரசாங்கத்தின் ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்ட தொழிலில் இருப்பவர்களுக்குக் கொடுக்கும் பயிற்சியில் பங்கு கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.

கல்வித்துறையில் புதிய புதிய கருத்துக்கள் வெளிவருகின்றன. அவற்றைப் பற்றியும் ஆசிரியர் அறிந்தவராய் இருக்கவேண்டும்

பயிற்சி வினாக்கள்

1 வரலாற்று ஆசிரியர் பற்றி பேராசிரியர் ட்ரையான் குறிப்பிடுவது என்ன?

2 வரலாற்று ஆசிரியரின் மனத்திறமைகள் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

3 'வரலாற்று ஆசிரியருக்கு நல்ல ஆளுமைவேண்டும்' விளக்கவும்.

4 வரலாற்று ஆசிரியரின் குணச் சிறப்புக்கள் யாவை?

5 நல்ல வரலாற்று ஆசிரியர் என்பது பற்றி மூன்று பக்கங்களில் ஒரு கட்டுரை வரையவும்.

# நடப்புச் செய்திகள்

## நடப்புச் செய்தி விளக்கம்

நடப்புச் செய்தி என்ருல் என்ன? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். தற்பொழுது நிகழ்ந்த செய்தியையும், சமீபத்தில் நிகழவிருக்கும் செய்தியையும் நடப்புச் செய்தி என்று கொள்ளலாம். எனவே நடக்கும் நிகழ்ச்சிகள், உடனடியாக நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடப்பு நிகழ்ச்சிகள் என்று அழைக்கிரேம். நடப்புச் செய்திகளை நடப்பு வரலாறு என்றும் கூறுவர். எல்லா நடப்புச் செய்திகளும் நடப்பு வரலாறு ஆகாது. வரலாற்றுச் சிறப்புடைய நிகழ்ச்சிகளை மட்டும் தான் நடப்பு நிகழ்ச்சிகளாக நாம் கொள்ள வேண்டும். இச் செய்திகள் வரலாற்றின் தொடர்பாக அமைய வேண்டும். ஏற்கனவே நிகழ்ந்த செய்திகளின் விளைவாகவும் இதனைக் கொள்ள-வேண்டும். ‘நடப்பு நிகழ்ச்சிகளின் நிழல் பின்னேக்கியும் நடக்கவிருக்கும் நிகழ்ச்சியின் நிழல் முன்னலும் வீழுகிறது’ என்ற மேற்கோள்படி வரலாற்றில் இடம் பெறும் நடப்பு நிகழ்ச்சிகளுக்குத்தான் நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

## நடப்புச் செய்திகளும் வரலாறும்

நடப்பு நிகழ்ச்சிகள் எங்கு முடிகின்றன என்றும், வரலாறு எந்த இடத்திலிருந்து தொடங்குகிறது என்றும் திட்டவட்டமாக வரையறுத்துச் சொல்லமுடிவதில்லை. எனினும் எது நடப்பு நிகழ்ச்சி, எது வரலாறு என்று ஓரளவு குறிப்பாகச் சொல்ல முடியும் நிகழ்ச்சிகளைப் பற்றிய நேரடி அனுபவ-மும், அவற்றின் காட்சிகளும் எப்பொழுது நம்மிடையிலிருந்து அகலுகிறதோ அப்பொழுது நடப்பு நிகழ்ச்சிகள் வரலாறு ஆக மாறுகின்றன. எனவே இது தனிப்பட்ட நபர்களைப் பொருத்தது. நமது நாட்டில் சுதந்திரத்திற்குப் பிறகு பிறந்த இளைஞர் பாரம் பரியத்திற்கு நம் நாடு சுதந்திரம் பெற்றது ஒரு வரலாருகக் கொள்ளுகின்றனர். அதற்கு மூத்த பாரம் பரியத்தவருக்கு அதாவது 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நடப்புச் செய்தியாகவே தோன்றுகிறது. எனவே நமது நேரடி அனுபவத்திற்கும், நாம் நேரில் பார்க்காதவற்றிற்கும், அப்பாற்பட்ட அனைத்தும் வரலாறு என்று தான் சொல்ல வேண்டும். சுருக்கமாகச் சொன்னல் கடந்த காலத்து நடப்புச் செய்திகள் இன்றைய வரலாறு, இக்காலத்து நடப்புச் செய்திகள் வருங்-காலத்தின் வரலாறு என்று கொள்ள வேண்டும்.

## நடப்புச் செய்திகளும் மதிப்பிடும் மனப்பான்மையும்

பள்ளியில் கற்றுக் கொடுக்கும் வரலாற்றின் மூலமாய் பிள்ளைகளிடம் எதையும் ஆராய்ந்து மதிப்பிடும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும்.

எனவே நடப்புச் செய்திகள் பாடத்தில் சேர்க்கப்படுவதினுல் எதையும் நன்கு ஆராய்ந்து மதிப்பிடும் மனப்பான்மை வளர நல்லதொரு வாய்ப்பு கிடைக்கிறது. இதை நடப்பு வரலாறு கற்றுக் கொடுப்பதின் நோக்கங்களில் ஒன்ருகக் கருதலாம். வரலாற்றுப் பின்னணியை ஆதாரமாகக் கொண்டு அன்ருட நடப்புச் செய்திகளை மதிப்பிடப் பிள்ளைகளுக்குப் போதிய பயிற்சி அளிப்பதை நம் நோக்கங்களில் ஒன்ருகக் கொள்ளவேண்டும். இன்று பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் முடிவில் இந்நாட்டின் வருங்கால மக்களாக விளங்கப் போகின்றவர்கள். நமது இளைய பாரதம் நிலைத்து வளரவும் நமது குடியரசு அமைப்பு நன்கு திறம்படச் செயல்படவும், பிள்ளைகள் நமது நாட்டின் முயற்சிகளிலும், செயல்களிலும், கொள்கைகளிலும், திட்டங்களிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும். என்று நாம் எதிர்பார்க்கிருேம். நடப்புச் செய்திகள் இதற்குத் துணையாக அமைந்துள்ளன.

## நடப்புச் செய்திகளைக் கையாளுதல்

வகுப்பில் ஒவ்வொரு நாளும் கூடிய மட்டிலும் வரலாற்றுப் பாடத்தை நடப்பு நிகழ்ச்சியிலிருந்து தொடங்கவேண்டும். எல்லாப் பாடங்களுக்கும் இது சாத்தியமானதல்ல. நடப்பு நிகழ்ச்சியிலிருந்து தொடங்குவதால் பிள்ளைகள் வரலாற்றுப் பாடத்தை மிக்க ஆவலுடன் கேட்கத் தொடங்குவார்கள். எனவே கற்றுக் கொடுக்கவிருக்கும் பாடப் பகுதிகளுக்குப் பொருத்தமாகவும் தொடர்புள்ளதாக இருக்கும். நடப்பு நிகழ்ச்சிகளைப் பாடத்திற்கு அறிமுகமாக ஆரம்பத்திலும், பாடத்திற்கு முடிவாகப் பாட இறுதியிலும் கற்றுக் கொடுக்கலாம். பாடப்பகுதிகளில் விளக்கம் பெறுவதற்கும், வரலாற்றுப் பாடம் ஓர் உயிருள்ள பாடம் என்ற உணர்வு ஏற்படுவதற்கும், ஆங்காங்கு குறிப்பிடலாம். வரலாறு எழுத முனைந்தவர்களும், நடப்பு நிகழ்ச்சிகளை மனதில் கொண்டே எழுத முற்பட்டனர்.

## நடப்புச் செய்திகளின் தேவை

முதல் உலகப் போருக்குப் பின்னுல் சர்வதேச உறவில் ஏற்பட்ட பதட்ட நிலையும் அதை அடுத்து ஏற்பட்ட இரண்டாம் உலகப்போரும் பள்ளிப்பாடங்களில் நடப்புச் செய்திகளைச் சேர்க்க வேண்டிய தேவையை வலியுறுத்தியது. இக்காலத்தில் அன்ருட நிகழ்ச்சியைப் பற்றிய பாடங்கள் வரலாற்றின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. வரலாற்று நிகழ்ச்சிகள் அடக்கப்படாத வரலாறு முழுமை பெற்ற பாடமாகக் கருதப்படுவது கிடையாது. எனவே கடந்த காலத்தை ஆதாரமாகக் கொண்டு நடப்புச் செய்திகளை அறிய வேண்டும், என்ற உணர்வு எல்லா வரலாற்று ஆசிரியர்களிடத்தும் காணலாம். நடப்புச் செய்திகள் வரலாற்றுக்கு உயிர் நாடியாகத் திகழ்கின்றன.

நாம் கற்றுக் கொடுக்கும் வரலாற்றில் பிள்ளைகள் நடப்புச் செய்திகளில் காட்டும் ஆவலையும் அக்கறையையும் பிறவற்றில் காட்டுவது கிடையாது. இதற்குக் காரணம் நடப்புச் செய்திகளுக்கும் பிள்ளைகளை அம்சமாகக் கொண்ட சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதே யாகும். நடப்புச் செய்திகள் சமுதாயத்தைப் பற்றியதாக இருந்து சமுதாய அமைப்பில் சில விளைவுகளை ஏற்படுத்துகிறது. சமுதாயத்தின் உறுப்பினர்களாக இருக்கும் குழந்தைகள் நடப்பு நிகழ்ச்சிகளின் விளைவை உணருகின்றனர். மேற்காசியப் போரின் விளைவாக எண்ணெய்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. விலையும் அதிகமாக்கப்பட்டுள்ளது. இதைக் குழந்தைகள் எளிதில் அறிந்துகொள்வார்கள். மேற்காசிய போர் வரலாற்றின் தொடர்பில் நடந்த தொருபோர். இப்போர் நிகழ்வதற்கு வரலாறு உண்டு என்பதைப் பிள்ளைகள் உணருகின்றனர்.

வரலாற்று நடப்புச் செய்திகள் மற்றுமொரு முக்கியமான தேவையைப் பூர்த்தி செய்கிறது. வரலாறு உண்மையான உயிருள்ள பாடமாகத் திகழும் வண்ணம் நடப்புச் செய்திகள் வரலாற்றைத் தெளிவு படுத்துகிறது. தற்போது உள்ள வாழ்க்கையைக் கடந்தகால வாழ்க்கையுடன் ஒப்பிடவும், மாறுப்பட்டிருப்பதைத் தெளிவாக்கவும், நடப்புச் செய்திகள் உதவுகின்றன. தற்காலத்தில் நமது பழக்கத்தில் உள்ள நிறுவனங்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், குறிக்கோள்கள் அனைத்தும் கடந்த காலத்திலிருந்து தோன்றி மாறித் தற்போதுள்ள நிலையை அடைந்துள்ளன என்பதை வரலாறு நடப்புச் செய்திகளின் வாயிலாய் உணர்த்துகின்றது.

## நடப்பு நிகழ்ச்சிகளின் பயன்

கடந்தகால வரலாற்றின் அடிப்படையில் நமது வாழ்க்கைச் சூழல்களை அறிந்து கொள்ளத் துணை செய்வதையே வரலாறு கற்றுக் கொடுப்பதின் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளோம். வரலாற்றை விட வரலாற்று நடப்பு நிகழ்ச்சிகளே அதிகமாக இந்நோக்கத்தைப் பூர்த்தி செய்கின்றன பிள்ளைகளுக்கு எங்ஙனம் வரலாறு உருவாகிறது என்றும் உருவாக்கப்படுகிறது என்றும் தெளிவுபடுத்த வரலாற்று நடப்பு நிகழ்ச்சிகள் உதவுகின்றன, வரலாற்றுப் போக்குகள் வரலாற்றின் திசை. ஆகிய அனைத்தையும் பிள்ளைகள் ஓரளவு புரிந்து கொள்ள நடப்புச் செய்திகள் தேவை. வரலாற்றை விட. வரலாற்று நடப்பு நிகழ்ச்சிகள் பிள்ளைகளுடன் தொடர்புடையனவாக விளங்குகின்றன. புத்தக வாயிலாகவும், ஆசிரியர் வாயிலாகவும் வரலாற்றைக் கற்கின்றனர். அதைவிட சிறந்தது பத்திரிக்கைவாயிலாகவும் நடப்புச் செய்திகளின் மூலமாகக் கற்றுக் கொள்ளும் அறிவு வரலாற்று அறிவாகும். பிள்ளைகள் தங்களுடைய வேலையில் பற்றும், கவனமும், குன்ரு ஊக்கமும் கொள்ளுகின்றனர். இதனால் தங்கள் நாட்டின், நாட்டு மக்களின் அரசியல் பொருளாதார, சமூக, அறிவியல் காரியங்களில் கவனம் செலுத்த முற்படுகின்றனர்.

## நடப்புச் செய்திகளின் நோக்கம்

வரலாற்று நடப்புச் சம்பவங்களைக் கற்றுக் கொடுப்பதும், அச்சம்பவங்களை வரலாற்றுடன் இணைப்பதில் தாங்கள் வாழும் இவ்வுலக நிகழ்ச்சிகளையும், மக்களிடையே காணப்படும் நிகழ்ச்சிகளைப்பற்றிய அறிவும் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காக நடப்புச் செய்திகளுக்கு வரலாற்றுப் பாடத்தில் மிக முக்கியமான இடத்தைக் கொடுக்கவேண்டும். இன்றுள்ள இளம் பிள்ளைகள் தங்களைச் சார்ந்த சமூகத்தின் பிரச்சனைகளைப் பற்றி ஓரளவு தெரிந்தவர்களாகச் செய்யவேண்டும். பாடத்தில் தெளிவு பெறுவதற்கும் பாடம் உயிர் பெற்றுத் தோன்றுவதற்கும், நடப்புச் செய்திகளை வரலாற்றில் இணைக்கும் நோக்கத்தை மேற் கொள்ளவேண்டும்.

## நடப்புச் செய்திகளும் நவீனகாலப் பிரச்சனைகளும்

நடப்புச் செய்திகள் பல, தற்கால மனித சமுதாயம் எதிர் நோக்கும் ஒரு சில பிரச்சனைகளைப் பற்றியது. அவைகளை வரலாற்றுடன் இணைத்துப் போதிக்கப்படாவிட்டால் வரலாறு ஒரு பள்ளிப் பாடம் என்றும் அதற்கும் வாழ்க்கைக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்ற உணர்வைப் பிள்ளைகள் கொள்வர். எனவே நடப்புச் செய்திகளில் சமுதாயத்தை நோக்கியுள்ள பிரச்சனைகளுக்குத் தனியிடம் கொடுக்கவேண்டும்.

எனவே இந்திய பாகிஸ்தான் உறவு, இந்திய சீன எல்லைத் தகராறு, கிழக்கு மேற்கு பிளவு, மேற்காசியத் தகராறு போன்ற பிரச்சனைகளுக்கும் வரலாற்றில் இடம் கொடுக்கலாமா என்ற கேள்வி எழுகிறது. பள்ளியில் இதுபோன்ற உலக சமுதாயப் பிரச்சனைகளுக்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவம் யாது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். வரலாறு போதிப்பதின் நோக்கம், மனத்திறமைகளுக்குப் பயிற்சி கொடுப்பதுடன் நல்ல குடிமகனை விளங்குவதற்காக பயிற்சியும் நாம் கொடுக்க விரும்புகிறோம். சமுதாயப் பிரச்சனைகள் எந்த வகுப்பு மாணவர்களுக்குப் பொருத்தமானது என்பதையும் தீர்மானிக்க வேண்டும்.

நவீனகாலச் சமுதாயப் பிரச்சனைகளைக் கற்றுக்கொடுக்க விழையும் போது நாம் சில தடைகளையும் எதிர் நோக்கவேண்டும். உண்மை விவரங்கள், உண்மையற்றவைகளிலிருந்து எப்படிப் பிரித்தறிவது, நிகழ்ச்சிகளில் சாதாரண நிகழ்ச்சிகளில் இருந்து முக்கியமான நிகழ்ச்சிகளைக் கண்டு பிடித்து காரண காரிய அடிப்படையில் உண்மையைக் கண்டு பிடிக்க அனுசரிக்கும் முறைகள் இவற்றையெல்லாம் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

சமுதாயப் பிரச்சனைகளில் பிள்ளைகள் கவனம் செலுத்துவதற்கான ஏதுக்கள் யாவை என்பதை ஆராயவேண்டும். பள்ளிக்கூடப் பாடத்திலும் பாடப் புத்தகங்களிலும் உள்ள விபரங்கள் பிள்ளைகளுக்குத் துணையாக

இருக்கும். வகுப்பில் ஆசிரியர் வரலாறு நடத்தும் பொழுது ஆங்காங்கே குறிப்பிடும் சமுதாயப் பிரச்சனைகள் பிள்ளைகளை சமுதாயத்தைபற்றி நினைக்கத் தூண்டும். தவிரவும் ரேடியோ, பத்திரிக்கைகள், வார இதழ்கள், அரசியல் கட்சிகள், அரசியல் மன்றங்களும், அரசியல் கூட்டங்கள் ஆகியவையும், பிள்ளைகளின் கவனத்தைச் சமுதாய பிரச்சனைக்குத் திருப்புனவாக இருக்கின்றன. இவற்றில் விளம்பரம், சினிமாப்படங்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவற்றில் ஆசிரியர் அதுவும் வரலாற்று ஆசிரியர் பிள்ளைகளுக்குச் சமுதாயப் பிரச்சனைகளைப்பற்றி அறிந்து கொள்ளவும் அதை நன்கு புரிந்து தெளியவும், அவ்வப்போது வழிகாட்டவும் வேண்டும். தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளையும் கருத்துக்களையும் பிள்ளைகள் பால் திணிக்க ஆசிரியர் முயற்சிக்கக் கூடாது.

## இக்காலப் பிரச்சனைகளைக் கற்பிப்பதில் உள்ள இடர்பாடு

வரலாறு படிக்கும் மாணவர்களுக்கு வரலாற்றுடன் இக்கால உலக சமுதாயத்தின் பிரச்னைகளையும் நாட்டு மக்களின் சமுதாயப் பிரச்சனைகளையும்' போதிக்க முற்படும் பொழுதும், வரலாற்றுடன் இணைக்கும் பொழுதும் ஒரு சில இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும். சம்பவங்களிலும் பிரச்சனைகளிலும் எது உண்மை என்பதைக் கண்டறிவது உண்மையற்றதிலிருந்து உண்மையானவற்றைப் பிரிப்பது ஒரு இடர்பாடு ஆகும். இதையடுத்து வரலாற்று சம்பவங்களில் சாதாரணமானவை எவை? முக்கியமானவை எவை கண்டறிதல் எளிதான காரியம் அல்ல. வரலாற்று உண்மையைக் கண்டறியப் பயன்படுத்தும் முறை. கடைசியாக மாணவர்களின் கவனத்தை நடப்பு நிகழ்ச்சிகளின் பால் எங்ஙனம் திருப்புவது என்பதும் ஒரு முக்கிய பிரச்சனையாகும். பாட நூல்களில் உள்ள வரலாற்றுடன் நடப்புச் செய்திகளை இணைத்தால் மாணவர்கள் நடப்புச் செய்திகளில் அக்கறை கொள்வார்கள். ஆசிரியர் நடப்புச் செய்திகளைப்பற்றி கூறும் முறையும் பிள்ளைகளின் கவனத்தை நடப்புச் செய்திகள் பால் திருப்பும் வெளியுலக நிகழ்ச்சிகளும் மாணவர்களின் கவனத்தை இழுக்கும்.

வரலாற்று ஆசிரியர் நடப்புச் செய்திகளைப் பயன்படுத்தும் பொழுது சில தத்துவங்களைக் கடைப்பிடிக்கவேண்டும். சில வரலாற்றுப் பெரியவர்களும் சில வரலாற்றுக் காரணங்களும் முழுக்க முழுக்க நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ அமையலாம். வரலாற்று நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்யும் பொழுது உண்மைக்கு மாருக சிலர் அவசியமின்றி தூற்றப்படலாம். சிலர் ஆதாரம் இல்லாமல் புகழப்படலாம். எனவே புகழ்ச்சியும், இகழ்ச்சியும், எந்த அளவில் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்பதை ஆராய்ந்து மதிப்பிடல் வேண்டும். நடப்புச் செய்திகளில் வருபவை ஒரு தலைப்பட்சமான விவரங்களே. எதிர் தரப்பினரின் அபிப்பிராயத்தை அறியும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதிக அளவு வரலாற்றை சூழ்ந்து படித்தாலன்றி நடப்புச்

செய்திகளை சரிவர மதிப்பிட முடியாது. அவற்றின் உண்மையை உணர முடியாது. நடப்புச் செய்திகளை மதிப்பிடும் போது எவ்வளவு கவனமாக இருந்தாலும் தவறுகள் ஏற்படுவது சகஜம்.

## எப்படிப் பயன்படுத்துவது

நடப்புச் செய்திகளைத் தனிப்பாடமாக உயர்நிலைப் பள்ளிகளில் கற்றுக் கொடுக்கமுடியாது. நமது பாடத்திட்டத்தில் முன்பு ஒவ்வொரு வகுப்பிற்கும் நடப்புச் செய்திகளைக் கற்பிப்பதற்கு பிரிவு வேளைகள் ஒதுக்கப்பட்டன. பாடத்திட்டத்தைத் தயாரித்தவர்களின் நோக்கம் இந்தப் பாடப் பிரிவு வேளைகளில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நடப்புச் செய்திகளைக் கற்றுக் கொடுக்கவேண்டும்என்பதே. ஒவ்வொரு நாள் பாட வேளை நேரத்திலும் ஒரு சில நிமிடங்கள் நடப்புச் செய்திகளுக்கு தொடர்பு இல்லாமல் செலவிடுவது விரும்பத்தக்கதல்ல. பிள்ளைகளுக்கு நெருங்கிய தொடர்பு பெற்ற பிரதேச செய்திகள் அவ்வப்போது நடந்தால் சம்பவங்களுக்கு இப்பிரிவு வேளைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நடப்புச் செய்திகள் வரலாற்றின் அடிப்படையில் நிகழ்கின்றன என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆசிரியர் வரலாற்றில் நடப்புச் செய்திகளை எந்த வழிகளில் பயன்படுத்தலாம். என்பதை அறிந்திருக்க வேண்டும். மூன்று வழிகளில் பயன்படுத்தலாம். பிள்ளைகளின் கவனத்தை வரலாற்றில் திருப்புவதற்கு நடப்புச் செய்தியை முன்னுரையாகக் கொண்டு தொடங்குதல். பாடத்தை நடப்புச் செய்திகளில் பொருத்தமான ஓரிரண்டைச் சொல்லி முடித்தல். பாடத்தில் வரும் வரலாற்று நிகழ்ச்சிகளை தெளிவுபடுத்துவதற்கு நடப்புச் செய்திகளையும் பயன்படுத்தலாம்.

### பயிற்சி வினாக்கள்

1 நடப்புச் செய்திகளுக்கு விளக்கம் கொடுக்கவும்

2 நடப்புச் செய்திகளுக்கும் வரலாற்றுக்கும் உள்ள தொடர்பு யாது?

3 நடப்புச் செய்திகள் எப்பொழுது வரலாறு ஆக மாறுகிறது?

4 நடப்புச் செய்திகளின் அவசியத்தையும் அதனால் ஏற்படும் பயனையும் விவரிக்க.

5 நடப்புச் செய்திகளில் இக்காலப் பிரச்சனைகளின் இடத்தை மதிப்பிடவும்.

6 நடப்புச் செய்திகளின் நிழல் பின்புறமும் நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளின் நிழல் முன்புறமும் விழுகிறது. இக்கூற்றுறை விளக்க எடுத்துக்காட்டுகள் ஓரிரண்டைக் குறிப்பிடவும்.

# தேர்வும் மதிப்பீடும்

## தேர்வுகள்

முன்னுரை :- நாம் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவ்வேலையில் நாம் அவ்வப்போது பெற்ற அல்லது அடைந்த முன்னேற்றத்தை அளவிடுவது சுலபம். தவிரவும் முன்னேற்றத்தின் துரிதத்தையும் மனத்தில் கொள்கிறோம். 200 மைல் பயணம் செய்யும் கார் ஓட்டி அவ்வப்போது தான் பயணத்தில் அடையும் முன்னேற்றத்தையும், கடக்க வேண்டிய தூரத்தையும், உன்னிப்பாகக் கவனித்து ஓட்டுவதில் வியப்பில்லை. அது போலவே ஓட்டப் பந்தயத்தில் வட்டத்தைச் சுற்றி ஓடும் பையனும் இதை மனதில் கொண்டு ஓடுவ நமக்குத் தெரிந்ததே. இவற்றை அளவிட சரியான கருவி நம்மிடம் இல்லா விட்டாலும் மனத்தினல் மதிப்பிட முயலுகிறோம்.

இக்காலத்துப் பாடசாலைகளில் தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகளையும், குறிப்பிட்டவைகளில் கொள்ளும் பற்றுக்களையும், அவர்களின் பழக்கங்களையும் வேறு மனப்போக்குகளையும் சாதாரணமாக சோதனைகளுக்கு உட்படுத்துவது இல்லை. ஆனல் பாடசாலைகளில் பிள்ளைகள் கற்றுக் கொண்டவைகள் என்ன? கற்றுக் கொண்டவைகளைக் கொண்டு அவர்களால் என்ன செய்யமுடியும்? அவைகளை எவ்வளவு தூரம் அவர்களால் பயன் படுத்த முடியும்? என்பதை சோதனைக்குள்ளாக்கப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது.

## வரலாறு

பழஞ்சீனவில் அரசாங்க அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முறைப்படி சோதனைகள் நடத்தப்பட்டன. இச்சோதனைகள் மிகவும் கடுமையாக இருந்தன. ஒரு சிலர் தான் வெற்றி கண்டனர். நிர்வாக எந்திரத்தை ஓட்டுவதற்குச் சரியான ஆட்களைத் தேர்ந்தெடுப்பதுதான் முக்கிய நோக்கம். மத்திய காலத்து ஐரோப்பா தேசத்தில் பல பல்கலைக் கழகங்கள் தோன்றின. இப்பல்கலைக் கழகங்களில் தேர்வுகளை நடத்தி மாணவர்களைச் சேர்த்துக் கொண்டனர். பட்டம் வழங்குவதற்கு முன்பும் முறைப்படி தேர்வுகள் நடத்தப்பட்டன. நமது இந்தியாவிலும், குறிப்பாக நாளந்தா பல்கலைக் கழகத்திலும் சேர விரும்புபவர்களுக்கு சோதனைகள் வைக்கப்பட்டதை சீன யாத்திரிகர் வாயிலாக அறிகிறோம்.

கல்லூரிகளில் வைக்கப்பட்ட தேர்வுகள் பாடசாலையின் திறமையைப் புறத்திலிருந்து மதிப்பிடுவதற்கும் அனுசரிக்கப்பட்டது. ஆனல் முதன் முதல் தேர்வுகள் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களால் நடத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து தேசத்தில் பாடசாலைக்-

குழந்தைகளுக்கு எந்த விதத்திலும் தொடர்பு இல்லாதவர்கள், அடிக்கடி பார்வையிட்டு பிள்ளைகளின் தேர்ச்சியையும், ஆசிரியர்களின் வேலைத் திறனையும் மதிப்பிட்டனர்.

நாளடைவில் இம்முறை கைவிடப்பட்டு வெளியிலிருந்து வருபவர்கள் தேர்வுகளை நடத்துவதற்குப் பதிலாக ஆசிரியர்களே தேர்வுகளை நடத்த ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேல் நாட்டுப்படிப்பு இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டவுடன் மேற்கித்திய சோதனைகளும் கொண்டு வரப்பட்டன. அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டதால் சோதனை முறைகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. இது வரையில் வாய்மொழியில் தத்துவம் மனப்பாடம் செய்தலும் அதை எழுத்து விடாது ஒப்புவித்தலும் வழக்கமாக இருந்தது. இதற்குப்பதில் முறைப்படி எழுத்துத்தேர்வு வைக்கப்பட்டதுடன், தேர்வு எழுதுபவர்கள் ஞாபகத்தை நம்பி இருக்காமல் புத்தகங்களை நம்பி இருக்கும் காலமாக மாறியது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகையினால் சோதனைகள், பள்ளிக்கூடங்கள் தோன்றிய காலங்களிலிருந்து ஏதாவது ஒரு முறையில் நடத்தப்பட்டு வந்தன என்பது கண்கூடு. சோதனைகள் ஆசிரியர்களின் வேலைத் திறமையையும், கற்பித்தலில் தாங்கள் அடைந்த முன்னேற்றத்தையும் பிரதிபலிப்பதோடு மட்டுமல்லாமல் பிள்ளைகளின் திறமையையும், அடைந்த முன்னேற்றத்தையும் பிரதிபலிக்கின்றன. ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களது திறமையையும் முன்னேற்றத்தையும் தாங்களே மதிப்பிடுவதற்கு சோதனைகள் பயன்படுகின்றன என்பது தெளிவு.

சோதனைகள் மாணவர்களின் திறமையையும், அடைந்த முன்னேற்றத்தையும் மட்டும் அளவிடுவதற்குப் பயன்பட்டாலும், போட்டியின் மூலம் தனிப்பட்டவர்கள் படிப்பு உதவித்தொகை பெறுவதற்கும், வேலைக்கும், பிள்ளைகளைச் சேர்ப்பதற்கும் சோதனைகள் பயன்பட்டு வருகின்றன என்பது கண்கூடு. சோதனைகள் நடத்துவதனல் ஆசிரியர்கள் தங்களின் திறமையை வளர்ப்பதற்கும், பிள்ளைகளின் தேவையைக் கண்டு அறிவதற்கும் உதவுகின்றன. பிள்ளைகளின சார்பில் தேர்வுகளை நடத்துவதனுல், கற்றதை நினைவு படுத்துவதற்குப் பெற்ற அறிவை ஒழுங்கு படுத்துவதற்கும் சோதனைகள் பயன்படுகின்றன. தேர்வுகளின் வாயிலாகத் தனிப்பட்ட பிள்ளைகள் எதிர்நோக்கும் கடின வேலைகளையும் சங்கடங்களையும் கண்டறிந்து அதை போக்க வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. சில மாணவர்கள் சாதாரணமாக புத்தகங்களை திருப்பிக் கூட பார்க்க மாட்டார்கள். தேர்வுகள் இருப்பதினுல் படிக்க வேண்டும் என்ற உள் உணர்வை தேர்வுகள் ஏற்படுத்துகின்றன. ஒருவிதத்தில் மாணவர்கள் கற்ற பாடநூல்களைத் திருப்பிப் படிப்பதற்குத் தேர்வுகள் தூண்டுகோலாக விளங்குகின்றன என்று சொன்னுல் மிகையாகாது. தேர்வுகள் கற்றல் முறைக்கு உதவியாக இருக்கிறது என்று சொல்வதைவிட அம்முறையின் முடிவாகக் கருதப்பட்டு வருவதாகக் கல்வி அறிஞர் ஒருவர் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

தற்பொழுது வைக்கப்பட்டுவரும் தேர்வுகளில் பலவகையான குறைகள் சொல்லப்பட்டு வருகின்றன. அதை வைத்துக்கொண்டு தேர்வுகளை முற்றிலும் ஒழித்து விடவேண்டும் என்று சொல்ல முடிவதில்லை. காரணம் கல்விமுறையில் தேர்வுகள் இருக்க வேண்டும். தேர்வுகளினால் நன்மை ஏற்படுகிறது. தேர்வுகள் வைக்கப்படாவிட்டால் அந்த நன்மைகள் கிடைக்காது.

## 1) தேர்வுகளினால் ஏற்படும் பயன்கள்

வரலாற்றுப் பாடத்தை, சில நோக்கங்களை மனதில் கொண்டு, பள்ளியில் கற்றுக் கொடுக்க விரும்புகிறோம். வரலாற்று அறிவையும், வரலாற்று மனப்பான்மையையும், வரலாற்று உணர்வையும், வரலாற்றில் சில திறமைகளையும், மாணுக்கர்கள் பெறும் நோக்கமாகக் கொண்டு வரலாற்றைக் கற்றுக் கொடுக்க விழைகிறோம். எனவே வரலாறு கற்பித்தல் காரணமாக பிள்ளைகளின் அறிவு, நடத்தை, திறமைகள் அறநெறி ஆகியவற்றில் சிலமாறுதல்களை நாம் எதிர்பார்க்கிறோம். நம்முடைய போதனையில் நாம் எதிர்பார்க்கும் மாறுதல்கள் ஏற்படுகின்றனவா? அப்படி ஏற்பட்டால் எந்த அளவில் அவைகள் காணப்படுகின்றன என்பதை அளவிட வேண்டாமா? எனவே தேர்வுகளுக்கு இடமளிக்க வேண்டும். வரலாறு கற்றுக் கொடுப்பதின் ஒரு அம்சமாகவும் அது அமைய வேண்டும்.

2. ஆசிரியர் தன்னுடைய வேலைத்திறனையும் தேர்வுகள் வழியாய் அளவிடலாம். தன்னிடம் உள்ள குறைகள், அதை நிவர்த்திக்கும் வழிகள், தன்னுடைய போதனை நுட்பத்தில் உள்ள குறைகள், அவற்றில் செய்ய வேண்டிய மாறுதல்கள், அனைத்தையும் பிள்ளைகள் எழுதிய தேர்வுகளின் வாயிலாய் அறிந்து அதற்கான ஏற்பாடுகள் செய்யலாம். சிலர் தேர்வு என்பது கற்றலின் முடிவு என்றும், கற்றலுக்கும், பயிற்றலுக்கும் உதவியாக இருப்பதைக் காட்டிலும் கற்றலின் கடைசிக்கட்டம் என்று குறிப்பிடுகின்றனர்.

## பிள்ளைகளிடம் காணும் குறைகளை அறிதலும் பின்னடைந்தவர்களைக் கண்டு கொள்ளுதலும்

தேர்வுகள் மாணவர்களைக் கற்கத் தூண்டுகின்றன. வரலாற்றுப் பாடத்தில் விருப்பம் கொள்ளுகின்றனர். மற்றவர்களுடன் போட்டி மனப்பான்மையில் படிக்க முற்படுகின்றனர். தன்னுடைய திறமையை மற்ற மாணவர்களின் திறமையுடன் ஒப்பிட முனைகின்றனர். பிள்ளைகள் வரலாற்றை மறுபடியும் படிக்கின்றனர்; நினைவுக்குக் கொண்டு வருகின்றனர். தன்னுடைய அறிவைப் புதிய சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு பயன்படுத்த முற்படுகின்றனர். கற்றவற்றை வகைப்படுத்தி அமைக்கின்றனர்.

## தேர்வுகளில் மாறுதல்கள்

அறிவியல் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டது போலவே, அறிவியல் முறைதேர்வுகள் நடத்துவதிலும் பயன்படுத்தப்பட்டது அறிவியல் முறை கல்வியுலகில் அனுசரிக்கப்படுவதற்கு சோதனைகள் இன்றியமையாதனவாகக் காணப்பட்டன. இதன் காரணமாக கல்வி நிபுணர்கள் அறிவியல் முறையை மனத்தில் கொண்டு எதை அளவிடுவது, எதை எவ்வாறு தவறு இல்லாமல் அளவிடுவது என்பதில் ஆராய்ச்சிகளும், சோதனைகளும் நடத்தத் தலைப்பட்டனர். எதை அளவிடுவது என்ற கேள்விக்கு பதில்காண்பது கடினமல்ல. பிள்ளைகள் வரலாற்றில் பெற்ற அறிவை அளவிடுதல், இதோடு மட்டுமல்லாமல் பள்ளிகளில் பிள்ளைகளின் திறமைகள், தனிப்பட்ட திறன்கள், மனப்போக்குகள், ஊக்கம், உழைப்பு, விடாமுயற்சி, நுண்ணறிவுஇவற்றையும் அளவிடலாம். சுருக்கமாகச் சொன்னால் பிள்ளைகள் வரலாற்றில் பெற்ற அறிவையும் அதைப் பயன்படுத்துவதில் அவர்களுக்கிருந்த ஆற்றலையும் சோதனைகள் அளவிடுகின்றன. எம்முறையில் அளவிடுவது என்பது என்ற கேள்வி அடுத்து எழும்புகிறது இதில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. நமக்குத் தெரிந்த வரையில் அகவயத்தன்மையுடைய கட்டுரை முறை தேர்வுகள் மூலமாகவும் புறவயத்தன்மை பெற்ற புதுமாதிரி தேர்வு முறைகளைக் கொண்டும் பிள்ளைகள் வரலாற்றில் பெற்ற அறிவையையும், பெற்ற அறிவை பயன்படுத்துவதில் அவர்களுக்கு இருக்கும் திறமைகளையும் அளவிடலாம்.

## தேர்வின் இனங்கள்

தேர்வு இனங்களில் முக்கியமானவைகள் நான்கு. அவைகளாவன:- (1) நுண்ணறிவுச் சோதனைகள் (2) குறைகாண் சோதனைகள் (3) கற்பித்தல் சோதனைகள் (4) அடைவுச் சோதனைகள்

பிள்ளைகளின் தனிப்பட்ட நுண்ணறிவு ஈவு கண்டுபிடித்து அவர்களுக்கு ஏற்றத் தொழில் துறையில் அக்கறைக் கொள்ளும்படித் தூண்டவும், தனிப்பட்டவர்களின் திறமை எந்தெந்தத் துறைகளில் காணப்படுகின்றன என்று அறிந்து கொள்ளவும், நிர்வாகத் துறைக்கு பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுக்கவும், பிள்ளைகளைத் தரம் பிரிக்கவும், நுண்ணறிவுச் சோதனைகள் பயன்படுகின்றன.

நுண்ணறிவுச் சோதனைகள் வகுப்புகளுக்குப் பொதுவாகக் கொடுக்கலாம். குறைகாண் சோதனைகள் தனிப்பட்ட பிள்ளைகளுக்குக் கொடுத்து அவர்கள் எதிர்நோக்கும் சங்கடங்கள், எங்கே என்று கண்டு அதை நிவர்த்திக்க இச்சோதனைகள் நடத்தப்படுகின்றன. பிள்ளைகளின் தனித்திறமைகள், பழக்கங்களைப் பற்றிய விவரங்களும் இம்முறையில் சேகரிக்கலாம். இச்சோதனையில் சாதாரணத் தேர்வுகளைப் போல் அல்லாமல் மொத்த

எண்ணங்களை வைத்துக்கொண்டு பிள்ளைகளின் தேர்ச்சியை மதிப்பிடுவதில்லை. வகுப்பறையில் கேட்கப்படும் கேள்விகள் அனைத்தும் பிள்ளைகள் எதிர் நோக்கும் சங்கடங்களைக் கண்டு அறிவதற்கே என்பது தெளிவு.

கற்பித்தல் சோதனைகள் பற்றி எல்லா ஆசிரியர்களும் அறிந்து இருப்பர். வகுப்பறையில் அடிக்கடி மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதை புரிந்து கொண்டார்களா என்று அறிய சிற்சில வினாக்களை கொடுக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அம்சம் மனத்தில் பதியவைப்பதற்கு அடிக்கடி அதை பயன்படுத்துவதும் உண்டு. கற்றுக் கொடுத்ததை வரிசைப் படுத்தி ஞாபக மூட்டுவதற்கு கேள்விகளும் கேட்கப்படும். இதனால் கற்ற கருத்து தெளிவுபடும்.

கடைசியாக பிள்ளைகளின் சாதனைகளையும். அடைவுகளையும் அளவிடுவதற்கு நடத்தப்படும் தேர்வுகள், நடத்தப்பட்ட பாடங்களில் பிள்ளைகள் செய்யும் வேலைத்திறனை மதிப்பிடுவது இதன் முக்கிய நோக்கம், பிள்ளைகளை தரம் பிரித்து வகுப்பாக்கவும், வகுப்பு மாற்றவும் சான்றிதழ் வழங்கவும் தேர்வுகள் நடத்தப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

## கட்டுரை முறைத்தேர்வு

கட்டுரை முறைத்தேர்வு பெரிதும் புறவயத்தன்மைக்கு பொருந்தாத ஒன்றாகும். இதில் அகவயத்தன்மை மலிந்திருக்கிறது. கட்டுரை என்பது மனத்திறன்கள் பலவற்றின் அடியாகப் பிறந்த நுட்பமான கருத்துக் கோவையாகும். கட்டுரையில் காணப்படும் கருத்துக்களை புறத்திலிருந்து நோக்கித் திட்டவட்டமாக அளவிடுவது என்பது எளிதான காரியமல்ல. மதிப்பிடுவோர் அவர்தம் சார்பு எண்ணங்கள், விருப்பு வெறுப்புக்கள், மனப்போக்குகள் ஆகியவற்றால் உந்தப்படாமல் மதிப்பிடுவது என்பது இயலாத காரியமாகும். விடைத்தாள்களை மதிப்பிடுவோர் மதிப்பிடும் பொழுது உள்ள உடல்நிலை, மனநிலை சூழல் காரணமாக ஏற்படும் மனநிலைக் கோளாறுகள் மதிப்பீட்டை பாதிக்கும் என்பது வெளிப்படை.

மேற் குறிப்பிட்டவைகள் தவிரமற்றும இரண்டு குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளாவன 'மாறும் தன்மையவை' (Variables) 'மாறாத் தன்மையவை (Constant). முதல் குறைபாட்டிற்கு உதாரணம்:- மதிப்பிடுவோரின் மனநிலைக்கேற்ப மதிப்பெண்களைக் கூட்டியோ அல்லது குறைத்தோ போடுவது ஆகும். அதாவது மனநிலைக் கேற்ப மதிப்பெண்கள் வேறுபடும். சிலர் எப்பொழுதுமே தாராளமாகவே மதிப்பெண்கள் போடுவர் சிலர் எப்படிப்பட்ட விடையாக இருந்தாலும் கஞ்சத்தனமாகவே மதிப்பெண் அளிப்பர். இரண்டும் விரும்பத்தக்கவைகள் அல்ல. இக்குறைபாடுகள் பெரும்பாலும் எல்லோரிடம் சிற்சில சமயங்கள் காணப்படாமல் இல்லை.

இக்காரணத்தினுல் கட்டுரை முறைத் தேர்வில் நம்பகம் இல்லாமலோ குறைந்தோ காணப்படுகிறது. சில மாணவர்கள் ஒரு பரீட்சையில் முதலா-வதாகவும் அடுத்துவரும் பரீட்சையில் கடைசியிலும் காணப்படுவர். காரணம் கட்டுரை முறைத் தேர்வின் இயல்பாகும்.

ஒரே விடைத்தாளை பலர் மதிப்பிட்டால் அவர்களிடையே அல்லது அவர்கள் மதிப்பீட்டில் ஒற்றுமை காண்பது அரிது. வேற்றுமைகள் அதிக-மாகக் காணப்படும். இச்சந்தர்ப்பத்தில் பாலார்டு (Pollard) குறிப்பிடும் ஒரு சம்பவம் நினைக்காமல் இருக்கமுடியாது. ஒரு மதிப்பிடுவரால் தயாரிக்கப்பட்ட மாதிரி விடைத்தாள் மாறுதலாக மற்ற விடைத்தாள்களுடன் கலந்து மதிப்பீடு செய்யப்பட்டது. அத்தாளுக்கு தேர்வுக்குப் போதுமான எண்கள் மட்டும்தான் போடப்பட்டிருந்தது.

கட்டுரை முறைத் தேர்வில் நம்பகம் குறைந்து காணப்படுவது போலவே ஏற்புடையும் குறைந்து காணப்படுகிறது. வினவைப் பொருத்த-வரையில் உள்ள தெளிவு மட்டும் ஏற்புடமைக்கு உதவாது. ஒரு தேர்வுக்கான பாடத்தலைப்புகளில் பலவற்றை விட்டு மூலைமுடுக்குகளில் ஒரு சில கேள்வி-கள் கேட்கப்பட்டால் மாணவர்கள் சந்தர்ப்பத்தினுல் நன்ருக அதிக மதிப்-பெண்கள் பெறலாம் அல்லது பெருமல் போகலாம். ஏற்புடமையை எதிர்-பார்க்க வேண்டுமானுல் எல்லாப் பகுதிகளிலும் வினக்கள் கேட்கப்பட வேண்டும். அப்படிக் கேட்பதற்கும் போதிய நேரம் கிடையாது, இத்தேர்வு முறையில் சில கேள்விகளுக்கு மட்டும்தான் விடை எழுத முடியும். இதை முழுச் சோதனை என்று சொல்வதற்கில்லை. முழுச் சோதனையானுல் ஓரளவு ஏற்புடமையை எதிர்பார்க்கலாம். கட்டுரை முறைத் தேர்வின்படி விடைத்-தாள்களை மதிப்பிடும் பொழுது அந்தந்த கேள்விக்கான விடைகளில் செய்தி, அறிவை மட்டும் சோதிக்காமல் மொழிநடை, கையெழுத்துத் தெளிவு எழுத்துப்பிழைகள் போன்றவையும் மறைமுகமாக மதிப்பீட்டிற்குள்ளாக்கப்-படுகிறது.

கட்டுரை முறைத் தேர்வில் மற்றும் ஒருகுறை உண்டு. சாதாரணமாக தேர்வின் நோக்கம் பிள்ளைகளின் தேர்ச்சியையும் அடைந்த முன்னேற்றத்-தையும் அளவிடுவது ஆகும். கட்டுரை முறைத் தேர்வைக் கொண்டு தனிப்பட்ட மாணவர்கள் எதிர்நோக்கும் சங்கடங்கள் எங்கெங்கே என்று கண்டுபிடிக்க உதவுவது இல்லை. பொதுவாக கட்டுரை முறைத்தேர்வு இதை வெளிப்படையாக்குவது இல்லை. தேர்வின் மற்ருெரு முக்கியம் போதனைக்கு உதவுவதுதான்.

கட்டுரை முறைத் தேர்வை அகவயத்தைக் குறைத்து புறவயத்-தன்மையுடையதாக ஓரளவு செய்யலாம். சாதாரணமாகக் கேள்விகள் கட்டுரை முறையில் எளிதில் புரிந்துக் கொள்ளும் நடையில் இருக்காது என்பது சர்வ சாதாரணம். பிள்ளைகளுக்கு விளங்கும் நடையில் கேள்விகளின் வாசகம் இருக்க வேண்டும். தவிரவும் கேள்விகளுக்கு எதிர்பார்க்கும் விடை-களின் அளவும் வினக்களின் வாயிலாய் புலனுக வேண்டும். தெளிவற்ற

சுருக்கமான கேள்விகளைவிட தெளிவுடன் விரிவாக உள்ள கேள்வியே சாலச்சிறந்தது. தேர்வுகளில் எல்லா வினக்களும் ஒரே அளவு மதிப்பெண் கொடுக்கும் வழக்கமும் தவிர்க்கப்பட வேண்டும். எதிர்பார்க்கப்படும் விடையின் அளவையொட்டி மதிப்பெண்கள் கொடுக்கப்படவேண்டும். விருப்பு வெறுப்புக் கேள்விகள் கேட்கப்படக் கூடாது.

கட்டுரை முறைத் தேர்வில் எழுதப்பட்ட விடைத்தாள்களை சில முறைகளை பின்பற்றி அகவயத்தன்மையைக் குறைக்கலாம்.

தயார் செய்து மதிப்பெண்களை ஒரு வினவுக்குப் பல பிரிவுகளாகப் பிரித்து மதிப்பிட ஆரம்பிக்கவேண்டும். மொழிநடை, சுத்தம், தெளிவு இவைகளுக்குத் தனி மதிப்பிற்காக, கேள்வியின் ஒருபகுதி மதிப்பெண்கள் ஒதுக்கவேண்டும். விடைத்தாள்களை மதிப்பிடத் தொடங்கினல் இடை வெளி அதிகம் இல்லாமல் தொடர்ந்து மதிப்பிட வேண்டும். பொதுவாக வினக்கள் வாரியாகத் திருத்துவது முடியாத செயலாக இருந்தாலும், திருத்தினல் அகவயத்தன்மை ஓரளவு குறைக்கலாம். எல்லா விடைத்தாள்களிலும் முதல் வினவின் விடையையும், பிறகு இரண்டாவது விடையின் வினவையும் மதிப்பிடுவதாகும்.

## புது முறைத் தேர்வு

புறவயத் தன்மையுடைய புதுமுறைத் தேர்வுகளில் கட்டுரை முறைத் தேர்வுகளில் கூறப்படும் சில குறைபாடுகள் இல்லை. இருந்தாலும் இத் தேர்வில் சில குறைகள் காணமல் இருக்க முடிவதில்லை. இவை புறவய நோக்குக்கு இயைபை அமைந்துள்ளன. இதில் வினக்களுக்கு விடை நன்ருகவே இருக்கும். ஆகையினல் அகவயக் காரணிகளான மதிப்பிடு-வோரின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கோ, மனப்போக்குகளுக்கோ இடம் தருவதில்லை. தேர்வின் மதிப்பீடு புறவயத் தன்மை பொருந்தியதாக அமைந்-திருப்பதால் நம்பகம் உள்ளதாக இருக்கும். நம்பகம் விடைகளின் மதிப்-பீட்டைக் குறிக்கிறது. ஒரே விடைத்தாளை பல ஆய்வாளர்கள் தனித்தனியே மதிப்பிட்டாலும் அம்மதிப்பீடுகளிடையே வேற்றுமை இல்லாதிருப்பின் அத்-தேர்வை நம்பகமானத் தேர்வு என்று கூறலாம். இத்தேர்வுகளில் விடையைப் பற்றி ஒருமைப்பாடு இருக்கும். ஆகையினல மதிப்பீட்டின் முடிவும் ஒன்ருக இருக்கும். இதனல் நம்பகம் ஏற்படுகிறது.

இதில் ஏற்புடைமையும் அதிகமாக இருக்கும். வினவுக்கேற்ற விடை என்னவென்பது திட்டவட்டமாகத் தெரியும். ஒரே சொல்லில் விடை-யளிக்கப்படுவதால் மொழி நடைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. அதிக வினக்களுக்குக் குறைந்த நேரத்தில் விடையளிக்க முடிவதால் பாடப் பகுதியின் எல்லாப் பகுதிகளும் தேர்வுக்குட்படுத்தப்படுகிறது. சுருக்கமாகச் சொன்னல் இத்தேர்வு பிள்ளைகள் பெற்ற முழு அறிவையும் சோதிக்கிறது.

இத்தேர்வுகளின் மற்றெரு முக்கியத்துவம் இங்கு குறிப்பிடவேண்டும். கட்டுரை முறைத் தேர்வின் மூலம் பிள்ளைகள் எதிர்நோக்கும் கஷ்டங்களைக் கண்டறிய முடியாது என்று குறிப்பிடப்பட்டது. பிள்ளைகள் எதிர்நோக்கும் அக்கஷ்டங்களைக் கண்டு அதற்குத் தகுந்தவாறு கற்பித்தல் முறைகளை மாற்றி துணைக்கருவிகள், கற்பித்தல் நுட்பங்கள், பாடத்தலைப்புகளை மாற்றுதல் முதலியன செய்யலாம். இத்தேர்வின் முடிவில் பிள்ளைகளின் தேர்ச்சியை அறிவதுடன், கற்பித்தலின் சிறப்பையும், போதனை முறையின் பல அம்சங்களின் குறைபாடுகளையும் கண்டு அதை நிவர்த்திக்கலாம்.

புதுமாதிரித் தேர்வுகளில் சில குறைபாடுகளும் உண்டு. இதில் மொழி, நயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மொழி மிகவும் தேவை. இன்றியமையாதது என்பது உண்மை. பிள்ளைகளின் சொல்வன்மையை அளவிடமுடியாது. அறிவியல் முறைப்படி பிள்ளைகள் சிந்திக்க வாய்ப்பு அதிகம் கொடுக்கப்படவில்லை. கேள்விகள் தயார் செய்வது சாதாரண காரியமல்ல.

இரண்டு முறைத் தேர்வுகளிலும், குறைகளும் நிறைகளும் காணப்படுவதால் இரண்டு முறைத் தேர்வுகளையும் பின்பற்றலாம். கட்டுரை முறை ஏற்புடையதாக வேண்டுமானுல் பாடப் பொருள் முழுவதையும் உள்ளடக்கிய தேர்வாக இருக்கவேண்டும். கட்டுரை முறையில் அடங்காத பாடப் பொருள்களை புதுமாதிரிக் கேள்விகள் மூலம் சோதனை செய்யலாம். எல்லாப் பாட பொருள்களிலும் தேர்வுகள், கற்பித்தல் செய்தவுடன் தொடர்ந்து சோதனை செய்து கொண்டு வரவேண்டும். ஆண்டு முழுவதும் இவ்வாறு பல சோதனைகள் அல்லது தேர்வுகள் நடத்தப்படவேண்டும் பல தேர்வுகள் நடப்பதாய் இருந்தால் மாணவர்கள் தேர்வின் பேரில் வெறுப்புக் கொள்வர். ஆகையினுல் இரண்டும் கலந்த தேர்வுகள் அடிக்கடி நடத்தவேண்டும்.

சமூகத் திறன்களையும், மனப்பான்மைகளையும், சோதிப்பதற்கென அமைந்த பல சோதனை அளவு கோல்கள் முதலியன மேலை நாடுகளில் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய தேர்வு முறையோடு பேட்டி காணுதல் வாயிலாகவும் இவைகளைச் சோதித்தறிகின்றனர். ஆனுல் இம்முறைகள் முற்றிலும் நம்பகமானவைகள் என்று கூறமுடியாது. உற்று நோக்கி அறியும் முறையே இத்திசையில் பயன்படும். ஆசிரியர்கள், மாணவர்கள் செயலில் ஈடுபட்டிருக்கும் பொழுது உற்று நோக்கி அவர்களை மதிப்பிட வேண்டும். இதற்கு ஆசிரியர் பல வாய்ப்புகள் அளிக்கவேண்டும். பல சூழ்நிலைகளில் மாணவர்கள் எவ்வாறு இயங்குகின்றனர் என்பதை ஆசிரியர்கள் கண்காணித்து வரவேண்டும். நீண்ட கால அடிப்படையில் இவ்வாறு உற்று நோக்கி மாணவர்களின் சமூகத் திறன்களையும், மனப்பான்மைகளையும் மதிப்பிடலாம்.

## கட்டுரை, சிறுவிடை வினாத் தேர்வுகளின் மதிப்பீடு

வரலாற்றுப் பாடம் கற்றதினின்றும் பெற்ற திறன்களை ஆராயவும், மதிப்பிடவும் அடைவுத்தேர்வுகள் (Achievement tests) நடத்தப்படுகின்றன. இந்த அடைவுத்தேர்வுகள் இரண்டு வகையான வினாக்களைக் கொண்டு அமைந்திருத்தல் கூடும். இவ்விரண்டுவகை வினாக்களில் ஒரு வகை புறவயத் தன்மை மிகுதியாகக் கொண்ட சிறுவிடை வினாக்கள். இவற்றை நாம் புது-முறைக் கேள்விகள் (new type tests) என்று குறிப்பிடுகிறோம். இரண்டா-வது வகை பெருமளவு அகவயத் தன்மையுடையதும் தொடர்ச்சியான நீண்டதொரு விடையை எதிர்பார்க்கும் கட்டுரை வினாக்கள் ஆகும். இவ்விரண்டு வகைகளுக்குமிடையே சோதிக்கப்படும் திறன்கள், சோதிக்கப்படும் பாடப் பகுதியின் பரப்பெல்லை, மாணாக்கர்களை ஊக்குவிப்பதில் உள்ள வேறு-பாடுகள், உருவாக்குதல் முறை, மதிப்பெண்கள் வழங்குதல் ஆகிய ஒவ்வொன்றிலும் உள்ள குறைகளும் நிறைகளும் அடுத்து விவரிக்கப்-பட்டுள்ளன.

(i) சோதிக்கப்படும் திறன்களைப் பொறுத்தவரை மாணாக்கர்கள் தாங்கள் பெற்றுள்ள பின்னணி அறிவு அல்லது கருத்துக்கள் ஆகியவற்றின் துணைகொண்டு சொந்த வாக்கியங்களில் விடை எழுதுதல் கட்டுரை வினாக்-களில் தேவைப்படும். கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து சொந்த மொழி நடை-யில் எழுதவேண்டிய அவசியம் இவற்றில் உள்ளது. கட்டுரை வினாக்களுக்கு விடையளிப்பதில் மொழித்திறன் ஒரு பங்கைப் பெற்றுள்ளது. அனுமானித்-தல், தன்னிடமுள்ள கருத்துக்களை வினாக்களையொட்டி தேவைக்கேற்ப ஒருங்கமைத்தல், கருத்துக்களை ஒப்பிட்டோ அல்லது வேறுபடுத்தியோ ஆராய்தல் போன்ற சிந்தனையின் உயர் திறன்களைச் சோதிக்க கட்டுரை வினாக்கள் உதவும். ஆனால் இவ்வகை வினாக்கள் வெறும் செய்திகளையும், விவரங்களையும் (factual information) பற்றிய அறிவை நன்கு சோதித்து ஆராயப் போதுமான நம்பகம் (Reliablity) உள்ளவையல்ல. புறவயத் தன்மையுடைய சிறுவிடை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள பல-வற்றினின்றும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல் அல்லது ஒரு சொல், சொற்றொடர் ஆகியவற்றில் அடங்கும் சிறிய விடையினை அளித்தல் போன்றன மாணாக்கர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. அனுமானித்தல், ஒருங்கிணைத்தல், ஒப்பிடுதல், போன்ற உயர் சிந்தனைகளின் திறனைச் சோதிக்கவும் பயன்படத்தக்க முறையில் சிறுவிடை வினாக்களை அமைக்க இயலும். எனினும் விவரங்களைப்பற்றிய அறிவை மதிப்பிட மிகவும் சிறந்து உதவுவதாக இவ்வகை வினாக்கள் அமைந்துள்ளன.

(ii) பரிசீலிக்கப்படும் பாடப்பகுதியின் பரப்பெல்லையின் கோணத்-தினின்று ஆராய்கையில் கட்டுரை வினாக்களைக் கொண்ட சோதனையில் மாணாக்கர்கள் பெற்ற பொருளறிவின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே நம்மால் சோதிக்க இயலும். கட்டுரை வினாக்களுக்கு விடைகளை எழுதக் காலம் அதிகம் தேவைப்படுமாகையால் குறிப்பிட்ட கால அளவில் ஒரு சில கட்டுரை

வினுக்களுக்கு மட்டும்தான் மாணுக்கர்களால் விடையளிக்க முடியும். மற்றும் மொழித்திறன் மிகுதியாக உள்ள மாணுக்கர்கள் தமக்கு நிச்சயமாகத் தெரிந்த கருத்துக்களைப் பற்றி விடை எழுதாமலேயே அவற்றை ஆராய்ந்தது போன்று தோற்றத்தினை ஏற்படுத்தி சோதனையில் அதிக மதிப்பெண்கள் பெற இயலும். ஆனுல் புறவயத் தன்மையுடைய சிறு வினுக்களைக் கொண்ட ஒரு சோதனையின் துணைகொண்டு மாணுக்கர்கள் பெற்ற பொருளறிவினைப் பரவலாக நாம் மதிப்பிடலாம். புறவய வினுக்களுக்கு வேகமாக விடையளிக்க-வியலுமாதலால், ஒரு சோதனையில் பல வினுக்களை நாம் அளிக்கலாம். இதனுல் மதிப்பீட்டில் நம்பகம் மிக அதிகமாக உயரும்.

III மாணுக்கர்கள் தங்களது கருத்துக்களை ஒருங்கிணைத்து தெளி-வாக வெளிப்படுத்த கட்டுரை வினுக்கள் ஊக்குவிக்கின்றன. புறவயத் தன்மையுடைய சிறு வினுக்கள் பரவலாகப் பல விவரங்களை அறிதல், திறன்-களைப் பெறுதல் போன்றவற்றில் மாணுக்கர்களை ஊக்குவிக்கின்றன.

IV உருவாக்குதல் முறையைப் பொருத்தவரை கட்டுரை வினுக்-களுடைய ஒரு சோதனையைக் குறிக்க ஒரு சில வினுக்களையே எழுதவேண்டும். வினுக்கள் ஓரளவு பொதுத்தன்மை பெற்றும், ஓரளவு குறிப்பானவையாகவும் இருத்தல் வேண்டும். ஆனுல் புறவயத்தன்மையுடைய சிறுவிடை வினுக்-களுடைய ஒரு சோதனையை உருவாக்கப் பல வினுக்கள் தேவைப்படும். குழப்பமற்ற, மிகத் தெளிவான மொழியில் வினுக்கள் அமைக்கப்பட வேண்டும். வெறும் ஊகத்தினுல் உண்மையான விடையை குறிப்பிடக் கூடிய வகையில் இவை அமையக்கூடாது. பல விடையில் தேர்வு வினு போன்ற வகைகளில் காணப்படும் தவருன விடைகள் (Distractors) மாணுக்கர்கள் பொதுவாக இழைக்கக் கூடியவற்றைப் போன்று அமைய-வேண்டும்.

V இறுதியாக மதிப்பெண்களை அளிப்பதில் கட்டுரை முறைத்தேர்வு வினுக்களுக்கு சாதாரணமாக அதிக காலம் தேவைப்படும். தன் மாணுக்கர்கள் எவ்வாறு சிந்தித்து முடிவுக்கு வந்தனர் என்பதை ஆசிரியர் மதிப்பிட இவ்வகை வினுக்களுக்கான விடைகள் தெளிவாக்கும். ஆனுல் கட்டுரை வினுக்களுக்கு நம்பகத்தன்மை குறைவானதால் ஒரு வினுவுக்கு பலர் பல்வேறு வகையில் விடையளிக்கும் நிலை ஏற்படலாம்; அல்லது ஒரு விடையை ஓர் ஆசிரியர் பல்வேறு நிலையிலும், காலத்திலும் மதிப்பிடும் பொழுதும், பல ஆசிரியர்கள் அவ்விடையை மதிப்பிடும் பொழுதும் அவ்விடைக்கு மாறுபட்ட மதிப்பெண்கள் தருவதும் சாத்தியமாகும். கட்டுரை முறைத்தேர்வு போன்று அல்லாமல் புதுமாதிரி வினுக்களை மிக வேகமாக மதிப்பீடு செய்யலாம்; சரி, தவறு என்பதின் அடிப்படையில் மட்டுமே இவற்றில் மதிப்பெண்கள் கொடுக்கப்படுகின்றன. எனவே மதிப்பீடு நிலைத்ததாகவும் நம்பகமான-தாகவும் அமையும்.

## தேர்வுகள் கற்பித்தலின் தரத்தை உயர்த்துதலும்

சோதனைகளின் பொது நோக்கம் பள்ளியில் கற்பித்தலின் தரத்தை உயர்த்துவது ஆகும். தவிரவும் பள்ளித் தேர்வுகளின் சில சிறப்பான நோக்கங்களும் இங்கு குறிப்பிடத்தக்கவை. தேர்வு எந்த வகுப்புக்கு ஒரு மாணாக்கன் ஏற்றவன் (Placement) என்பதை நிர்ணயிக்கத் தேர்வுகள் உதவுகின்றன. பொருளறிவு பெறுதல், விளக்கங்களைப் புரிந்து கொள்ளுதல், செய்திறன்களைக் கற்றல் ஆகியவற்றில் சிலபோது மாணாக்கர்களிடையே காணப்படும் இடைவெளிகளையும் குறைகளையும் அறிந்து (Diagnosis) அவனுக்கேற்ற குறை தீர் கற்பித்தலை உருவாக்குவதாலும் அல்லது நமது கற்பித்தல் முறையின் அமைப்பினை மாற்றியமைத்தலிலும் தேர்வுகளும் சோதனைகளும் உதவுகின்றன. ஒரு புதிய கற்பித்தல் முறை அல்லது கற்பித்தலில் செய்யப்பட்ட மாற்றம் எந்த அளவுக்குப் பயனுள்ளது என்பதனை ஆராய்ந்து மதிப்பிடவும் (assesement of change) இவை உதவும். மாணாக்கர்களின் எதிர் கால அடைவு முன்கூட்டியே குறிப்பிட (Pvedichoin) தேர்வுகளும் சோதனையும் உதவும். தேர்வுகளின் முடிவை அடிப்படையாகக் கொண்டு பள்ளியின் தரத்தையும் (Evaluation of School) நாம் மதிப்பிடலாம்.

## வரலாற்றுத் தேர்வுக் கேள்விகள் எப்படி இருக்கவேண்டும்?

வரலாற்றில் கேட்கப்பட்ட கேள்விகள் பிள்ளைகளின் ஞாபகசக்தியை அளவிடும் முறையில் இருந்தால் அது போதுமானது அன்று. மாணாக்கர்களின் சிந்தனையைத் தூண்டி கற்ற விவரங்களைப் பயன்படுத்தி விடையளிக்கும் பாணியில் கேள்விகள் அமைக்கப்பட வேண்டும். விடை அளிக்கும் போது மற்ற விவரங்களில் சிந்தனையைச் செலுத்தி அவற்றின் அடிப்படையில் விடை எழுதத் தூண்டும் வினாக்கள் கேட்கப்பட வேண்டும். வரலாற்று விவரங்களில் கேட்ட வினாக்களுக்குத் தக்கவாறு பல இடங்களில் பொறுக்குதலும், தொகுத்தலும் அப்படித் தொகுத்ததை அடிப்படையாகக் கொண்டு கருத்துக்களை உருவாக்குதல் போன்றவற்றிற்கு இடம் அளிக்கப்படவேண்டும். ஞாபகத்தைச் சோதிக்கும் வினாக்கள் தேர்வை முழுமையாக உரிமையாக்கிக் கொள்ள அனுமதிக்கக் கூடாது. பிள்ளைகள் வரலாற்றுப் பாடத்தில் பெற்ற திறன்களையும் அளவிடுவதற்கான வினாக்கள் அமைக்கப்படவேண்டும். (உ.ம்) படங்களையும், தேசப்படங்களையும் வரலாற்று அறிவின் அடிப்படையில் விளக்குதல், காலத்தை நிர்ணயம் செய்தல், மதிப்பிடுதல் ஆகியவற்றிற்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்.

## ஒரு முழுமையான தேர்வின் மூன்று கூறுகள்

இதை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று பிள்ளைகள் வரலாற்றுப் பாடத்தில் அறிந்த விவரங்கள் எந்த அளவுக்கு ஞாபகத்தில் இறுத்தியுள்ளனர் என்று அறிவதற்காக விவரங்களைத் தொகுத்தல். இரண்டாவது வரலாற்றுப்

பாடப்பகுதிகளுள் பொதிந்துள்ள வரலாற்றுப் போக்குகளையும் வரலாற்றுச் சிறப்புகளையும், காரணங்களையும் விளைவுகளையும் எந்த அளவுக்கு உணர்வதில் திறன் பெற்றுள்ளனர் என்பதை அளவிட வினாக்களைத் தொகுத்தல், இதில் வரலாற்று உணர்வும் உள்ளடக்கப்பட வேண்டும். கடைசியாக பிள்ளைகளின் மனத்திறன்களின் வளர்ச்சியையும் அளவிடுவதற்கான வினாக்களைத் தொகுத்தல்.

## கட்டுரை முறைத் தேர்வு முறைகள்

இதில் அகவயத்தன்மை சற்று அதிகமாகக் காணப்படுகிறது. தேர்வை மதிப்பிட்டு முடிவு சொல்லுவது, அத்தேர்வை மதிப்பிடும் ஆசிரியரின் அகவயத்தன்மையைப் பொருத்தது. அதையே பல ஆசிரியர்கள் மதிப்பிட முனைந்தால் மதிப்பின் முடிவு ஒரே மாதிரியாக இருக்காது. அதுக்குத் தகுந்தவாறு மதிப்பும் மாறும்.

பிள்ளைகளின் திறன்களை ஒத்திட்டு அளவிட இது தகுந்த முறையாகக் காணப்படவில்லை. ஒரு தேர்வில் ஒரு மாணவன் 60 எண்கள் எடுத்தால் அவனுடைய திறமை 40 எண்கள் எடுத்த மாணவனைவிட அதிகம் என்று சொல்வதற்கில்லை. புதுமாதிரி தேர்வு போலவே ஒரு மாணவன் பல தேர்வு-களில் ஒரே மாதிரியான திறமைகளை வெளியிடுவது கிடையாது. தேர்வுக்குத் தேர்வு அவனுடைய திறனில் ஏற்றத்தாழ்வு காணப்படும். இதற்கு அடுத்தபடியாக புதுமாதிரி கேள்விகளைப் போல பிள்ளைகளிடம் காணும் 5 முறைகளைக் கண்டு கொள்ளும் ஒரு உதவியாக அமைவது கிடையாது. காரணம் ஒரு சில வினாக்கள், விடை சரியாகவோ அல்லது முழுதும் தவறாகவோ அமையலாம். மற்றொன்று பாடப்பகுதிகளின் எல்லா அம்சங்களிலும் வினாக்கள் கேட்க முடியாது. பிள்ளைகள் எழுதும் விடை 5 சதவீதம் பாடத்தில்தான் உள்ளடங்க வேண்டும். மற்ற 95 சதவீதம் பகுதியில் பிள்ளைகள் பெற்ற திறனை மதிப்பிட வாய்ப்புக்கிடைக்க வில்லை. மொழித்திறமை, நல்ல கையெழுத்து எல்லா மாணவர்களுக்கும் ஒன்றுபோல் அமைவது கிடையாது. இவைகள் அதிகமாகப் பெற்ற மாணவர்கள் அதிக எண்கள் தேர்வில் எடுக்க முடியும்.

## புதுமாதிரி வினாக்களின் விளக்கம்

புதுமாதிரிக் கேள்விகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். இவற்றில் முதல் மூன்று வகையானவற்றை அடிக்கடியும், மிக அதிகமான அளவிலும் பயன்படுத்தலாம். கடைசி இரண்டை பயன்படுத்துவதில் சில குறைகள் சொல்லப்படுகின்றன. முதலாவது வரலாற்று விவரங்களில் குறிப்பிட்ட ஒன்றை ஞாபகத்திற்குக் கொண்டு வருதல். இது பிள்ளைகளின் ஞாபகசக்தியை அளவிடுகிறது என்று குறிப்பிடலாம். பிள்ளைகள் வரலாற்றில் அறிந்து கொண்ட விவரங்களையும் அளவிடுகிறது. இரண்டாவது வகை முறையாக

உள்ளதற்குப் பொருத்தமானதும், அதைச் சேர்ந்ததையும் கண்டுபிடித்து வெளியிடுதல். இதை ஆங்கிலத்தில் (Completion Type) என்று சொல்லப்படுகிறது. மூன்ருவது வகை இனம் கண்டு சொல்லுதல் (Recognition) இதில் பலவகையுண்டு. சரி, தவறு என்று குறிப்பிடுதல், ஆம் இல்லை என்று சொல்லுதல், தொகுத்தவற்றிலிருந்து ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்தல் அல்லது இரண்டு பொறுத்தமானவற்றைச் சொல்லுதல், ஜதைப் படுத்துதல், வரிசைக்கிரமமாக மாற்றுதலும் தொகுத்தலும் ஆகியவை அடங்கும். நான்காவது தவரான விடைகளைக் கொடுத்து அதைத் திருத்தி சரியாக அமைத்தல். இதில் தவறு இருப்பதை இனம் கண்டால் போதாது, அதை நீக்கிவிட்டு பொருத்தமானவற்றையும் குறிப்பிட வேண்டும். கடைசியாக உவமானத்தை வெளியிடுதல். இதற்கு போதுமான வாய்ப்புகள் கிடைப்பதில்லை. (உ-ம்) எல்லைப்புற காந்தி, கொரியர்களின் இந்திய சத்தியாகிரகம், இந்தோனேசியாவின் நேரு, தென்னக காந்தி.

## நல்ல தேர்வின் சிறப்பியல்புகள்

1) புறவயம் (Objectivity) 2) நம்பகம் (Reliability) 3) ஏற்புடமை (Validity) 4) நடத்துவதில் எளிமை (Easy of Administration) 5) மதிப்பிடுவதில் சுலபம் (Easy of Scoring).

## புறவயம்

சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகாமல் புறத்தே நின்று குறிப்பிட்ட நோக்கத்தையும் அளவையும் மனதில் கொண்டு தேர்வுகளை நடத்தி விடைத்தாள்களை மதிப்பிடுவது புறவயம் எனப்படும். புறவயம் என்பது எதையும் புறத்தே நின்று நோக்கி முடிவு கட்டுவதை குறிக்கும். மதிப்பிடுபவர் தன் சொந்த விருப்பு வெறுப்பு சார்பு எண்ணங்கள் ஆகிய அகவய ஏடுகளுக்கு மனம் கொடாமல், புறவய நோக்கங்களுடன் செய்யும் முடிவாகும். இதற்கு உதாரணமாக குளிர்காய்ச்சல்களில் அவதிப்படும் நோயாளியின் கரத்தை கையில் தொட்டு அறிவதைக் குறிப்பிடலாம். இதில் அகவயத் தன்மை அதிகமிருக்கும். கையில் தொட்டுப் பார்த்தால் தொடுவோர் கையின் வெப்பம் ஆளுக்கு ஆள் வேறுபடும். தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புகள் மனப்போக்குகளுக்கு இடமளிக்கும் தேர்வுகள் அகவயத் தேர்வாகும். அத்தகைய குறைபாடுகள் அற்ற தேர்வு முறை புறவயத் தேர்வு எனப்படும்.

ஒரு தேர்வு புறவயத் தன்மைத்தாயதா என்று காண்பது கடினமல்ல. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியுடையவர்கள் தேர்வின் விடைத்தாள்களை மதிப்பிடும் போது எல்லோருடைய முடிவும் ஏறத்தாழ ஒன்ருக இருந்தால் அது புறவயத் தேர்வு எனப்படும். இதில் அகவயத் தன்மை குறைந்தோ அல்லது இல்லாமலோ இருக்கும். இத்தேர்வுகள் விசாலமானவை (extensive). பிள்ளைகளிடையே குறை காண்பதற்கு இதைவிட உயர்ந்த தேர்வு முறை கிடையாது.

கட்டுரை முறைத் தேர்வு விடைத்தாள்களை இரண்டிற்கு மேற்பட்ட தகுதி பெற்ற ஆசிரியர்கள் மதிப்பிட்டால் மதிப்பின் முடிவு ஒன்ருக இருக்காது. இதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அதை மிகவும் கவனமாக கவனித்து நீக்கினுல் இக்குறையை ஒருவாறு போக்கலாமே ஒழிய முற்றிலும் நீக்க முடியாது என்பதை மனதில் கொள்ளவேண்டும். தரப்பட்ட விடைகளில் உள்ள கருத்துக்களின் எண்ணிக்கை, கருத்துக்களின் தொகுப்பு, வெளியிடும் திறமை இவைகளுக்கு தனி கவனமும், மதிப்பும் கொடுத்தால் கட்டுரை முறை தேர்வை ஓரளவு புறவயத்தன்மையுடைய தேர்வாக மாற்றமுடியும்.

புதுமாதிரி சோதனை தேர்வுகளில் கேள்விகள் ஒரே விடைகள் கொடுப்பனவாக இருப்பவைகளைக் கோர்த்து கேள்வித்தாள்களை தயார் செய்யவேண்டும். அடுத்தது ஒவ்வொரு வினுவிற்கும் கொடுக்க வேண்டிய புள்ளிகளை தீர்மானித்தல் வேண்டும். இதை வைத்துக் கொண்டு எத்தனை பேர் மதிப்பிட்டாலும் முடிவு ஒன்ருகவே இருக்கும். கட்டுரை முறைத் தேர்வில் இதைக் காண்பது அரிது.

## நம்பகம்

புறவயத் தேர்வு நம்பகமானதாகவும் இருக்கும். அதாவது இத்-தேர்வை எத்தனை ஆய்வாளர் திருத்தினும், அவர்களது மதிப்பீட்டில் வேறு-பாடு இராது. மதிப்பீடு நம்பகமானதாக அமையும். நம்பகமாக மதிப்பிடு-வதற்கு ஏற்ப அமைந்த தேர்வை நம்பகமானத் தேர்வு என்று கூறலாம். ஒரு தேர்வு எதை மதிப்பிடுவதற்காக வைக்கப்பட்டது என்பதைவிட, எதை அளக்க வேண்டுமோ அதை, எவ்வளவு துல்லியமாக அளக்கின்றதோ அதைப் பொருத்து நம்பகம் இருக்கும். தேர்வு எதை அளக்கவேண்டுமோ அதை அளக்க வேண்டும். மாதிரிகள் பரந்து எல்லா அம்சங்களிலும் நிறைந்து இருக்கவேண்டும். எல்லாப் பகுதிகளிலும் வினுக்கள் பரவி இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நம்பகம் அதிகப்படும். எல்லாப் பகுதிகளிலும் மூலைமுடுக்குகளிலும் கேள்விகள் வரவேண்டும். மிக அதிகமான கேள்விகள் உரிய காலத்தில் விடையளிக்கும் படியாகத் தொகுக்கப்பட வேண்டும்.

பிழையின்மை, முரண்பாடின்மை நம்பகத்தின் இரண்டு முக்கிய அம்சங்கள். முப்பது முதல் அறுபது நிமிடங்களில் பழைய முறை கேள்விகள் ஐந்திலிருந்து பத்துவரை கொடுப்பதுவிட பத்துமுதல் இருபது நிமிடங்களில் பலகேள்விகளுக்கு விடையளிக்கக் கூடுமான புறவயத்தன்மையுடைய புது மாதிரி கேள்விகள் கொடுப்பதினுல் நம்பகம் அதிகம் உண்டு என்பதை மறக்கக் கூடாது.

## ஏற்புடைமை

ஒரு தேர்வு எந்தெந்த அறிவுப் பகுதிகளை ஆய முற்படுகின்றதோ, அவ்வறிவுப் பகுதிகளை மட்டுமே ஆய்தல் வேண்டும். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படாத பிறகூற்றுகளும் தேர்வின் மதிப்பீட்டில் இடம் பெருமேயானுல்

அத்தேர்வு ஏற்புடைமை குறைந்ததாகும். வரலாறு நிலநூல், கணிதம், போன்ற அறிவுப் பாடப் பகுதிகளுள் தேர்வு நடத்தும் போது வினாத்தாள்களை மாணவர்க்கு தெளிவற்ற முறையில் தயார் செய்தால் ஏற்புடைமை குறையும். சில மாணவர்களுக்கு விடை தெரிந்திருக்கலாம். ஆனால் வினாக்கள் புரிந்து கொள்ளாத நிலையில் இருந்ததினால் அவ்வினாக்களுக்கு விடை எழுத முடியாது போயிருக்கலாம்.

மாணவர்கள் நன்கு பயிலாத வேற்று மொழியில் வினாக்கள் கேட்டாலோ அல்லது தாய் மொழியிலேயே கேள்விகள் கேட்கும் போது, அவற்றை இரு பொருள்கள் கொடுக்குமாறு அமைத்தாலோ அவர்கள் சரியான விடை அளிக்கமாட்டார்கள். அவர்கள் கொடுத்த விடையின் அடிப்படையில் அவர்களின் தேர்ச்சியை மதிப்பிடுதலும் சரியல்ல. இக்குறைபாடுகளாலும் ஏற்புடைமை குறையும் அறிவுக் கூறுகள் எல்லாவற்றையும் ஆயக் கூடிய வினாக்கள் கொண்ட தேர்வைவிட ஏற்புடையதாகும். பொதுவாக ஒரு தேர்வில் வினாக்கள் எண்ணிக்கை அதிகமாக ஆக அத்தேர்வின் ஏற்புடைமையும் அதிகமாகும். மாணவர்கள் ஆண்டு முழுவதும் பெற்றதேர்ச்சியை அளவிடும் போதும் ஒரு சில தேர்வுகளைக் கொண்டு செய்யும் அளவீட்டைவிட ஆண்டு முழுவதும் அவ்வப்போது சிறிது, சிறிதாக நடத்தப்பட்ட தேர்வுகளின் முடிவுகளை சார்ந்து செய்யும் நிறை ஈடே சிறந்ததாகும்.

## தேர்வு வைப்பதிலும் மதிப்பிடுவதிலும் சுலபம்

தேர்வு வைப்பதுவும் மதிப்பிடுவதும் சுலபமாக இருக்க வேண்டும். புதுமாதிரிக் கேள்விகளைக் கொண்ட வினாத்தாள்களை கொடுப்பதும் மதிப்பிடுவதும் சுலபம். ஆனால் தயாரிப்பது மிகவும் கடினம். காலதாமதமும் ஆகும். இருந்த போதிலும் இத்தேர்வை வைப்பதில் உள்ள எளிமை திருத்துவதில் உள்ள சுலபம் இதை ஈடுசெய்யும்.

புதுமாதிரிக் கேள்விகளை தயார் செய்யும் பொழுது ஒரு சில அம்சங்களை ஆசிரியர் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆசிரியர் தேர்வு நடத்த வேண்டிய பகுதிகளில் தலைப்புகளின் பட்டியல் ஒன்று தயார் செய்ய வேண்டும். அந்த தலைப்புகளில் எத்தனை கேள்விகள் தயாராக்க முடியுமோ அத்தனை கேள்விகளை தயாரிக்க வேண்டும். அவைகளை சந்தர்ப்பத்திற்கும் இடத்திற்கும் தகுந்தவாறு புதுமாதிரி கேள்விகளாக அமைக்க வேண்டும். பாட அறிவை சோதிப்பதுடன் சில சம்பவங்களை நன்ருக புரிந்து கொண்டார்களா என்றும் சோதிக்க வினாக்கள் சேர்க்கப்பட வேண்டும். கிடைத்த செய்திகளில் இருந்து ஒரு முடிவுக்கு வரும் திறனை பிள்ளைகள் பெற்றிருக்கிருர்களா, என்பதையும் சோதனைக்குள்ளாக்க வேண்டும். வினாக்கள் விடைகளுக்கு வழிகாட்டியாக விளங்க கூடாது. இருவிடைகள் கொண்ட வினாக்கள் இருக்க கூடாது. சுலபமான விடைகள் வரும் வினாக்கள் முன்னால் அமைக்கப்பட வேண்டும். சில மாணவர்கள் கடினமான கேள்விகளில் அதிக நேரம்

செலவிட்டு, சுலபமான கேள்விகளுக்கு விடை தெரிந்தும் நேரம் இல்லாததால் விடை எழுதாது விட்டு விடுதலும் உண்டு. இக்குறையை இது நீக்கும்- கடைசியாக கேள்வித்தாள்களுக்கு வேண்டிய காலம் மதிப்பிட வேண்டும்.

முன்பத்திகளில் குறிப்பிட்ட ஐந்து சிறப்பு அம்சங்களுடன் இன்னும் இரண்டு சிறப்பு அம்சங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவற்றில் முதலாவது வினுக்களைப்பற்றிய நல்ல தெளிவு. கேட்கப்பட்ட வினுக்களைப் பற்றிய ஐயப்பாடு பிள்ளைகளின் மனதில் தோன்றக் கூடாது. வினுக்களில் வரும் சொற்கள் நல்ல தெளிவான ஒரே பொருளை மட்டும் கொடுப்பனவாக அமைய வேண்டும். மாணவர்களிடம் எதிர்பார்க்கும் விடைகள் என்ன என்பதை வினுக்கள் தெளிவாக்க வேண்டும். ஆரம்பத்தில் வினுக்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் குறிப்பிட்ட ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் அமைய வேண்டும். மாணவர்களுக்கு இம்மாதிரியான வினுக்களும் அவைகளுக்கான விடைகளும் மாதிரியாக அடிக்கடி கொடுத்து வினுக்கள் பற்றிய தெளிவையும் விடை கொடுக்க வேண்டிய முறையையும் பிள்ளைகள் அறிந்து கொள்ள வாய்ப்பும் அவகாசமும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

மற்றும் ஒரு சிறப்பு பாடப்பகுதிகள் அனைத்திலும் வினுக்கள் நிரம்பி இருக்கவேண்டும். இதை ஒரு முழுத்தேர்வில் செய்வது என்பது சற்று கடினம். இதற்கு பாடத்தை பல பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பெரும் பகுதியையும் தனியாக எடுத்துக் கொண்டு அப்பகுதியின் எல்லா மூலை முடுக்குகளிலும் வினுக்கள் தயார் செய்து தேர்வு வைக்கலாம். ஒருமாதிரியான கேள்விகள் எல்லா இடங்களிலும் கேட்கப்பட வேண்டும். பிள்ளைகளின் வேறுபாட்டை சரியாக அளவிட வேண்டுமானுல் இம்முறை மிக ஏற்றது. பிள்ளைகளின் திறன்களையும் பாடத்தில் பெற்ற அறிவையும் சரியாக அளவிட்டு மாணவர்களின் திறன் வரிசையைக் கண்டுபிடிக்க இந்த முறையே மிகச்சிறந்தது.

# மதிப்பீடு

## அளவிடுதலும் மதிப்பீடு செய்தலும்

அளவிடுதலும் மதிப்பீடு செய்தலும் ஒன்றுதான். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டது. எனவே இவையிரண்டுக்கும் வேறுபாடு காண்பது சற்று கடினம். மதிப்பீடு செய்தல் பொதுவாக அகவயத் தன்மையுடையது. அளவிடுதல் அடிப்படையில் தான் மதிப்பீடு செய்யவேண்டும். அளவிடுதலில் புறவயத்தன்மையும் அகவயத்தன்மையும் அடங்கியுள்ளது. அளவீடு செய்தலில் மதிப்பீடு அடங்கியுள்ளது. எனினும் மதிப்பீடு செய்தல் அளவிடுதலைவிட சற்று விரிவானது. எனவே மதிப்பீட்டில் அளவிடுதலும் ஒவ்வொரு கூற்றின் (Each Factor) பயனையும் அதன் திறன் ஆற்றலையும் குறிக்கும். முந்திய பகுதியில் அளவிடுதல் பற்றி

விரிவாகக் கூறப்பட்டது. இப்பகுதியில் கற்றலிலும் கற்பித்தலிலும் ஏற்பட்ட விளைவுகளையும் பயன்களையும் மதிப்பீடு செய்தலைப் பிரதானமாகக் கொண்டுள்ளது.

## அளவிடுதல் என்றால் என்ன?

ஒப்பிடல் தான் அளவீடு செய்வது. ஒப்பிடலுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட அளவு இன்றியமையாதது. அந்த அளவை (scale) ஆதாரமாகக் கொண்டு பிறவற்றை அளவீடு செய்யவேண்டும். எனவே ஒப்பிடுவதற்கு ஒரு தரத்தை (standard) முன் கூட்டியே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அந்தத் தரத்திற்கு எவ்வளவு தூரம் ஒத்திருக்கிறது என்பதைக் கணிக்க வேண்டும். எனவே அளவிடுதலுக்கு ஒப்பிடல் இன்றியமையாதது.

## மதிப்பீடு செய்தல் என்றால் என்ன?

பள்ளியில் வரலாறு கற்பித்தலின் நோக்கங்கள் பலவற்றையும் மனதில் கொண்டு மாணாக்கர்கள் ஒவ்வொருவரும் பெற்ற திறமைகளையும் தொடர்ந்து மிகவிரிவாக மதிப்பீடு செய்யவேண்டும். எனவே மதிப்பீடு செய்வதற்கு ஒவ்வொரு மாணவனைப்பற்றிய போதிய புள்ளி விவரங்கள் தேவையாக இருக்கும். எனவே இப்புள்ளி விவரங்களை எல்லாம் சேர்த்து வைக்கவேண்டியதிருப்பதால் நிர்வாக அடிப்படையில் பல சிக்கல்கள் எழக்கூடும். எப்படி ஒரு ஆசிரியருக்கு பயிற்சி அளிப்பது கடினமோ அதுபோலவே மதிப்பீடு செய்யும் பணியும் மிகவும் கடினமாகவே காணப்படும். தற்காலத்தில் மாணவர்களின் தேர்வுகளையும் அவர்கள் அவற்றுள் பெற்ற மதிப்பெண்களையும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இம்முறை மிகச் சுலபமானது. எனினும் மாணாக்கர்களின் எல்லாத் திறன்களையும் பொதுவாக அவர்களுடைய சமூக, உள்ளத் திறன்களை மதிப்பிட முடிவதில்லை. சுருக்கமாகக் கூறின் ஒவ்வொரு மாணவனுடைய முழுத்தன்மையை அளவிட நமது மதிப்பீட்டு முறை உதவுவதாகக் காணப்படவில்லை.

## மதிப்பீடு செய்வதின் நோக்கம்

தேர்வுகளின் நோக்கம் மாணாக்கர்கள் பாடப்பகுதியில் பெற்ற திறனை அளவிடுவது மட்டுமல்ல, தேர்வுகளின் முடிவுகளைக் கொண்டுதான் கற்று கொடுக்கும் முறைகளைச் சீர்படுத்தி சிறக்கச் செய்வதும் நோக்கமாகக் கொள்ள வேண்டும். எனவே மதிப்பீடு முறை பாடத்திட்டம் தயாரிப்பதற்கும் சமூகப் பயன்களைப் பெறுவதற்கும்; பாடத்திட்டத்தை மாற்றி அமைப்பதற்கும் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து வலிமை பெற்று வருகிறது. இவ்வாறான மதிப்பீடு செய்வதற்கும் மாணவர்களுக்குத் தேர்வுகள் நடத்துவதற்கும் மிக அதிகமான அளவில் தொடர்பு உண்டு என்று சொல்ல முடியாது.

கற்றலிலும் கற்பித்தலிலும் பலகூறுகள் (Factors) அடங்கியுள்ளன. இவற்றில் ஏதாவது ஒற்றைத் தனியாக எடுத்துக் கொண்டு அதை மட்டும் மதிப்பீடு செய்யலாம். அவைகளில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடல்

வேண்டும். மாணவர்கள் எதிர்நோக்கும் சங்கடங்கள் யாவை? அவற்றை எப்பொழுது எதிர் நோக்குகின்றனர் என்பதைக் கண்டறிதல்; அவற்றை என்னென்ன வழிகளை கற்பித்தலின்போது கையாளவேண்டும் என்பதை வரையறுத்தல்; பாடப்பகுதிகளை பல்வேறு வழிகளில் ஒருங்கிணைத்துக் கற்றுக் கொடுக்கிறோம் எனினும் அவற்றில் உள்ள குறைபாடுகள் யாவை என்பதைக் கண்டறிதலும், அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்தலும்; தனிப்பட்ட மாணவர்களுக்கு உதவுவதும் ஆகும். இது தவிர கையாளும் முறைகள், அனுசரிக்கும் போதனை நுட்பங்கள், துணைக்கருவிகளின் பயன்கள், அவற்றைப் பயன்படுத்தும் சரியான வழிகளைப் பயன்படுத்துதல்; ஆசிரியர்களின் திறனை அளவிடுவது; பாடத்தில் மாணுக்கர்களுக்குப் பற்று உண்டாக்க வழிகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யலாம்.

## மதிப்பீடு செய்வதின் அவசியம்

ஒரு குடியானவன் தன் அறுவடையின் போது கிடைக்கும் பயனை அளவிடுவதும் மதிப்பீடு செய்வதும் போலவே ஆசிரியரும் தன்னுடைய உழைப்பின் பயனை மதிப்பீடு செய்யவேண்டும். கற்றலிலும் கற்பித்தலிலும் பல அம்சங்களும் கூறுகளும் அடங்கியுள்ளன. இவற்றுள் ஏதாவது ஒன்றின் திறனை மதிப்பீடுசெய்வதற்கு அளவிடுதல் அவசியம். அப்பொழுதுதான் ஒவ்வொரு கூறும் தான் கொடுக்கவேண்டிய திறனை எளிதாக அளவிடுதல் சாத்தியமாகும். வரலாறு கற்பித்தலில் அளவிடுதல் மூலம் மாணவர்கள் பெற்ற திறனையும், அடைந்த அறிவையும் எளிதாக மதிப்பீடு செய்ய முடியும். அத்துடன் தன்னுடைய குறைகளையும் தான் கையாண்ட உபகரணங்களின் திறனையும் எளிதாக மதிப்பீடு செய்யலாம் அப்படிச் செய்யும் பொழுது ஒவ்வொன்றின் திறனை மதிப்பிடவும் அதில் வேண்டிய மாற்றம் செய்யவும் இயலும் வாய்ப்பும் கிடைக்கும்.

ஒரு பாடப்பகுதியை கற்றுக் கொடுத்த பின்பும் மாணவர்களின் சாதனையும் திறனையும் திருப்திகரமாகக் காணப்படாவிட்டால் ஆசிரியர் அதற்கான சாதனங்களை மதிப்பீடு செய்வதின் வாயிலாய் தெரிந்து கொண்டு அதற்கான பரிகாரத்தைத் தேடவேண்டும். கில காரணங்கள் மாணவர்களுக்கு அப்பாற்பட்டதும் புறம்பானவையாகவும் இருக்கலாம். (உ.ம்) பொருத்தமற்ற குறிக்கோள்களை ஏற்படுத்திக் கொள்ளுதல், அவசியமற்ற பாடப்பகுதிகளைச் சேர்த்தல், பொருத்தமற்ற முறையில் பாடப்பகுதிகளை ஒருங்கிணைத்தல், கற்பித்தலில் குறைகள், கையாளப்பட்ட உதவிகளின் பொருத்தமின்மை, அளவிடுதல் முறையில் தவறுகள், எனவே இவற்றை மதிப்பீடு செய்து குறைகளைக் கண்டு நிவர்த்திக்க முயற்சிக்க வேண்டும்.

வரலாறு கற்பிப்பதில் பல்வேறு முறைகளைக் கையாள வேண்டும். இம்முறைகளில் பாடத்திற்கு ஏற்றபடியும் பிள்ளைகளின் தேவைகளை முன்னிட்டும் வேண்டிய மாறுதல்களை செய்வதற்கு மதிப்பீடு முறை மிகவும் உதவியாக அமையும். பாடத்திட்டத்தை சீராக்கி ஒழுங்குபடுத்துவதற்கும்

பள்ளியின் வேலையையும் திட்டத்தையும் சமுதாயத்திற்குத் தெரியப்படுத்த-வும் மதிப்பீடு அவசியமே. இவைகள் தவிர சிலமுக்கியமான நோக்கங்-களுக்கும் மதிப்பீடு திட்டம் இன்றியமையாததாக அமையும். அவைகளில் சில இங்கு விவரிக்கப்படுகின்றன.

பாடப்பகுதிகளில் எந்தெந்த இடங்களில் மாணவர்கள் இடர்பாடுகளை எதிர் நோக்குகின்றனர் என்று கண்டறிவதற்கு மதிப்பீடு உதவியாக இருக்கும். அவற்றைப் போக்குவதற்கான வழிகளும் கற்பித்தலில் செய்ய வேண்டிய மாற்றங்களையும் பற்றிய வழிகாட்டியை ஏற்படுத்திக் கொள்ளலாம். தனிப்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கும் மதிப்பீடு உதவியாக அமையும். பல்வேறு முறைகளின் சிறப்பையும் ஒவ்வொன்றின் தாரதம்மியத்-தையும் மதிப்பீடு செய்து அறியலாம். எந்த தரத்து மாணவர்களுக்கு எவ்வகையான வரலாற்று விவரங்கள் பொருத்தமானவை என்பதைக் கண்டறிய உதவியாக இருக்கும். வரலாற்றுப் போதனையில் நாம் பயன்படுத்தும் உதவிகள் பலவகையானவை. இவைகள் ஒவ்வொன்றின் பயனையும் பாடத்திற்கேற்ப மதிப்பீடு செய்யலாம். வரலாற்று ஆசிரியர்களின் தொழில் திறமையையும் கூட மதிப்பீடு செய்யலாம் வரலாற்றில் பிள்ளைகளின் அக்கறையையும் பற்றையும் எவ்வழியில் பெறலாம் என்பது பற்றியும் மதிப்பீடு செய்யலாம்.

வரலாறு கற்கும் மாணவர்களின் அடைவுத்திறன் திருப்திகரமாக அமையாததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவைகளுள் பொருத்தமற்ற நோக்கம், ஏற்கத்தகாத பாட விவரங்கள், மிக கடினமாகவோ அல்லது மிகவும் சுலபமாக அமைந்த தேர்வு வினாக்கள் மாணவர்களுக்கு பிடிக்காத தேர்வுமுறை, சரியாக கற்றுக் கொடுக்காமை, நல்ல பொறுத்தமான முறைகளைக் கையாளத் தவறுதல், வைக்கப்பட்ட தேர்வில் நம்பகம் இன்மை, ஆகிய காரணங்களாக இருக்கக்கூடும்.

மதிப்பீடு செய்வதில் மூன்று வகையான தரங்கள் உள. ஒன்று எதிர்பார்க்கப்படும் அல்லது முன்கூட்டியே நிர்ணயம் செய்யப்பட்ட தரம். பலருக்கு தேர்வுகள் அளித்து அவற்றின் உதவியுடன் தரத்தை திட்டமிடுவது. கடைசியாக தன்னை மையமாக வைத்து தன்னுடைய அடைவுப்பயனை அடிப்படையில் தரத்தை நிர்ணயம் செய்வது.

தேர்வுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்வதில் சில குறைபாடுகள் உண்டு. நாம் வைக்கும் தேர்வுகளும் தேர்வில் வரும் வினாக்களும் மாணவர்-களின் ஞாபகத்தை மட்டும் சோதிக்கின்றன. தாங்கள் கற்ற வரலாற்று விவரங்களை எந்த அளவுக்கு நினைவில் கொண்டுவரும் திறன் பெற்றுள்ளனர் என்பதையே அளவிடுகிறோம். எனவே மதிப்பீடு செய்வதற்கு நோக்கத்தை சரியாக வரையறை செய்யவேண்டும். மதிப்பீடு தொடர்ந்து செய்து கொண்டே வரவேண்டும். நடுவில் விட்டு விட்டுச் செய்வதினால் நல்ல பயனைக் கொடுக்காது. மதிப்பீட்டில் வளர்ச்சி காணப்பட வேண்டும். மதிப்பீடு

செய்வதால் மாணவர்கள் பெறும் அறிவு வளர்ச்சிக்குப் பாதகமாக இருக்கக்கூடாது. தேர்வுகள் நேர்மையானதாக இருக்கவேண்டும். மாணவர்களும் மதிப்பீட்டில் பங்கு கொள்பவர்களாக இருக்கவேண்டும். பிள்ளைகளின் அறிவு தவிர வரலாற்றுப்படிப்பால் பெறும் சிறப்புக் குணங்களையும் மனப்போக்குகளையும் அளவிட மதிப்பீடு முறை அனுசரிக்கப்பட வேண்டும்.

பின்வரும் அம்சங்களைக் கொண்டு மதிப்பீடு செய்வதற்கான திட்டம் வகுக்கலாம். எல்லாவற்றையும் ஏககாலத்தில் மதிப்பீடு செய்தல் கடினம். தளவாடங்களும் உதவிகளும் வரலாறு கற்பிக்க பயன்படுத்தப்படும். பல்வேறு முறைகள். வரலாற்று விவரங்களைத் தரப்படுத்துதலும் ஒருங்கமைத்தலும்; ஆசிரியர், சில மானசீக கருத்துக்களைப் புரிந்து கொள்ளுவதில் உள்ள இடர்பாடுகள்; விவரங்களை எங்கு காண்பது, விவரங்களைப் பயன்படுத்துவதில் மாணவர்களிடையேயுள்ள திறமைகள்; மாணவர்களின் விருப்பம், சகிப்புத்தன்மை, வரலாற்று உணர்வு, தேசிய உணர்ச்சி, மனிதாபிமானம், மனப்போக்குகள், கைத்திறன்கள், சமூகத்தில் பழகும் திறன் ஆகியவாம்.

### பயிற்சி வினாக்கள்

1 தேர்வு வைக்க வேண்டியதின் அவசியம் யாது?

2 தேர்வுகளின் வகைகளை விவரிக்க?

3 அடைவுத் தேர்வுகள் என்றால் என்ன?

4 நல்ல தேர்வின் சிறப்பியல்புகள் யாவை?

5 புதுமாதிரி வினாக்களின் வகைகள் யாவை?

6 அகவயத்தேர்வு, புறவயத்தேர்வு விளக்குக.

7 ஒரு முழுமையான தேர்வு எப்படி இருக்கவேண்டும்.

8 கட்டுரை சிறுவிடை வினாத்தேர்வுகளை மதிப்பீடு செய்யவும்.

9 மதிப்பீடு செய்தல் என்றால் என்ன?

10 வரலாற்றுப்பாடத்தில் மதிப்பீட்டுக்கான வாய்ப்புக்களை ஆராயவும்.

11 மதிப்பீட்டின் நோக்கம், அவசியம் ஆகிய இரண்டையும் விவரிக்க.

T:38 N75